பிள்ளைத்தமிழ் அமைப்பும், அழகும்



முனைவர்.
தே. சொக்கலிங்கம்

தேவநாதன் பதிப்பகம்

பிள்ளைத்தமிழ்

அமைப்பும் அழகும்

முனைவர் **தே. சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.ஓ.எல்., பி.எச்.டி.
பேராசிரியர் & துறைத்தலைவர்
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 3

தேவநாதன் பதிப்பகம்
23, தையல் நாயகி இல்லம்
எட்டாவது வீதி - தென் விரிவு
காரைக்குடி - 630 003.

பதிப்பு

நூற் பெயர் : பிள்ளைத்தமிழ் அமைப்பும் அழகும்

நூலாசிரியர் : முனைவர் தே. சொக்கலிங்கம்

வெளியீடு : தேவநாதன் பதிப்பகம்
23, தையல்நாயகி இல்லம்
எட்டாவது வீதி — தென் விரிவு
சுப்பிரமணியபுரம், காரைக்குடி-3.

மொழி : தமிழ் (Tamil)

பதிப்பு : முதற்பதிப்பு

ஆண்டு : 6—5—2001

விலை : ரூ. 45.00

அச்சகம் : சௌத் இந்தியா பிரஸ்
காரைக்குடி-1

மொத்தப் பக்கங்கள் : 174

பிள்ளைத்தமிழ் அமைப்பும் அழகும்

என்னுரை

அணிந்துரை

மதிப்புரை

1. ஆண்பாற்பிள்ளைத் தமிழ் அமைப்பு

(அ) நிகண்டுதரும் 1

(ஆ) பாட்டியல் தரும் 5

(இ) இலக்கியம் காட்டும் 14

(ஈ) பிள்ளைத்தமிழ் முன்னோடிகள் 19

(உ) பருவ வைப்புமுறை 25

(ஊ) மிகைப்பருவநூல்கள் 43

2. பெண்பாற் பிள்ளைத்தமிழ் அமைப்பு

(அ) நிகண்டு நவிலும் 53

(ஆ) பாட்டியல் தரும் 56

(இ) இலக்கியம் காட்டும் 60

(ஈ) பிள்ளைத்தமிழ் முன்னோடிகள் 65

(உ) பருவவைப்பு முறை 69

(ஊ) சிறப்புப் பருவங்கள் 72

3. நூலுக்குரிய எண்ணிக்கை

(அ) பருவ எண்ணிக்கை 87

(ஆ) பாடல் எண்ணிக்கை 90

4. புதுமைப் பிள்ளைத் தமிழ்கள் 125

5. பிள்ளைத்தமிழ் பற்றிய நூற்பாக்கள் 165

என்னுரை

உலகில் ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் இல்லற வாழ்வின் நல்லறப்பயன் மக்கட் பேறேயாகும். மக்கட் பேற்றின் சிறப்பைப் பாண்டியன் அறிவுடைநம்பி

"படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறு குறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுங் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம் வாழு நாளே"

(புறநானூறு - 188)

என்று நன்கு எடுத்துரைக்கிறார். திருக்குறளும் மக்கட் பேற்றின் தேவையையும் இன்றியமையாமையையும் "மக்கட்பேறு" என்று தனியதிகாரம் அமைத்து விளக்குகிறது, சங்கவிலக்கியங்களும் காப்பியங்களும் மக்கட் பேற்றை இன்றியமையாதது என வலியுறுத்திப் போற்றின. அதன் இனிமையை உணர்ந்து பக்தி இயக்க இலக்கியங்கள் கடவுளையே பிள்ளையாகக் கண்டுபோற்றின.

பெரியாழ்வார், திருமாலிய நெறியில் கண்ணனைக் குழந்தையாகக் கண்டின்புற்று அவன் பிள்ளைமைக் குறும்புகளை அனுபவித்து அனுபவித்துப் பாடினார். பெரியாழ்வார் திருமொழிப் போலத் பதினோராம் திருமுறையிலும் பிள்ளைத் தமிழுக்குரிய சில பருவக்குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த இலக்கிய நெறிமுறைகளைக் கண்ட ஒட்டக் கூத்தர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத்தமிழ் என்னும் கவினுறும் கவிமாளிகையை முதன்முதலாக எழுப்பினார். அன்னாரின் புதிய முயற்சி - இலக்கிய ஆக்கம்-தமிழில் பெரும் விழிப்புணர்வையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியது. அச்சிற்றிலக்கிய வகையைப் பிள்ளைத்தமிழ் என்றும் பிள்ளைக்கவி என்றும் பிள்ளைத் திருநாமம் என்றும் பிள்ளைமை இன்பம் என்றும் பிள்ளைக்கவிதை என்றும் சேய்த்தமிழ் என்றும் வழங்குகின்றனர். எனினும் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் "தமிழ்" என்னும் பெயரைப் பெற்றுத்திகழுவது, பிள்ளைத்தமிழ் இலக்கிய வகை ஒன்றேயாகும்.

பிள்ளைக்கவி, பிள்ளைப்பாட்டு என வழங்கியது. இவ்வாறு வழங்கும் மரபை நோக்கிக் குறவஞ்சி பாடியவர்களும் "குறவஞ்சித் தமிழ்" என அதனை வழங்கலாயினர், இந்த ஆட்சியைத் திருக்குற்றாலக் குறவஞ்சியில் காண முடிகிறது. ஆனால் இவ்வழக்கு மக்களிடையே நிலைபெறவில்லை. பிள்ளைத்தமிழ் ஒன்றுக்கே நிலையாகத்தமிழ் உரியதாயிற்று.

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கிய வகைகளில் பெரும்பாலானவை, பிற்காலச் சோழராட்சியில் உருவானவை. அவற்றுள் காலந்தோறும் தோன்றிய - தோன்றி-வருகின்ற இலக்கிய வகை பிள்ளைத்தமிழ். தமிழாய்வு வளர்ந்த நிலையிலும், பிள்ளைத்தமிழ் பற்றிய ஆய்வுகள் பெருகவில்லை. இந்நூல் பிள்ளைத்தமிழின் அமைப்பையும் அழகையும் ஆராய்ந்து விளக்குகிறது. நிகண்டுகள், பாட்டியல்கள், இலக்கியங்கள், ஆகியவற்றைக் கொண்டு பிள்ளைத்தமிழின் அமைப்பு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்நூலை எழுதும் போது வேண்டிய உதவிகளைச் செய்துதவிய திருவாளர்கள் தேனப்பன், ஆதப்பன், மீனாட்சி சுந்தரம், ஆகியோர்க்கு நன்றி. கட்டுரைகளைப் படித்துத் திருத்தங்கள் கூறியும் மெய்ப்புத் திருத்தியும் உதவிய செல்வி தி.ரமா, எம்.ஏ., எம்.பில்., அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

இந்நூலுக்கு அறிவையும் தகுதியையும் தருகின்ற சீர்சால் அணிந்துரை நல்கிய என் பேராசிரியப் பெருந்தகை-செம்மல்-முனைவர் இரா.சாரங்கபாணி அவர்களை வணங்குவதல்லது வேறென்ன நன்றி நவில இயலும்? அப்பெரியார் பல்லாண்டு வாழ்ந்து சங்க இலக்கியத்துக்கும் திருக்குறட்கும் தனித் தொண்டு செய்திட வேண்டுகின்றேன். அன்புக்குரிய பொறியாளர் அரிமா திருமிகு.எஸ்.ஆதப்பன் எம்.இ., அவர்கள் எக்காலத்தும் இனிய அன்புடையார், பொது நலம் விழையும் தனிப் பண்புநலமிக்கார், தமிழார்வமும் தெளிவான சிந்தனையும் உழைக்கும் ஆர்வமும் மிக்கார், இளைய தலை முறையின் இனிய தென்றல், அன்னாரின் கருத்துரை, நூலுக்குப் பொருந்து முரையாகும். பல்வேறு பணிகளுக்கிடையே கருத்துரை எழுதிய திரு எஸ்.ஆதப்பன் அவர்களைப் பலவளம் பெற்றுப் பல்லாண்டு வாழ அருள்மிகு தையல்நாயகி உடனாய வைத்தியநாதனை வேண்டுகின்றேன்.

இந்நூல் வெளிவரும் இந்நாளில் மறவாது போற்றத்தக்கவர் நன்றியொடு நினைக்கத்தக்கவர் குருவிக்கொண்டான்பட்டியைச் சேர்ந்த திருமதி. இராம. சொ. உண்ணாமலை ஆச்சி அவர்கள். அவர்களும் அவருடைய கணவர் உயர்திரு. இராம. சொக்கலிங்கம் செட்டியாகும் என்பாலும் எங்கள் குடும்பத்தின் பாலும் அக்கரையும் ஆர்வமும் மிக்கவர்கள்; எங்கள் குடும்ப விசேடங்களில் எல்லாம் கலந்து கொண்டு சிறப்பிப்பவர்கள். திருமதி. இராம. சொ. உண்ணாமலை ஆச்சி அவர்கள் ஆண்டுதோறும் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வண்டிப்பயணத்தில் செல்லும் காளை மாடுகளுக்குக் கும்பகோணத்தில் பருத்தி விதை வாங்கி அன்புடன் அளித்து வருகிறார்கள்; இந்தப் பணியை முதன் முதல் தொடங்கியவர்கள் அவர்கள் என்பது கூறவேண்டிய உண்மை. அவர்கள் தொடங்கியது முதல் இன்று பலரும் காளை மாடுகளுக்குத் தவிடு, புண்ணாக்கு, வைக்கோல் போன்ற பொருள்களை வாங்கி அளித்து வருகின்றனர். அத்தகைய அருள்ளம்மிக்கவர்கள் இந்நூல் அச்சிடுவதற்குத் தேவையான பொருளை உதவினார்கள். நூல் அச்சாகி முடிந்தும் அரசியல் தலைவர் ஒருவரின் அணிந்துரைக்காகக் காத்திருந்து நூலை முழுமை செய்வதில் காலங்கடந்து விட்டது. அதனிடையே, நூலை முழுமையாகப் பார்க்காது திருமதி. இரா. சொ. உண்ணாமலை ஆச்சி அவர்கள் அமரராகி விட்டார்கள் என்பது வருத்தத்தைத் தருவதேயாயினும் அவர்கள் தெய்வநிலை பெற்று வாழ்த்துவார்கள் என்பது திண்ணம்.

இந்நூலைச் செவ்வனே அமைத்து உருவாக்கிய அச்சகத்தார்க்கு என் இனிய நன்றி.

காரைக்குடி
1-2-2001

தே. சொக்கலிங்கம்

திருக்குறள் சிந்தனையாளர், உரைவேற்றுமைச் செல்வர், செம்மல்
முனைவர் **இரா.சாரங்கபாணி**, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி அவர்கள்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் & துறைத்தலைவர், அழகப்பா கல்லூரி
தலைமைப்பதிப்பாசிரியர், சங்கவிலக்கியப் பொருட்களஞ்சியம்
தமிழ்ப்பல்கலைக்கழகம்

அணிந்துரை

பிள்ளைத்தமிழ்-அமைப்பும் அழகும் என்னும் இந்நூலின் ஆசிரியர் முனைவர் தே.சொக்கலிங்கனார் அழகப்பா கல்லூரியில் முதுகலை வகுப்புப் பயின்று அங்கேயே ஆசிரியப் பணி தொடங்கிய பின்னர் அழகப்பா பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக, பேராசிரியராக உயர்ந்தவர், அறிவு நாட்டமும் ஆய்வு வேட்கையும் உடையவர். தனியே பயின்று முதுகலைப் பட்டம் பெறவும் மேலே ஆராய்ச்சிப் பட்டம் பெறவும் கருதுவோர்க்கெல்லாம் உறுதுணையாய் நின்று நெறிப்படுத்தியவர். இங்ஙனம் பிறர்க்குரியாளராக வாழ்ந்தமையின், அவர் தம் முனைவர் பட்டத்தைச் சிறிது காலந் தாழ்த்தே பெற முடிந்தது. தம் பல்வேறு பணிகளுக்கிடையே, பாடுவார் முத்தப்பர் வரலாறும் திறனாய்வும், கம்பன் புறத்திணை, தெய்வநலம், இந்திய இலக்கிய இழை, நாட்டுக்கோட்டை நகரத்தார் அறப்பணிகளும் வரலாறும் முதலிய அரிய நூல்களைப் படைத்தவர்.

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகிய பிள்ளைத்தமிழ் பற்றியது இவர்தம் ஆய்வு நூல். பிள்ளைத்தமிழ் நூலே சிற்றிலக்கிய வகைகளுள் சிறப்புற்று இன்றும் செழித்து வளர்ந்து வருகிறது. கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய முதல் பிள்ளைத்தமிழ் நூலாகிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் தொடங்கி இன்று அச்சாகியுள்ள அரசர் முத்தைய வேள் பிள்ளைத்தமிழ் வரை எழுந்த நூல்கள் எல்லாம் அச்சிற்றிலக்கிய வகையின் வளர்ச்சியைப் புலப்படுத்துவன. பிள்ளைத்தமிழ் நூல்களை ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ், என இருபாற்படுத்து வழங்குவர். அப்பாகுபாடு அன்றித் தெய்வம், மக்கள், மன்னர், குறுநிலத் தலைவர், புலவர், வள்ளல்கள் என்ற வகையிலும் பிள்ளைத்தமிழ் பகுக்கப் பெறும். சமய நோக்கில் சைவம் வைணவம், சமணம், கிறித்துவம், இசுலாமியம் என்னும் தொடர்பிலும் பிள்ளைத்தமிழ் நூல்கள் காணப்பெறுகின்றன.

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் தோற்றத்துக்குப் பெரியாழ்வாரின் பாசுரங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன என அறிஞர்கள் கூறுவர். இந்

நூலாசிரியர் திருமங்கை ஆழ்வார், குலசேகராழ்வார், ஆண்டாள் ஆகியோர் தம் பாடல்களும் அடிப்படையாமாற்றைச் சுட்டிச் செல்வர். நாலாயிரப் பிரபந்தம், பிள்ளைத்தமிழில் எவ்வெப்பருவங்களுக்குத் தோற்றுவாயாக அமைந்தது என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார். அது போலவே, பிள்ளைத்தமிழ் தலையெடுத்த கி.பி.12ஆம் நூற்றாண்டில் மலர்ந்த பெரிய புராணத்தில் கண்ணப்பர், சுந்தரர், சீராள தேவர் ஆகிய அடியவர்களின் வரலாற்றைக் குறிப்பிடும் போது, பிள்ளைத்தமிழின் பருவ வகைகளைச் சேக்கிழார் கூறுவதையும் சுட்டிக் காட்டுவது இந்நூலின் சிறப்பியல்பாகும்.

பிள்ளைத்தமிழ் குறித்த, தம் ஆய்வினை ஆண்பாற்பிள்ளைத் தமிழின் அமைப்பு, பெண்பாற்பிள்ளைத்தமிழின் அமைப்பு, நூலுக்குரிய பருவ எண்ணிக்கை, புதுமைப் பிள்ளைத் தமிழ்கள் என்னும் நான்கு தலைப்புகளில் விரிவாக ஆராய்கிறார். நிகண்டுகள், இலக்கண நூல்கள், பாட்டியல் நூல்கள் ஆகியவை பிள்ளைத்தமிழ் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. அந்நூல்கள் கூறுவனவற்றுள் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் காணப்படுகின்றன; அவற்றையெல்லாம் ஆழ்ந்து நோக்கி எடுத்துக் காட்டுவர். ஆண்பாற்பிள்ளைத்தமிழும் பெண்பாற்பிள்ளைத் தமிழும் வேறுபடும் இடங்களைக் குறிப்பிட்டுத் தெளிவு செய்வர். பிள்ளைத்தமிழ் நூல்களில் பருவங்களின் பாகுபாடு எப்படி அமைந்துள்ளது? ஒவ்வொரு பருவத்திலும் பாடலின் எண்ணிக்கை எவ்வாறுள்ளது? நூலில் பருவங்களின் வைப்பு எப்படி? என்பன எல்லாம் விளக்கமாகப் புலப்படுத்தப்பட்டுள்ளன.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களில் எந்நூலினும் பத்துக்குக் குறைந்த பருவங்கள் இல்லை; பத்துக்கு மிகுதியான பருவ நூல்கள் இருபதாம் நூற்றாண்டில் மூன்று தோன்றின. அவை பெரியார் பிள்ளைத்தமிழும் காவை முருகன் பிள்ளைத்தமிழும் ஈழத்துத் திருக்கதிரகாமப்பிள்ளைத்தமிழும் ஆகும். (ப.43) என்று மிகைப் பருவங்கள் உள்ள பிள்ளைத்தமிழ் நூல்களைச் சுட்டிக்காட்டுதல் ஆய்வின் திறப்பாடு ஆகும்.

புதுமைப் பிள்ளைத்தமிழ்கள் என்னும் தலைப்பு, சில பிள்ளைத்தமிழ் நூல்களைக் குறிப்பிட்டு அவற்றின் புதுமையைப் புலப்படுத்துகிறது. பெரியோர்களைக் குழந்தையாகக் கருதிப் பாடுவதே பிள்ளைத்தமிழ் மரபு. ஆனால் கதிரேசன் பிள்ளைக்கவி, இளங்கோவன் பிள்ளைக் கவி, இரண்டும் பிள்ளைகளையே பாடியுள்ளன. இது பாடு பொருளில் ஒரு புதுமை. குப்பன் பிள்ளைத்தமிழ் என்பது வறுமையின் பிடியில் சிக்கித் துயருழக்கும் பல்லாயிரம் ஏழை எளியவர்களின் சார்பாளனாகப் படைக்கப்பட்ட கற்பனைப் பாத்திரத்தின் மேல் பாடப் பெற்றது. அங்கதச் சுவை மலிந்தது. வறுமையின் கொடுமையைச் சித்தரிப்பது. இந்நூல் பற்றி ஆசிரியர் திறனாய்ந்து, குப்பன் பிள்ளைத்தமிழ் மருமக்கள் வழிமான்மியம் போலச் சமுதாயத்தில் எவ்வகைப் பாதிப்பையும் உண்டாக்கவில்லை எனக் கூறுதல் நினையத் தகும்.

கவிஞர் நாரா-நாச்சியப்பன் இயற்றிய பிள்ளைத்தமிழ் என்ற நூல் ஆணையோ, பெண்ணையோ, தனித்த முறையில் பாடாமல் இருபால்களையும் கலந்து பாடியதாகும். பருவத்துக்கு 3 பாடலாக 13 பருவம் கொண்டது. ஆக இந்நூலில் 39 பாடல்கள் உள்ளன. பாடுபொருள், பருவ எண்ணிக்கை, பருவத்தின் பாடல் எண்ணிக்கை இவற்றில் எல்லாம் புதுமையுடையதே இந்நூல்.

புதுமை என்ற பெயரில் ஒரு சாதியைப் பற்றிச் செங்குந்தர் மரபினர் குறித்து ஞானப் பிரகாச முனிவர் "செங்குந்தர் பிள்ளைத்தமிழ்" பாடியுள்ளார். சித்திநாயகம் என்பவரை இழித்தும் பழித்தும் இடக்கரடக்கல் சொற்கள் புணர்த்தும் நாணத்தக்க நிலையில் அவர் சாதற்காக மங்கைபாகக் கவிராயர் பாடியது "சித்தி நாயகம் பிள்ளைத்தமிழ்" இது தோன்றலின் தோன்றாமை நன்று. சாதி குறித்த பிள்ளைத்தமிழ், சாகுமாறு பாடும் பிள்ளைத்தமிழ் என்பன எல்லாம் வெறுத்து ஒதுக்கத் தக்கனவே அன்றி ஏற்றுப் போற்றுதற்குரிய அல்ல.

சாதியடிப்படையில் கலம்பகத்துக்குக் கூறியாங்குப்பாடல் எண்ணிக்கையைப் பிள்ளைத்தமிழுக்கும் பிரபந்த மரபியல் போன்ற நூல்கள் கூறியுள்ளன. புலவர்கள் அம்மரபைப் பின்பற்றவில்லை. இக்கருத்தைப் புலவர்கள் கொடையளவையும் பண்பையும் பேணுதலையும் கண்டு மனங்களித்துப் பாடினரேயன்றிச் சாதியறிந்து பாடினர் அல்லர். புலவன் கருத்தும் புலமையும் கற்பனையும் புலவர் கொடையும் பண்பும் செயல்களும் நூலின் பாடல் அளவை வரையறுப்பன (ப92) என ஆசிரியர் வலியுறுத்துவர். வருணாசிரம தருமமுறை நூல்களிலும் புகுந்து விட்டது என்பதை உணர முடிகிறது.

பிள்ளைத்தமிழில் பருவந்தோறும் பத்துப்பாடல்கள் என்று பாடும் முறை மாறிப் பிற்காலத்தே பருவத்துக்கு ஒரு பாடல் பாடும் முறையும் வந்துவிட்டது. பருவத்துக்குப் பத்து என்ற பாடல் எண்ணிக்கை குறையக் காரணம் ஆழ்ந்த புலமை, கற்பனை, மொழிவளம்இன்மை, சிலேடை முதலிய அமைத்துப் பாடும் திறமின்மை என்று ஆசிரியர் கூறுவது நினையத் தகும். (ப.140)

செங்கீரைக்கும் தாலுக்கும் இடையே "கூறுதல் கற்றல்" பருவத்தைப் பிங்கலம் நிறுத்தும். கூறுதல் கற்றல் என்ற பருவத்தைச் சங்க இலக்கியம் தழுவிப் பிங்கலம் அமைக்கின்றது. இது மருதனிள நாகனார்.

பெருந்தெருவிற் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள்யாங் கேட்ப
மருந் தோவா நெஞ்சிற் கமிழ்தம் அயின்றற்று

(கலித்தொகை 81)

என்று கூறுவதை ஒட்டி அமைந்தது. (ப.28)

சிறுதேர் உருட்டுதலைப் பிள்ளைத்தமிழின் ஒரு பருவ நிகழ்ச்சியாக அந்நூல் கூறும். சிறுவர் தேர் உருட்டும் நிகழ்ச்சியைக் குறுந்தொகை உவமை வாயிலாகக் காட்டுவதை மேற்கோளாகத் தருவர்.

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅ ராயினும் கையின்
ஈர்ந்தின் புறூஉம் இளையோர் போல (குறுந்தொகை : 61)

இச் சங்க இலக்கிய மேற்கோள்கள் ஆசிரியரது சங்க நூற்புலமையைக் காட்ட வல்லன.

சிற்றில் இழைப்பது மகளிர் செயலாகவும் சிற்றில் சிதைப்பது ஆடவர் தொழிலாகவும் அமைக்கக் காரணத்தை அறிவியல் முறையில் காட்டுடன் விளக்குவது அறியத்தகும்.

நிகண்டுகள், இலக்கண நூல்கள், பாட்டியல் நூல்கள், என்பவை கூறும் பிள்ளைத்தமிழ் பற்றிய செய்திகளை நூலின் இறுதியில் தொகுத்து அளித்திருப்பது ஆய்வாளர்கட்கு உறுதுணையாகும்.

நூலாக வெளிவந்த பிள்ளைத்தமிழ்ப் பாடல்களைப் பொன் விழாமலர், பொங்கல் இதழ், மணிவிழாமலர், கம்பன் மலர், முதலியவற்றிற் கண்டு சில பிள்ளைத் தமிழ்களைத் தொகுத்து அறிந்து செய்திகளைப் புலப்படுத்தியுள்ளார். பல ஆண்டுகள் அரிதின் முயன்று மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனை இந்நூல் உருவில் தந்துள்ளார். நூல் முழுவதும் அவர் உழைப்பையும் புலமைத் திறனையும் புலப்படுத்தக் காணலாம். பிள்ளைத்தமிழ் பற்றியறிய வேறொரு நூல் தேவையில்லை என்று கூறுமளவுக்கு இந்நூல் பல செய்திகளை அடக்கியுள்ளது. மாறோக்கத்து நப்பசலையார் பாடிய

சினமிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலம் செல்கலாது (புறம் 126)

என்னும் அடிகளை நினைவுபடுத்தி இந்நூலின் நிறைவைப் பாராட்டுகின்றேன். தமிழறிஞர்களும் ஆய்வாளர்களும் இந்நூலின் பயன் எய்துவாராக! மேன் மேலும் இது போன்ற நல்ல நூல்களைப் படைத்துச் சிறப்புற்றுத் திகழ நூலாசிரியரை வாழ்த்துகிறேன்.

இரா.சாரங்கபாணி
மாரியப்பா நகர்,
17-7-2000

ஸ்ரீமுருகன் துணை

தொழிலதிபர்

திருச்சிராப்பள்ளி சுழற்குழுச் செயலர்

உயர்திரு **எஸ். ஆதப்பன்,** எம்.இ. அவர்கள்

வழங்கிய

மதிப்புரை

பிள்ளைத் தமிழ் அமைப்பும் அழகும் என்னும் நூல், பிள்ளையைக் கொஞ்சி மகிழும் பிள்ளைத் தமிழைப் பற்றிய நூலாகும். இலக்கியம், பாட்டியல் இலக்கணம், காப்பியம், பிள்ளைத்தமிழ் முதலிய பல்வகை இலக்கியங்களையும் தனித்தனியே ஆராய்ந்தும் ஒப்பீட்டாராய்ந்தும் ஆசிரியர் அமைப்பை விளக்கியிருப்பது சிறப்பானது. இத்தகைய ஆய்வுமுறையால் காணப்பெறும் முடிவுகள் எக்காலத்தும் முரண்படா என்பது திண்ணம். எளிமையாகவும், படிக்க இனிமையாகவும் ஒவ்வொன்றையும் விளக்கி, முன்பின் தொடர்ச்சி காட்டி நூலை எழுதியிருப்பது பாராட்டத்தக்கது.

நூலாசிரியர் எழுதிய நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் அறப்பணியும் வரலாறும் என்ற நூல் விரிவான ஆராய்ச்சி நூல், நகரத்தார்களின் வரலாற்றை வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கிய நூல், இவரின் இன்னொரு நூல், கம்பன் புறத்திணை ஆசிரியரின் இலக்கண இலக்கியப் பயிற்சியையும் திறனாய்வுக் கூர்மையையும், காட்டுகின்ற அரிய நூல். பாடுவார் முத்தப்பர் ஒரு நூலாசிரியரின் நூல்களை எவ்வாறு ஆராயவேண்டும் என்பதைக் காட்டும் ஒரு வழிகாட்டி நூல், ஆசிரியரின் மற்றொரு நூல், தெய்வ நலம் என்பதாம். தெய்வங்களின் உருவ அமைப்பையும் திருக்கோயில் செய்திகளையும் ஆசிரியர் உற்றுநோக்கி ஆராய்ந்து எழுதிய நூலாகும். திருக்குகோயில்களில் குடமுழுக்கு நடத்த வேண்டிய மரபைக் கும்பாபிஷேகக் கிரியை என்று ஆசிரியர் எழுதியிருப்பது குறிப்பிடத் தக்கது.

பேராசிரியர் தே.சொ.அவர்களின் ஆய்வுப் பணியில் விளைந்திருக்கும் பிள்ளைத் தமிழ் அமைப்பும் அழகும் என்னும் ஆய்வுநூல் தெளிவாகவும், எளிமையாகவும், முறைப்படி எழுதப்பெற்றிருக்கிறது. பிள்ளைத் தமிழ் ஆய்வாளர்க்கு

நூல் அமைப்பை அறிந்து கொள்ள இந்நூல் ஒரு முழுமையான நூல், ஆய்வாளர் ஆய்வு முடிவுகளை எவ்வாறு சொல்ல வேண்டும் என்பதை இந்நூல் இலக்கியமாக எடுத்துக்காட்டுகிறது.

இந்நூலை எழுதிய பேராசிரியர் டாக்டர் தே. சொக்கலிங்கம், முப்பத்தாறு ஆண்டுகள் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் இளைஞர்களுக்குக் கற்பிக்கும் தகுதி வாய்ந்த பேராசிரியர் ஆரவாரமான பேச்சும் ஆகுலச் செய்கைகளும் அற்ற எளிமையானவர், எதனையும் முழுமையாகத் துருவிப் பார்க்கும் திறனாய்வாளர், படிக்கும் ஆர்வமிக்கவர், எழுதும் திறன் மிக்கவர்.

நிறைமொழிமாந்தர். பேராசிரியரின் நூலுக்கு மதிப்புரை எழுதும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுக்கும் அமைப்பை ஆராய்ந்து எழுதுவதுடன் தமிழ்த் திறனாய்வு நூல்களையும் எழுதி வெளியிட வேண்டும் என்று ஆசிரியரைக் கேட்டுக் கொள்கிறேன், பேராசிரியரைத் தமிழ்த்தாய்க்கு அணிகள் பல ஆக்கிச் சூட்டிட வாழ்த்தி வேண்டுகிறேன்.

எஸ். ஆதப்பன்
1.1.2001
திருச்சிராப்பள்ளி.

TAMIL OF CHILD HOOD

Pillai-t-tamil, the ' Tamil' of childhood is another popular type of literature. This is in praise of childhood in all its varying stages whether the child be a male or a female . It starts singing of the child from its third month. When usually we have the prayer offered for the child's welfare; then follow the song of the wary moments of the body of the child forewards and backwards or sideways, the lullaby, the song of kisses, the welcome song and the song of the moon, requesting it to come down to appear the child crying for the moon. These songs are common to both sexes. But if the child is male, there are in addition the song of the ketle drum, the song of the childish prank of brushing a side the toy houses built by the female children and the song of the toy cort. If the child is a female, we have any three of the following: the song of the swing, the song of the bath, the song of toy-houses, the song of the throwing up and catching seeds or other such things. (The names are Niratal, CirrilIlaittal, Kalanku)

As one poet states "even when singing of the omnipotent divenity it is more charming and enchanting to sing of it as a child" Love towards a child is the innocent joy of self lessness. In that mood, poetry between becomes sincere and captivates any heart.

Through people read a reference to this kind of literature in Tolkappiyam, the real father of this kind of poetry is the great vaisnava saint Periyalvar.

In his poetry this type of literature has not become conventionalised into the ten stages of childhood. The poet describes Krishna's nativity. It is

interesting to note that the Alvar makes Tiru-k-kōttiyar in Tamil land the birth place of Krishna. This is how the Tamil saints and poets make every mythology a Tamil one.

Then follow twenty verses showing the beautiful and captivating gestures of the various parts of this child. The lullaby follows. The song of calling the moon succeeds. Next only come the song of the movement of the child and the song of clapping hands. This arrangement is much more natural against the other order of placing the lullaby at a later stage. The song of the trial and error in walking is true to nature; the song of the mother, requesting the child to catch hold of her, behind her back, is something known to all Tamil mothers though it is missing in the conventional poetry. There are also the song of hide-and -seek, the song of nursing , the song of piercing the lobes of the ears, and the song of oil-bath, all so graphically described, almost with a mother's heart. There is the calling of the crow to draw away the attention of the child from the pain of combing its hair and requesting the crow to bring a stick for krisna to take the calves for craying . Kappu or safeguarding the child against the evil eye, comes in here appropriately enough.

Dr T.P.Meenakshi Sundaram

A History of Tamil Literature


காணிக்கை




சோதியாய்த் தோன்றும் உருவமே! அரு ஆம்
ஒருவனே! சொல்லுதற் கரிய
ஆதியே! நடுவே ! அந்தமே! பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே!
தீதிலா நன்மைத் திருஅருள் குன்றே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
யாதுநீ போவதுஓர் வகைஎனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே!

- திருவாசகம்

சங்கத்தமிழின் தமிழாய்த் திகழ்ந்த
பேராசிரியர் - மூதறிஞர்-செம்மல்-
துணைவேந்தர்
முனைவர் வ.சுப. மாணிக்கனார் அவர்களுக்கும்
அவர்தம் அருமைத்துணைவியார்
வணக்கத்துக்குரிய
திருமதி ஏகம்மை ஆச்சி அவர்களுக்கும்



காணிக்கை



பிள்ளைத்தமிழ்

அமைப்பும் அழகும்

பிள்ளைத்தமிழ் தனித்த ஓர் இலக்கியமாய் முடிவுபெற்று ஆண்பாற்பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ், என இருவகையாக வளர்ந்தது. இவ்வகை உட்படும் நூல்களின் பருவ அமைப்பு, பருவங்களின் எண்ணிக்கை, வேறுபடும் முறை ஆகியவற்றை இலக்கண இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு காண்பது இந்நூலின் நோக்கமாகும்

இருபால் நூல்களின் பருவ எண்ணிக்கையையும், பருவமைப்பு முறையையும் பருவங்களை விடுத்தமைக்கும் எடுத்தமைக்குமான காரணங்களையும் பற்றி முதற்பகுதி உரைக்கிறது..

முதற்பகுதி

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் அமைப்பு

நிகண்டுகள் தரும் அமைப்பு

பிள்ளைத்தமிழ் இலக்கணத்தை முதல் நிகண்டான திவாகரமும் பின் எழுந்த பிங்கலம், பாரதிதீபம், சூடாமணி ஆகிய நிகண்டுகளும் இயம்புகின்றன.

திவாகரம்

தெய்வக்காப்பு, செங்கீரை, தால், இன்னமுதூட்டல், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில் சிதைத்தல்., சிறுதேர் உருட்டல், கச்சிற்சுரிகை காமுறப்புனைதல் எனப்பன்னிரு பருவங்களுடன் ஆண்பாற்பிள்ளைத் தமிழ் அமைப்பைத் திவாகரம் உரைக்கும்.[1] பிள்ளைத்தமிழ் இலக்கணமுரைக்கும் இப்பகுதியை மு.அருணாசலம், "பிற்காலச் சேர்க்கையுமாகலாம்"[2] எனக்குறிப்பர். பிள்ளைத்தமிழ்கள் பல தோன்றி வளர்ந்தபின் இப்பகுதி திவாகரத்தில் சேர்க்கப் பெற்றிருப்பின் நூற்பாவில் பிள்ளைப்பாட்டு என்பதற்கு மாறாகப் பிள்ளைத்தமிழ் என்று நூலாசிரியர் குறித்திருப்பர். அடுத்து, வரையறுக்கப் பெற்ற பத்துப் பருவங்கள் எண்ணப் பெற்றிருக்கும். இந்நிகண்டைத் தொடர்ந்து எழுந்த பிங்கலம், பிள்ளைத்தமிழ் இலக்கணத்தைத் திவாகரத்தை அடியொற்றிக் கூறுவது இப்பகுதியின் பழமையை உணர்த்துகிறது. காப்பிய அமைப்பைத் திவகாரம் நன்கு விளக்குவதும்,[3] சிற்றிலக்கியங்களில் முதற்சீர்களில் நற்கணம், தீக்கணம் என்ற பாகுபாடுகள் அமைவதை விவரிப்பதும்[4] திவாகர ஆசிரியருக்கு நூல் பற்றிய சிந்தனை உண்டு என்பதை வெளிப்படுத்தும். ஆதலால் நூல் வகையான பிள்ளைத்தமிழ் பற்றிய நூற்பா திவாகரர் ஆக்கியதேயாகும்.

திவாகர ஆசிரியர் குழந்தையின் இயல்புகளையும் செயல்களையும் எண்ணித் தம் கற்பனைக்கேற்பப் பல பருவங்களை அடுக்கிக் கூறியுள்ளார்,

பிங்கலம்

பிங்கல நிகண்டு, திவாகரம், கூறிய பன்னிரண்டு பருவங்களையும் ஏற்றுக் கூறுதல் கற்றல், பூணணிதல் என்ற இரு பருவங்களையும் புதிதாகக் கூட்டிப் பதினான்கு பருவங்களைச் சொல்லும்.[5]

பாரதி தீபம்

பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றிய பாரதிதீபம் மூன்று கட்டளைக் கலித்துறைகளால் பிள்ளைத்தமிழ் இலக்கணம் கூறுகிறது. இது, காப்பு, செங்கீரை, அமுதுடன் தால், சப்பாணி, முத்தம், வருகை, பூச்சூட்டல், சிறுபறை கொட்டல், கோழகந்தான் செய்தல், சிற்றிலழித்தல், மையாடல் , சுரிகைமெய்சேர்த்தல், எனப் பன்னிரண்டு பருவங்களைப் பாடுதற்குரிய வயது வரம்புடன் கூறுகிறது.[6]

திவாகரமும் பிங்கலமும், தனித்தனிப் பருவமாகச் சொல்லிய இன்னமுதூட்டல்பருவம், தாலப்பருவம் இரண்டையும் ஒன்றாகவும் முன்பின் மாறுதலாகவும் பாரதிதீபம் சுட்டுகிறது. பூச்சூட்டல், கோழகந்தான் செய்தல், மையாடல் என்ற பருவங்களை இந்நூல் மட்டுமே இயம்புகிறது. அம்புலிப்பருவம், சிறுதேர்ப்பருவம் இரண்டையும் இந்நூல் குறிக்கவில்லை.

கோழகந்தான் செய்தல் என்ற பருவம் குழந்தையின் குறும்புகளைச் சொல்லுவதாகும். இதனைப் பிறநூல்கள் நவின்றில.

சூடாமணி

சூடாமணி நிகண்டு, பல்பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதிக்குள், பத்து என்ற நிரலில் பிள்ளைத்தமிழை இறுதியாக விளக்குகிறது. அந்நூல் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனப்பத்து பருவங்களை வகுத்துள்ளது. இந்நிகண்டு தோன்றிய காலத்தில் பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் பத்து என்ற கருத்து அமைந்து விட்டது. மேலும், இப்பருவம் பத்தையுமிசைக்கும்,[7] என வெளிப்படப் பருவ எண்ணிக்கையைத் தொகுத்து இந்நூல் குறிக்கும். மற்ற நிகண்டுகளோ பருவத்தை நிரல்பட எண்ணினவே அன்றி இத்துணை என்று வரையறுத்தில.

பதினாறாம் நூற்றாண்டுக்கு முன் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் பல தோன்றின. சிற்றிலக்கிய இலக்கணம் கூறும் பாட்டியல்களும் பலவாக எழுந்தன. இக்காலத்திய சூடாமணி நிகண்டு அவற்றைத் தழுவிப் பிள்ளைத்தமிழ் இலக்கணம் வகுத்தது. அதனால் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களின் அமைப்புடன் இந்நிகண்டு கூறும் அமைப்பும் ஒத்துள்ளது.

பிற நிகண்டுகள்

உரிச்சொல் நிகண்டு, கயாதரம், அகராதி நிகண்டு, நாமதீப நிகண்டு ஆகிய பிற நிகண்டுகளில் பிள்ளைத்தமிழ் பற்றிய குறிப்பில்லை. பொருட்டொகை நிகண்டு, தொண்ணூற்றாறு பொருட்களை விளக்கும்போது சிற்றிலக்கிய வகைகளை எண்ணுகிறது.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நிகண்டுகள் பருவ அமைப்பு

பருவப்பெயர்கள்	திவாகரம் (கி.பி. 900)	பிங்கலம் (கி.பி. 1000)	பாரதி தீபம் (கி.பி. 1500)	சூடாமணி (கி.பி. 1600)
தெய்வக்காப்பு	1	1	1	1
செங்கீரை	2	2	2	2
தால்	3	5	3	3
இன்னமுதூட்டல்	4	4	3	3
கூறுதல் கற்றல்	7	3	-	-
சப்பாணி	5	6	4	4
முத்தம்	6	7	5	5
வருகை	7	8	6	6
அம்புலி	8	9	-	7
சிறுபறை கொட்டல்	9	10	8	9
சிற்றில் சிதைத்தல்	10	11	10	8
சிறுதேர் உருட்டல்	11	12	-	10
பூணணிதல்	-	13	-	-
கச்சிற்சுரிகை				
காமுறப் புனைதல்	12	14	12	-
பூச்சூட்டல்	-	-	7	-
கோழகந்தான் செய்தல்	-	-	9	-
மையாடல்	-	-	11	-

பிரபந் தம்தொண்ணூற்றாமவை
சாதகம் பிள்ளைக் கவியே பரணி[8]

என்று பிரபந்த வகைகளுள் ஒன்றாகப் பிள்ளைத்தமிழையும் எண்ணுகிறது. எனினும் அது பிள்ளைத்தமிழ் அமைப்பையோ பருவங்களையோ பாடல் எண்ணிக்கையையோ கூறவில்லை.

பெயர்மாறுபாடுகளும் புதிய பருவங்களும்

நிகண்டுகள் பருவப்பெயரைக் கூறுவதில் முரண்கள் காணப்படுகின்றன. திவாகரம் தெய்வக்காப்பு என்று சொல்லும். இப்பெயர் பாட்டுடைத் தலைவனைத் தெய்வம் காக்க எனப்பாடுதல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஏனைய நிகண்டுகள் காப்பு என்று எவ்வித அடையுமின்றி இயம்புகின்றன.

திவாகர பிங்கலங்கள் வருகைப்பருவம் என்று சுட்ட, சூடாமணி வாரானைப் பருவம் எனக்குறிக்கிறது. வாரானை என்பது பிள்ளைத் தமிழிலக்கியங்கள் கையாண்ட பெயர். நிகண்டுகள் பெயர்களை ஒன்றுபோலக் கூறவில்லையாயினும் நுதலிய பொருளில் வேற்றுமை இல்லை.

கூறுதல்கற்றல், பூணணிதல், என்ற இரண்டும் பிற நிகண்டுகள் கூறாத பிங்கலம் மாத்திரம் கூறும் புதிய பருவங்கள். பூச்சூட்டல், கோழகந்தான் செய்தல், மையாடல் ஆகிய மூன்றும் பாரதிதீபம் சுட்டும் புதிய பருவங்கள்.

வைப்புமுறை

பருவங்களை நிறுத்தும் முறையில் நிகண்டுகளிடையே வேற்றுமை உண்டு. திவகரம், பாரதிதீபம், சூடாமணி ஆகிய நிகண்டுகள் தாலப் பருவத்தை மூன்றாம் பருவமாக்கப் பிங்கலம் ஐந்தாம் பருவமாக நிறுத்தும். திவாகரமும் பிங்கலமும் அம்புலிப்பருவத்துக்குப்பின் சிறுபறை கொட்டலை வைத்துள்ளன.அடுத்துச் சிற்றில் சிதைத்தல் அமையும். பாரதிதீபத்திலும் இதே வைப்புமுறை காணப்படுகிறது. ஆனால் இங்கு அம்புலிப்பருவம் இல்லை. சூடாமணி, சிற்றில் சிதைத்தலை முன் அமைத்துப்பின் சிறுபறை கொட்டலை அமைக்கும்.

திவாகரம், பிங்கலம், பாரதிதீபம் ஆகியன இறுதிப்பருவமாகக் கச்சொடு சுரிகை காமுறப்புனைதலை நிறுத்தும். சூடாமணி நிகண்டு, சிறுதேர்ப்பருவத்தை இறுதியாக்கிக் கச்சொடுசுரிகை காமுறப் புனைதலைக் குறித்திலது.

கச்சொடுசுரிகை காமுறப் புனைதல், பாட்டுடைத்தலைவனின் பன்னிரண்டாம் வயதில் பாடற்குரியது. சிறுதேருட்டல், நான்காம் வயதிற்குரியது. புலவர்கள் பாட்டுடைத்தலைவனாய்ப் பாடுதற்குரிய கற்பனை வரம்பைப் பருவங்களால் வரையறுத்திருக்கின்றனர். சிறுதேர்ப்பருவத்தில் பாட்டுடைத்தலைவன் ஐந்தாண்டு நிறைந்தோனாய்ப் புலவருக்கும் பயில்வோருக்கும் காட்சியளிக்கின்றான். கச்சொடுசுரிகை புனைதல், பன்னிரண்டு ஆண்டினனாகப் பாட்டுடைத்தலைவனை உணர்த்துகிறது.

காலத்தால் முந்திய நிகண்டுகள் பன்னிரண்டு வயது நிறைந்து மறவனாகத் திகழும் வரை பிள்ளைப்பருவம் என்று கொண்டன. சூடாமணி போன்ற நூல்கள் ஐந்தாண்டுக்குட்பட்ட காலப்பகுதியைப் பிள்ளைப்பருவம் என்று கொண்டன. பிள்ளைப்பருவம் யாது என விதித்துக் கொண்ட வரையறை வேறுபாடே தமிழில் இறுதிப்பருவ வேறுபாட்டிற்குக் காரணமாகும். அதனாலயே சில பருவங்கள் பாடப்படவில்லை.

பாட்டியல் தரும் அமைப்பு

பன்னிருபாட்டியல் பலருடைய நூற்பாக்களால் அமைந்த தொகுப்பு நூல், இதன்கண் இருபத்தைந்து நூற்பாக்கள் பிள்ளைத்தமிழ் பற்றியவை, இவற்றில் ஐந்து இந்திரகாளியார் பெயராலும் இரண்டு பொய்கையார் பெயராலும், எஞ்சிய பதினெட்டு, பரணர் பெயராலும் வழங்குகின்றன.

இந்திர காளியம்

இந்திர காளியார் இயற்றிய இந்திர காளியம் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது.[9] அந்நூல் அவை தாம்

பிள்ளையைப் பாடலிற் பிள்ளைப் பாட்டாய்ப்
பிறப்பே ஓகை காப்பே வளர்ச்சி
அச்ச முறுத்த லுடன்செங் கீரை
தால்சப் பாணி முத்தம்வா ரானை
அம்புலி சிற்றில் குழமகன் ஊசல்
என்றனர் பிறவும் தொன்னெறி மரபில்
தத்தம் தொழிற்குத் தகுவன புகறல்
எத்திறத் தோர்க்கு முரியவென்ப
கொச்சகக்கலியொடு நெடுவெண் பாட்டே

(இந்திரகாளியம் 31)

என்று பிள்ளைத்தமிழ் அமைப்பைப் புலப்படுத்தும்

அந்நூல் பிறப்பு, ஒகை, காப்பு, வளர்ச்சி, அச்சமுறுத்தல், செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், குழமகன், ஊசல் எனப் பதினான்கு பருவங்கள் எத்திறத்தோர்க்கும் உரிய என்றியம்புகிறது. தொழிற்குத் தகுவனபுகறல் என்பதைச் சேர்க்கப் பதினைந்து பருவங்கள் ஆகின்றன.

தொன்னெறி மரபின் தொழிற்குத் தகுவன புகறல் என இந்திரகாளியார் உரைத்தார். இது புலவர்கள் பாட்டுடைத்தலைவனுக்கு ஏற்பப் புதியன படைக்க வழிசெய்யும் தகையது. தொல்காப்பியர் விருந்து எனக் கூறும் வனப்பைப் போல இவரும் இதனைக் கூறினார். பாட்டுடைத்தலைவன் தொழிலுக்கு ஏற்பப் பிற்காலத்தார் புதுப்பருவங்களைப் படைத்துக்கொள்ள இப்பகுதி வழிகாட்டிற்று. இத்தகைய எதிர்கால நோக்குடைய ஒன்றனைப் பிற நூல்கள் சுட்டில.

பன்னிருபாட்டியல் பரணர்

பன்னிருபாட்டியலில் பிள்ளைத்தமிழ் பற்றிப் பேசும் பரணர், பத்துப்பருவங்கள் கூறுவர். காப்பு, செங்கீரை , தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன அவை.[10]

பொய்கையார்

பொய்கையார், பருவப் பெயர்களையோ பருவ எண்ணிக்கையையோ பாடல் எண்ணிக்கையையோ சொல்லிய நூற்பாக்கள் கிடைக்கவில்லை. ஆனால் இவரும் பத்துப் பருவங்களே கொண்டார் என்பதை வயதுவரம்பு பற்றிய நூற்பா உணர்த்தும்.[10அ]

இந்திரகாளியார் கூறுவதில் சிறுதேர், சிறுபறை இல்லை. ஆனால் அவற்றைப் பரணர் கூறுவர். இந்திரகாளியார் தொழிற்குத் தகுவனகூறல் என்றமையால் இவ்விரு பருவங்கள் அதனுள் அடங்கிவிடும். குழந்தைகள் பிறப்பையும் வளர்ச்சியையும் கூர்ந்து நோக்கிய இந்திரகாளியார், தம்புலமை ஆற்றலுக்குப் பொருந்தப் பல பருவங்களை அடுக்கி ஓர் இலக்கிய வகையைத் தோற்றுவித்தார். இவர்கள்,

> பின் நூல் செய்வோர் இன்ன நெறியில் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்களேயன்றி, முன்பல்வகைப் பிரபந்தங்கள் யாவும் இருந்து அவற்றுக்கு இலக்கணம் சொன்னார்கள் என்று கருதுவதற்கில்லை.[11]

என்ற அறிஞர் மு.அருணாசலம் கருத்து ஏற்கத்தக்கது. இந்திரகாளியார், பரணர்

ஆகிய இருவர் நூற்பாக்களும் பன்னிருபாட்டியலில் உள்ளன. அவை வெவ்வேறு வகையான அமைப்பை விளக்குகின்றன.

வெண்பாப் பாட்டியல்

பன்னிருபாட்டியலின் பின் எழுந்த வெண்பாப்பாட்டியல் எனும் வச்சணந்தி மாலை, காப்பு தால், செங்கீரை சப்பாணி, முத்தம், வாரனை, அம்புலி, சிறுபறை, சிற்றில், எனப்பத்து பருவங்களைப் பிள்ளைத் தமிழுக்கு உறுதிப்படுத்துகிறது.[12]

இப்பாட்டியல் இரண்டாம் பருவமாகத் தாலப் பருவத்தை அமைக்கும் இந்திரகாளியாரும் பரணரும் செங்கீரைக்குப் பின் மூன்றாம் பருவமாக இதனை வைப்பர். அமைப்பு முறையில் இம்மாறுபாடு சுட்டத்தக்கது.

பிறபாட்டியல்கள்

அடுத்துத் தோன்றிய நவநீதப் பாட்டியல், வெண்பாப்பாட்டியல், கூறிய பத்துப்பருவங்களையும் சுட்டியது. ஆனால் காப்பு, செங்கீரை தால், சப்பாணி எனப் பருவங்களை மாற்றி அமைத்தது.[13]

பிரபந்த மரபியலும் நவநீதப் பாட்டியல் கூறியவாறே பத்துப் பருவங்களைச் சுட்டியது[14] சிதம்பரப்பாட்டியல் அமைப்பினாலும் கருத்தாலும், சொற்றொடர்களாலும் பிரபந்த மரபியலைத் தழுவியது ; ஆதலின் பிரபந்த மரபியல் கருத்தும் சிதம்பரப்பாட்டியல் கருத்தும்[15] ஒன்றே ; எனவே இப்பாட்டியல்களில் வழிவழிச் செய்திகள் இடம் பெற்றனவே அன்றிப் புதியன இடம் பெறவில்லை.

பிற்கால இலக்கண நூல்கள் தரும் அமைப்பு

பாட்டியல் நூல்களன்றிப் பிற்காலத்தெழுந்த ஐந்திலக்கண நூல்களும் பிள்ளைத்தமிழ் அமைப்பை விவரிக்கின்றன. பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்த இலக்கண விளக்கம், பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த தொன்னூல் விளக்கம், பத்தொன்பதாம் நூற்றாண்டைய முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகியவை பிள்ளைத்தமிழ் அமைப்பை விளக்குகின்றன.

இந்நூல்கள் ஒரேமுறையில் பத்துப்பருவங்களையும் பருவப்பெயர் களையும் சுட்டுகின்றன. ஏனெனில் இவற்றுக்கு முன் பிள்ளைத்தமிழ்கள் மிகப்பல தோன்றிவிட்டன. பிள்ளைத்தமிழ் பற்றிப் பேசும் பல பாட்டியல்களும் நிகண்டுகளும் நிறைந்தன. இதனால் இவை வேறுபடாத ஓர் அமைப்பை விளக்குகின்றன.

பிற்காலப்பாட்டியல்கள் கூறும் முறை

	இலக்கண விளக்கம்	தொன்னூல் விளக்கம்	முத்து வீரியம்	சுவாமி நாதம்
காப்பு	1	1	1	1
செங்கீரை	2	2	2	
தால்	3	3	3	
சப்பாணி	4	4	4	
முத்தம்	5	5	5	
வாரானை	6	6	6	
அம்புலி	7	7	7	
சிறுபறை	8	8	8	
சிற்றில்	9	9	9	
சிறுதேர்	10	10	10	10

பிரபந்த தீபிகையும் பிரபந்த தீபமும்

பிரபந்த தீபிகையும்[16] பிரபந்த தீபமும்[17] பிள்ளைத்தமிழுக்குப் பத்துப் பருவங்கள் கூறுகின்றன. இங்கும் பன்னிரு பாட்டியலில் பரணர் பகர்ந்த கருத்துத் தொடர்ந்து வருகின்றது

பிரபந்தத்திரட்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய பிரபந்தத்திரட்டு பத்துப் பருவங்களைச் சொல்லும்.[18] பருவப் பெயர்களில் இந்நூல் முன்னூல்களிலிருந்து வேறுபடவில்லை. இறுதி இரண்டு பருவங்கள் சிறுதேர், சிற்றில் என மாறுகின்றன. இறுதியாக அமையும் சிறுதேர், ஈற்றயலாவது பிற நூல்கள் நவிலாத ஒன்றாம்.

பருவ வரிசை முறை

வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், பிரபந்தமரபியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கணவிளக்கப்பாட்டியல், தொன்னூல் விளக்கம், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம், முத்துவீரியம், சுவாமிநாதம், பிரபந்தத்திரட்டு ஆகிய பதினொரு நூல்களும் பிள்ளைத்தமிழுக்குப் பத்துப் பருவங்களை வகுத்தன.

இவற்றின் கருத்துக்கு அடிப்படை பன்னிரு பாட்டியலில் உள்ள பரணர் நூற்பாக்கள் தாம். பிள்ளைத் தமிழுக்குப்பத்துப் பருவம் என விதி கண்ட முதலாசிரியர் பரணர் ; பிறரெல்லாம் பத்துக்கு மேற்பட்ட எண்ணிக்கை உரைத்தனர்.

பிள்ளைத்தமிழில் பருவ வரிசை இன்றியமையாதது. எல்லா நூல்களும் காப்புப் பருவத்தை முதல் பருவமாக்கின. தமிழகத்தில் நிலவிய தெய்வவுணர்வும் நீண்டநாள் வாழ வேண்டும் என்ற விழைவும் இப்பருவம் அமைதற்குரிய அடிப்படையாகும்.

இரண்டாம் பருவம் செங்கீரைப் பருவம். வெண்பாப்பாட்டியல் இதனை மூன்றாம் பருவமாகவும் தாலப் பருவத்தை இரண்டாம் பருவமாகவும் கூறுகிறது ஏனைய நூல்களில் மூன்றாம் பருவம் தாலப் பருவம்.

2. செங்கீரை 3. தால்	*என்பது* *ஒரு முறை*	2. தால் 3. செங்கீரை	*என்பது* *மற்றொரு முறை*

சப்பாணி, முத்தம் வாரானை, அம்புலி என்ற பருவங்கள் தொடர்ந்து மாற்றமின்றி இந்நூல்களில் அமைந்திருக்கின்றன. இந்நான்கினையும் பிள்ளைத்தமிழ் பற்றிப் பேசும் எல்லா நூல்களும் வரிசை முறை மாறாமல் கூறுகின்றன.

எட்டாவது பருவம், சிற்றில், எனப் பன்னிருபாட்டியலும் எஞ்சியநூல்கள் சிறுபறை எனவும் நவிலும்.

ஒன்பதாம் பருவம் சிறுபறை எனப் பரணரும், சிற்றில் எனப் பிறரும் வகுப்பர். பிரபந்தத்திரட்டு சிறுதேரை ஒன்பதாவதாக்கிச் சிற்றிலை இறுதிப் பருவமாக அமைத்தது.

ஏனைய நூல்களுக்குப் பத்தாம் பருவம் சிறுதேர் ஆனால் பிரபந்தத்திரட்டு, சிற்றில் பத்தாம் பருவம் என்று கூறும்.

திவாகரம், இந்திரகாளியம், பிங்கலம் ஆகிய மூன்றும் பிள்ளைத்தமிழுக்கு ஏனைய நூல்களைவிடப் பருவங்களைக் கூடுதலாக வகுக்கின்றன. இவை பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை. பன்னிருபாட்டியலிலுள்ள பரணர் நூற்பா, பிள்ளைத்தமிழுக்குப் பத்துப் பருவங்கள் கூறும். பின் எழுந்த வெண்பாப்பாட்டியலும் தெளிவாகப் பத்துப் பருவங்களை வரையறுத்துள்ளது. பன்னிரண்டாம் நூற்றாண்டு தொடங்கிப் பத்தொன்பதாம்

நூற்றாண்டு முடிய எழுந்த இலக்கண நூல்கள் பத்துப் பருவங்களே பிள்ளைத் தமிழுக்குரியவை என்று இயம்புகின்றன.

உரையாசிரியர் அமைதி

வெண்பாப்பாட்டியல் "சாற்றரிய காப்புத் தால் செங்கீரை சப்பாணி"[19] எனக் கூறியது பெரும்பான்மை இலக்கணம் கூறிய நூல்களோடு ஒவ்வாமை கண்ட உரையாசிரியர் ,

> *இவ்வாசிரியர் காப்புச் செங்கீரை தால்,*
> *என்னாது முறை பிறழக் கூறினது, செய்யுளாதலான்* [20]

என்று எழுதியுள்ளார். காப்புச் செங்கீரை தால் என்னும் முறைவைப்பினும் வெண்பா இலக்கணம் பிழையாது பாடியிருக்க முடியும். நூலாசிரியர் தாலப் பருவத்தை முன் கூறவேண்டும் என்னும் நோக்கிலேதான் முறைமாற்றிப் பாடியுள்ளார். பருவ மாற்றத்துக்கு உரையாசிரியர் கூறும் அமைதி பொருந்துவதாக இல்லை.

இறுதி மூன்று பருவ அமைப்பில் இலக்கணங்கள், மூன்றுவகை அமைப்பை சுட்டுகின்றன.

	திவாகரம் பிங்கலம் பிரபந்த மரபியல் இலக்கண விளக்கம் கூறும் முறை	பன்னிரு பாட்டியல் சூடாமணி கூறும் முறை	பாரதி தீபம் கூறும் முறை	பிரபந்தத் திரட்டு
8	சிறுபறை	8 சிற்றில்	8 சிறுபறை	8 சிறுபறை
9	சிற்றில்	9 சிறுபறை	9 சிற்றில்	9 சிறுதேர்
10	சிறுதேர்	10 சிறுதேர்	10	10 சிற்றில்

நிகண்டுகளைப் போலப் பாட்டியல்கள் இன்ன ஆண்டில் இந்தப் பருவம் பாடவேண்டும். என்ற விதியைப் பின்பற்றாமையாலேயே இறுதிப்பருவங்களை அமைப்பதில் முறை மாற்றங்கள் எழுந்தன.

ஆண்பாற் பிள்ளைத் தமிழ்
பாட்டியல் பருவ அமைப்பு

பருவப் பெயர்கள்	இந்திர காளியம்	பன்னிரு பாட்டியல் பரணார்	வெண் பாப்பாட்டியல்	நவநீதப் பாட்டியல்	பிரபந்த மரபியல் சிதம்பரப் பாட்டியல் இலக்கணப் விளக்கப் பாட்டியல் சதுரகராதி பிரபந்த தீபிகை	பிரபந்தத் திரட்டு
1. பிறப்பு	1					
2. ஓகை	2					
3. காப்பு	3	1	1	1	1	1
4. வளர்ச்சி	4					
5. அச்சமுறுத்தல்	5					
6. செங்கீரை	6	2	3	2	2	2
7. தால்	7	3	2	3	3	3
8. சப்பாணி	8	4	4	4	4	4
9. முத்தம்	9	5	5	5	5	5
10. வருகை வாரானை	10	6	6	6	6	6
11. அம்புலி	11	7	7	7	7	7
12. சிற்றில்	12	8	9	9	9	10
13. குழமகன்	13					
14. ஊசல்	14					
15. தொழிற்குத் தகுவன புகறல்	15					
16. சிறுபறை		9	8	8	8	8
17. சிறுதேர்		10	10	10	10	9

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் அமைப்பு

பருவ வைப்புமுறை

பருவப்பெயர்கள்	திவாகரம் கி.பி. 900	இந்திர காளியம் கி.பி. 900	பன்னிரு பாட்டியல் பரணர்	பிங்கலம் கி.பி. 1000	வெண் பாப் பாட்டியல் கி.பி. 1200	நவநீதப் பாட்டியல் கி.பி. 1400	பாரதி தீபம் கி.பி. 1500	சூடா மணி கி.பி. 1600	பிரபந்த மரபியல் சிதம்பரப் பாட்டியல் கி.பி.1700 இலக்கண விளக்கப் பாட்டியல் கி.பி.1700 தொன்னூல் விளக்கம் சதுரகராதி கி.பி.1800 பிரபந்த தீபிகை பிரபந்த தீபம் முத்துவீரியம் 1900 சுவாமி நாதம்	பிரபந்தத் திரட்டு கி.பி. 1900
1	2	3	4	5	6	7	8	9	10	11
1. தெய்வக்காப்பு / காப்பு	1	3	1	1	1	1	1	1	1	1
2. செங்கீரை	2		2	2	3	2	2	2	2	2
3. தால்	3	7	3	5	2	3	3 3	3	3	3

1	2	3	4	5	6	7	8	9	10	11
4. இன்னமுதூட்டல்	4			4			3			
5. சப்பாணி	5	8	4	6	4	4	4	4	4	4
6. முத்தம்	6	9	5	7	5	5	5	5	5	5
7. வாரானை, வருகை	7	10	6	8	6	6	6	6	6	6
8. அம்புலி	8	11	7	9	7	7	7	7	7	7
9. சிறுபறை	9		9	10	8	8	8	8	8	8
10. சிற்றில்	10	12	8	11	9	9	10	8	9	10
11. சிறுதேர்	11	10	12	10	10		10		10	9
12. பூணணிதல்				13						
13. கச்சிற்சுரிகை காமுறப்புனைதல்	12			14			12			
14. தொழிற்குத் தகுவன புகறல்		15								
15. பூச்சூட்டல்							7			
16. கோழகந்தான் செய்தல்							9			
17. மையாடல்							11			
18. பிறப்பு		1								
19. ஓகை		2								
20. வளர்ச்சி		4								
21. அச்சமுறுத்தல்		5								
22. கூறுதல் கற்றல்				3						
23. குழமகன்			13							
24. ஊசல்		14								

இலக்கியம் காட்டும் அமைப்பு

பிள்ளைத்தமிழ் இலக்கியவகை தோன்றி வளர்வதற்கு முன்னரே அதுபற்றிய இலக்கணங்களை நிகண்டுகளும் பாட்டியல்களும் உரைக்கின்றன. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒட்டக் கூத்தர் இயற்றிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் இவ்விலக்கியவகைக்கு முதனூலாகும். அதன்பின் பல பிள்ளைத்தமிழ் நூல்கள் தமிழகத்தில் தோன்றியிருக்கின்றன.

தோன்றிய பிள்ளைத்தமிழ் நூல்களில் ஆண்களைப் பாடியவை மிகுதி. முதற்கண் வள்ளல்களையும் குறுநிலத் தலைவர்களையும் செல்வர்களையும் புலவர் பாடினர். பின் மக்களைப் பாடுவதனினும் இறைவனைப் பாடுவதே விரும்பத்தக்கது.[21] என்ற கொள்கை உருவாயிற்று. அதனால் மக்களைப் பாடிய இலக்கிய வகையால் இறைவனைப் பாடலாயினர். ஆதலால் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், மக்களையும் தெய்வங்களையும் பாட்டுடைத் தலைவராகப் பெற்றிலங்குகிறது. எனவே பிள்ளைத்தமிழ்களை

1. *மக்கள் பிள்ளைத்தமிழ்*
2. *தெய்வங்கள் பிள்ளைத்தமிழ்*

எனப் பகுப்பது சாலும். இப்பாகுபாட்டில் பிள்ளைத்தமிழ் அமைப்பு ஆராயப்பெற்று இறுதியில் ஒப்பிட்டுப் பொது அமைப்புக் காணப்பெறும்.

மக்கள் பிள்ளைத்தமிழ்கள்

மக்களைப் பாட்டுடைத் தலைவர்களாகப் பாடிய பிள்ளைத்தமிழ்கள் தமிழில் மிகுதி. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் மன்னர்கள், குறுநிலத் தலைவர்கள், ஞானாசிரியர்கள், புலவர்கள், செல்வர்கள் ஆகியவரைப் பாடிய நூல்கள் கிடைக்கின்றன. இருபதாம் நூற்றாண்டில் அரசியல் தலைவர்களையும், புலவர்களையும் பாடிய பிள்ளைத்தமிழ்கள் தோன்றியுள்ளன. ஆண்மக்களைப் பாடிய பிள்ளைத்தமிழ் நூல்கள்தொண்ணூறுக்குக் குறையாதன.

அடிப்படை அமைப்பு

மக்களைப் பாடிய ஆண்பாற் பிள்ளைத்தமிழ்களில் பத்துப் பருவங்கள் விளங்குகின்றன. அவற்றில் பாடல் எண்ணிக்கை வேறுபட்டிருந்தாலும் பருவ எண்ணிக்கை வேறுபடவில்லை.

1	2	3	4	5
காப்பு	செங்கீரை	தால்	சப்பாணி	முத்தம்
6	7	8	9	10
வருகை	அம்புலி	சிற்றில்	சிறுபறை	சிறுதேர்
		சிறுபறை	சிற்றில்	
		சிற்றில்	சிறுதேர்	சிறுபறை

இதுதான் பருவ அமைப்புமுறை, பிள்ளைத்தமிழாசிரியர்கள் காப்பு, செங்கீரை தால், சப்பாணி முத்தம், வருகை, அம்புலி என்ற ஏழு பருவ வரிசை முறையை மாற்றவில்லை. ஆனால் நூலின் இறுதி மூன்று பருவங்கள் மூன்று வகையாக மாறியமைந்துள்ளது. [22]

சிறுபறை,சிற்றில், சிறுதேர் என்ற அமைப்பு குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், திருவாரூர் சத்தியஞான பண்டாரம் பிள்ளைத்தமிழ், முருகப்பத்தேவர் பிள்ளைத்தமிழ், வேங்கட்டேசுவரன் பிள்ளைத்தமிழ் ஆகியவற்றில் உள்ளது. சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்ற பருவ அமைப்பில்தான் பல பிள்ளைத்தமிழ்கள் விளங்குகின்றன. சிற்றில், சிறுதேர், சிறுபறை என அமைந்தவை தத்துவராயரின் சொரூபானந்தர் பிள்ளைத்தமிழும் க.கி.இராமசாமி இயற்றிய கம்பன் பிள்ளைத்தமிழும் ஆகும்.

முரண் அமைப்புகள்

அடிப்படை அமைப்பு மரபினைப் பின்பற்றாத சில பிள்ளத்தமிழ்களும் தமிழில் வழங்குகின்றன. பதினைந்தாம் நூற்றாண்டில் எழுந்த சொரூபானந்தர் பிள்ளைத் திருநாமம் என்ற பிள்ளைத்தமிழில் பருவங்கள் மாறி அமைந்திருக்கின்றன. பருவந்தோறும் பாடல்கள் ஓர் ஒழுங்கான எண்ணிக்கைக்குள் அடங்கவில்லை.

பருவம்	காப்பு	வருகை	தால்	சப்பாணி	
பா.எண்	5	10	6	8	
செங்கீரை	முத்தம்	அம்புலி	சிற்றில்	சிறுதேர்	சிறுபறை
8	7	7	5	5	5

இவ்வமைப்பில் இரண்டாவதாக வருகையும் ஐந்தாவதாகச் செங்கீரையும் ஆறாவதாக முத்தமும், ஒன்பதாவதாகச் சிறுதேரும் பத்தாவதாகச் சிறுபறையும் மாறிக் கிடக்கின்றன.

இத்தகைய பருவமைப்புச் சிதைவு வேறு எந்நூலிலும் இல்லை. இப்பிள்ளைத்தமிழ் பாடிய தத்துவராயர் புதியன பாடும் ஆர்வலர். இவர் பாடிய பாடுதுறை என்ற நூல் இவருடைய புதுமை வேட்கையை எடுத்துரைக்கிறது. தன்னாசிரியரான சொரூபானந்தரின் சீற்றத்தைப் போக்க அவர் முன்னிலையிலேயே கருத்துகளை உள்ளடக்கி இப்பிள்ளைத் திருநாமத்தைப் பாடியிருக்கிறார். இதனாலும் இவருக்கு அமைந்த சித்தர் மனப்போக்காலும் இதன் அமைப்பு முரண்பட்டிருக்கிறது..

தாலுக்கு முன் செங்கீரை பாடுவது மரபு. அதற்கு மாறாக இந்நூலாசிரியர் செங்கீரையைத் தாலுக்குப்பின் ஐந்தாவதாக அமைப்பர். இப்போக்கு பெரியாழ்வார் திருமொழியிலும்[23] வெண்பாப்பாட்டியலிலும்[24] உள்ளதேயாகும். இருபதாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது பெரியார் பிள்ளைத்தமிழ். இந்நூலாசிரியர் மரபுக்கு மாறாகப் பதினைந்து பருவங்களை அமைத்துள்ளார். அடிப்படை மரபான பத்துப்பருவங்களை அவ்வரிசை முறையிலேயே பிள்ளைத்தமிழ் பகுதி ஒன்று எனப் பாடியிருக்கிறார், ஆசிரியர் பிள்ளைத்தமிழ்ப்பகுதி இரண்டில்,

கூர்ந்துணரும் பருவம்
வினாவுப் பருவம்
கதைகேள் பருவம்
பள்ளிசெல் பருவம்

என நான்கு புதிய பருவங்களை ஆசிரியர் பாடினார். வாழ்த்துப் பருவம் என்ற மற்றொரு புதிய பருவம் நூலின் முதற்கண் அமைந்துள்ளது. கதைகேள் பருவத்தில் பிற்பகுதியும் பள்ளிசெல் பருவமும் அச்சாகவில்லை[25] மூலப்படி செல்லரித்து விட்டது. பருவத்துக்குப் பத்துப்பாக்கள் என்ற மரபினை நூலாசிரியர் பின்பற்றியிருக்கிறார்

தெய்வங்கள் பிள்ளைத்தமிழ்கள்

முருகன் பிள்ளைத்தமிழ்

மக்களைப் பாடிய பிள்ளைத்தமிழ் தெய்வங்களைப் பாடிப் பரவும் கருவியாயிற்று. தெய்வங்களுள் முருகனே முதற்கண் பிள்ளைத்தமிழின் தலைவராகப் புலவர்களால் பாடப்பெற்றான். முருகப்பெருமானைப் போற்றிய

பழமையான பிள்ளைத்தமிழ் பகழிக்கூத்தர் யாத்த திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் (கி.பி. 1500) ஆகும். முருகனைப் பாடிய அறுபதுக்குக் குறையாத பிள்ளைத்தமிழ்கள் இங்கு ஆராயப்பட்டுள்ளன.

முருகன் பிள்ளைத்தமிழ்களின் முதல் ஏழு பருவங்களில் எவ்வகை மாற்றமும் இடம் பெறவில்லை செங்கீரை, தால் என்ற ஒரே அமைப்பு முறைதான் உண்டு. இறுதிப் பருவங்கள் மூன்றின் வரிசை முறையில் மாறுபாடுகள் இருக்கின்றன. இம்மாறுபாடும் மக்கள் பிள்ளைத்தமிழில் அமைந்தவை.

முருகனைப் பாடிய முதற்பிள்ளைத்தமிழ் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் இந்நூலுள் சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்ற அமைப்பு குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் போல உள்ளது. இவ்வமைப்புடைய நூல்கள் மிகக்குறைவு. சிற்றில், ,சிறுபறை, சிறுதேர், என்ற முறையே பெரு வழக்கினது. இவ்விருமுறைக்கும் மாறாகப் பினாங்கு தண்ணீர்மலைத் தண்டாயுதபாணி பிள்ளைத்தமிழில் சிற்றில், சிறுதேர், சிறுபறை, என்று முறை மாறி இருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் எழுந்த காவை முருகன் பிள்ளைத்தமிழில் பதின்மூன்று பருவங்கள் உள்ளன. இதில் காணக்கூடிய மூன்று புதிய பருவங்கள் துயிலெழற் பருவம், தகரேறுபருவம், வேலோச்சுபருவம் என்பன. வருகை,அம்புலி, என்ற மரபு, அம்புலி வருகை என்று மாறியுள்ளது. சிற்றிலுக்குப் பின் புதிய துயிலெழற்பருவம் அமைகிறது. சிறுபறை, சிறுதேர் அடுத்து அமைகின்றன. எஞ்சிய இருபுதிய பருவங்களும் இறுதியாகின்றன.திருப்பள்ளியெழுச்சியை அடியொற்றியது துயிலெழற்பருவம். ஏனைய இரண்டும் புராணக்கதை மரபுகளைத் தழுவியமைந்தவை.

விநாயகர்பிள்ளைத்தமிழ்

விநாயகர் பிள்ளைத்தமிழ்கள் மிகக்குறைவு. அவை மிகப் பிற்காலத்தன. அவற்றின் பருவ அமைப்பு, மரபு தழுவியது. திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழில் பருவத்துக்கு ஐந்து பாடல்கள், மற்ற நூல்களில் பருவத்துக்குப் பத்துப்பாடல்கள் அமைப்பில் வேறு சிறப்பு இல்லை. திருவல்லிக்கேணி அரசடிக் கற்பகவிநாயகர் பிள்ளைத்தமிழில் பருவத்துக்கொரு பாட்டாகப் பத்துப் பாடல்கள் உண்டு.

வைணவப் பிள்ளைத்தமிழ்

திருமால் பிள்ளைத்தமிழ்களில் முதல் ஏழு பருவங்களில் செங்கீரை, தால், என்ற அமைப்பு உண்டு. இறுதி மூன்று பருவ வரிசையில் முதற்காட்டியவற்றுள் இரண்டு முறையே இடம்பெறுகின்றது.

1	2
சிற்றில்	சிறுபறை
சிறுபறை	சிற்றில்
சிறுதேர்	சிறுதேர்

குருவாயூரப்பன் பிள்ளைத்தமிழ், பருவத்துக்கு மூன்று பாடல்களையுடையது. அழகர் பிள்ளைத்தமிழும், திருவல்லிக்கேணிப் பெருமான்பிள்ளைமை இன்பமும் பருவத்துக்குப் பதினொரு பாடல்கள் உடையன.,

வைணவம் தொடர்பான பிள்ளைத்தமிழ்கள், காப்புப் பருவத்துக்குப் முன் பழிச்சினர்ப்பரவல் எனப் புதிய பகுதியைக் கொண்டுள்ளன. இப்பகுதி நூலுக்குக் காப்பாகத் திகழ்கிறது. இதனைத் தனிப்பருவமாகக் கருதும் மரபில்லை. அழகர் பிள்ளைத்தமிழில் இவ்வமைப்பு முதற்கண் காணப்படுகிறது.

இசுலாமியப் பிள்ளைத்தமிழ்கள்

இசுலாமியப் பிள்ளைத்தமிழ்களிலும் வழக்கமான பத்துப் பருவ அமைப்பு முறையே உண்டு. ஆனால் இந்நூற்றாண்டில் எழுந்த பெருமானார் பிள்ளைத்தமிழில் மரபு வழியான சிற்றில், சிறுபறை, சிறுதேர், என்ற மூன்றிற்கு மாறாகப் பள்ளியெழுச்சிப்பருவம், காட்சிப்பருவம், வாழ்த்துப்பருவம், என மூன்று புதிய பருவங்கள் இடம்பெறுகின்றன. நூலில் பத்துப் பருவமும் பருவத்துக்குப் பத்துப் பாடல்களும் என்ற அமைப்பு விளங்குகிறது.

கிறித்துவப் பிள்ளைத்தமிழ்

வீரமாமுனிவர் பிள்ளைத்தமிழ், வேதநாயகம் பிள்ளைத்தமிழ், ஏசுநாதர் பிள்ளைத்தமிழ் ஆகியவற்றில் காப்பு. செங்கீரை, தால் எனவும் சிற்றில், சிறுபறை, சிறுதேர், எனவும் பருவங்கள் அமைகின்றன. எஞ்சிய நான்கு பருவ வைப்பில் முரணில்லை. வேதநாயகர் பிள்ளைத்தமிழ் மட்டும் பருவத்துக்கு ஒன்றாகப் பாடப்பெற்றது

சமணப்பிள்ளைத்தமிழ்கள்

சமண சமயச் சார்புடைய ஆதிநாதர் பிள்ளைத்தமிழ், காப்பு,செங்கீரை, தால், எனவும் சிறுபறை, சிறுதேர், எனவும் பருவங்களை வரிசைப்படுத்தும். இவ்வமைப்பிலிருந்து அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழின் பிற்பகுதி சிற்றில், சிறுபறை, சிறுதேர், என முறைமாறி அமைகிறது. சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, என்ற பருவ வரிசைமுறையில் வேற்றுமை இல்லை.

பிள்ளைத்தமிழ் முன்னோடிகள்

ஆழ்வார்கள்

பிள்ளைத்தமிழ், தனி இலக்கியவகையாக உருப்பெறும் முன் ஆழ்வார்கள் பலர் அதற்குரிய பருவங்களைப் பாடியுள்ளனர். திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகிய நால்வரும் பாடிய திருமொழிகளால் அறியும் அமைப்பு பிள்ளைத்தமிழ் அமைப்புடன் ஒப்பிடற்குரியது

திருமங்கையாழ்வார் இன்னமுதூட்டலையும் (1878-1887) சப்பாணிப் பருவத்தையும் (1888-1897) ஒன்றன்பின் ஒன்றாகப் பாடினார். குலசேகரர் தாலப்பருவமாக (719-729) ஒரு பருவம் பாடியுள்ளார். அவர் மற்றொரு திருமொழியில் தேவகியாகத் தன்னை ஆக்கிக்கொண்டு யசோதை துய்த்த பிள்ளைமை இன்பங்களைத் தான் துய்க்கவில்லையே என வருந்துவதாகப் பாடினார். அங்கு முதல்பாட்டு தாலப்பருவம். (708) ஐந்தாம் பாட்டு முத்தப்பருவம்(712) ; ஏழாம் பாட்டு இன்னமுதூட்டல் பருவம் (714) எனத் தாலும் முத்தமும், இன்னமுதூட்டலும் எனப் பருவங்கள் வரிசையாக விளங்குகின்றன.

இவ்விருவரிலும் பெரியாழ்வார் விரிவாகப் பிள்ளைத்தமிழுக்குரிய பல கூறுகள் அமையப் பாக்கள் பாடியுள்ளார். ஆண்டாள், அவர் பாடாத சிற்றில் சிதையேல், (514-523) என்ற பருவத்தைத் தனித்துப் பாடினார்.

குழந்தையின் வளர்ச்சியையும் ஆடலையும் கற்பனை
செய்து முதல் முதலில் பாடியவர் பெரியாழ்வார் [26]

என்னும் கூற்று முற்றிலும் பொருந்தும். இவர் குழந்தை விளையாட்டுகளைத் தம் பாக்களில் நன்கு சித்திரிக்கிறார். பெரியாழ்வார் பாடிய காப்பு, தாலாட்டு, அம்புலி, செங்கீரை, சப்பாணி, ஆகியன நிகண்டுகளிலும் பாட்டியல்களிலும் பிள்ளைத்தமிழ்களிலும் விளங்குபவை.

நிகண்டுகள் நவிலும் பிறப்பு, பூச்சூட்டல், கோழகம் செய்தல், மையாடல், ஆகியன பிள்ளைத்தமிழில் பாடப்பெறாதவை. இம்மிகைப்பருவங்களைப் பாட்டியல்களும் சுட்டில. முற்கூறிய பருவங்களில் கூறுதல்கற்றல், மையாடல், கச்சிற்சுரிகை காமுறப்புனைதல் ஆகிய மூன்றையும் பல பருவங்களைப் பாடும் பெரியாழ்வார் பாசுரங்களில்கூடக் காணமுடியவில்லை. எஞ்சிய பருவங்களைப் பெரியாழ்வார் பாடியிருக்கிறார்.

இன்னமுதூட்டலை "அம்மம்உண்" எனத் தனியே திருமங்கையாழ்வாரும் பெரியாழ்வாரும் ஒவ்வொரு பத்துப் பாடினர். [27] அன்றிப்பெரியாழ்வார், ஆரா இன்னமுதுண்ணத்தருவேன் நான் அம்மம் தாரேன், என எதிர்மறையாகப் பாடிய

பத்தும் இப்பருவத்துள் அடங்கும்.[23]

ஏதேனும் அணிகலனை அணிவது "பூணணிதல்" என்ற பருவச்செய்தி பெரியாழ்வார் திருமொழியில் இரண்டாம் பத்து-மூன்றாம்-திருமொழி[29] காதுகுத்தல் பற்றியதாக உளது. இது பூணணிதல் பருவமாகும். ஆழ்வாரின் இரண்டாம்பத்தின் ஏழாம்திருமொழியில் கண்ணனுக்குப் பெரியாழ்வார் பூச்சூட்டி மகிழ்கிறார். இங்கு ஆணுக்குப் பூச்சூட்டல் பருவம் வருகின்றது.[30] குழந்தைகளின் குறும்பும் விளையாட்டும் பெற்றோர்க்குக் கரும்பாய் இனிக்கும்., பிள்ளைகளின் தீம்புகளையும் குறும்புகளையும் கண்ணன் செய்வதாகப் பெரியாழ்வார் இரண்டாம்பத்தின் ஒன்பதாம், பத்தாம், திருமொழிகளில் பாடினார்.

பிங்கலத்தைப் பின்பற்றிய திருக்கதிர காமப் பிள்ளைத்தமிழ் கூறுதல் கற்றலை "மொழி பயிலல்" என்றும் இன்னமுதூட்டலை, "உணவூட்டல்" என்றும் பூணணிதலைப் "பூணணிதல்" என்றும் கச்சிற்சுரிகை காமுறப்புனைதலை "உடைவாள் செறித்தல்" என்றும் பருவங்களாக அமைத்துத்தனித்துத் திகழ்கிறது.

இந்திரகாளியம் பிறப்பு, ஒகை, வளர்ச்சி, அச்சமுறுத்தல், தொழிற்குத்தகுவன கூறல் என்ற பருவங்களைப் பிள்ளைத்தமிழுக்கு வகுக்கும்.[31] இவற்றை நிகண்டுகள் குறித்தில. இப்பருவங்கள் எனத்தக்க பகுதிகள், பெரியாழ்வார் திருமொழியில் விளங்குகின்றன.

பெரியாழ்வார் கண்ணன் பிறந்தான் எனத் தொடங்கி அவனுடைய பல்வேறு பிள்ளைமைக் குறும்புகளைப் பத்துப்பத்துப் பாக்களாகப்பாடியிருக்கிறார். பிறப்பு, ஒகை, அச்சமுறுத்தல் ஆகியனதனிப்பருவங்களாக இவர் திருமொழியிலுள்ளன.[32] கண்ணன் பிறந்தான் எனக் கூறி அவன் வயது வளர்ச்சியை -அவன் வயதுக்கு ஒத்த குறும்புச்செயல்களைச் சொல்லிப் பாடுவதே வளர்ச்சி என்ற பருவமாகும். பிறந்த குழந்தையைப் பிறந்த குழந்தையாகவே கருதாது, அது வளர்வதையும் காட்டுவதே இப்பகுதியின் நோக்கமாகும். ஆதலால் வளர்ச்சி என்பது தனிப்பருவமாகாது பொதுப்பண்பு தழுவிய பருவமும் ஆகும்.

பெரியாழ்வார் திருமொழியின் இரண்டாம் -ஆறாம் திருமொழிகளில் கண்ணனுக்குக் கன்றுகள் மேய்க்கக் கோல் கொண்டு வா எனப் பாடுவர். இப்பருவம் போன்றவை தொழிற்குத்தகுவன கூறலாய் அடங்கும். பாட்டுடைத்தலைவன் காலிகள் மேய்க்கும் இடையனாதற்கு ஏற்ப இதனை ஆழ்வார் பாடினார். தொழிற்குத் தகுவன கூறல் என்ற பாடுபொருளுக்குத் தகப்பாவலன் பருவங்களைப் படைத்துக்கொள்ள வழங்கிய உரிமை என்று இதனைக் கருதவேண்டும்.

வளர்ச்சி, தொழிற்குத் தகுவனகூறல் இரண்டும் தனிப்பருவங்கள்அல்ல. பலபருவங்களை உள்ளடக்கிய பலநோக்குப்பருவங்கள். இவை பாட்டுடைத் தலைவன் தகுதிக்கும் தொழிலுக்கும் ஒப்பப் புதுப்பருவங்களை அமைக்க வழிகாட்டும் இந்திரகாளியம் இலக்கண விதிகளால் இலக்கிய வடிவை வரையறுக்கவில்லை. சிறுதேர், கச்சிற்சுரிகை காமுறப்புனைதல் ஆகியன மன்னரொடு தொடர்புடையன. எனவேதான் அவ்விரண்டையும் தனியே விதந்து இந்திரகாளியம் கூறவில்லை.

பெரியாழ்வார் திருமொழியும் பிள்ளைத்தமிழும்

	பெரியாழ்வார் திருமொழி	பிள்ளைத்தமிழில் அமையத்தக்க பருவம்	குறிப்பு
1.	திருப்பல்லாண்டு	காப்புப்பருவம்	இருபாற்பிள்ளைத் தமிழிலும் உண்டு
2.	முதற்பத்து - முதன் திருமொழி	பிறப்பு	
3.	„ 2 „	திருப்பாதகேசம்	
4.	„ 3 „	தாலப்பருவம்	இருபாற்பிள்ளைத் தமிழிலும் உண்டு
5.	„ 4 „	அம்புலிப்பருவம்	„
6.	„ 5 „	செங்கீரை	„
7.	„ 6 „	சப்பாணி	„
8.	„ 7 „	தளர்நடை	
9.	„ 8 „	அச்சோப்பருவம்	
10.	„ 9 „	புறம்புல்கல்	
11.	இரண்டாம்பத்து முதல் திருமொழி	அப்பூச்சி	
12.	„ 2 „	இன்னமுதூட்டல்	
13.	„ 3 „	காதுகுத்த / பூணணிதல்	

14.	„	4	„	நீராடல்	பெண்பாற் பிள்ளைத் தமிழில் உண்டு. ஆணுக்குப் பாடுகிறார்
15.	„	5	„	குழல் வாரல்	
16.	„	6	„	காக்கை	
17.	„	7	„	பூச்சூட்டல்	
18.	„	8	„	காப்பிடல்	
19.	„	9	„	விளையாடல்	கோழகம் செய்தல்
20.	„	10	„	விளையாடல்	

பெரியாழ்வாரும் பிறரும், ஒப்புமை

பெரியாழ்வார் அமைத்த சில பருவங்கள் திவாகரம், இந்திரகாளியம், பிங்கலம், பன்னிருபாட்டியல் போன்றவற்றில் சுட்டப்படுகின்றன.

பருவம்	பெரியாழ்வார் திருமொழி	பன்னிருபாட்டியல் இந்திர காளியார்	பரணர்	திவா கரம்	பிங்கலம்	பாரதி தீபம்
பிறப்பு	*	*				
ஒகை	*	*				
காப்பு	*	*	*	*	*	*
வளர்ச்சி		*				
அச்சமுறுத்தல்	*	*				
செங்கீரை	*	*	*	*	*	*
கூறுதல் கற்றல்		*			*	
தால்	*	*	*	*	*	*
இன்னமுதூட்டல்				*	*	*
சப்பாணி	*	*	*	*	*	*
முத்தம்		*	*	*	*	*
வருகை	*	*	*	*	*	*
அம்புலி	*	*	*	*	*	

சிற்றில்	✻	✻	✻	✻	✻	✻
குழமகன்·		✻				
ஊசல்		✻				
சிறுபறை			✻	✻	✻	✻
சிறுதேர்		✻	✻	✻	✻	✻
பூணணிதல்	✻					✻
பூச்சூட்டல்	✻					
கோழகந்தான் செய்தல்	✻					

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, வாரானை, அம்புலி, எனப் பருவங்கள் அமைகின்றன. இவ்வமைப்பு முறையில் இடையிடையே வெவ்வேறு பருவங்களும் இருத்தல் நோக்கத்தக்கது.

ஆணுக்கும் உரியதான நீராடல், பிற்காலத்தில் பெண்பாற்கு மட்டும் உரித்தாயிற்று. மேற்கூறிய ஆறுபருவங்களுக்குப்பின் இப்பருவம் அமைகிறது.

பெரியாழ்வார் பாடியதுபோலச் சைவநாயன்மார்கள் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களை அடுக்கித் தொடர்ந்து ஓரிடத்தில் பாடவில்லை. அதனால் அந்நூல்களால் பருவவைப்புமுறைப்பற்றி அறியமுடியவில்லை. பன்னிரு திருமுறைகளில் அமைந்த பிள்ளைத்தமிழ் தொடர்பான செய்திகள் இலக்கிய வரலாற்றுப் பகுதியில் இடம்பெறும்.

திருத்தொண்டர் புராணம்

பெருங்காப்பியங்களில் காப்பிய மாந்தர்களின் பிறப்பும் இளமைக்கால நிகழ்ச்சிகளும் பேசப்படுகின்றன. இதனால் காப்பியப்புலவர்கள் தங்கள் நூல்களில் இலக்கிய மக்களின் இளமையைப் பிள்ளைத்தமிழாகப் புனைவர். திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார், சுந்தரர், கண்ணப்பர், சம்பந்தர், சீராளதேவர் ஆகியோர் செயல்களைப் பிள்ளைத்தமிழாக்கினார். அங்கும் பருவ அமைப்புமுறை யாது எனக் காண்பது இவ்வாய்வில் தெளிவுக்குத் துணையாகும். பிள்ளைத்தமிழ் தோன்றிய காலத்தில் எழுந்த காப்பியம் திருத்தொண்டர்புராணம்.

அடியார்களின் பிறப்பையும் அதனால் உலகம் மகிழ்வதையும் கூறும் வாயிலாகச் சேக்கிழார் தம்காப்பியத்தில் பிறப்பு, உவகை என்ற இரு பருவங்களைத் தருகிறார். காப்பு, அனைவர் வரலாற்றிலும் உண்டு. காப்பு இன்றியமையாதது எனச் சேக்கிழார் கருதினார். கண்ணப்பர், சம்பந்தர், இருவர் வரலாற்றிலும் செங்கீரை, உண்டு. முத்தம், கண்ணப்பர், புராணத்தில் மட்டுமே

உள்ளது. தான் உண்ட எச்சிலைச் சிவனுக்கு ஊட்டப் போவதால் இப்பருவத்தை இவர்க்கு மட்டும் அமைத்தார் சேக்கிழார்.சிறுதேர், சுந்தரர், சம்பந்தர், புராணங்களிலும் சிற்றில், கண்ணப்பர், சம்பந்தர்,புராணங்களிலும் அமைந்திருக்கின்றன.

திருஞானசம்பந்தர் புராணத்தில் பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் கூடுதலாக விளங்குகின்றன. காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, வருகை, சிறுதேர், சிற்றில், என்ற மரபுப்பருவக்கூறுகளும் பிறப்பு, உவகை, பெயரிடல், இன்னமுதூட்டல், தவழ்தல், தளர்நடை, என்ற பருவங்களும் இப்புராணத்தால் தெரிகின்றன.

பிறப்பு, உவகை, பெயரிடல், இன்னமுதூட்டல், காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, தவழ்தல், வருகை, தளர்நடை, சிறுதேர், சிற்றில், என்ற முறையில் பருவங்கள் அமைந்திருக்கின்றன.

மரபுத்தொடர்ச்சி

பிள்ளைத்தமிழ் இலக்கியம் தோன்றிய பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின் எழுந்த பல காப்பியங்களிலும் பிள்ளைத்தமிழ்ப் பருவக்கூறுகள் அமைந்திருக்கின்றன. பிரபுலிங்கலீலை, விமலை கதியில் அல்லமப் பிரபுவின் பிறப்பிலிருந்து பல பருவங்களைப் பாடுகிறது, பிறப்பு, உவகை, பெயரிடல், தவழ்தல், வருகை, சிற்றில்சிதைத்தல், சிறுதேர், பம்பரம் ஆடல், எனப் பிள்ளைமைச் செயல்களை இந்நூல் சித்திரிக்கும். சிறுதேர் விளையாட்டொடு பம்பரம் ஆடுதலையும் இது புதுமையாக இணைத்துரைக்கின்றது.[33]

திருப்பெருந்துறைப்புராணம் மாணிக்கவாசகர் பிறப்பு, உவகை ஆகியவற்றையும் பிறபிள்ளைத்தமிழ்ப் பருவங்களையும் குறிக்கிறது. சிவஞானயோகிகள் சரித்திரத்தில் பிறப்பு, உவகை, பெயரிடல் என்பவற்றோடு மரபான பருவங்களும் அமைந்திருக்கின்றன.[34]

இராவண காவியத்தில் இந்திரசித்து , போரில் மாண்டதும் வண்டார் குழலி புலம்பலில் பிள்ளைப்பருவம் பத்தையும் புலவர் குழந்தை அமைத்தார்.[35] அவர் கையறுநிலைப்படலத்தில் அப்பகுதிக்குப் பிள்ளைப்பருவம் பத்து,எனத் தலைப்பிட்டார். அவர் காப்பினைக் கூறாது வாழ்த்து என மாற்றினார். தந்தை பெரியார் வழிச் சென்ற அறிஞராதலின் அவர் நூல்மரபு மாறுகிறது.

பருவ வைப்பு முறை

பிறப்பு, ஓகை, காப்பு

பிள்ளைத்தமிழில் அமைத்தற்குரிய முதல் இருபருவங்களாக இந்திரகாளியம் பிறப்பு, ஓகை, என்பனவற்றைச் சுட்ட ஏனைய நிகண்டுகளோ பாட்டியல்களோ இவற்றைச் சொல்லவில்லை. பிள்ளைத்தமிழ்களில் இப்பெயராலோ கருத்தாலோ அமைந்த பருவங்கள் இல.

பிறப்பு என்பது ஒருவன் பிறந்ததைத் கூறுவதாகும். பிறப்பால் பலரும் மகிழ்ந்ததைச் சொல்வது உவகை; இதன் திரிந்த வடிவம், ஓகை. வாழும், மாந்தரைப் பாடும் பிள்ளைத்தமிழில் இப்பருவங்களைப் புலவர்கள் அமைத்திலர். கதை தழுவிய பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றைப் பாடும் தொடர்நிலைச் செய்யுள்களில் அவர்களின் பிறப்பு, பிறப்பால் தோன்றும் உவகை,பெயரிடல் ஆகிய பருவங்களைப் புலவர்கள் பாடியுள்ளனர். திருத்தொண்டர் புராணத்திலும், பிரபுலிங்க லீலையிலும், சிவஞான யோகிகள் சரித்திரத்திலும் இவ்வமைப்புக் காணப்படுகிறது.

பெரியாழ்வார் கண்ணன் திருஅவதாரத்தைத் தனித் திருமொழியில் பாடுவர்.[36] ஆனால் இது காப்புக்குப்பின் அமைகிறது.. காப்பு, பிறப்பு, உவகை என்ற முறைவைப்பினைப் பெரியாழ்வார் பின்பற்றுவர். காப்புப்பருவம் பிள்ளைத்தமிழ்களில் முதற்பருவமாகத் திகழும். இந்திரகாளியம் , காப்பினை, இவ்வரிசை முறையில் மூன்றாம் பருவமாக்குகிறது..

இம்மூன்றில் பிறப்பும் உவகையும் கதை தழுவிய காப்பியங்களில் மட்டும் பாடப்பெற்றவை. கதை மாந்தர் படைப்பில் இப்பருவங்கள் அமைந்தன. கடவுளரோ பிறப்பும் இறப்பும், அற்றவர். அவர்க்குப் பிறப்பும், உவகையும் உரைப்பது ஏற்காது என்று கருதி இவற்றைப் பாடிலர். வாழும் மக்களைப் பாடும்போது இவ்விரு பருவங்களும் பாடு பொருளொடு நேரடித் தொடர்புடையதாகாமையான் ஒதுக்கப்பட்டன.

காப்புப்பருவம் கடவுள் தொடர்புடைய பருவம் ; கடவுளைத் தொழுது செயல்களைத் தொடங்குவது தமிழரியற்கை. ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் பின் தமிழரிடையே தெய்வநம்பிக்கை நன்கு வேரூன்றிவிட்டது. பிள்ளைதமிழ், திருக்கோயில்களும் தெய்வநம்பிக்கையும் வேரூன்றத் தழைத்திருந்த பிற்காலச் சோழர் சமுதாயத்தில் எழுந்த சிற்றிலக்கிய வகையாகும். அக்காலத்தில் தேவாரத்திருமுறைகளும் வழிபாட்டு நெறிகளும் இந்நாட்டில் பரவின. அக்காலத் தமிழிலக்கியம். கோயிலையொட்டிய இலக்கியமாய்த் தழைத்தது. அதனால் தெய்வநம்பிக்கையையும் உணர்வையும்

புறக்கணிக்கமுடியாத புலவர்கள் நூலிலும் முதற்கண், காப்புப்பருவத்தை நிறுத்தினர்.

நூல்களில் அமையும் கடவுள் வாழ்த்தும் காப்பும் நூல் இனிது நிறைவேற இறைவனைப் பணிவன. இவை நூற்பொருளுக்குட்படாதவை. காப்புப்பருவம், பாட்டுடைத் தலைவனாகிய குழந்தையைத் தெய்வங்கள் காக்க வேண்டுவது. இது பிள்ளைத்தமிழ் என்ற நூற்பொருளுக்குப் பொருந்திப் பிள்ளையோடு தொடர்புடையதாகிறது. குழந்தைக்குக் காப்பு செய்யும் மரபு, இன்றும் மக்களிடையே விளங்குகிறது. குழந்தை பிறந்ததும் குழந்தை நூறாண்டு வாழப் பெற்றோர் காப்புச் செய்வர். இப்போக்கு உலகியலையொட்டியும் இடம் பெறுகிறது. ஆகையால் ,தமிழர் சமய உணர்வும் கடவுள் நம்பிக்கையும் வாழ்வின் நிலையாமையும் பிள்ளையைக் கடவுள் காக்க வேண்டுவதாய்ப் பாடும் காப்புப்பருவத்தை நூலில் அமைய வைத்தன.

கடவுள் நம்பிக்கையற்ற புலவர்களும் இப்பருவத்தில் தலைவனைக்காக்க என்ற கருத்தை விளக்கினார். அவர்கள் கடவுளரை விடுத்து மொழி, இயற்கை தலைவர், பெற்றோர், ஆகியன காக்க எனப்பாடி வாழ்த்துப்பருவம் எனப் பெயர்மாற்றம் செய்தனர். காப்பின் பயனே வாழ்தலாகும். காப்பு ,வாழ்த்து ஆகிய இரண்டின் நோக்கமும் ஒன்றேயாகிக் குழந்தை காக்கவும் வாழ்த்தவும் பெறுகிறது.

இங்ஙனம் தமிழரின் வாழ்வியல் வழக்கத்தைத் தழுவியும் சமயக் கொள்கையை உணர்த்தியும் காப்புப் பருவம் முதற்பருவமாகப் பிள்ளைத்தமிழில் இடம் பெற்றது...

வளர்ச்சி அச்சமுறுத்தல்

இந்திரகாளியார் நான்கு, ஐந்தாம் பருவமாக வளர்ச்சி, அச்சமுறுத்தல் ஆகிய இரண்டையும் வகுப்பர். வளர்ச்சி குழந்தையின் படிநிலை வளர்ச்சியைக் காட்டும் பருவம். இதனை வேறு நூல்களும் இலக்கியங்களும் உரைத்தில. பிள்ளையின் வளர்ச்சியைப் பேசுவது இப்பருவத்தின் கருத்து என இதன் பெயரால் கொள்ப. பருவங்களின் நிகழ்ச்சிகளே குழந்தை வளர்வதை உணர்த்துவது என்று கருதி இப்பருவத்தைப் புலவர்கள் பாடவில்லை.

அச்சமுறுத்தல் பருவத்தை இந்திரகாளியம் கூறப் பிற நூல்கள் கூறவில்லை. பெரியாழ்வார் அப்பூச்சிகாட்டுதல் எனப் பாடியது இப்பருவத்தின் கருத்தாகும். வேறு எவரும் இதனைப் பாடினாரல்லர். இவ்விரு பருவங்களும் தனிப்பிள்ளைத்தமிழ்களில் அமைந்தில.

"வளர்ச்சி" ஒரு குறிப்பிட்டு வரையறுக்கப்படாத பேரெல்லை தழுவிய பருவம். இப்பருவத்தில் எதையும் தெற்றெனச் சுட்டிக்காட்டவியலாது. இது பல நோக்குப் பருவம். "அச்சமுறுத்தல்" குழந்தை பிறரை அச்சமுறுத்தும் விளையாட்டுப் பற்றியது. புலவன் தன்னை வாழ்விக்கும் பாட்டுடைத் தலைவனைப் பாடுவதே பல்வகை அச்சங்களிலிருந்து தன்னைக் காத்துக்கொள்வதற்கேயாம். தெய்வங்களைப் பாடும்போதும் இதுதான் தலையாய நோக்கம்.புலவனும்பிறரும் தாம் எதிர்பார்ப்பதற்கு மாறாகப் பாட்டுடைத்தலைவர் அச்சுறுத்துவதாகப் பாடுவது விழைதற்குரித்தன்று. எனவே இவ்விரு பருவங்களும் நூலாட்சி பெற்றில.

செங்கீரை, கூறுதல்கற்றல், தால் :

பிள்ளைத்தமிழில் இரண்டாவதாக அமைந்தது செங்கீரைப் பருவம். இது குழந்தையின் ஆட்டத்தையும் பேச்சினையும் வெளிப்படுத்துவது.குழந்தை பேசுவதும், உடலுறுப்புகளை அசைத்து நடக்கக் கற்றுக்கொள்வதும் வாழ்க்கையில் நிகழும் புரட்சிகளாம். இவ்விரண்டும் இணைந்து வெளிப்படுவது செங்கீரைப் பருவத்திலாகும். ஐந்து திங்கள் நிறைந்த குழந்தை ஆடியாடிக்கொண்டு அதற்கேற்ப ஒலியை எழுப்பிவிளையாடும் இனிய காட்சி கண்டின்புறுதற்குரியது. இவ்வரிய காட்சி விளையாட்டு வேறு பருவங்களில் காணமுடியாதது. குழந்தையின் மழலைப் பேச்சையும் ஆட்டத்தையும் கண்டுகளிக்கும் பெற்றோரின் மனநிலையில் புலவன் இப்பருவத்தைச் சொல்லோவியமாகத் தீட்டுகிறான்.

செங்கீரைப்பருவத்தில் தான் குழந்தையின் ஆட்டமும் பாட்டும் வெளியாகின்றன. வேறுபருவங்களில் இதற்கு இடமில்லை. இவ்வாட்டத்தின் சிறப்புக்கருதியே இதனை "நிருத்த விசேடம்[36அ]" எனக் குறித்தனர். குழந்தையின் செயலாக-விளையாட்டாகப் பிள்ளைத்தமிழில் அமையும் முதற்பருவம் செங்கீரை. அவ்விளையாட்டை மிகச் சிறந்தமுறையில் பிள்ளைத்தமிழ் அறிமுகம் செய்கிறது.

இந்திரகாளியார் கூறும் ஆறாவது பருவம் செங்கீரை. பிறநூலார் காப்புக்கு அடுத்து இதனை வைப்பர். வெண்பாப்பாட்டியல் தால்,செங்கீரை என நிறுத்தும். அது மாற்றத்துக்கான காரணம் கூறவில்லை. பெரியாழ்வார் தால், அம்புலி, செங்கீரை எனப் பருவங்களை வைப்பர். [37] சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணத்தில் தாலைமுன் பாடிச்செங்கீரையைப் பின்பாடுவர்[38] இவற்றால் தாலுக்குப்பின் செங்கீரைபாடும் ஓர் இலக்கிய வழக்குண்மை உணரப்பெறும். இம்மரபு தழுவியே வெண்பாப்பாட்டியல் கூறுகிறது. சேக்கிழார், கண்ணப்பநாயனார், புராணத்தில் காப்புக்குப்பின் செங்கீரை பாடினார். இடையே தாலப்பருவம் இல்லை.[39] பிரபுலிங்க லீலையில் செங்கீரை, தால், ஆகிய பருவங்களை ஆண்பாலார்க்குப் பாடவில்லை.

முருகன், விநாயகர், திருமால், ஆகியோரைப் பாடிய பிள்ளைத்தமிழ்கள் செங்கீரை, தால், என்ற முறையில் பருவங்களை நிறுத்துகின்றன.

இசுலாமியப் பிள்ளைத்தமிழான பெருமானார் பிள்ளைத்தமிழ் தாலை முன்னிறுத்திச் செங்கீரையைப் பின் கொண்டிருக்கிறது.

இருகைகளை ஊன்றிக் கால்களில் ஒன்றை முட்டிக்கால் இட்டுத் தரையில் ஊன்றி ஒன்றைப் பின்னோக்கி நீட்டித் தலையசைத்து ஆடலைக் குறிப்பது செங்கீரை. இதனை "மங்கல வைம்படையும் தோள்வளையும் குழையும் மகரமும் வாளியும் சுட்டியு மொத்திலக எங்கள் குடிக்கரசே ஆடுக செங்கீரை. ஏழுலகும்முடையாய் ஆடுக ஆடுகவே"[40] எனப் பெரியாழ்வார் சித்திரிப்பர். இவ்வாறு உடலாட்டமாகச் சேக்கிழாரும்[41] குமரகுருபரரும்[42] சிவஞான முனிவரும்[43] திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையும்[44] பாடினர். உடலாட்டத்தோடு ஒலியும் எழுப்பிக்கொண்டு குழந்தை ஆடும். ஒலியின்றி ஆடும் ஆட்டம் ஊமை ஆட்டமாகிவிடும் ; ஆனாலும் உடலாட்டத்துக்கே இங்குச் சிறப்பு.

செங்கீரைக்கும் தாலுக்குமிடையே கூறுதல் கற்றல் பருவத்தைப் பிங்கலம் நிறுத்தும். கூறுதல் கற்றல் என்ற பருவத்தைச் சங்க இலக்கியம் தழுவிப் பிங்கலம் அமைக்கின்றது. இது மருதனிளநாகனார்

பெருந்தெருவிற் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள் யாங்கேட்ப
மருந்தோவா நெஞ்சிற் கமிழ்தம் அயின்றற்றா

(கலி. 81 : 12 - 14)

என்று கூறுவதை ஒட்டியமைந்தது. வேறுபாடல்களிலும் இவர் இதுபற்றிக் குறிக்கிறார்.

பிள்ளைக்குத் தாய் ஒலிகளைக் கூறுதலும் அதனைக் குழவி பயிலுதலும் இதன் நோக்கமாகும். குழந்தையின் பேச்சுத் திறமையை வளர்க்க இம்முறை வேண்டத்தக்கது. குழந்தை பேசுதலைத் திருவள்ளுவர்,

குழலினிதி யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர் [45]

என்று குழந்தையின் மழலையைச் சிறப்பித்து மக்கட்பேற்றை வலியுறுத்துவர். குழந்தை பிறரிடமிருந்து மொழியையும் பண்பாட்டையும் கற்றுக்கொள்ளுதலை இப்பருவம் அறிவிக்கிறது. திருக்கதிரகாமப் பிள்ளைத்தமிழ் மொழிபயிலல் என இப்பருவத்தைப் பாடியுள்ளது.

பிள்ளைத்தமிழ்ப் புலவர்கள் உடலாட்டத்தைப் பாடுவதோடு குழந்தையின் மழலைமொழியையும் இப்பருவத்தில் பாடினர். செங்கீரை உடலாட்டம் எனக் கொண்டவர், மொழியை மறந்தனர் ; அதனை மழலை பேசுதல் எனக் கொண்டவர் ஆட்டத்தை மறந்து விட்டனர். செங்கீரையைப் பின்வருமாறு விளக்குவர் ;

> **பிரபந்தத் தலைவனான பிள்ளை, பொருள் விளங்கா ஒலி எழுப்பும், பருவத்தைக் குறிக்கும் ஙங, ஙங என்று சேய் இயம்பக் கேட்டு, தாய்மார் இன்பம் கொள் பருவம் இது (செங்கீரை). இந்த ஒலி,மழலையினும் இனிதாக இருக்கும். மழலை ஒரு வகையில் பொருள் கொள்ளற்கு உரியது ; இது வெறும் ஒலி மாத்திரமாக இருக்கும். சிறந்த தொடை அமைதி இல்லாதவற்றைச் செந்தொடை எனல்போல், சொல்லிற்கு உரிய தன்மை இல்லாதவற்றைச் செங்கீர்**

என்றனர்.[46] இவ்வாறு கூறுதல்கற்றலின் ஒரு பகுதியான குழந்தை கூறுதல் மட்டும் செங்கீரைக்குரிய கருத்தாயிற்று. கூறுதல் கற்றல் பருவப்பொருள் செங்கீரைப் பருவத்துக்குள் கலந்துவிட அப்பருவம் வாழ்விழந்தது.

இருவகைப்பருவக் கருத்துகளையும் தழுவ விரும்பிய புலவர்கள், இரண்டும் அமைந்திடச் செங்கீரைப் பருவத்தைப் பாடினார். ஒரே கருத்தினை மீண்டும் மீண்டும் பாடுதல் சுவைக்காது என்பதும் கூறியது கூறல் ஆகும் என்பதும் கருதி ஒன்றை நீக்கினர்.

பிள்ளை, தொட்டிலில் துயிலத் தாயோ, பிறரோ குழந்தையைத் தூங்க வைக்கத் தாலாட்டுப் பாடும் பருவம் தாலப்பருவம். குழந்தை பிறந்தநாள் தொட்டு தாயர் தாலாட்டுப் பாடுவர். குழந்தை தூங்குவதைச் செயலால் வெளிப்படுத்த முடியாது. அதைத் தாய்பாடும் தாலாட்டால் வெளிக்காட்டுவர். எனவே குழந்தையின் துயிலை உணர்த்தும் கருவி தாலாட்டு.

தாலப்பருவம் ஏழாம்[47] எட்டாம்[48] திங்களில் பாடற்குரியது என நிகண்டுகள் விதிக்கின்றன. இவ்வயது வரம்பு நடைமுறைக்குப் பொருந்தலில்லை. குழந்தையைத் தூங்கவைக்கத் தாலாட்டுக்கு நேரடியான ஆற்றல் இல்லை. அதுபற்றிய அறிஞர் கருத்தை நோக்குவோம்.

> **தாலாட்டுக்கும் தூக்கத்திற்கும் ஏதாவது தொடர்புண்டா? நீலாம்பரி போன்ற ராகங்கள் கேட்பதற்கு மிக்க இனிமையாக இருப்பதனால் குழந்தை தூங்க ஆரம்பித்துவிடுகிறான் என்று சிலர் கருதுகின்றனர். இதுதவறு. ஏனெனில் இனிய நீலாம்பரி ராகத்தில் பாடாது மற்ற எந்த ராகத்தில் பாடினாலும்**

குழந்தைகள் தூங்கி விடுவதை நாம் காணலாம் தாலாட்டினால் உடனே குழந்தை தூங்கிவிடுதற்குரிய காரணம் யாது? பழக்கமான குரலோ, அல்லது மாறுதல் இல்லாத ஒரு ராகமோ, சப்தமோ காதில் சதா விழுந்துகொண்டேயிருந்தால் அதைக்கேட்டு ரஸிக்கும் மூளை களைத்து விடுகிறது. அதனால் தூக்கம் வருகிறது.[49]

என்ற குழந்தை வளர்ப்புப் பற்றிய அறிஞரின் கருத்து ஏற்கற்பாலது. ஆயினும் தொன்றுதொட்டு மக்களிடையே தம் பெருமையையும் குடும்பச் சிறப்பையும் புலப்படுத்தும் கருவியாகத் தாலாட்டு குழந்தையின் தூக்கத்திற்காகப் பாடப்படுகிறது.

தொல்கப்பியம், "கண்படை கண்ணிய கண்படைநிலையும்"[50] எனத் தூங்குவதற்குப் பாடலைத் தொடர்புப்படுத்திக்கூறும். தாலாட்டு இசை நயமும் தமிழ் நயமும் பொருந்தி மக்களிடையே வாழ்கிறது.

பிற்காலத்தில் குழந்தைகளை உறங்க வைப்பதற்கு மட்டுமே அது வழங்குவதாயிற்று ; தாலாட்டுப் பாட்டு என்பதாயிற்று[51]

நாட்டுப்புற இலக்கியங்களில் தாலாட்டு ஒரு குறிப்பிடத்தக்க பகுதியாகும். மக்கள் இலக்கியங்களில் தாலாட்டு மிகச் சிறந்த கற்பனைவளமும் கருத்து வளமும் பொருந்தியது. ஆதலின் தாலாட்டு இலக்கிய வழக்கினும் உலகியல் வழக்கினும் தனி மதிப்பும் செல்வாக்கும் பெற்றுப் பிள்ளைத்தமிழின் உறுப்பாகிவிட்டது.

குழந்தை விளையாடுதலையும் வினைசெய்தலையும் பல பருவங்களில் பாடும் பிள்ளைத்தமிழ், குழந்தையின் செயலை மறந்து கிடந்த கோலமாகத் துயிலும் நிலையைத் தாலப்பருவம் சித்திரிக்கிறது.

மக்கள் வழக்கில் இருக்கும் தாலாட்டில் குழந்தையின் தாய், தந்தையர், அவர்தம் முன்னோர் ஆகியோரின் சிறப்புகளும் பெருமைகளும் பேசப்படுகின்றன. அன்றித் தாய்தன் அறிவாற்றலாலும் நுண்மாண் நுழைப்புலத்தாலும் தாலாட்டில் எதையும் இணைத்துப் பாடிவிடுகிறாள். இலக்கிய வழக்கில்-பில்ளைத்தமிழில் அமைந்ததாலாட்டில் இதற்கு மாறாகப் பிள்ளையின் சிறப்பே இடம் பெற்றிருக்கும்.

இன்னமுதூட்டல்

பருவவரிசையில் ஒன்பதாவதாக அமைவது இன்னமுதூட்டல். இதனைத் தாலுக்குப்பின் திவாகர பிங்கலங்கள் வைக்கின்றன. இப்பருவத்தின்

பொருள் என்ன என்பதனை மூலநூலாசிரியரோ உரையாசிரியரோ விளக்கவில்லை. இது தாய் முலையூட்டலையோ ஆவின்பால் ஊட்டலையோ குறிக்கும். ஏழாம், எட்டாம் திங்களுக்குரிய நிகழ்ச்சியாக நிகண்டுகள் கூறுவதால் இதனைக் குழந்தைக்கு ஆவின்பால் ஊட்டுதலைப் பாடும் பருவம் என்று கருதவேண்டும். முதன்முதலாகக் குழந்தைக்குச் சோறூட்டுதலையும் குறிப்பதாகும். பாரதிதீபம் அமுதூட்டலையும் தாலையும் இணைத்து ஒன்றுபோல உரைக்கிறது.

திருமங்கையாழ்வாரும் பெரியாழ்வாரும் இன்னமுதூட்டலைப் பாடியிருக்கின்றனர். சேக்கிழார் திருஞானசம்பந்தர் வரலாற்றில் இப்பருவத்தை அமைப்பர்[52] பிங்கல நிகண்டைப் பின்பற்றிய திருக்கதிரகாமப் பிள்ளைத்தமிழில் இப்பருவம் உணவூட்டல் என்ற பெயருடன் உள்ளது

குழந்தை துயிலும் முன்பு தாய் அமுதூட்டி உறங்க வைப்பாள். வயிற்றில் உணவு இருந்தால்தான் உறக்கம் வரும். அமுதுண்டகுழந்தையைத் தாலாட்டித் தாய் தூங்கவைப்பாள். இதனால் பாரதி தீபம் "அமுதுடன்றால்" என இலக்கணம் இயம்புகிறது. இன்னமுதூட்டல் தாலப் பருவத்தின் தொடர்புடையதாய்த் தனிப் பருவமாகாமல் போயிற்று.

சப்பாணி

தால், இன்னமுதூட்டல் ஆகிய இரண்டின் பின் அமைவது சப்பாணிப்பருவம். எல்லா நூல்களிலும் இப்பருவமுண்டு.

குழந்தை கைகளைக் கொட்டி ஒலியெழுப்பி ஓசையால் மகிழ்தலும் அது கண்டு பிறர் மகிழ்தலும் சப்பாணிப்பருவமாகும். செங்கீரை உடலாட்டம் பற்றியது அங்கே குழந்தை கைகளைத் தரையிலூன்றி இருக்கிறது. சப்பாணியில் குழந்தை தரையில் உட்கார்ந்துகொண்டு கைகளைத் தாளவோசையொடு கொட்டுதலைப்பெற்றோர் கண்டுகளிக்கின்றனர். இங்கே குழந்தை இருந்த கோலமாகத் திகழ்கிறது. குழந்தையின் கைகளை இயக்கச் செய்யும் உடற்பயிற்சிகளுள் சப்பாணி கொட்டலும் ஒன்றாகும்.[53]

சப்பாணி என்ற சொல். கையோடு கை சேர்த்துக் கொட்டல் என்று பொருள் தரும். ஸ்ஃபாணி-சப்பாணி[54] என்ற வடசொல்லின் தழுவல் என்பர் ஆனால் சப்பாணி என்ற சொல் தமிழ்ச்சொல்லாகும்[55]

தவழ்தல்,முத்தம், தளர்நடை

சப்பாணிக்குப்பின் குழந்தை தவழ்தலை ஒருகூறாக எடுத்துச் சம்பந்தரும் அல்லமரும் தவழ்வதாகச் சேக்கிழாரும்[56] சிவப்பிரகாசரும்[57] பாடுவர். இக்கூறு தனிப்பருவமாக நிகண்டுகளாலோ பாட்டியல்களாலோ ஏற்றுக்கொள்ளப்

படவில்லை. இப்பருவத்தை அமைத்த பிள்ளைத்தமிழ் நூல்களும் கிட்டில. சப்பாணி, முத்தம், வருகை, என்பது மரபியல் அமைப்பு. இம்முறை வைப்பில் எந்நூலிலும் மாற்றம் இன்மை குறிக்கத்தக்கது.

செங்கீரையாடிக் களித்துத் துயின்றகுழந்தை எழுந்து கைகொட்டி மகிழ்ந்தது.. அவ்வுயிரோவியத்தின் செயல்கண்ட தாய், எல்லையில்லாத மகிழ்ச்சியால் குழந்தையை அள்ளி முத்தமிட்டாள். பெற்றோரும் மற்றோரும் குழந்தையை முத்தமிடலும் முத்தம் தரவேண்டலும் ஆகிய இருபாற் கூறுகள் முத்தப்பருவத்திதில் பேசப்பெறும். பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கும் இடையே மெய்யுறுதலும் கருத்துப் பரிமாற்றம் ஏற்பட முத்தப்பருவம் கருவியாகிறது. இதனால் பிள்ளையின் வாழ்விலும் வளர்ச்சியிலும் புதிய மாற்றங்களும் பயன்களும் விளைகின்றன.

> **காலஞ்செல்லச் செல்லத் தன்னிடம் அன்புடைய பெற்றோரின் உடலோடு ஒட்டிப் பழகுவதைக் குழந்தை வரவேற்கிறது . இப்படி உடல் ஒட்டிப் பழகுவதால் மனநிறைவு ஏற்படுகிறது என்பதற்காக மட்டுமல்ல தன் சொந்த முயற்சியைத் தூண்ட இந்த ஒட்டுறவு உதவுவதும், அன்றாட வாழ்க்கையில் ஏற்படக்கூடிய தொல்லைகளையும் துக்கங்களையும் காயங்களையும் பொறுத்துக்கொள்ள உதவுவதும் கூடப் பெற்றோர் உடல் பரிசத்தைக் குழந்தை விரும்பக் காரணமாகும். பிறர் தங்களோடு உடல் தொடர்போ உள்ளத் தொடர்போ கொண்டுள்ளபோதுதான். ஓயாது பேசுதலினும் பொருள்களைக் கையாளுதலிலும் புரியும் வார்த்தை ஒன்றை முதலில் உச்சரித்தலினும் சிறு குழந்தைகள் தங்கள் ஆற்றலை மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர் .... பிறப்பதற்கு முன், தாயின் உடலில் இருந்தே உயிரையும் நலத்தையும் அவன் உடல் அடைந்தது போல், இத்தகைய பரிசத்தால் அவன் உள்ளம் இப்போது பூரிப்பையும் ஆதரவையும் பெறுகிறது.[58]**

இத்தகைய மெய்யுறுதலாகிய முத்தப்பருவம் குழந்தைகளுக்கும் பிறருக்குமிடையே ஓர் அரியநெருக்கத்தைத் தருகிறது.

புலவர்கள் முத்தப்பருவத்தை "முக்தி", எனக்கொண்டு மோட்சம் தருக என வேண்டுவதாகவும் பாடுவர்.[59] இப்பருவம் போல மெய்யுறல் பற்றிய தனித் தன்மைவாய்ந்த வேறு பருவம் இல்லை. இத்தகைய தனித் தன்மைகளால் இப்பருவம் இன்றியமையாததாகிப் பிள்ளைத்தமிழில் இடம் எய்திற்று.

பிள்ளைத்தமிழில் முத்தப்பருவத்துக்குப் பின் வருகைப்பருவம் வரும். ஆனால் பெரியாழ்வார்தம் திருமொழியில் வருகைக்கு முன் தளர்நடை பாடுவர்.[60] சேக்கிழார் சம்பந்தர் தளர்நடையிட்டதாக வருகைப் பருவத்துக்குப்பின் அமைப்பர்.[61] ஆனால் அவர் சீராளன் தளர்நடை இட்டதாகப் பாடி வருகையைப்பாடிலர்.[62]

வருகை, அம்புலி

வருக வருக என அழைக்கும் வருகைப்பருவம், வாரானைப் பருவம் என்றும் வழங்கும். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்த குழந்தை நிமிர்ந்து நின்று நடக்கப் பழகுகிறது . அக்குழந்தையைத் தாய் வருக வருக என அழைக்கிறாள்

> **தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு பெரிய இயக்க சக்தியின் ஒரு சிறுபகுதியே,நடக்கும் திறமை ஆகும். நடக்கும் திறமை வந்த குழந்தை மற்றவர்களோடும் மற்றப் பொருள்களோடும் உள்ள தொடர்பை அதிகரிக்கும் சக்தியையும் பெறுகிறது.[63]**

அயலாரொடு குழந்தை கொள்ளும் தொடர்பினை முத்தப்பருவத்திலும் வெளியுலகோடு கொள்ளும் தொடர்பினைவருகைப் பருவத்திலும் காணமுடிகிறது.

பிள்ளைத்தமிழ், மக்களைப்பாடாது தெய்வத்தைப் பாடியபோது ,வருகைப்பருவம் தனிச்சுவையும் மதிப்புமுடையதாயிற்று. தெய்வத்தை வணங்குவோர் அனைவரும் கடவுள் காட்சி தரவேண்டும் என்று எண்ணுகின்றனர். தமக்கு அருள் புரிய ஆண்டவனை வருக வருக எனக் கூவி அழைக்கின்றனர்

இவ்வருகைப்பருவம் வருகைப்பத்து, எனவும் வருகைப்பதிகம் எனவும் தனி இலக்கிய வகையாக வழங்குகிறது. அதனால் தவழ்தல், தளர்நடை போன்ற பருவங்கள் தனியாகப் பாடப்பெறாமல், அத்தகையவற்றை உள்ளடக்கி வருகைப்பருவம் நிற்கிறது.

குழந்தையை ஒக்கலில் வைத்துக்கொண்டு தாயோ பிறரோ அம்புலியை விளையாட அழைப்பர்.

> **பிறை காட்டலின் உட்பொதிவாக இருப்பது பிறை வயப்பட்ட ஒரு நம்பிக்கையாகும். தான் நாள்தோறும் வளருவது போன்று பிள்ளைகளையும் பிறை வளரச் செய்யும் என்ற நம்பிக்கையின் காரணமாகவே பிறைகாட்டல் என்னும் வழக்கம் மனித சமுதாயத்திடையே நிலவுகின்றது.[64]**

தமிழர் நிலவைக் குழந்தையொடு விளையாட அழைப்பர். காதலரும் கணவன், மனைவியரும் நிலைகண்டு மகிழ்வர். முழுநிலாக் காலம் தமிழர் திருமணம்

நிகழ்த்தும் காலம். கணவனைப் பிரிந்த மகளிருக்கும் காதல் வயப்பட்டோர்க்கும் நிலாக்காட்சி துன்பம் தரும். தமிழ் மகளிர் பிறைதொழும் பழக்கமுடையவர். இங்ஙனம் நிலவு, தமிழர் வாழ்வில் நெருங்கிய உறவுடையது,. அன்றித் தமிழே சந்திரனுக்கு விருப்பமான மொழி என்று வடமொழிநூல்கள் சுட்டுகின்றன.

பிற்காலச் சோழராட்சியில், திருக்கோயில்களில் சந்திரன், சூரியன் ஆகியோர் வழிப்பாட்டுக்குரிய கடவுள்களாக இடம் பெற்றனர். ஒன்பான் கோள்களில் ஒன்றான சந்திரன், சோதிட அடிப்படையில் தாய் தொடர்பான செய்திகளை உணர்த்தும் கோளாகும்.

> **ஒரு ஜாதகனின் தாயைப் பற்றிய நிலையை நாம் சந்திரனைக் கொண்டுதான் தெரிந்து கொள்ள வேண்டும்.[65]**

தாய்நிலையைக் காட்டும் கோளைச் சேயோடு விளையாட அழைக்கின்றனர். விளையாடும் குழந்தையைத் தாய்காப்பது போலச் சந்திரன் காக்கும் என்பது நம்பிக்கை.

வானத்து நிலாவைப் பிள்ளையொடு விளையாட அழைக்கும் அம்புலிப்பருவம். குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் நால்வகை உபாயங்களில் மூன்றுடன் மட்டும் பாடப்பட்டது. சாமம் இல்லை. பாட்டுடைத்தலைவன் மன்னன் ஆனமையால் நால்வகை உபாயம் அமைத்துப் பாடும் எண்ணம் ஒட்டக்கூத்தருக்கு எழுந்தது. அவ்வாறு நால்வகை உபாயங்களோடு அம்புலியை அழைக்கும் அருமை கருதி, "அம்புலி புலவர்க்குப் புலி" என்னும் வழக்கு எழுந்தது.

வருகைக்குப்பின் அம்புலி எனநிகண்டுகளும் பாட்டியல்களும் அமைத்தன. பெரியாழ்வார் தாலாட்டுக்குப்பின் அம்புலிப்பருவத்தை நிறுத்தியவர். திருத்தொண்டர் புராணம், பிள்ளைத்தமிழுக்குரிய பல பருவக்கூறுகளை அமைத்திருக்க "அம்புலிப்பருவத்தை" எப்பகுதியிலும் அமைக்கவில்லை.

சிற்றில், சிறுபறை

அம்புலிக்குப் பின்வரும் பருவம் சிற்றில்பருவம். இவ்வாறு வருதலை இந்திரகாளியம்,பரணர் பாடிய பன்னிருபாட்டியல் நூற்பாக்கள், சூடாமணி ஆகியன சுட்டுகின்றன. வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல் முதலிய இலக்கணங்களில் சிறுபறையை முன்வைத்துச் சிற்றிலைப் பின்வைத்துள்ளன. இவ்விரண்டு அமைப்பும் பிள்ளைத்தமிழ்களில் காணப்படுகிறது.

இலக்கிய வழக்கில் சிற்றில்பருவமே சிறுபறைக்குமுன் மிகுதியும் அமைந்திருக்கின்றது. பெரியாழ்வார் சிற்றில் சிதைத்தலைத் தனிப்பருவமாகப்

பாடாமல் சிறுகுறிப்பாக, "செப்போது மென்முலையார்கள் சிறுசோறு மில்லும் சிதைத்திட்டு" [66] எனச் சொல்லியுள்ளார். ஆண்டாள் சிற்றில் சிதையேல் எனப் பத்துப்பாடல்கள் பாடியிருக்கிறார்.[67] இப்பகுதி தனிப்பருவமாக அமைந்திருக்கிறது. கண்ணப்பர்,சம்பந்தர், ஆகியோர் வரலாற்றில் சிற்றில் சிதைத்தலைச் சேக்கிழார் பாடினார் [68]

சிற்றில்சிதைத்தல் பருவம் ஆணின் வலிமையைக் காட்டும். சிறுமியர் கட்டும் சிற்றிலைச் சிறுவன் அழிக்கிறான். இதனைப்பிள்ளையின் மூன்றாமாண்டு நிகழ்ச்சி என நிகண்டுகள் நவிலுகின்றன.[69] இப்பருவத்தை ஆண்பிள்ளைகளுக்கு வகுத்தது சாலப் பொருந்தும். ஏனெனில்,

> **பெண்களைவிட ஆண்களிடையே வெளிப்படையான போர் மனப்பான்மை தென்படுகிறது என்பதுதான் பொதுவான ஆராய்ச்சி முடிவு; இதையேதான் எல்லாரும் எதிர்பார்க் கிறார்கள். இந்த வேற்றுமை சற்று வயது ஏறிய பிறகுதான் தோன்றுமே அன்றி, முழுச்செயல்களில் பங்குகொள்ளத் தொடங்கிய உடனே தோன்றிவிடாது. இரண்டு வயதில் கிரீச்சிடுவதிலும் சரி, உரக்க அழுவதிலும் சரி, ஆண் பெண் இருவரிடையேயும் எண்ணிக்கைகளில் வேற்றுமை தெரியவில்லை. ஜெர்சில்டும் மார்க்கேயும் செய்த ஆராய்ச்சியின் செய்தி இது. ஆனால் வயது ஏற ஏற, ஆண்களின் அழுத தடவைகள் குறைந்தன ; அவர்கள் அடிக்கும் தடவைகள் மிகுந்தன ; அவர்கள் பெண்களைவிடப் பலதடவை போர் மனப்பான்மை காட்டினர்.[70]**

இவ்வாறு பெண்களைவிட ஆண் அழிக்கும் மனப்பான்மையுடையவன் என்பதைக் குழந்தை உளவியலார் கண்டறிந்திருக்கின்றனர். கூடி விளையாடும் சிறுமியரோடு வலிமை காட்டிப் போர்மனப்பான்மையுடன் பெண்ணை அடக்கி ஆளும் ஆணின் மேலாண்மைப் பண்பும் இங்கு ஊடாடுகிறது. பிள்ளைகளின் வளர்ச்சியையும் மனப்போக்கையும் கூர்ந்தறிந்த புலவர்கள், ஆணின் இயற்கையை உணர்ந்து இப்பருவத்தை அமைத்திருக்கின்றனர்.

இருபதாம் நூற்றாண்டில் மக்களைப் பாடிய பிள்ளைத்தமிழ்களில் சிற்றில், சிறுபறை என்ற அமைப்புதான் காணப்படுகிறது. விநாயகர் பிள்ளைத்தமிழ்கள் இம்முறையின.

இந்திரகாளியம் "சிறுபறை" என்ற பருவத்தைக் கூறவில்லை. சிறுபறை சிற்றில் என வரிசை மாறுபட்ட ஓர் அமைப்பினைத் திவகாரம், வெண்பாப்பாட்டியல், பாரதிதீபம், நவநீதப்பாட்டியல், சூடாமணி, பிரபந்தமரபியல், சிதம்பரப்பாட்டியல்

முதலியனவும் பிற பிற்கால இலக்கணங்களும் சொல்லுகின்றன.

பெரியாழ்வார் தம் பாசுரங்களிலும் சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்திலும் சிறுபறைப்பருவத்தைப் பாடவில்லை. முதற்பிள்ளைத்தமிழான குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் சிறுபறை, சிற்றில், சிறுதேர், என்ற அமைப்பால் சிறப்புறுகின்றது.

இசுலாமியப் பிள்ளைத்தமிழ்களிலும் இவ்வமைப்புக் காணப்படுகிறது.

குழந்தைகளுக்கு ஓசையினை உண்டாக்குவதில் தனிமகிழ்ச்சி; கைக்குக் கிடைத்த எந்தப் பொருளையும் போட்டு உடைத்து ஒலியெழுப்பி உவகைகொள்ளும் இயல்பினது ஆண்குழந்தை. சிற்றில் சிதைத்தல், ஆண்குழந்தையின் போராட்டப்பாங்கினை விளக்குவது போலச் சிறுபறை முழக்கலும் குழந்தையின் இருப்பைப் பிறர்க்குணர்த்தவும், பிறர் தன்னிருப்பை உணரவும் வழி வகுப்பதாகும்.

அரசாட்சி நெறிகளில் முரசை முழக்கியும் பறையை ஒலித்தும் செய்திகளை மக்களுக்குப் புலப்படுத்துவர். அதுபோல் பாட்டுடைத் தலைவன் கொள்கைகளையும் சமயக்கோட்பாடுகளையும் உலகுக்குத் தெரிவிக்கச் சிறுபறையை முழக்குமாறு புலவர் வேண்டுவர். சப்பாணிப் பருவத்தில் கைகளைகொட்டிய குழந்தை இங்கே குணில் எடுத்துப்பறை முழக்குகிறது.

சிறுபறையையும், சிறுதேரையும் பெரியாழ்வார் பாடிலர் ; இந்திர காளியாரும் சொல்லவில்லை. திருதொண்டர் புராணம் சிறுபறைப்பருவத்தை அமைத்திலது. மன்னர்கள் பிள்ளைத்தமிழின் பாட்டுடைத் தலைவரானபோது சிறுபறைப் பருவம் இடம் பெற்றிருக்கிறது.

சிறுதேர்

சிற்றில், சிறுபறை,என்ற நிறுத்த முறையோ சிறுபறை, சிற்றில் என்ற நிறுத்த முறையோ கூறும் நூல்கள் சிறுதேரை இவற்றுக்குப்பின் அமைக்கும். இவ்விருவகை அமைப்பின்றி இன்னொரு வகையான அமைப்பினை, "மலிபறை தேரார் சிற்றில்[71]" எனப் பிரபந்திரட்டுக் கூறுகிறது. சிறுபறை, சிறுதேர், சிற்றில் என்ற முறையை நிகண்டுகளோ பாட்டியல்களோ சுட்டில. இவ்வமைப்பினைப் பிள்ளைத்தமிழ்களில் காணமுடியாது.

சேக்கிழார் சம்பந்தர் வரலாற்றில் சிறுதேர்ப்பருவம் பாடிச் சிற்றிலைப் பாடுவர் .

சிறுமணித்தேர் தொடர்ந்துருட்டிச் செழுமணற் சிற்றில்கள் இழை
நறுதற்பே தையர்மருங்கு நடந்தோடி அடர்ந்தழிந்தும்[72]

எனச் சிறுதேரான் சிற்றிலழித்தலைச் சித்தரிப்பர். இங்கு இரண்டு பருவங்களும் இணைகின்றன.

சிற்றில், சிறுதேர், சிறுபறை, என்ற வரிசை முறையைத் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் நச்சினார்க்கினியர் எழுதுவர்.[73] அவர் காலத்தில் அவர் வாழ்ந்த வட்டாரத்தில் இந்த அமைப்பு வழங்கியிருக்கவேண்டும். இம்முறையை இலக்கண நூல்கள் வகுத்தில. சொரூபானந்தர் பிள்ளைத்திருநாமம், பினாங்கு தண்ணீர் மலைத் தண்டாயுதபாணி பிள்ளைத்தமிழ், க.சி.இராமசாமி இயற்றிய கம்பன் பிள்ளைத்தமிழ், த.கா. காதர்க்கனியின் நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் .ஆகியவற்றில் இம்மூன்று பருவங்கள் இந்த நிறுத்த முறையில் உள்ளன. பிள்ளைத்தமிழ்களில் இறுதியில் விளங்கும் இம்மூன்று பருவங்களைப் பெரியாழ்வார் பாடவில்லை.

நடக்கக் கற்றுக்கொண்ட பிள்ளை,சக்கரம் வைத்த விளையாட்டுப் பொருள்களைப் பயன்படுத்தலைச் சிறுதேர்ப்பருவமாகப் பிள்ளைத்தமிழ் பாடுகின்றது. இவ்விளையாட்டு நான்காம் ஆண்டிற்குரியது. சிறுவர் சிறுதேர் இழுத்து மகிழ்தலை,

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅ ராயினும் கையின்
ஈர்ந்தின் புறூஉ மிளையோர் போல [73அ]

என உவமை வழிச்சுட்டுவர். இவ்விளையாட்டு, குழந்தையின் தனிஉரிமை விளையாட்டாகும். சிறுதேர், உருட்டும் சிறுவன், மகளிர் சிற்றில் அழித்தலுமுண்டு,[74] நான்காண்டு நிரம்பிய குழந்தையே சிறுதேர் உருட்டலைத்திறம்படச் செய்யும்[75] எனவே இங்கு இப்பருவத்தை நிறுத்தியது பொருத்தமாகும். சிறுபறைப் பருவம் போலச் சிறுதேர்ப்பருவம் மன்னர் பாட்டுடைத்தலைவரானமையால் இச்சிற்றிலக்கிய வகையுள் இடம் பெற்றிருக்கக்கூடும். ஆண்,பெண், வேறுபாட்டின்றி எல்லாக் குழந்தைகளும் உலகியலில் சிறுதேர் இழுத்து விளையாடுவர். ஆனால் இலக்கிய வழக்கில் இஃது ஆண்பாலுக்கு மட்டுமே உரித்தாகும்.

இதே தலைப்பில் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர், நாரா.நாச்சியப்பன் இதனை நடைவண்டி ஒட்டும் பருவமாகப் பாடுகிறார்.[76] பிள்ளைகள் விளையாடும் விளையாட்டுப் பொருள்களின் மாற்றத்திற்கு ஏற்ப விளையாட்டுப் பொருளும் மாறியிருக்கிறது.

குழமகன், ஊசல்

சிற்றில் பருவத்துக்குப்பின் இந்திரகாளியம் சிறுபறையோ சிறுதேரோ கூறாது குழமகன், ஊசல் என இருபருவங்களை எண்ணுகின்றது. இவ்விரு பருவங்களும் ஆண்பாற் பிள்ளைத்தமிழில் அமையாதவை. ஆண்பாலுக்கு உரியவையாகப் பிறநூல்கள் பேசாதவை.

தொழிற்குத் தகுவன புகறலும் பூணணிதலும்

இந்திரகாளியம் தொழிற்குத் தகுவன புகறல் என்பதை இறுதிப் பருவமாக்கும். இது பாட்டுடைத் தலைவன் தொழில், பண்பு, நிலை ஆகியவற்றுக்கு ஏற்பப் பருவங்களைப் படைத்துக்கொள்ள வழிசெய்யும் ஒரு பொதுப்படையான பருவம் என்று கொள்ளவேண்டும்.

பிங்கலம் சிறுதேருக்குப்பின் பூணணிதல் என்ற பருவத்தைச் சுட்டும். குழந்தைகளுக்கு அணிகளைப் பூட்டி மகிழ்தல் பூணணிதல் பருவமாகும். பெரியாழ்வார் உன்னைக் காதுகுத்த ஆய்ப்பாலர் பெண்டுகளெல்லாரும் வந்தார்.[77] எனக் காது குத்தலாகிய காதணி அணிவித்தலைத் தனித்துப் பாடுகிறார். காதணி அணிதல் போல ஒன்றினை அணிதல் பூணணிதலாம். இதனைத் திவாகரம் சுட்டவில்லை. பிங்கலநிகண்டைத் தழுவிய திருக்கதிரகாமப் பிள்ளைத்தமிழ் இப்பருவத்தைப் பதின்மூன்றாவதாகப் பாடுகிறது. பிள்ளைத்தமிழ்ப் புலவர்கள் குழந்தையை அழகுபடுத்த அணிகலன் பூட்டலை நூலிடையே ஆங்காங்கே உரைக்கின்றனர் ; அதனால் இதனைத் தனிப்பருவமாக்கவில்லை.

பூச்சூட்டலும் கோழகந்தான் செய்தலும்

பாரதிதீபம் "பூச்சூட்டல்" என்ற பருவத்தைப் பகரப் பிற நிகண்டுகளோ பாட்டியல்களோ பிள்ளைத்தமிழ் இலக்கியங்களோ இதனைச் சுட்டில. பெரியாழ்வார் திருமொழி இரண்டாம்பத்து-ஏழாந் திருமொழி பூச்சூட்டல் பருவமாகும். இதில் தாய் குழந்தையைப் பூச்சூட்ட அழைக்கின்றாள்.

செண்பக மல்லிகை யோடுசெங்கழு நீரிரு வாட்சி
எண்பகர் பூவும் கொணர்ந்தேன் இன்றிவை சூட்டவா.[78]

என்ற பகுதியால் இப்பருவத்தின் கருத்துப்புலப்படும். இஃது எட்டாம் திங்கள் நிகழ்ச்சி.[79] இப்பருவம் புலவர்களால் தனிப்பருவமாகப் பாடப்பெறவில்லை.

பூணணிதல் போலப் பூச்சூட்டலும் குழந்தைக்கு அழகு செய்ய எழுந்தது. பெரியாழ்வார் பல்வகைப் பூக்களின் பெயர்களைச் சுட்டிக் கண்ணனைப்

பூச்சூடவாராய் என விளிப்பர்.[80] மேலும் இங்குக் குழந்தையை வருக என்றழைத்தலே முடிபாகிறது. பெரியாழ்வாரின் திருமொழிகள் பலவும் வாராய்[81] என முடிவன. இவற்றையெல்லாம் புலவர்கள் தனிப்பகுதியாகப் பாடிலர். இவையனைத்தும் வருகைப்பருவத்தின் வேறுபட்ட வடிவங்களாககிக் கொண்டு தனிப்பருவமாக அமையாது போயின.

பாரதிதீபம் கூறும் மற்றொரு பருவம் கோழகந்தான் செய்தல்; அதற்கு இந்நிகண்டு தெளிவான விளக்கம் ஏதும் தரவில்லை, இது குழந்தையின் குறும்பு விளையாட்டுகள் பற்றியது. பெரியாழ்வார் "அப்பூச்சி காட்டுகிறான்".[82] என்றும் உன் மகனைக் கூவாய்[83] என்றும் வேண்டவும் தாரானா வின்றுமுற்றும்[84] என்றும் பாடும் திருமொழிகள் இப்பருவத்தைச் சார்ந்தன. மேலும் இக்குழந்தை கண்ணை இறுத்துவது, மயிரால் முகத்தை மறைத்துக் காட்டுவது, சிற்றில் சிதைப்பது ஆகியனவும் இளமைக் குறும்புகளே. இவற்றையே "கோழகந்தான் செய்தல்" என்பர். குழந்தையின் சிறுகுறும்புகளைப் பெருங்காப்பியமாகப் பாடமுடியும். ஆனால் பிள்ளைத்தமிழ்ப் புலவர்கள் முன்னோர் பாடியவற்றையும் தாம் மனங்கொண்டவற்றையும் மட்டும் நூலில் அமைத்திருக்கின்றனர்.

பிள்ளைத்தமிழ்ப் புலவர்கள் குழந்தைகளின் குறும்புகள் என்ற பொதுவகையில் அடங்குபவற்றுள் ஏதேனும் ஒன்றை மட்டும் பாடிப் பிறவற்றை நீக்கினர். அந்நெறி தழுவிச் சிற்றில் சிதைத்தலைப் பாடிப் பிறகுறும்புகளைப் பாடாமல் விடுத்தனர்.

மையாடலும் கச்சிற்சுரிகை காமுறப்புனைதலும்

பாரதிதீபம் கூறிய மற்றொரு புதிய பருவம் மையாடல்[85]. இதற்கு விளக்கம் ஏதும் இந்நூல் தரவில்லை. பரிபாடல் நல்லந்துவனார், "மையாடல் ஆடல் மழ புலவர்"[86] எனக்குறிப்பர். சீவகசிந்தாமணி,

நனந்தலை உலகின் மிக்க நன்னுதன் மகளிர் தங்கள்
மனந்தளை பரிய நின்ற மதலைமை யாடு கென்றே[86]

என்றும் "ஐயாண்டெய்தி அறிந்தார் கலைகள்"[87] என்றும் உரைக்கிறது. மை தடவப் பெற்ற நெடுங்கணக்கினையுடைய சுவடியைக் கையில் பிடித்து முதற்கண் கல்வி பயிலத் துவங்குதல் மையாடல் எனப்பெறும். மைஆகுபெயராய் நிற்கிறது. இதனை அட்சராப்பியாசம் என்றும் பள்ளிக்கு வைத்தல் என்றும் வழங்குவர். இது தனிப்பருவமாகப் பிள்ளைத்தமிழில் இடம்பெற இந்நிகண்டு வழிசெய்கிறது.

காப்பியப் புலவர்கள் பிள்ளைத்தமிழ்க்குரிய பருவங்களை நூலிடையே அமைத்துப் பாடுவர். ஆனால் சிந்தாமணியைப் பின்பற்றி இந்நிகழ்ச்சி ஐந்தாம் ஆண்டுக்குரியது எனச் சுட்டும்.[88]

> **இனிக் கல்வி கற்றல் முதலிய பிள்ளைச் செய்தி கூறல், தந்தையார் முதலிய கல்வியறிவு துய்த்தொழுகும் ஆண்மக்கட்கே இயைபுடையனவாதலாற் கொழுநர் முதலியோர் அறிவித்தவாறு அறிந்தொழுகுதன்றித்தாமாக வறிந்தொழுக மாட்டாத மடமை பூண்ட பெண்டிர் கூற்றாகிய பிள்ளைத்தமிழுள் விள்ளப் பெறவாயின.[89]**

கச்சிற்சுரிகை காமுறப்புனைதல் என்பதைத் திவாகர, பிங்கல பாரதிதீப நிகண்டுகள் மூன்றும் சுட்டும். இப்பருவத்தைக் கண்ணப்பர் வரலாற்றில் சேக்கிழார் இறுதிப்பருவமாக அமைப்பர்.[90] பிங்கல நிகண்டினைப் பின்பற்றிய திருக்கதிரகாமப் பிள்ளைத்தமிழில் "உடைவாள் செறித்தல்" என்ற பெயரில் இப்பருவம் இருக்கிறது.

சிறுபறை,சிறுதேர் ஆகிய பருவங்கள் போல இதுவும் மன்னர் தொடர்பினால் தோன்றியிருக்க வேண்டும். பிள்ளைத்தமிழ்ப்புலவர்கள் பிள்ளைகளின் வயது வரம்புக்குப்பொருந்தியவாறும் பிள்ளைகளின் இளமைச் செயல்களில் பேரின்பம் தருமாறும் குழந்தை நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்தனர்: நிகண்டுகளும் பாட்டியல்களும் பல பருவங்களைச் சொல்லப் புலவர்கள் அவற்றில் பொருந்தமானவற்றை மாத்திரம் அமைத்தனர்.

ஒரு நூல் அமைப்பில்,அதில் இடம்பெறும் பாடல் அளவும் பருவ அளவும் அளவாக அமைதல் வேண்டும். அளவின்றி அமையும் நூல், குளவளாகக் கோடின்றி நீர் நிறைந்தற்று. பிள்ளைத்தமிழுக்குப் பத்துப்பருவம் அமைக்க வேண்டும் என்ற அடிப்படையே இச்சிற்றிலக்கிய அமைப்பியலில் தலையாய இடம் பெற்றது. இதற்கு முன்னையோர் மரபும் வழி காட்டியாயிற்று. தொல்காப்பியர், தம் நூலில் பலவற்றைப் பத்துப் பத்தாகப் பகுத்து விளக்குவர்.[91]

> **சங்கத்தொகை நூல்களின் பாடல் எண்ணிக்கைகள் எல்லாமுமே பத்தின் மடங்குகளாகவோ பெருக்கிகளாகவோ இருப்பதைக் காணமுடிகிறது.[92]**

ஆகையால் சிற்றிலக்கியப் புலவர்களும் அம்மரபைத் தழுவி நூலின் பருவங்களைப் பத்தாகவும் பருவத்துக்குப் பாஎண்ணிக்கைபத்தாகவும் அமைத்தனர்.

அடிப்படையான பத்துப்பருவங்கள்

பிள்ளைத்தமிழ்ப் பருவங்களையும் அவற்றின் வரிசை முறையையும் நிகண்டுகளும் பாட்டியல்களும் காப்பிய இலக்கியங்களும் பிள்ளைத்தமிழ்களும் இயம்பிய பாங்கு எடுத்துக்காட்டப்பட்டது. பிள்ளைத்தமிழ்கள், பல பருவங்களை விடுத்தமைக்கும் சில பருவங்களை எடுத்தமைக்கும் ஆன காரணங்களும் சுட்டப்பட்டன. இவ்வாறு பிள்ளைத்தமிழுக்கு உரிய பருவங்கள் என நிறுவப்பட்டவை எல்லா நூல்களும் உரைக்கும் பருவங்கள் பத்தேயாகும். இவற்றை அடிப்படைப் பருவங்களாக ஆசிரியர் அமைத்தனர். அவை காப்பு, செங்கீரை, தால், சப்பாணி முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்பன.

பிள்ளைத்தமிழில் இப்பத்துப் பருவங்கள் அமைவதே மரபும் விதியுமாயிற்று. முதல் ஏழு பருவங்களில் செங்கீரை, தால், முன்பின் மாற்றம் பெற்றவை; பின்மூன்று பருவங்களில் சிறுபறை,சிற்றில், சிறுதேர் என்பன சிற்றில்,சிறுபறை, சிறுதேர்,என்று முறை மாறி அமைந்துள்ளன.

பருவ வைப்பு முறை

பத்துப்பருவங்கள்

1	2	3	4
காப்பு	காப்பு	காப்பு	காப்பு
செங்கீரை	செங்கீரை	தால்	தால்
தால்	தால்	செங்கீரை	செங்கீரை
சப்பாணி	சப்பாணி	சப்பாணி	சப்பாணி
முத்தம்	முத்தம்	முத்தம்	முத்தம்
வருகை	வருகை	வருகை	வருகை
அம்புலி	அம்புலி	அம்புலி	அம்புலி
சிற்றில்	சிற்றில்	சிறுபறை	சிறுபறை
சிறுபறை	சிறுதேர்	சிற்றில்	சிறுதேர்
சிறுதேர்	சிறுபறை	சிறுதேர்	சிற்றில்

இனிப் புது பருவங்கள் மாறி அமைந்த நூல்களையும் பருவங்களை மிகுதியாகப் பாடிய நூல்களையும் பற்றிய கருத்துகள் இடம்பெறும்..

புதுமைப்பருவம் : பெருமானார் பிள்ளைத்தமிழ்

மரபியல் பருவங்கள் பத்தில் சிலவற்றை விடுத்தும் சிலவற்றைப் புதியனவாக இணைத்தும் நூல்கள் உருவாகியுள்ளன. பெருமனார் பிள்ளைத்தமிழ் சிற்றில், சிறுதேர், சிறுபறை, என்ற பருவங்களை விடுத்துப் பள்ளிஎழுச்சி, காட்சி,

வாழ்த்து என்ற பருவங்களைக் கொண்டுள்ளது. பருவ மாற்றத்திற்கான காரணத்தை நூலாசிரியர்,

> இஸ்லாமியக் கோட்பாடுகளை எண்ணியும், பெருமானார் பண்பு நலங்களைக் கருத்திற் கொண்டும், பிள்ளைத்தமிழ்ப் பருவங்களில் சில மாறுதல்களைச் செய்திருக்கிறேன்[93]

எனப் பொதுப்படக் கூறுகிறார். இசுலாமியக் கோட்பாடுகள் என்ன? என்றும், அமைந்த மாற்றம் யாங்ஙனம் பொருந்தும்? என்றும் நூலாசிரியர் விளக்கவில்லை.

ஆசிரியர் பள்ளியெழுச்சிப் பருவத்தில் முகமது பிறப்பைக் கூறி உலக மக்களைத் துயில் எழுப்புகிறார். மன்னனையோ, இறைவனையோ, துயிலெழுப்புவதுதான் தமிழ் இலக்கிய மரபு. இங்கு மரபு மீறலாக ஆனால் இசுலாமியக் கோட்பாட்டுக்கு இணக்கமாகக் கவிஞர் உலக மக்களைத் தொழுகைக்கு அழைக்கிறார். இசுலாமியத்தில் தொழுகைக்குத் தனிமதிப்பும் அழைக்கும் வகையில் சிறப்பும் உண்டு.

> "இஸ்லாத்தில் ஆண்டவனின் உண்மையையும் தொழுகையின் பெருமையையும் கூறித் தொழுகைக்கு அழைப்பார்கள். இத்தகைய சிறந்த அழைப்பு வேறெந்த மதத்திலும் இல்லை. உலக அலுவல்களில் ஈடுபட்டிருப்போர் தொழுகை வேளையை மறவாமல் இருப்பதற்கும்,அதை அறிந்தும் அலட்சியமாய் இல்லாமலிருப்பதற்கும், கூடித்தொழுவதன் பயனைப் பெறுவதற்கும் இத்தகைய அழைப்பு வேண்டப் படுகின்றது. தூங்கினவரையும் இது தட்டி எழுப்பும் . இக்காரணத்தினாலயே "தொழுகையானது தூக்கத்திலும் மிக மேலானது" என்னும் ஒலியும் இருமுறை செய்யப் படுகின்றது."[94]

இவ்வாறு தொழுதற்கு அழைத்தலைப் "பாங்கு சொல்லுதல்" என்பது இசுலாமிய வழக்கு. பாங்கு சொல்லுதலைப் புலவர் பள்ளியெழுச்சிப் பருவமாகப் பாடினார். பெயர் வைப்பதில் சைவ வைணவ சமயச் சாயலும் உள்ளடக்கத்தில் இசுலாமியக் கருத்தும் அமைந்து இப்பருவம் திகழ்கின்றது.

காட்சிப் பருவத்தில் நபிகளை நோக்கி "விழிகள் திறந்து காணீரோ" என வேண்டுகிறார். சைவகுரவரும் ஆழ்வார்களும் இறைவன் கடைக்கண்பார்வையை வேண்டிப் பாடுவது. போல இவரும் நபிகளை விழிகள் திறந்து காண வேண்டுகிறார்.

பெருமானார் பிள்ளைத்தமிழின் இறுதிப் பருவம் வாழ்த்துப்பருவம் ஆகும். இதில் நூலாசிரியர் நபி பெருமானை வாழ்க என வாழ்த்துகிறார். காப்பியங்களின் இறுதியில் வாழ்த்துப்பாடும் மரபினைப் போல வாழ்த்துப்பருவம் இறுதியில் அமைகிறது. இந்நூலில் அமைந்த காட்சிப்பருவம், பள்ளியெழுச்சிப்பருவம் இரண்டும் வேறு நூல்களில் காணமுடியாதன. வாழ்த்துப்பருவம் என்ற பெயரால் பெரியார் பிள்ளைத்தமிழில் ஒருபருவம் இடம் பெற்றுள்ளது; ஆனால் அது நூலின் முதற்கண் அமைந்துள்ளது.

பெருமானார் பிள்ளைத்தமிழில், பருவங்கள் மாறின. ஆனால் பருவண்ணிக்கை மாறவில்லை. வேறுசில நூல்களில் மரபியலான பத்துப்பருவங்களினும் கூடுதலாகப் பருவங்கள் உள்ளன. அம்மிகைப் பருவநூல்கள் மூன்று.

மிகைப்பருவநூல்கள்

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களில் எந்நூலினும் பத்துக்குக் குறைந்த பருவங்கள் இல்லை. பத்துக்கு மிகுதியான பருவ நூல்கள் இருபதாம் நூற்றாண்டில் மூன்று தோன்றின. அவை பெரியார் பிள்ளைத்தமிழும் காவை முருகன் பிள்ளைத்தமிழும் ஈழத்துத் திருக்கதிரகாமப்பிள்ளைத்தமிழும் ஆகும்.

புதிய பருவங்களின் விளக்கமும் தேவையும்

பெரியார் பிள்ளைத்தமிழில் மரபியலான பத்துப்பருவங்கள் முதற்கண் அமைந்தன.

> **இப்பருவத்துடன் முன்னோர் முறைப்படிப் பிள்ளைத்தமிழ் முடியவேண்டும், ஆயினும் பின்னோன் வேண்டும் விகற்பம் கூறல் என்ற விதிப்படி இந்நூலில், ஆசிரியர் மேலும் கூர்ந்துணரும் பருவம், வினாவுப் பருவம், கதைகேள் பருவம், பள்ளிச்செல் பருவம் என நான்கு பருவங்களைப் புதிதாகப் படைத்துக்கொண்டு (பிள்ளைத்தன்மை பள்ளிசென்ற பின் நீங்குதலின் அது வரையும்) தொடர்ந்து பாடுகிறார்.[95]**

அந்நான்கு பருவங்களுடன் வாழ்த்துப் பருவத்தையும் சேர்த்துப் அவரைப் பிள்ளைத்தமிழில் இரண்டாம் பகுதி என ஆசிரியர் குறிப்பர்.[96]

சிறுதேர் உருட்டிச் சிந்தை மகிழ்ந்த சிறுவன்,பின் இயற்கையில் தான் காணும் ஒவ்வொரு இனியகாட்சியையும் கண்டுகண்டு மனத்தில் பெருமகிழ்வு கொண்டு, அவற்றின் உண்மைகளைத்தன் அறிவு கொண்டு உணரத் தலைப்படல் உலகியல்பு. ஆதலின் அப்புதுமைப் பருவத்தில் ஒவ்வொரு பொருளையும் கூர்ந்து

உணரும் நன்மை மிகுந்திருத்தலின் "கூர்ந்துணரும் பருவம்" எனப் பெயர் தந்து புதியபருவத்தை ஆசிரியர் படைப்பர்.[97] தந்தை பெரியார், நூல்களைக் கற்று அறிவு முற்றப்பெறுதலினும் உலகையும் இயற்கையையும் கூர்ந்து நோக்கி அதனால் உண்மையை உய்த்துணருமாறு பெரியாராகிய குழந்தையை ஆசிரியர் வேண்டுகிறார்.

கூர்ந்துணர்ந்த தலைவன் தான்பெற்ற உண்மைகளாலும் துய்ப்பின் முடிவாலும் உள்ளம் தூண்டப்பெற்று, உளத்தெழும் பல உணர்ச்சிகளைக் கேள்விகளாக வெளியிடுகின்றான். இவ்வாறு வெளியிடும் திறமையை நோக்கிய பெற்றோர் தம் மகனை மேன்மேலும் வினவியருளுமாறு வேண்டுவதாக வைத்துப் பாடப்பெறும் பருவம் வினாவுப் பருவம்.

இதையடுத்து அமையும் பருவம் கதைகேள் பருவம் என்பதாகும். நூலாசிரியர் ஆரியக் கலப்பற்ற பழைய கதையையும் பின்னாளில் ஆரியர் கலப்பால் புகுந்த கதையையும் கேட்குமாறு பாட்டுடைத்தலைவரை வேண்டுவர் ஆசிரியர். இப்பருவத்தில் மூன்று பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

இப்புதிய பருவங்கள் அமையுமாறு இந்நூலைப் புலவர் படைத்துள்ளார். இவை பெரியாரின் பகுத்தறிவு கொள்கைக்குத் தகப்படைத்துக் கொள்ள பெற்றவை. பிறநாட்டு அறிஞர்களும் அறிவியல் கலைஞர்களும் உண்மைகளை உற்றுணர்ந்த வரலாற்றை இடைமடுத்துப் பெரியாரின் வாழ்வை ஆசிரியர் சித்திரிக்கிறார்.

பெரியார் எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் மெய்ப்பொருள் காணும் வேட்கையுடையவர்; முன்னையோர் சொன்னவற்றை அங்ஙனமே கொள்ளாது கண்டுணர்ந்து தீர முடிவு காண்பவர். இதனை,

> *ஆர்ந்தமெய் அறிவினால் அனைத்தையும் இதனை(க்)*
> *கூர்ந்(து) உணர்ந்த தருளே*[98]

என்ற அந்நூற்பகுதி உணர்த்தும். இப்பருவத்தின் மற்றொரு பாட்டில் கூர்ந்துணர்ந்து உண்மை கண்ட கலிலியோ போலப் பெரியாரையும் கூர்ந்துணர ஆசிரியர் வேண்டுகிறார்.

> **முன்னே கலிலியோ எனும்முழு மெய்யுணர்ஞானி எனக்கே**
> **உலகியல் (பு) என்(று) உளம் இனிதே தினம் எண்ணி(ப்)**
> **பின்னேபுவி யாற்றில் தெரித்(து) எந்நாள் புகழ் பெற்றார்.**
> **மன்னே பெரியோய் கூர்ந்துணர், மக்கள் நலம் மிகவே.**[99]

கலிலியோ கூர்ந்துணரும் ஆற்றலால் புவியாற்றலைக் கண்டார். அவ்வாறு

பெரியாரையும் ஆசிரியர் வேண்டுவர். இவ்வாறு ஸ்டீவன்சன்[100] தார்வின்[101] ஆகியோரையும் குறிப்பர். நூலாசிரியர் அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கையை அறிந்து பெரியாரையும் அத்தகைய ஞானியாகக் கருதிக் கூர்ந்துணரும் பருவத்தை அமைத்துள்ளார்.

வினாவுறுபருவம் அறிவு வேட்கையை மிகுத்தற்குத்துணையாகும் வினாக்களைக் கேட்பது பற்றியதாம். வினாவுறு பருவ முதற்பாடல்

நெஞ்சின் மிக்க கூர்ந்துணர்ச்சி
நிலையா(து) ஒல்லை வாய்சோர்ந்து
நிகழ்த்தி விடுதல் உலகியல்பால்,
நினைத்த யாவும் வினாவுகவே
செஞ்சொல் மிகுநற் கல்விநலம்
திகழ்தல் கேள்விப் பயனதனால்;
செல்வா,நினைத்த வினவுகவே
செம்மால், சிறந்த வினவுகவே[102]

என்று கூர்ந்துணரும் பருவத்தையும் வினாவுறு பருவத்தையும் பொருத்தித் தொடர்பை விளக்குகிறது..

அறிவு வளர்ச்சிக்கு வினாக்கேட்பது இன்றியமையாதது. அதன் தேவையையும் பயனையும் உணர்த்தி, எந்தக் காலத்தும் எப்பொருள் எய்தினும் எய்தும், அப்பொருள் எவ்விதம்? ஏன்? என்று? வந்த(து) ? என்று[103] பல வினாக்கேட்க வேண்டும் என நன்னெறியை உணர்த்துகிறார். வினாக்கள் எழுப்புவதன் மூலம் தெளிவான உண்மைகளை அறிந்து அறிவு வளர்ச்சி பெறமுடியும்.

கதைகேள் பருவம், பெரியாராகிய குழந்தைகளுக்குத் கதை கூறுவது பற்றியது. குழந்தைக்குக் கதை கேட்பதிலும் விருப்பமுண்டு. எனவே இந்நூலாசிரியர் அமைத்த பருவங்கள் குழந்தையின் இயல்புக்குப் பொருந்தியன.

கூர்ந்துணரும் பருவம் கண்ணால் கண்டுணரும் பருவமாயின் கதைகேள் பருவம் காதால் கேட்டு வளரும் பருவமாகும். தமிழகத்தில் வழங்கிய பழங்கதைகள் பல தமிழர் நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் முரணாய் ஆரியக்கலப்பாக விளங்கின. அக்கதைகளையும் நிகழ்ச்சிகளையும் பெரியார் ஈ.வெ.ரா, தொகுத்து அவை ஆரியர் மாயைகள் என்றும் தமிழரை அடிமையாக நடத்த ஆரியர் கட்டிய கட்டுக்கதைகள் என்றும் வெளிப்படுத்தினார். இத்தகைய பழங்கதைகளை அறிந்திருந்தால்தான் அவற்றில் பொய், மெய்யினைத் தெளிவுபடுத்த முடியும். எனவே பெரியாரை "முப்புரி நூலினர்...குற்றம் செய்கதை

கூர்ந்துளம் கேட்டருள்"[104] என நூலாசிரியர் வேண்டிப் பாடுகிறார்.

பெரியார் ஈ.வெ.ரா.வின் வாழ்வியலையும் குறிக்கோளையும் நன்குணர்ந்த நூலாசிரியர் மேலைநாட்டு அறிவியலறிஞர்களும் தத்துவஞானிகளும் உண்மை காண நாடிய வழியை அறிந்து அவற்றை இம்மூன்று பருவங்களின் மையக்கருத்தாக்கிப் பாடுகிறார். பெரியாருடைய பிற்கால வாழ்க்கை அமைந்ததற்கு ஏற்ப இப்பருவங்களை ஆசிரியர் உருவாக்கியிருக்கிறார்.

இந்நூலுக்கென ஆசிரியர் பாடிய பருவம் வாழ்த்துப்பருவம். இறுதியாக அமைக்கக் கருதியதை நூலாசிரியர் நூலின் முதலில் பின்னாளில் அமைத்து விட்டார்.[105] இப்பருவம் நூலுக்குப்பாயிரம் போலாகிறது.

புதிய பருவங்களைப் பாடியமைக்கான நோக்கம்

பெரியார் பிள்ளைத்தமிழில் மரபான பத்துப் பருவங்களை வகுத்த ஆசிரியர் அவற்றைப் "பிள்ளைத்தமிழ்-முதற்பகுதி" என்று குறித்தார். பின் கூர்ந்துணர் பருவம், வினவுறு பருவம், கதைகேள்பருவம், மூன்றும் பெரியாரின் முதுமைக்கால வாழ்வுக்கேற்பப் படைக்கப்பட்டவை. உலகையும் இயற்கையையும் கூர்ந்துணர்ந்தால்தான் நுண்ணறிவு மிகும்; கூர்ந்துணருங்கால் எழும் ஐயங்களைப் போக்க வினா எழுப்புதல் துணையாகும். பல அறிவியலறிஞர்கள் கூர்ந்துணர்ந்தே நிலைத்த உண்மைகளைக் கண்டனர். சமயக் கருத்துகளையும் இலக்கணக் கருத்துகளையும் . வினாவிடை மூலம் புலப்படுத்துவதும் இதனை வலியுறுத்தும். ஆகையால் கூர்ந்துணர் பருவத்தில் பெரியாரின் கூர்ந்துணரும் ஆற்றலையும் வினாவுறு பருவத்தில் அவர் பல்வேறு வினாக்களை எழுப்பி மெய்யறிவு நாடுதலையும் பிள்ளைத்தமிழ் விளக்குகிறது.

கதைகேள் பருவம், குழந்தையாகிய பெரியாரைக் கதை கேட்க வேண்டுவது. தமிழகத்தில் வழங்கும் கதைகளை எடுத்துக்காட்டி அவற்றில் மாயைகளை விளக்கிப் பெரியார் எழுதியும் பேசியும் வந்தார். அதனால் பிள்ளைத்தமிழில் இப்பருவம் அமைந்தது. எஞ்சிய பள்ளிசெல்பருவம் மறைந்து போய்விட்டது. பெரியாரின் இன்றைய வாழ்க்கைப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு அவருடைய இளைமைப்பருவத்தை ஆசிரியர் புனைந்துள்ளார்.

பெரியாரின் பிள்ளைத்தமிழ் பாட்டுடைத்தலைவன் வாழ்க்கை வரலாற்றுக்கும் குறிக்கோளுக்கும் ஏற்பப்புதுமையான மிகைப்பருவங்களை உடையது. மரபுவழியாக அமைந்த பருவங்கள், தங்கள் பாட்டுடைத்தலைவரைப் பாடப் போதியனவாக இல்லை என்று கருதி இத்தகைய பருவங்களைப் புலவர்கள்

படைக்கின்றனர். நூலாசிரியரின் பாடற்பொருளுக்கு ஏற்ப நூலின் அமைப்பு மாறுகிறது.

காவை முருகன் பிள்ளைத்தமிழ்

மிகைப்பருவம் அமைந்த மற்றொரு நூல் காவை முருகன் பிள்ளைத்தமிழ். இந்நூலில் மரபுப் பருவங்களுடன் வரும் துயிலெழற் பருவம்,தகர் அடக்குபருவம், வேலோச்சு பருவம் என்ற மூன்றும் கூடுதலாகத் திகழ்கின்றன.

குழந்தையைத் தூங்க வைப்பதுபோலத் தூக்கத்திலிருந்து விழிக்கவைப்பதும், அரிது. முருகன் துயில்வதாகக் கருதி இப்பிள்ளைத்தமிழ் எழுக எழுக எனத் துயில் எழத் தூண்டுகிறது.[106] துயிலினின்று எழுதலைத் "துயிலெடை நிலை" என்பர்.. இது திருப்பள்ளியெழுச்சி எனத் தனிச் சிற்றிலக்கியமாக வளர்ந்தது. இத்தகைய திருப்பள்ளியெழுச்சியைத் திருமால், சிவபெருமான், முதலிய பல கடவுளர்க்குப் புலவர்கள் பாடினர். ஆனால் முருகனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடவில்லை. அக்குறையைப் போக்க, இந்நூல் துயிலெழற் பருவத்தை அமைத்துள்ளது. திருப்பள்ளியெழுச்சி என வளர்ந்த சிற்றிலக்கியம் துயிலெழற் பருவமாகப் பிள்ளைத்தமிழில் கலக்கிறது.

தகரேறுபடலம் கந்தபுராணத்தில் உற்பத்திக் காண்டத்தில் திகழும்[107] நாரதர் வேள்வியில் வந்த ஆட்டுக்கிடாயை முருகன் வீரவாகுவை, கொண்டு பிடித்துவரச் செய்து அதன்மீதமர்ந்து அதனை அடக்கினார். இந்நிகழ்ச்சி முருகன் இளமைத் திருவிளையாடல் ஆகும்.

நூலாசிரியர், பொருளையும் பிரிவினை அரசியலையும் அறிவியலையும் மூடச்சடங்குகளையும் ஆட்டுக்கிடாவாக உருவகித்து அவை மக்களைப் படுத்தும் பாட்டைச் சுட்டி முருகனை வேண்டி அடக்கப் பாடுகிறார். இங்கு மக்கள் தொகுதிக்குத் தீமை விளைப்பவற்றையெல்லாம் ஆட்டுக்கிடாவாகச் சித்தரிக்கிறார்.

நூலாசிரியர், அரசியல் ஆட்டுக்கிடாவைப் பாடும்போது நாரதர் வேள்வியில் தோன்றிய கிடாய் இன்று புத்துருவொடு மக்களிடைப் புகுந்துவிட்டது என்பர்.

ஆக்கமாம் மகத்தின் அழலிடை, முன்னாள்
அவனியோர்க்கு அன்பளிப்பாக
அளித்தநா ரதனார் விரும்பிய படியே
அருளுருத் தாங்கிஇவ் உலகைக்

காக்குமாறு அமைந்த கடமையை மறந்து
கலியெனக் கனன்று உயிர்க்குலமே
கண்டுஉளம் கலங்கப் பண்டெழுந்து அலைந்த
கரியசெம் மறிக்கடா, புதிய
ஊக்கமோடு உலக அரசியல் உருவில்
உட்புகுந்து உளதருக்குடனே
உறுமுகின் றதுகாண், உளம்குலைந்து உன்னை
உதவிக்குப் பரிந்துஅழைக் கின்றோம்[108]

இவ்வாறு மன்பதைக்குக் கேடிழைக்கும் பலவற்றை ஆடாக உருவகித்து இத்தகரேறு பருவம் இலங்குகிறது.

முருகன் கடவுளைப்பாடும் நூலாசிரியர் இன்றைய சமுதாயத்தில் காணப்பெறும் ஒழுக்கமின்மை, கையூட்டு,கறுப்பு வாணிகம், ஊழல், ஆகிய குற்றங்களைத்தன் வலியாலும் பிறர் வலியாலும் நீக்க முடியாமையால் அவற்றைப் போக்கித் தங்களைக் காக்குமாறு முருகனை வேண்டுகிறார். இறை ஈடுபாட்டிலும் சமுதாய நலம் நாடும் புலவரின் மாண்பு இங்கு வெளியாகிறது.

வேலோச்சு பருவம் தகரேறு பருவம் போல மன்பதை நலம் விழையும் பருவமாகும். அரசியல் அறிவியல் ஆகியவற்றைக் கிடாயாக முன்பருவத்தில் உருவாக்கி இங்குப் பொது நிலையில் புலவர் பாடியுள்ளார். முருகப்பெருமானை ,

ஏதிற் கருத்தை ஏவித் தனித்த
இடம்இங் கிருக்க நினைவாய்?
எழில் கொண்ட காவை முருகைய! வேலை
இன்னே சுழற்றி எழுவாய் [109]

என இயம்புவர். தனித்திருக்கும் முருகனை மக்கள் கூட்டத்திற்குள் இறங்கி வேலை வீசித் தருமத்தை நிலைநாட்ட நூலாசிரியர் வேண்டுகிறார்.

"தருமம் குலைந்த தருணத் தெழுந்து
தன்னே ரிலாமல் உலகில்
தலைசுற்றி ஆடும் நிலையில் தொடர்ந்தே
கலிஓட - மீண்டும் அறமே
வருமாறுசெய்ய - வடிவேல் சுழற்றி
வருவேன். [110]

என முருகன் உறுதியளித்ததாகக் கவிஞர் குறிப்பர். அடுத்தப்பாட்டில், இதனை வழிமொழிந்து தருமத்தை மீண்டும் உருவாக்க "உன்கைத் தனிவேல் சுழற்றி எழுவாய்"[11] என்பர்.

இன்றைய மன்பதை நிலை, மக்களாலோ, சட்டத்தாலோ திருத்தமுடியாது. முருகனால் தான் முடியும் என்பது கவிஞர் கருத்து. ஆதலால், "உன்னால் அல்லாமல் உய்யவில்லை" என்றிவ்வுலகேந்தி ஓலமிடவும் ஒய்வேது? காவை அழகா உன் வேலை உடனே சுழற்றி வருவாய்[112] என ஆசிரியர் வேண்டுகிறார்.

இவ்விரு பருவங்களும் பிள்ளைத்தமிழில் அமைந்திருந்தாலும் இவை மன்பதைக்கு நன்னலம் செய்ய முருகன் புறப்படவேண்டும் என்ற கவிஞர் விழைவை உணர்த்துகின்றன. இவை சீர்த்திருத்தப் புதுமைகளை நிலை நாட்டி நிற்கின்றன. கண்ணன் உலகில் தீமைகள் மிகும் போது தான் தோன்றுவேன் என்று கூறியதை முருகனுக்கு ஏற்றி ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார். இவை இந்திரகாளியம் கூறும் தொழிற்குத் தகுவனகூறல்[113] என்ற மரபு தழுவிய பருவங்களாகும்

காவை முருகன் பிள்ளைத்தமிழில் துயிலெழற்பருவம், தகர் அடக்குபருவம், வேலோச்சுபருவம் ஆகிய மூன்றும் மிகைப்பருவங்கள். நல்லோர் நலிவதும் அல்லோர் நலமுறுவதுவும் இன்று உலகில் காண்பன. உலகில் அறம் தளர்ந்து மறம் மிகுந்து மக்கள் மனம் துன்பமும் தொல்லையும் அடைவதைக்கண்டு "சாமிதூங்குது" என மக்கள் மனம் நைந்து சுட்டுவர். கடவுள் கண் திறந்து பார்க்கவேண்டும் என வேண்டுவர். அந்த அடிப்படையே துயிலெழற்பருவமாக அமைந்தது. முருகனைக் கண் திறந்து பார்க்கக் கவிஞர் வேண்டுகிறார். இது முருகனைத் துயில் எழுப்புதலாகவும் அமைந்து திருப்பள்ளியெழுச்சியாகவும் அமைகிறது. முருகனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடிக் கவிஞர் மகிழ்கிறார்.

முருகன் கண்விழித்து உலகில் நடக்கும் தீமைகளை ஒடுக்குமாறு வேண்டுவது தகரடக்கு பருவம். உலகத்துத் தீமைகளையெல்லாம் தகராக உருவகித்துக் கவிஞர் பாடுகிறார். அவ்வாசிரியர் முருகன் தகரை அடக்கியது போல இங்கும் அடக்க வேண்டுகிறார். தீமைகளை வேலெறிந்து வெல்ல வேண்டுவது வேலோச்சு பருவமாகும். இங்ஙனம் உலகம் நன்மைபெறக் கவிஞர் புதியனவாக மிகைப்பருவங்களைப்பாடி முருகனை வேண்டுகிறார். முருகனோடு தொடர்புடையவற்றைக் கவிஞர் தெரிந்து எடுத்துக்கொண்டு பாட்டுடைத் தலைவனுக்கேற்பப் புதுப்பருவங்களைப் படைத்துள்ளார். மிகைப்பருவ நூல்கள் இரண்டின் புதிய பருவங்கள் இவ்வடிப்படையில் தோன்றியவை.

திருகதிரகாமப் பிள்ளைத்தமிழ்

இமிழ் திரைபுடைசூழ் ஈழ வளநாட்டில் கதிரகாமம் என்னும் மூதூரிடத்துத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுறையும் முருகக் கடவுளைப் பாட்டுத் தலைவனாகக் கொண்டு எழுந்தது திருகதிரகாமப் பிள்ளைத்தமிழ்.

இந்நூலை 18-7-1937இல் சிவங்கருணாலயப் பாண்டியப்புலவர் இயற்றினார். பெரியார் பிள்ளைத்தமிழும், காவைமுருகன் பிள்ளைத்தமிழும் தோன்றுதற்கு முன் இந்நூல் பாடப் பெற்றது.

இந்நூலாசிரியர் பருவத்துக்கு மூன்று பாட்டாகப் பதினான்கு பருவங்களைத் தம் நூலில் அமைத்தார். பருவங்களின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கிறதே அன்றிப் புதுமையான பருவங்கள் நூலில் இல்லை.பிங்கல நிகண்டு கூறும் வரிசை முறையிலே பதினான்கு பருவங்களையும் இப்பிள்ளைத்தமிழ் நிறுத்தியிருக்கிறது.[114]

மொழிபயிலல், உணவூட்டல், பூணணிதல், உடையவாள் செறித்தல் என்ற நான்கினையும் பிற பிள்ளைத்தமிழ்கள் ஒன்றும் பாடவில்லை. இதனையேற்று இந்நூலாசிரியர் தாம் பாடியமைக்கான ஏதுக்களை முகவுரையில் விளக்குகிறார் அவையாவன

1. மேற்கூறிய நான்கு பருவங்களைக் குறைத்துப் பாடலாமேயன்றிப் பாடற்க என விலக்குதற்குக் காரணம் ஒன்றும் இல்லை. ஆகையால் அவற்றைப் பாடின் இழுக்கொன்றுமில்லை.

2. பிள்ளைத்தமிழ்பாடுதலின் கருத்து, பிள்ளையின் வரலாறு காட்டுதலன்று, கன்று, காட்டிப் பசுவைப் பாலைக் கறக்குமா போலப் பிள்ளையை நினைப்பித்துத் தாயார் முதலியோரது பெறலரும் பேரன்புச் சுவையை உள்ளத்தின்றும் வெளிப்படுத்து நுகர்ந்து இன்புறல் வேண்டும். பிள்ளையைப் பாடுமுகத்தால் அம்மகளிரது பேரன்பினைத் தம் உள்ளத்துத் தோற்றுவித்து வளர்த்தற்கட் புலவர்க்கு அவா எழும்..

3. ஒன்றற்குரிய நிகழ்ச்சி பிற பருவங்களிலும் நிகழ்தல் கூடுமேனும் அவ்வாறு செய்யுள் செய்யாது அவ்வப் பருவங்கட்கே சார்த்திச் செய்யுள் யாத்தல் வேண்டும். மேற்சுட்டிய நான்கு பருவங்களும் தத்தமக்கு முறைப்படுத்திய பருவங்களில் நிகழ்தலே சிறப்பு.

4. சிறப்புடைப் பொருளைத்தான் எடுத்து மொழிதல் செய்யுட்கியல்பு. இந்நான்கு பருவங்களும் சிறப்புடைப் பொருள்கள். அதனைப் பிங்கல நிகண்டும் எடுத்தோதுகிறது.

5. பிங்கல நிகண்டு இந்நான்கு பருவங்களையும் சுட்டுகின்றமையால் அந்நூலுண்டாதற்கு முன்னர் அந்நான்கற்கும் எடுத்துக்காட்டுண்மை கூடுதலளவைக்குப் புலனாகும்.

6. இப்பருவங்களை எடுத்துரைக்கும் பிங்கல நிகண்டாசிரியர் நல்லிசைப் புலமைச் சான்றோர். அவர் நெறி பழிக்கப்படுவதன்று.

7. இந்நான்கு பருவங்களையும் கூறாத பன்னிருபாட்டியல், பிங்கலந்தைக்குப்பின் தோன்றியது. இவை நான்கும் அமைந்த பிள்ளைத்தமிழ் அவரால் காணப்படாமையாலேயே அவர் இவற்றைக் கூறவில்லை. [115]

இவ்வாறு, அந்நூலாசிரியர் தான் நிகண்டிலுள்ள நான்கு பருவங்களைப் பாடுதற்கான காரணங்களை விளக்குகிறார். இந்நூல் பிங்கல நிகண்டைப் பின்பற்றியமையால் நூலில் மிகைப்பருவங்களைப் புதிதாகப் பாடுதற்கான காரணங்களை விளக்குகிறார். இந்நூல் பிங்கல நிகண்டைப் பின்பற்றியமையால் நூலில் மிகைப்பருவங்கள் அமைந்தன.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ்கள் பத்துப்பருவங்களுடையவை அம்மரபுக்குட்படாதன தமிழகத்தில் எழுந்த பெரியார் பிள்ளைத்தமிழும் காவை முருகன் பிள்தைத்தமிழும் ஆகும். இவற்றின் மிகையான புதுமைப் பருவங்கள் பாட்டுடைத் தலைவர்கள் கொள்கைக்கும், வாழ்க்கைக்கும் வரலாற்றுக்கும் மன்பதை நிலைக்கும் தகப்படைத்துக் கொள்ளப்பட்டன. மற்றொரு மிகைப்பருவப் பிள்ளைத்தமிழ் ஈழத்து மண்ணில் அம்மண்ணின் மைந்தர் பாடியதாகும். அந்நூல் பிங்கல நிகண்டைத் தனக்கு இலக்கணமாக ஏற்றமையால் இம்மிகைப்பருவங்கள் எழுந்தன.

இரண்டாம் பகுதி

பெண்பாற் பிள்ளைத்தமிழ் அமைப்பு

நிகண்டுகள் நவிலும் அமைப்பு

திவாகரம்

முதற்கண் ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களைக் கூறித் தொடர்ந்து பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களைத் தனி நூற்பாவில் திவாகர நிகண்டு எடுத்துரைக்கிறது. பருவங்களை வயது அடிப்படையில் இந்நூல் சுட்டும். ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய ஓராண்டுக்குட்பட்ட பருவங்களைப் பெண்பாற்பிள்ளைத் தமிழுக்கும் இவ்வாசிரியர் உடன்படுகிறார்.[116] ஆதலால் தெய்வக்காப்பு, செங்கீரை, தால், இன்னமுதூட்டல், சப்பாணி, முத்தம், வருகை என்ற முதல் ஏழு பருவங்கள் பெண்பாற்கும் உரியன எனப் புலனாகும்.

அடுத்த நூற்பா, பெண்பாற்கே உரிய குழமணம் மொழிதல், காமன் நோன்பு, பனிநீர் தோய்தல், பாவையாடல், சிறுசோறடுதல், சிற்றிலிழைத்தல், ஊசலாட்டு ஆகிய ஏழு பருவங்களை வகுக்கிறது. ஆணுக்குப் பன்னிரண்டு ஆண்டு முடியவும் பெண்ணுக்கு ஒன்பது ஆண்டு முடியவும் பருவங்களை வயது அடிப்படையில் நவில்கிறது. திவாகரம் பெண்பாற்பிள்ளைத்தமிழுக்குப் பதினான்கு பருவங்களை வகுக்கிறது.

பிங்கலம்

பிங்கல நிகண்டும் இம்முறையில் முதல் ஏழு பருவங்களையும் உடன்படுகிறது. பெண்பாற்பிள்ளைத்தமிழுக்குரியனவாகத் திவாகரம் கூறும் பருவங்களையும் ஏற்றுக் கூறுதல் கற்றல், அம்மானை, கழங்கு, பந்தடித்தாடல் ஆகிய நான்கு பருவங்களை மிகுதியாகச் சுட்டும்[117] பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குப் பதினெட்டுப் பருவங்கள் என்பது பிங்கலத்தின் துணிபு. அம்மானை, கழங்கு, பந்து மூன்றனையும் இந்நூல் பெண்பாற்குக் கூறுகிறது.

பாரதி தீபம்

ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்களில், ஓராண்டு எல்லை முடிய உள்ளவை பெண்பாற்கும் உரியவை என்பது இந்நிகண்டின் கொள்கை. காப்பு, செங்கீரை, தால் (அமுதையும் தாலில் இந்நிகண்டு இணைக்கும்), சப்பாணி, முத்தம், வருகை, பூச்சூட்டல் என்ற ஏழும் ஆண்பாற்கு உரிமை பெறுதல் போலப் பெண்பாற்கும் உண்டு. இது பெண்பாற் பருவங்கள் எனக் காமன்நோன்பு நீராடல், கடலாடல், சிற்றிலிழைத்தல், பொன்னூசல் ஆகியவற்றை விதிக்கிறது. [118]

பெண் பிள்ளைப்பாட்டின் இலக்கணம் இயம்பும் கலித்துறையில் ஈற்றடி சிதைந்திருக்கிறது.[119] அதனால் பெண்பாற்பிள்ளைத்தமிழின் அமைப்பினைத் தெளிவாக அறிய முடியவில்லை. இந்நிகண்டு இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் ஒன்றுபோலப் பன்னிரண்டு பருவங்கள் கூறுகின்றது.

சூடாமணி

திவாகர பிங்கலங்கள் கூறிய முதல் ஏழு பருவங்களுள் இன்னமுதூட்டலைச் சூடாமணி விடுத்தது. ஏனைய ஆறனையும் இறுதிப் பருவமான ஊசலையும் இந்நூல் ஏற்றது. பிங்கலம் போலக் கழங்கு, அம்மானை என்ற இரண்டினையும் தழுவிப் பந்தாடலைச் சூடாமணி சுட்டவில்லை. திவாகர பிங்கலங்களில் சிறுசோறடுதலையும் சிற்றிலிழைத்தலையும் சூடாமணி புறக்கணித்தது. முன்னைய மூன்று நிகண்டும் பெண்பாற்கு அமைக்காத அம்புலிப்பருவத்தைச் சூடாமணி பிள்ளைத் தமிழுக்குப் புதிதாகக் குறிக்கிறது. [120]

திவாகர பிங்கலங்களோ பருவ நோக்கமின்றி வயது நோக்கில் பருவங்களை ஒத்த எண்ணிக்கையில் வைத்தில. திவாகரம் ஆணுக்குப் பன்னிரண்டு பருவமும் பெண்ணுக்கு இரண்டு கூடுதலாகப் பதினான்கு பருவமும் வகுத்தது. பிங்கலமோ ஆணுக்குப் பதினான்கும் பெண்ணுக்கு நான்கு கூடுதலாகப் பதினெட்டும் அமைத்தது. பாரதிதீபம் இரண்டுக்கும் பருவ வேறுபாடுகளுடன் பன்னிரண்டு பருவம் என நிறுவிற்று. திவாகர பிங்கலங்களுக்கு மாறாக இருபாற்பிள்ளைத் தமிழுக்கும் பாரதிதீபம் பன்னிரண்டு பருவங்கூறச் சூடாமணி பத்துப்பருவம் கூறிற்று. கால வளர்ச்சியில் ஒத்த பருவங்களும் எண்ணிக்கையும் அமைதலை இவ்விரு நிகண்டுகளும் உணர்த்துகின்றன.

பெயர் மாறுபாடுகளும் புதிய பருவங்களும்

முதற்பருவம் "தெய்வக்காப்பு" எனவும் "காப்பு" எனவும் பெயர் பெற்றுள்ளது. ஊசல் பருவத்தைப் "பொன்னூசல்" எனவும் ஊசலாட்டு எனவும் நிகண்டுகள் வழங்கும். திவாகர பிங்கலங்கள் "பனிநீர் தோய்தல்" பரவையாடல்

என்பதைப் பாரதிதீபம் "நீராடல்" "கடலாடல்" எனச் சுருங்கச் சொல்லுகின்றன. முன் அமையும் பருவங்களில் ஆண்பாற்பிள்ளைத் தமிழுக்குரியனவே இங்கும் காணப்படுகின்றது.

குழமணம் மொழிதல், காமன் நோன்பு, பனிநீர் தோய்தல், பாவையாடல் சிறுசோறடுதல், சிற்றிலிழைத்தல், ஊசலாட்டு என்பன பெண்பாற்குரியவை. குழமணம் மொழிதல், சிறுசோறடுதல் ஆகிய இரண்டையும் திவாகர பிங்கலங்கள் கூறின. ஏனையவற்றைத் திவாகரம், பிங்கலம், பாரதிதீபம் மூன்றும் கூறின. சூடாமணி நிகண்டு இவை பற்றி யாதும் கூறிற்றிலது. பூச்சூட்டலைப் பாரதி தீபமும் அம்புலியைச் சூடாமணி நிகண்டும் உரைத்தன.

வைப்புமுறை

எல்லா நிகண்டுகளும் முதற்பருவமாகக் காப்புப்பருவத்தைக் கூறுவது போல இறுதிப்பருவமாக ஊசல் பருவத்தையே பேசுகின்றன. இந்த இயல்பினை ஆண்பாற் பிள்ளைத்தமிழ் அமைப்பில் காணவியலாது.

ஒன்றோடொன்று தொடர்புடைய சில பருவங்களை ஒன்றன்பின் ஒன்றாக அமைத்திருத்தல் கருதற்பாலது. குழமணம் மொழிதலும் காமன் நோன்பும் பெண்பாலாரின் திருமணச் சிந்தனையின் தொடக்கத்தையும் அதனை நாடுதலையும் உணர்த்துமாறு இணைத்து விளங்குகின்றன. அம்மானை, கழங்கு, பந்தாடல் என்ற நிறுத்த முறை ஒரே மாதிரியான விளையாட்டாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

பெண்பாற் பிள்ளைத் தமிழ்
நிகண்டுகள் பருவ வைப்பு முறை

பருவப்பெயர்கள்	திவாகரம்	பிங்கலம்	பாரதிதீபம்	சூடாமணி
1. தெய்வக்காப்பு	1	1	1	1
2. செங்கீரை	2	2	2	2
3. தால்	3	5	3	3
4. இன்னமுதூட்டல்	4	4	3	-
5. சப்பாணி	5	6	4	4
6. முத்தம்	6	7	5	5
7. வருகை	7	8	6	6
8. குழமணம் மொழிதல்	8	9	-	-
9. காமன் நோன்பு	9	10	8	-
10. பனிநீர்தோய்தல்/நீராடல்	10	11	9	-

11. பாவையாடல்/ பரவையாடல், கடலாடல்	11	12	10	-
12. சிறுசோறடுதல்	12	16	-	-
13. சிற்றிழைத்தல்	13	17	11	-
14. ஊசலாட்டு	14	18	12	10
15. கூறுதல் கற்றல்	-	3	-	-
16. அம்மானை	-	13	-	9
17. கழங்கு	-	14	-	8
18. பந்தாடல்	-	15	-	-
19. பூச்சூட்டல்	-	-	7	-
20. அம்புலி	-	-	-	7

பாட்டியல் தரும் அமைப்பு

இந்திரகாளியமும் பன்னிரு பாட்டியலும்

இந்திரகாளியம் இயற்றிய இந்திரகாளியார் ஆண், பெண் ஆகிய இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் தனித்தனிப்பருவப் பெயர்களைக் கூறிப் பருவ எண்ணிக்கையைச் சொல்லவில்லை. திவாகர பிங்கல நிகண்டுகள் பெண்பாற்கு உரியனவாகச் சுட்டும் குழமகன், ஊசல் ஆகிய இரண்டும் இந்திரகாளியம் குறிக்கும் பருவங்களில் உள்ளன. அவை பெண்பாற்குரியன என்று பிற நூல்களால் அறியப்பெறும்.

பன்னிருபாட்டியலில் உள்ள பரணர் நூற்பாக்கள் பெண்பாற்பிள்ளைத் தமிழுக்குக் காப்பு முதலிய ஏழு பருவங்களை உடன்பட்டுச் சிற்றில், சிறுதேர், சிறுபறை ஆகியவற்றை ஒதுக்கும்.[121] இவ்வேழினைத் தொடர்ந்து சிற்றில் இழைத்தல், சிறுசோறாக்கல், குழமகன், ஊசல், காமன் நோன்பு ஆகிய திவாகர பிங்கலங்கள் கூறிய ஐந்தினைப் பரணர் சேர்த்தார்.[122] இவர் பெண்பாலுக்கு ஆண்பாலினும் இரண்டு பருவங்கள் கூட்டிப் பன்னிரண்டு பருவங்கள் அமைத்தார்.

வெண்பாப்பாட்டியலும் நவநீதப்பாட்டியலும்

வெண்பாப்பாட்டியல் முற்கூறிய நூல்களைப் போல ஆண்பாலுக் குரியவற்றில் ஏழு பருவங்களைப் பெண்பாலுக்கு உடன்படுகிறது. சிறுபறை முதலிய நீக்கற்குரிய பருவங்களைச் சொல்லிச் சேர்த்தற்குரிய பருவங்களை உரைக்கவில்லை.

பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குப் பருவம் ஏழு என்பதா? பத்து என்பதா? இந்நூல் பிள்ளைத்தமிழுக்குப் பருவம் பத்து எனப் பொதுநிலையில் கூறியதால் பெண்பாற்பிள்ளைத் தமிழுக்கும் இவ்விதி பொருந்தும்.[123] பிள்ளைத்தமிழ் பற்றிய மூன்று வெண்பாக்களாலும் பெண் பிள்ளைத்தமிழுக்குரிய பிற்பருவங்களை அறிய முடியவில்லை. இந்நூல் தோன்றிய போது பெண்பாற்பிள்ளைத்தமிழ் நூல்கள் வழக்கில் இன்மையால் பருவங்களைச் சுட்டவில்லை. இந்நூலுக்கு உரையெழுதிய கொ. இராமலிங்கத்தம்பிரான்.

இவ்வேழுவுடன், கழங்கு, அம்மனை ஊசல் என்னும்
மூன்றையும் கூட்டிப் பத்தாகப் பாடுவாருமுளர்[124]

என உரையில் எழுதுவர். இது மரபுவழிக்கருத்தன்றி வெண்பாப்பாட்டியலின் கருத்தன்று. வெண்பாப்பாட்டியலைப் போன்றே நவநீதப்பாட்டியலும் நீக்க வேண்டியவற்றைக் கூறிச் சேர்க்க வேண்டியவற்றைச் சுட்டவில்லை. இந்நூலின் பழையவுரைகளிலும் மூன்று பருவங்கள் எவை என்ற குறிப்பு இல்லை.[125] இவை பெண்ணுக்குப் பிள்ளைத்தமிழ் பாடுக என்ற கருத்தைத் தெரிவிக்கின்றன. ஆனால் பருவங்கள் பற்றிச் சொல்லவில்லை.

பிற்கால இலக்கணங்கள்

பிற்காலத்தெழுந்த பிரபந்த மரபியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், பிரபந்ததீபம், பிரபந்த தீபிகை ஆகிய ஏழுநூல்கள் நீக்கற்குரிய மூன்று பருவங்களையும் அவற்றுக்கீடாகச் சேர்த்தற்குரிய மூன்று பருவங்களையும் சுட்டுகின்றன. சேர்த்தற்குரியவை கழங்கு, அம்மானை, ஊசல் என அந்நூல்கள் உரைக்கின்றன.

பிரபந்தத் திரட்டு

பிரபந்தத்திரட்டு கழங்கு, ஊசல் என்ற பருவங்களுடன் நீராடலைப் புதிதாக இணைத்து அம்மானைப் பருவத்தை நீக்கிவிட்டது.[126]

முதல் ஏழு பருவங்கள் ஆண்பாற் பிள்ளைத்தமிழில் அமைந்தவாறே பெண்பாற் பிள்ளைத்தமிழிலும் உண்டு. இறுதிப் பருவங்களில் வேற்றுமை இருபாலாரைப் பாடும் நூல்களிடைக் காணப்படுகிறது. இந்திரகாளியாரும் பரணரும் நூலுக்குப் பத்துக்கு மிகுந்த பருவ எண்ணிக்கையைக் கூறுவர். பிறர் பத்துப் பருவங்களே வகுப்பர். கழங்கு, அம்மானை, ஊசல் மூன்று பருவங்கள் எல்லாராலும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

பெண்பாற் பிள்ளைத்தமிழ்

பாட்டியல் பருவ அமைப்பு

பருவப்பெயர்கள்	இந்திர காளியம்	பன்னிரு பாட்டியல் பரணர்	வெண் பாப் பாட்டியல்	நவநீதப் பாட்டியல்	பிரபந்த மரபியல்	சிதம்பரப் பாட்டியல் இலக்கண விளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், சதுகராதி, பிரபந்ததீபம், பிரபந்த தீபிகை, முத்துவீரியம், சுவாமி நாதம்	பிரபந்தத் திரட்டு
1	2	3	4	5	6	7	8
1. பிறப்பு	1						
2. ஓகை	2						
3. காப்பு	3	1	1	1	1	1	1
4. வளர்ச்சி	4						
5. அச்சமுறுத்தல்	5						
6. செங்கீரை	6	2	3	2	2	2	2
7. தால்	7	3	2	3	3	3	3
8. சப்பாணி	8	4	4	4	4	4	4
9. முத்தம்	9	5	5	5	5	5	5
10. வருகை, வாரானை	10	6	6	6	6	6	6
11. அம்புலி	11	7	7	7	7	7	7
12. சிற்றிலிழைத்தல்	12	8					

1.	2	3	4	5	6	7	8
13. குழமகன்		13	10				
14. ஊசல்	14	11			10	10	10
15. தொழிற்குத்தகுவன கூறல்		15					
16. சிறுசோறாக்கல்		9					
17. காமன்நோன்பு		12					
18. அம்மானை					9	9	
19. கழங்கு					8	8	9
20. நீராடல்							10

இலக்கியம் காட்டும் அமைப்பு

நிகண்டுகளும் பாட்டியல்களும் இருபாற் பிள்ளைத்தமிழின் அமைப்பினை விளக்குகின்றன. இந்திரகாளியம் பால் வேற்றுமை இன்றிப் பருவங்களை எடுத்துரைப்பது நோக்கத்தக்கது. ஆண்பாற் பிள்ளைத்தமிழ் தோன்றிய பின்பே பெண்பாற் பிள்ளைத்தமிழ் தோன்றியது. சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் ஆண், பெண் இருபாலாரையும் பிள்ளையாகக் கருதிப் பிள்ளைத்தமிழ்ப் பருவக்கூறுகள் அமைய நூல் யாத்தார். இருபாலார்க்கும் பிள்ளைத்தமிழ்க் கூறுகள் அமைத்துப் பாடிய முதற் பெரும்புலவர் சேக்கிழார் என்று போற்றல் வேண்டும். பெண்ணுக்கும் பிள்ளைத்தமிழ் பாடுக என பிற்காலத்தாருக்குக் கருத்துப் பிறக்கச் சேக்கிழாரே வழி காட்டியாவர்.

மானிட மகளிர்க்குக் கழங்கு, அம்மானை முதலிய பிள்ளைத்தமிழ்ப் பருவக் கூறுகளைச் சேக்கிழார் பாடியிருந்தும் பெண்மக்கள் பற்றிப் பிள்ளைத் தமிழ் நூல்கள் பெருகத் தோன்றில. அக்கால மன்பதையில் பெண்ணுக்குத் தனி உரிமையின்மை, மகளிர் மீது ஆடவரின் மேலாண்மை, பொருள் தேடும் உரிமையும் செலவழிக்கும் உரிமையும் உடைய பொருளியல் காரணங்கள், புரவலர்களாக ஆடவர் விளங்கியதுபோல மகளிர் விளங்காமை ஆகிய மன்பதைக் காரணங்கள், மகளிரைப் பிள்ளையாக்கிப் பெண்பாற் பிள்ளைத்தமிழ் பல தோன்ற வழிசெய்தில.

புகழ்பெற்ற உரையாசிரியரான நச்சினார்க்கினியார் மகளிரிலும் ஆடவரே பெரிதும் பாடுதற்குரியர் என்பதைக் கீழ்க்காண்டாங்கு விளக்குவர்.

> **இத்துணைப் பகுதியென்று இரண்டிறந்தன எனக் கூறாது வாளாதே பகுதியென்றமையில் தேவரும் மக்களும் என இரண்டே யாயிற்று, அத்தேவருள் பெண் தெய்வங் கொடிநிலை கந்தழி (88) என்புழி அடங்கும். மக்களுட் பெண்பால் பாடுதல் சிறப்பின்மையிற் செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ (புறம் - 3) என்றார் போலச் சிறுபான்மை ஆண்மக்களோடு படுத்துப் பாடுப.** [127]

இத்தகைய மனப்போக்கினாலேயே மகளிரைப் பலரும் தலைவராக்கிப் பிள்ளைத் தமிழ் பாடவில்லை. ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களைச் சுட்டும் இவ்வுரையாசிரியர் பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் பற்றி ஏதும் இயம்பிலர்.[128]

பிற்காலத்தில் தோன்றிய பெண்பாற் பிள்ளைத்தமிழ் எல்லாம் சிவபெருமான் இடமருங்கு உறையும் அம்மையைப் போற்றிப் பாடின. சிவபெருமானுக்குப் பிள்ளைத்தமிழ் இல்லாத குறையைப் புலவர்கள் இங்ஙனம் பாடித் தீர்த்துக் கொண்டனர்.

பருவ வைப்புமுறை

பருவப்பெயர்கள்	திவாகரம்	இந்திர காளியம்	பன்னிரு பாட்டியல் பரணர்	பிங்கலம்	வெண் பாப் பாட்டியல்	நவநீதப் பாட்டியல்	பாரதி தீபம்	சூடா மணி கி.பி. 1600	பிரபந்த மரபியல்	சிதம்பரப் பாட்டியல் இலக்கண விளக்கம், தொன் னூல் விளக்கம், சதுர கராதி பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம், முத்து வீரியம், சுவாமி நாதம்	பிரபந்தத் திரட்டு
1	2	3	4	5	6	7	8	9	10	11	12
1. தெய்வக்காப்பு / காப்பு	1	3	1	1	1	1	1	1	1	1	1
2. செங்கீரை	2	6	2	2	3	2	2	2	2	2	2
3. தால்	3	7	3	5	2	3	3	3	3	3	3

1	2	3	4	5	6	7	8	9	10	11	12
4. இன்னமுதூட்டல்	4			4			3				
5. சப்பாணி	5	8	4	6	4	4	4	4	4	4	4
6. முத்தம்	6	9	5	7	5	5	5	5	5	5	5
7. வாரானை, வருகை	7	10	6	8	6	6	6	6	6	6	
8. குழமணம் மொழிதல் குழமகன்	8	13	10	9							
9. காமன் நோண்பு	9		12	10			8				
10. பனிநீர் தோய்தல் நீராடல்	10			11			9				
11. பாவையாடல் பரவையாடல்	11			12			10				
12. சிறுசோறாடுதல்	12		9	16							
13. சிற்றிலிழைத்தல்	13	12	8	17			11				
14. ஊசலாட்டு, பொன்னூசல்	14	14	11	18			12	10	10	10	10
15. கூறுதல் கற்றல்				3							
16. அம்மானை				13				8	8	8	
17. கழங்கு				14				9	9	9	9
18. பந்தாடல்				15							
19. பூச்சூட்டல்							7				
20. அம்புலி		11	7		7	7		7	7	7	7
21. பிறப்பு		1									
22. ஒகை		2									
23. வளர்ச்சி		4									
24. அச்சமுறுத்தல்		5									
25. தொழிற்குத் தகுவன கூறல்		15									

ஆண்பாற் பிள்ளைத்தமிழில் முதற்கண் தோன்றியது குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ், ஆனால் பெண்பாற் பிள்ளைத்தமிழில் எழுந்த முதல் நூல் மக்களில் ஒருவரைப் பாடியதன்று. பெண் தெய்வமான மதுரை மீனாட்சியம்மையைக் குமரகுருபரர் பாடியதாகும். இதற்குப்பின் பல பெண்பாற் பிள்ளைத்தமிழ்கள் தோன்றின. பெண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களைக் கீழ்க்கண்ட இருவகைகளில் பிரித்தாராய வேண்டும்.

1. *மக்கள் பிள்ளைத்தமிழ்*
2. *தெய்வங்கள் பிள்ளைத்தமிழ்*

மக்கள் பிள்ளைத்தமிழ்கள்

பெண்மக்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு எழுந்த பிள்ளைத்தமிழ் மங்கையர்க்கரசியார் பிள்ளைத்தமிழும் வாலம் பிள்ளைத்தமிழும் ஆகிய இரண்டேயாம். இவை இந்நூற்றாண்டில் எழுந்தவை. மங்கையர்க்கரசியாரும் நாயன்மாருள் இடம்பெற்றுத் தெய்வமாகத் திகழ்கிறார். ஆதலால் பெண்ணைப் பாடிய பிள்ளைத்தமிழ் ஒன்றேயாம்.

அடிப்படை அமைப்பு

மக்களைப் பாடிய பெண்பாற் பிள்ளைத்தமிழ்களில் பத்துப் பருவங்கள் உள. மங்கையர்க்கரசியார் பிள்ளைத்தமிழ், பருவத்துக்குப் பத்துப்பாக்களாகவும் வாலம் பிள்ளைத்தமிழ், பருவத்துக்கொரு பாட்டாகவும் விளங்குகின்றன. ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத்தமிழ் தெய்வங்கள் பிள்ளைத்தமிழில் ஆராயப்பெறும்.

1	2	3	4	5
காப்பு	செங்கீரை	தால்	சப்பாணி	முத்தம்
6	7	8	9	10
வருகை	அம்புலி	அம்மானை	நீராடல்	ஊசல்

பெண்பாற் பிள்ளைத்தமிழில் முரண் அமைப்புகள் காணப்படவில்லை.

தெய்வங்கள் பிள்ளைத்தமிழ்

அம்மை

சிவபெருமானோடு வீற்றிருக்கும் அம்மை இடந்தொறும் வெவ்வேறு பெயர்களால் திகழ்கின்றாள். அதனால் அம்மையைப் பாடிய நூல்கள் பெயர்களால் பலவாகும். இலக்கண நூல்கள் பலவும் சுட்டும் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி,

முத்தம், வருகை, அம்புலி என்ற ஏழு பருவ வரிசை அம்மை பிள்ளைத் தமிழ்களில் அமைந்திருக்கின்றன.

முதல் பெண்பாற் பிள்ளைத்தமிழான மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் அம்மானை, நீராடல், ஊசல் எனப் பின்மூன்று பருவங்கள் அமையவே, பிற்கால நூல்களும் இம்முறையைப் பின்பற்றின. சிவயோகநாயகி பிள்ளைத்தமிழில் நீராடல் அமையாது. கழங்கு என்ற பருவம் பாட்டியல் மரபு தழுவி அமைகிறது. கழங்கு, அம்மானை ஊசல் என இறுதி மூன்று பருவங்கள் அமைகின்றன. புதுவை திரிபுரசுந்தரி பிள்ளைத்தமிழில் கழங்கு என்றோ அம்மானை என்றோ பருவம் அமையாது, சிற்றில், எனப் புதிய பருவம் காணப்படுகிறது. வயிரவன்கோயில் வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ் நீராடல் என்ற பருவத்தை நீக்கிச் சிற்றிலைக் கோத்துள்ளது. தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழில் சிற்றில், அம்மானை பந்தாடல், ஊசல், நீராடல் என ஐந்து பருவங்கள் உள.

பெண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களில் இறுதி மூன்று பருவங்களில்

1) அம்மானை, நீராடல், ஊசல்
2) கழங்கு, அம்மானை, பொன்னூசல்
3) சிற்றில், நீராடல், பொன்னூசல்
4) அம்மானை, சிற்றில், ஊசல்

என நான்கு வகையான வைப்பு முறைகள் உள்ளன.

தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழில் சிற்றில், பந்தாடல் என இரு பருவங்கள் மிகுந்துள்ளன. ஊசல் இறுதிப் பருவமாக அமையாத ஒரே நூல் இப்பிள்ளைத்தமிழே

வள்ளி தேவசேனை

திருச்செந்தூர் வள்ளிநாயகி பிள்ளைத்தமிழில் கழங்கு, அம்மானை, ஊசல் எனப் பருவங்கள் இருக்கின்றன. சிவயோகநாயகி பிள்ளைத்தமிழும் இவ்வமைப்பினது. தணிகைக் குமரன் மனைவியரான வள்ளி, தேவசேனையைப் பாடிய தணிகைக் குமரன் தேவியர் பிள்ளைத்தமிழிலும் இம்முறையில் பருவங்களை ஆசிரியர் நிறுத்தியுள்ளார்.

முத்துமாரி

மாரியம்மனைப் பாடிய பிள்ளைத்தமிழ்களில் அம்மானை, நீராடல், ஊசல் என மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழைப் போலப் பருவங்கள்

வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மாரியநல்லூர் பொன்னியம்மன் பிள்ளைத்தமிழில் தால், சப்பாணி, செங்கீரை எனப் பருவங்கள் மாறியிருக்கின்றன. நூலின் முற்பகுதியில் மாற்றம் பெற்ற ஒரே நூல் இஃது என்பது குறிப்பிடத்தக்கது.

வைணவம்

அரியக்குடி அலர்மேல்மங்கை பிள்ளைத்தமிழின் பருவங்களில் மாற்றமில்லை.

ஸ்ரீஆண்டாள் பிள்ளைத்தமிழின் பதிப்பாசிரியர் சிற்றில், சிறுசோறு, பொன்னூசல், காமன் நோன்பு என நான்கு பருவங்களை அமைப்பர். சிறுசோற்றுப்பருவம் எனப் பதிப்பிக்கப் பெற்ற ஐந்து பாடல்களும் சிற்றில் பருவத்திற்குள் அடங்கும். சிற்றில் பருவம் என்பது இந்நூலின் எட்டாவது பருவம் என்பது ஆய்வாளர் துணிபு.

கிறித்துவம்

கிறித்துவ சமயக் கன்னிமரி பிள்ளைத்தமிழ், வேளைமரியன்னை பிள்ளைத்தமிழ் ஆகிய இரண்டின் பிற்பகுதி அமைப்பு ஒத்துள்ளது. முற்பகுதியில் வேளைமரியன்னை பிள்ளைத்தமிழில் தால், செங்கீரை, எனப் பருவமுறை மாறியுள்ளது.

இசுலாமியம்

ஆயிஷா நாச்சியார் பிள்ளைத்தமிழில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போலவே பருவங்கள் விளங்குகின்றன. வேறு புதுமை இல்லை. இசுலாமியப் பெண்பாற் பிள்ளைத்தமிழ்கள் பல இருப்பினும் கிடைப்பன மிகச் சிலவே.

பிள்ளைத்தமிழ் முன்னோடிகள் காட்டும் அமைப்பு

திருத்தொண்டர் புராணம்

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாடியது போல ஆழ்வார்களும் நாயன்மார்களும் பெண்ணைக் குழந்தையாக்கிப் பாடவில்லை.

ஆணுக்குப் பிள்ளைத்தமிழ் பாடுவது போலப் பெண்ணுக்குப் பிள்ளைத்தமிழ் பாடிய முதல்வர் சேக்கிழார். பரவையார், மானக்கஞ்சாறார் மகள், புனிதவதியார், பூம்பாவை ஆகியோரைப் பாடும்போது இப்புலவர் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களை அமைக்கிறார்.

பிறப்பு, பெயரிடல், காப்பு, உவகை, தளர்நடை, கழங்கு, பந்து, அம்மானை, ஊசல்[129] என்பனவற்றைச் சேக்கிழார் பரவையார் பிள்ளைமைப் பருவத்தில் பாடுகிறார். இவர் மானக்கஞ்சாறர் மகள் பிறப்பு, பிறப்பால் எழும் உவகை, காப்பு, சிற்றிலிழைத்தல், கழல்[130] எனப் பருவங்களை அமைக்கிறார். புனிதவதியார் பிறப்பினையும், செங்கீரையாடியதையும், உறவினர் உவகை அடைந்ததையும், சிற்றிலிழைத்தலையும்[131] சேக்கிழார் கூறுகிறார். அவர் பூம்பாவை வரலாற்றில் பிறப்பு, உவகை, காப்பு, பெயரிடல், தளர்நடை, கழல், அம்மானை, கந்துகம், சிற்றிலிழைத்தல், சிறுசோறாக்கல், மணியூசல்[132] என்ற பருவங்களை வகுக்கிறார்.

ஆதலால் சேக்கிழார் அவதாரம், பெயரிடல், உவகை, காப்பு, செங்கீரை, தளர்நடை, சிற்றில் இழைத்தல், கழங்கு, அம்மானை, பந்து, கந்துகம், சிறுசோறு, மணியூசல் ஆகிய பருவங்களைப் பெண்பாற்கு அமைத்திருக்கிறார். சேக்கிழார், நங்கையர் நால்வரைப் பாடியவற்றை ஒருங்கிணைத்தால் இப்பருவ வரிசை அமையும்.

மரபுத் தொடர்ச்சி

பரஞ்சோதி முனிவர், தடாதகைப் பிராட்டியார் திருஅவதாரப் படலத்தில் பிறப்பு, தளர்நடை, முத்தம், உவகை, சிற்றில், சிறுசோறு, பாவை, கழங்கு, பந்து, அம்மனை, ஊசல் ஆகிய பருவங்கள் அமையத் தடாதகைப் பிராட்டியார் பிள்ளைமையைப் பாடுவர்.[133]

சிவப்பிரகாசர், மாயையின் உற்பத்திகதியில் பிறப்பு, உவகை, பெயரிடல், நீராட்டல், காப்பு, தால், செங்கீரை, அம்புலி என்ற பருவங்களையும் அக்கமாதேவி உற்பத்திகதியில் பிறப்பு, உவகை, காப்பு, பெயரிடல் என்ற பருவங்களையும் பாடுவர்.[134] இதனால் பிறப்பு, உவகை, காப்பு, பெயரிடல், நீராட்டல், தால், செங்கீரை, அம்புலி என்ற வரிசை முறையை அமைக்க முடியும்.

கித்தேரியம்மாள் அம்மானையும்[135] கும்பகோணபுராணமும்[136] காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி என ஏழு பருவங்களைக் கூறும். இறுதி மூன்று பருவங்கள் நீராடல், அம்மானை, ஊசல் எனக் கித்தேரியம்மாள் அம்மானையில் இடம்பெறும். இதே பருவங்களைக் கும்பகோண புராணம் அம்மானை, நீராடல், ஊசல் என முறைமாற்றி அமைத்துள்ளது. திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை தான் பாடிய பெண்பாற் பிள்ளைத்தமிழ்களில் அமைத்த வரிசையைப் புராணத்திலும் அமைத்தார். இந்நூற்றாண்டில் எழுந்த தேவி அலங்காரத்தில்[137] அமைந்த பிள்ளைத்தமிழில் கும்பகோணபுராணத்திலுள்ள முறையிலேயே பருவங்கள் உள.

பருவ வைப்புமுறை

பருவப்பெயர்கள்	திருத்தொண்டர் புராணம்				திருவிளையாடல் தடாதகைப் பிராட்டி திருமணம்	பிரபுலிங்க லீலை		சித்தேரியம்மன் அம்மானை	கும்பகோண புராணம்	தேனி அலங்காரம்
	பூம்பாவை	பரவை	மானக் கஞ்சாறர் மகள்	புனித வதியார்		மாயை	அக்கமா தேவி			
1	2	3	4	5	6	7	8	9	10	11
1. அவதராம் / பிறப்பு	1	1	1	1	1	1	1	1	1	1
2. உவகை	2	4	2	3	3	2	2			
3. காப்பு	3	3	3			5	3	1	1	1
4. பெயரிடல்	4	2				3	4			
5. தளர்நடை	5	5		2						
6. கழங்கு, கழல்	6	6	5	7						
7. அம்மனை அம்மானை	7	8		9				9	8	8
8. கந்துகம்	8									
9. சிற்றிலிழைத்தல்	9		4	4	4					
10. சிறுசோறு	10				5					
11. மணியூசல்	11	9			10			10	10	10

1	2	3	4	5	6	7	8	9	10	11
12. பந்து		7			8					
13. செங்கீரை				2		7		2	2	2
14. பாவை					6					
15. நீராட்டல்						4		8	9	9
16. தால்						6		3	3	3
17. அம்புலி						8		7	7	7
18. சப்பாணி								4	4	4
19. முத்தம்								5	5	5
20. வருகை								6	6	6

பருவ வைப்பு முறை

பொதுப்பருவங்கள்

ஆண், பெண் ஆகிய இருபாலுக்கும் பொதுவான பருவங்களை நிகண்டுகளும் பாட்டியல்களும் விதிக்கின்றன. திவாகரம், பிங்கலம், பாரதிதீபம் மூன்றும் ஓராண்டு வயதுக்கு உட்பட்ட பருவங்கள் பொதுவானவை என்று இயம்புகின்றன. ஆனால் சூடாமணி வயது அடிப்படையில் பருவங்களைப் பிரித்துக் காட்டவில்லை.

பன்னிருபாட்டியலில் பரணரும் வயது அடிப்படையில் பருவங்களைச் சுட்டாமல் கோக்க வேண்டிய பருவங்கள், நீக்க வேண்டிய பருவங்கள் என இருபாற் பிள்ளைத்தமிழின் அமைப்பை விளக்குகிறார். எஞ்சிய நூல்களும் இம்முறையிலேயே கருத்தை உரைக்கின்றன.[138]

காலத்தால் முந்திய திவாகர பிங்கலங்கள் வயது அடிப்படையில் பருவங்களை வேறுபடுத்தின. பின்னூல்கள் வயது அடிப்படை விடுத்து ஏழு பருவங்களைப் பொதுப்பருவமாகவும் மூன்று பருவங்களைத் தனித் தனிச்சிறப்புப் பருவங்களாகவும் அமைத்துவிடுகின்றன.

பிறப்பு, ஒகை, காப்பு, வளர்ச்சி, அச்சமுறுத்தல், செங்கீரை, கூறுதல்கற்றல், தால், இன்னமுதூட்டல், சப்பாணி, முத்தம், வாரானை என்பன இருபால் நூலுக்கும் ஒத்த பருவங்கள் ஆகும். ஆண், பெண் இருபால் நூலுக்கும் இவை பாடுதற்குரியன. பிறப்பு, ஒகை, வளர்ச்சி, அச்சமுறுத்தல், கூறுதல்கற்றல், இன்னமுதூட்டல் ஆகியன ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களில் இன்மைபோலப் பெண்பாற்பிள்ளைத்தமிழ் இலக்கியங்களிலும் இல்லை. ஆதலால் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை என்ற ஆறு பருவங்களே இருபாற் பிள்ளைத் தமிழ்களிலும் பொதுப் பருவங்களாக இடம் பெறுகின்றன.

இலக்கணநூல்கள், செங்கீரை, தால் எனவும் தால், செங்கீரை எனவும் இருவகையாக அமையும் எனக் கூறின. எவ்வகை அமைப்பிலும் கட்டுப்படாமல் மாரிய நல்லூர் பொன்னியம்மன் பிள்ளைத்தமிழ் காப்பு, தால், சப்பாணி, செங்கீரை என்ற முறையில் அமைந்திருக்கிறது. தாலை முன்னமைத்தல் பெரியாழ்வார் திருமொழியில் உண்டு.[139] இம்முறை மாற்றம் வேறு பிள்ளைத்தமிழ் நூல்களில் காணமுடியவில்லை.

எந்த இலக்கிய வகையாயினும் ஆணுக்கென ஒரு வடிவமும் பெண்ணுக்கென ஒரு வடிவமும் எனத் தனித்தனி வடிவங்கள் விதிப்பதில்லை. எப்பாலாரைப் பாடினும் பாடுபொருள் மாறுமேயின்றி இலக்கிய அமைப்பு

மாறுவதில்லை. ஆனால் பிள்ளைத் தமிழில் ஆணைப் பாடின் ஓர் அமைப்பும் பெண்ணைப் பாடின் மற்றோர் அமைப்பும் காணப்படுகிறது. அம்மாற்றம் நூலின் பிற்பகுதியில் முழுமையாக வெளிப்படுகின்றது.

இருபாற்கும் உரிய பருவங்கள் பத்து ; அவற்றில் இரண்டுக்கும் ஒத்த பருவங்கள் ஏழு. இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் ஒத்த பருவங்கள் ஏன்? பிள்ளைத்தமிழின் பாட்டுடைத் தலைமை, முதிராத குழந்தைகளுக்குரியது. உயர்திணை மக்கள் குழவியே இச்சிற்றிலக்கிய வகையில் பாடப்பட்டுள்ளது. எந்த அஃறிணை உயிரையும் குழந்தையாகப் போற்றிப் பாடி ஒரு பிள்ளைத்தமிழ் எழவில்லை.[140] ஆண், பெண் என்ற இரண்டு அடிப்படையில் எல்லா நூல்களும் அடங்கும்.

பிள்ளைத்தமிழ் என்ற பெயரே ஆண், பெண் என்ற வேற்றுமை காட்டாமல் பொதுநிலையில் திகழ்கிறது. கலம்பக நூல்கள் ஊரையும், மன்னரையும் பாடுகின்றன. பெண்களைத் தலைவராக்கிப் பாடிய கலம்பகங்கள் இல்லை. கலம்பகம் போலக் கோவையிலும் பெண்ணைப் பாட்டுடைத் தலைவராக்கிப் பாடிய நூல்கள் இல்லை.[141] உலாவிலும் இதே நிலைதான். கோவை, கலம்பகம், உலா ஆகியவற்றின் பாட்டுடைத் தலைவராகப் பெண்ணைப் பாடிய வழக்கில்லை. பரணி பெண்ணுக்குப் பாடுவது, பெண்மைப் பண்புக்கு முரணாகும். ஆதலால் சிற்றிலக்கிய வகைகளில் சிறப்பான பலவற்றிலும் ஆணையும் பெண்ணையும் ஒத்தநிலையில் போற்றும் சால்பினது பிள்ளைத்தமிழ்.

பாட்டுடைத் தலைவர் ஆண், பெண் என மாறுவதால் பிள்ளைத்தமிழின் அமைப்பிலும் வேற்றுமைகள் உள்ளன. ஆண்மை ஆற்றலின் அறிகுறியாய் வீரத்தாலும் கொடையாலும் விளக்கம் எய்தும். பெண் அன்பின் அறிகுறியாய் ஆக்கலானும் அருளானும் ஒளிரும். இங்ஙனம் ஆண்மையும் பெண்மையும் வடிவாலும் போக்காலும் முரண்பட்டவை. ஆனால் இம்முரண்பாட்டைப் பிள்ளைமைப் பருவத்தில் காணமுடிவதில்லை. உடலும் உள்ளமும் வளர வளர இருபாலாரையும் வேறுபடுத்திக் காணும் காட்சி வளரும்.

குழவி நிலையில் பால் வேறுபாடு பாராட்டாமையையும் பால் வேறுபாடு கருதாமையையும் தொடித்தலை விழுத்தண்டினார், பெண்களொடு மணற்பாவைக்குப் பூச்சூட்டியும் கைகோத்துக் கயத்தில் விளையாடியும் விளங்கிய

ஒளித்துச் செய்யும் மாயம் அறியாத ஆயம் எனப் புறநானூற்றில் சித்தரிக்கிறார்[142] இது நல்லது கெட்டது அறியாப் பிள்ளமைப் பண்பினைப் புலப்படுத்துகிறது.

குழந்தைச் செயல்களில் ஆண், பெண் வேற்றுமை பாராட்டுவதில்லை. பெண்ணை ஆணாகவும் ஆணைப் பெண்ணாகவும் அழகு செய்து மகிழ்வது உலகியல். பேதை வயதினரான பெண்களை மகன் என்று கூறும் மரபினை இளம்பூரணரும் சேனாவரையரும்[143] எடுத்துக் காட்டுவர். குழந்தை உளவியல் வல்லுநர்களும், பால்வேற்றுமையற்ற குழந்தைகளின் இயல்பை அடையாளம் கண்டிருக்கின்றனர்.

> **சிறுகுழந்தை ஒன்று மற்றக் குழந்தைகளோடு பழகத் தொடங்கும் போது ஆண், பெண் வேற்றுமை அநேகமாகக் கவனிக்கப்படுவதில்லை. சிறுவர், சிறுமியர் சேர்ந்து விளையாடுகிறார்கள். ஒரே வகை விளையாட்டுகளையும் இருவரும் விளையாடுகிறார்கள்.[144]**

இவ்வாறு குழந்தை உளவியலார் குறிப்பர். இதனால்தான் ஆண், பெண் என்னும் இருபாற்குழந்தைகளுக்கும் இலக்கியத்தில் ஒரே பருவங்களைப் புலவர்கள் கண்டு அமைத்தனர்.

பாட்டுடைத் தலைவனையோ தலைவியையோ கடவுளர் காக்குமாறு வேண்டுதல் காப்புப் பருவம். தாலப்பருவத்தில் தாய் குழந்தைக்குத் தாலாட்டுகிறாள். இவற்றில் குழந்தைக்கு நேரடித் தொடர்பில்லை. குழந்தையை முன்னிலைப்படுத்திப் பிறர் பேசுகின்றனர். செங்கீரை, சப்பாணி, வருகை, முத்தம் ஆகியன குழந்தையின் செயல்கள். இப்பருவங்கள் ஆண், பெண் ஆகிய இருபாற்கும் பொதுவானவை. எனவே தமிழ்ப் புலவர்கள் பிள்ளைகளின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கி இருபாற்கும் பொதுவான பருவங்களை வகுத்திருக்கின்றனர்.

மேற்கூறிய ஆறுபருவங்களும் அன்றி இருபாற்கும் பொதுவாகப் பிள்ளைத்தமிழில் விளங்கும் பருவம், அம்புலிப்பருவம். திவாகர பிங்கலங்கள் இதனை ஆண்பாலுக்கு மட்டும் வகுத்தன. பெண்பாலுக்கு வகுத்தில. பிற்காலச் சோழர் காலத்தில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர், தாம் பாடிய பிள்ளைத்தமிழில் இப்பருவத்தைப் பாடினார். திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் ஆண் பெண் இருவர்க்கும் இப்பருவக் கருத்துப் பொருந்தப் பாடல் பாடிலர்.

பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு இப்பருவத்தை நிறுத்தாமைக்குரிய காரணம் ஆராய்தற்பாலது. தமிழ் இலக்கியங்கள் அம்புலி காட்டல் பற்றிச் சுட்டுகின்றன. நக்கீரர். நெடுநல்வாடையில் அம்புலியை வாழ்க்கைத் துணையொடு

பாடுவர்.[145] இங்கு அம்புலி செல்வன் என அன்னீற்றால் குறிக்கப் பெறுவன்.[146] இளங்கோவடிகள் சந்திரனைத் திங்களஞ்செல்வன் எனச் சொல்லுவர். ஆகையால் திங்களை ஆணாகக் கருதிப் பெண்ணொடு விளையாட வருமாறு புலவர்கள் அழைத்திலர். இது தமிழர் கற்பியல் கொள்கைக்கு மாறானது என்று கருதி விடுத்தனர். சங்க இலக்கியங்களும் ஆண்மகனொடு விளையாட அம்புலியை அழைத்தலைப்பாடும்.[147]

அம்புலிப்பருவம், பெண்பாற்கும் உரியதென விதந்து விளம்புவது பன்னிரு பாட்டியல்-பரணர் நூற்பா ஒன்றேயாகும். பிற்காலப் புலவர்கள் இவர் கருத்தைப் பின்பற்றியும் உலகியலில் பெண் குழந்தைகளொடும் விளையாட அம்புலியை அழைப்பதை நோக்கியும் இப்பருவத்தைப் பெண்பாற்கும் உரியதாகக் கொண்டனர்.

சிறப்புப் பருவங்கள்

பத்துப் பருவத்தில் ஏழு பருவங்கள் ஆண், பெண் இருபாலுக்கும் ஒத்தவை என்று கொண்டனர். எஞ்சிய மூன்று பருவங்களுக்கோ, பதினொரு பருவங்கள் காணப்படுகின்றன. அவையாவன : குழமணம் மொழிதல், காமன் நோன்பு, நீராடல், பரவையாடல், சிறுசோறு, சிற்றிலிழைத்தல், ஊசல், அம்மானை, கழங்கு, பந்தாடல், தொழிற்குத் தகுவன கூறல் என்பன.

குழமகள், குழமணம், பாவையாடல்

குழமகள் என ஒரு பருவத்தைச் சிற்றிலுக்குப் பின் இந்திரகாளியாரும் சிறுசோறாக்கலுக்குப் பின் பரணரும் நிறுத்துவர். குழமணம் மொழிதல் என்ற பருவத்தைத் திவாகர பிங்கலங்கள் வருகைப் பருவத்துக்குப் பின் வைக்கின்றன. பாட்டியல்கள் குழமகன் என்றும் நிகண்டுகள் குழமணம் மொழிதல் என்றும் வழங்குவன குழந்தை விளையாட்டுப் பற்றியவை. இரண்டும் வெவ்வேறு பெயர்களால் குறிக்கப்பெற்றவை. ஆனால் ஒரே நோக்கமும் தொடர்பும் வாய்ந்தவை.

> பிள்ளைத்தமிழுக்கும் குழமகனுக்கும் வேறுபாடு இருந்தாலும்
> இரண்டிலும் பாட்டுடைத்தலைவனாக அமைபவன் குழவியே
> என்னும் வகையில் ஒற்றுமையும் உள்ளது. [148]

இதனைப் பெண்ணின் மூன்றாமாண்டில் நிகழும் நிகழ்ச்சியாகத் திவாகர பிங்கலங்கள் நவிலும்.

குழமகன் என்பது மரப்பாவையைச் சுட்டும். வில்லிபாரதம், உத்தரியப் பட்டும் குழமகன் தனக்கு நல்கி.[149] என்று இப்பொருளில் கையாளும். தமிழ்

லெக்ஸிகன், குழமணம் - பாவைக்குச் செய்யும் கலியாணம்.[150], என விளக்கும். இதனைக் குழமணன் என்றும் வழங்குப. குழகி யெங்கள் குழமணன் கொண்டு கோயின்மை செய்து கன்மமொன்றில்லை.[151] என்று அதனைத் திருவாய்மொழி இயம்பும். பாட்டியல்கள் குழமகன் எனச் சிற்றிலக்கிய வகை ஒன்றனையும் கண்டு கூறுகின்றன. இப்பருவமே தனி இலக்கிய வகையாக வளர்ந்தது.

குழமகன், குழமணம் இரண்டும் மரப்பாவையோடு தொடர்புடைய விளையாட்டு. குழமகன், மரப்பாவை, மரப்பாவையை வைத்துச் சிறுமியர் விளையாடும் விளையாட்டு, குழமகன் எனப்படும். இதனைத் திவாகர பிங்கலங்கள் பாவையாடல்,[152] என்றும். அந்நூல்கள் அதனை மரப்பாவைக்கு மணம் செய்து விளையாடலாக்கிக் குழமணம் மொழிதல் எனத் தனிப்பருவமாக்கின.

குழமகன், குழமணம், குழமணம் மொழிதல், பாவையாடல் என வெவ்வேறு பெயரால் அமைந்த நான்கின் மையக்கருத்தும் ஒன்றேயாம். இப்பருவங்கள் தனியாக அமைந்த பிள்ளைத்தமிழ்கள் இல்லை.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் மகளிர் விளையாட்டுகளாகப் பாடும் பத்து ஒன்றில் குழமணன், பாவை இரண்டும் பற்றிய குறிப்பினை அடுத்தடுத்த பாக்களில் அமைத்தார்.[153] கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின் எழுந்த நிகண்டுகளும் பாட்டியல்களும் இப்பருவம் பற்றிக் கூறில. திருவிளையாடல் புராணத்தில் பாவை, பற்றிக் குறிப்புண்டு.[154]

தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழின் அம்மானைப் பருவத்திலமைந்த மூன்று பாடல்கள், பாவை வைத்து விளையாடல் பற்றின.[155] இப்பாவை விளையாடல் பருவத்தைச் சிற்றில் நிகழ்ச்சியாக இந்நூலாசிரியர் குறிப்பர். திருவிளையாடல் புராணமும் சிற்றிலோடு தொடர்புடையதாய் இப்பருவத்தைப் பேசுகிறது. புதுவை திரிபுரசுந்தரி பிள்ளைத்தமிழ், சிற்றில் பருவத்தின் ஒருபாட்டில், செழுமணி திகழ் பொற்பாவை விளங்கச் சிற்றிழைத்தருளே.[156] எனப் பாவையாடலைச் சுட்டுகிறது. ஆதலால் இப்பருவம் தனியாகவும் மிகுதியாகவும் பாடப்படவில்லை.

காமன்நோன்பு

பெண்பாலுக்கு மிகுதியாகப் பருவங்கள் கூறுவது பிங்கலம். இது குழமகனுக்குப் பின் காமன்நோன்பு என்ற பருவத்தை வைக்கும். திவாகர பிங்கலங்கள் "ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றல்" என்றும், பாரதிதீபம் "வில்வேள்தன்னை வழிபடல்" என்றும், பன்னிருபாட்டியலில் பரணர் "காமன் நோன்பு" என்றும், வெவ்வேறு பெயர்களால் கூறுவது எல்லாம் ஒன்றை நோக்கியதாகும்.

பாவைக்குத் திருமணம் செய்து விளையாடிய சிறுமி, அடுத்துத்தான் கணவனைப் பெற நோன்பு நோற்கிறாள். விளையாட்டுப் பொருளுக்கு அமைந்த நிகழ்ச்சியைக் குழந்தை தனக்கும் நடக்க வேண்டி அம்முயற்சியில் முதல்படியாக நோன்பை மேற்கொள்கிறது. இப்பருவத்தைப் பரணர் இறுதிப் பருவமாக வைத்தார். பெண்குழந்தை வயதான நிலையில் இதனைப் பாடுவது ஏற்கத்தக்கது. அதனால் இதனை இறுதிப்பருவமாகக் கொள்ளும் பரணர் கருத்து, சாலச் சிறந்தது. இந்திரகாளியமோ பிற்காலப் பாட்டியல்களோ இப்பருவத்தைக் கூறில. இதன் நோக்கமாவது :

> **சிறந்த காதலனைத் தமக்கு அருள வேண்டும் எனவும் தம் காதலன் தம் இடத்தே அன்புடன் பிரியாமலிருக்க வேண்டும் எனவும் பெண்கள் காமனை வழிபடுவது....[157].**

இங்கு, மணம் ஆகா மகளிர் சிறந்த கணவனை வேண்டி இந்நோன்பினை நோற்பர். இந்நோக்கத்தின் அடிப்படையில் இப்பருவம் அமைய வேண்டும். ஸ்ரீஆண்டாள் பிள்ளைத்தமிழின் இறுதிப்பருவமாகக் காமன் நோன்புப்பருவம் உள்ளது. ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழியே இதற்கு மூல வித்தாகும்.அத்திருமொழியில் ஆண்டாள் கண்ணனை அடைவதற்காகக் காமனை வேண்டி நோன்பிருந்ததாகப் பாடுவர்.[158]

ஆண்டாள், காமன் நோன்பு நோற்றதைக் கண்ட பிள்ளைத்தமிழாசிரியர், "திருமாலே ஆண்டாளை அடைய நோற்கிறான். அதனால் ஆண்டாள் நோன்பு மேற்கொள்ள வேண்டாம்" என ஆண்டாளை வேண்டி இப்பிள்ளைத்தமிழில் பாடியிருக்கிறார். இப்பருவம் முழுமையும், காமன் நோன்பு தவிர்க என மகுடம் அமைந்து கிடக்கிறது. "உனை எய்த உச்சிமேல் மாதவம் இயற்றவே பொன்னி நடுவாய் உற்றுளான்.[159] எனவும்" மிதிலையுள் கொற்றவன் சிலை இறுத்துக் கூடினான்; நின்னை முன்பு ஆகலின் இன்னும் நிற்குமாறு உண்மை[160] எனவும் திருமால் ஆண்டாளை அடைய முயல்வதை நூலாசிரியர் பாடுவர். எனவே இப்பருவத்துக்குக் காமன் நோன்புப் பருவம் என்பதிலும் காமன் நோன்பு தவிர்கைப் பருவம் என்று பெயர் இடுவது கருத்துக்குப் பொருந்தியதாகும். ஆண்டாள் பிள்ளைத்தமிழாசிரியர் பாட்டுடைத் தலைவிக்குச் சிறப்புக் கொடுக்கத் திருமால் நோற்பதாகவும் ஸ்ரீ ஆண்டாள் நோற்க வேண்டாம் எனவும் பாடுவர். இப்பருவத்தை வேறு பிள்ளைத்தமிழ்கள் பாடில, பாடு பொருளுக்கு ஏற்பப் பிள்ளைத்தமிழப் பருவம் அமைகிறது.

பெண்பாற் பிள்ளைத்தமிழ் பதினேழாம் நூற்றாண்டில் தோன்றியது. பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் எழுந்த பாட்டியல்களும் காமன் நோன்புப் பருவத்தைப் பிள்ளைத்தமிழுக்கு விதிக்கவில்லை. ஏனெனில், பெண் மக்களைப்

பற்றிய பிள்ளைத்தமிழ்கள எழுந்தில. சிவனொடு உறையும் இறைவியைப் பாடிய நூல்களே எழுந்தன. முழுமுதற் கடவுளின் தனிப்பெரும் துணைவி, அவன் திருக்கண் நோக்கால் எரியுண்ட காமதேவனை வேண்டி நோன்பு மேற்கொண்டாள் எனப் பாடுவது இறையும் ஒவ்வாது. ஆதலால் பிற்காலத்தில், இப்பருவம் இடம் பெறாது போய்விட்டது.

நீராடல்

நீராடல் பருவத்தைப் "பனிநீர் தோய்தல்" என்பர். இப்பெயர் நீரின் குளிர்ச்சியையும் நீராடும் நளினத்தையும் அதனால் கிட்டும் இன்பத்தையும் துய்த்து ஆரா இன்பம் கண்டோர் பனிநீர் தோய்தல் எனப் பெயரிட்டிருக்கின்றனர். சிலர் கடலில் நீராடுவர்.[161]. வேறுசிலர் ஆற்றில் நீராடுவர்.[162]. கடலில் நீராடுதலைப் பரவையாடல் என்றும் கடலாடல் என்றும் வழங்குவர்; எனினும் எல்லாம் தண்ணீரொடு தொடர்புடையனவே. நீராடல் ஆண், பெண் ஆகிய இருபாலார்க்கும் பொதுவாகும். பெரியாழ்வார்

காய்ச்சின நீரொடு நெல்லி
கடாரத்தில் பூரித்து வைத்தேன்
வாய்ந்த புகழ்மணி வண்ணா
மஞ்சன மாடநீ வாராய். [163]

எனக் கண்ணனாகிய ஆண் குழந்தையை நீராட அழைக்கிறார். பெரியாழ்வார் ஆணுக்குப் பாடிய பருவம் பிற்காலத்தில் பெண்ணுக்கு மட்டும் உரித்தாயிற்று. பெண்களுக்கு நீராடுதலில் மிகுந்த விருப்பமுண்டு. அதனால் பெண்பாற்கு அமையும்போது நீராடுமிடம் கடலாகவோ ஆறாகவோ மாறிவிட்டது. நீராடல் பருவத்தை நிகண்டுகள் சிலவும் பாட்டியல்கள் சிலவும் பெண்பாலுக்கு விதிக்கவில்லை. எனினும் பெண்பாற் பிள்ளைத்தமிழ்களில் எல்லாம் இஃது அமைந்திருக்கிறது.

தீமை, பாவம் ஆகியன நீங்கப்புண்ணிய ஆறுகளிலும் கடலிலும் நீராடுதலைத் தீர்த்தமாடல் என்ப. பட்டினப்பாலை, பரிபாடல், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றால் தீர்த்தமாடும் நீராடல் மரபு தெரியவருகிறது. புதுவெள்ளமாகப் பெருகும் நகரில் மகளிர் விருப்பத்தோடு ஆடுவர். அவ்வழக்கு, பதினேழாம் நூற்றாண்டில் தலைசிறந்த புலவராய குமரகுருபரர் பாடிய முதல் பெண்பாற் பிள்ளைத்தமிழான மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் இடம் பெற்றது. அதனை முன்மாதிரியாகக் கொண்டு மற்றையோர் தங்கள் பெண்பாற் பிள்ளைத்தமிழ்களிலும் இப்பருவத்தைப் பாடினர்.

பெண்பாற் பிள்ளைத்தமிழ்கள் தெய்வத் தமிழ்களாதலின், இப்பருவம் அம்மை வாழும் திருப்பதியின் தீர்த்தச் சிறப்பை உணர்த்துவதாகவும், தீமை நீங்க நீராடுவதாகவும் அமைந்தது.

சிற்றிழைத்தலும் சிறுசோறாக்கலும்

இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் சிற்றில் பருவம் உண்டு. ஆணுக்குச் சிற்றில் சிதைத்தல் என்றும் பெண்ணுக்குச் சிற்றில் இழைத்தல் என்றும் நூல்கள் எடுத்தியம்பும். இருபாற்பிள்ளைத்தமிழிலும் சிற்றில் இழைப்பது மகளிரே, ஆண்பாற் பிள்ளைத்தமிழில் சிற்றிலை அழிப்பது ஆண். இச்செயல் வேறுபாட்டுக்கு அடிப்படை ஆண், பெண்ணுக்கு இயற்கை அளித்திருக்கும் இயல்பே காரணம் ஆகும்.

> **"இயற்கையமைப்பிலேயே ஆண் குழந்தைகளின் தசைகள் பெண் குழந்தைகளின் தசைகளைவிட வலுவுடையன வாயிருக்கின்றன. அவற்றை உபயோகப்படுத்தாது சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க ஆண் குழந்தைகளால் முடிவதில்லை. எனவே துருதுருவென்று ஓடியாடி விளையாட அவர்கள் விரும்புகின்றனர்."**
>
> **"பெண் குழந்தைகளின் தசைகள் ஆண் குழந்தைகளின் தசைகளைக் காட்டிலும் மென்மையாய் இருக்கின்றன. இதனால் ஆண் குழந்தைகளைப் போன்று முரட்டுத்தனமாக அவர்களால் ஓடியாடி விளையாட முடிவதில்லை."[164]**

பால் வேற்றுமைக்குப் பொருந்த உடல் வேற்றுமையும் செயல்வேற்றுமையும் அமைகிறது. அழிக்கும் ஆற்றல் ஆணாகவும், ஆக்கும் ஆற்றல் பெண்ணாகவும் பொலிகின்றது. அத்தகைய உடல் இயல்பையும் உள்ளவியல்பையும் உணர்ந்த புலவர்கள், ஒரே பருவத்தை இருவேறு செய்கைகளாய் மாற்றி அவரவர் பாலியல்புக்கேற்ப அமைத்த முறைமை போற்றத்தக்கது.

இந்திரகாளியம், இப்பருவத்தை அம்புலிக்குப் பின் நிறுத்தும். சிறுசோறடுதல், சிற்றிழைத்தல் என்ற வரிசையில் திவாகர பிங்கலங்கள் அமைக்கும். பரணர் பன்னிருபாட்டியலில் இவ்விரண்டையும் முன்பின்னாக மாற்றி உரைப்பர். சிறுசோற்றை விடுத்துப் பாரதிதீபம் சிற்றிலை மட்டும் செப்பும். வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், பிற இலக்கணங்கள் ஆகியன இவற்றைக் கூறில.

சிற்றிலிழைத்தலையும் சிறுசோறாக்கலையும் தனித்தனிப்பருவங்கள் போலப் பாட்டியல்கள் நவில்கின்றன. இரண்டும் தொடர்புடைய விளையாட்டுகள் அன்றி இரண்டிலும் அடையாக விளங்குவது ஒரே சொல்லாகும். பிள்ளைகள்

சிற்றிலிழைத்துச் சிறுசோறாக்கி விளையாடும். சிற்றிலிழைத்தலை வண்டல் எனவும் வழங்கும் மரபுண்டு.

> "வண்டல் என்பது மகளிர் சிற்றில் கட்டி ஆடுவதே ஆகும். இதனைச் சேக்கிழார் காரைக்கால் அம்மையார் புராணத்துள் சிறப்பாகக் குறிப்பிட்டு (ம்) உள்ளார். இதனை
>
> *வண்டல் பயில் வன எல்லாம் வளர்மதியம் புனைந்தசடை*
> *அண்டர்பிரான் திருவார்த்தை அணையவரு வனபயின்று*
>
> என்ற அடிகளிற் காண்க.[165]

இவ்வாறு திருத்தொண்டர்புராணம் சுட்டுகின்றது. பூம்பாவை வரலாற்றில் சேக்கிழார் சிற்றிலிழைத்தலையும் சிறுசோறாக்கலையும் இணைத்தே பாடுவர். பெரியாழ்வார், "செப்போது மென்முலை யார்கள் சிறுசோறு மில்லுஞ் சிதைத்திட்டு",[166] எனப்பாடுவது ஒப்பு நோக்கத்தக்கது. ஆசிரியர்கள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், திருமுதுகுன்றம் பெரியநாயகிம்மை பிள்ளைத்தமிழ் ஆகியவற்றில் இவ்விரண்டையும் இணைத்துப் பாடியிருக்கின்றனர்.[167]

சிற்றில்பருவம் ஸ்ரீஆண்டாள் பிள்ளைத்தமிழ், புதுவை திரிபுரசுந்தரி பிள்ளைத் தமிழ், வயிரவன் கோயில் வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ், தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ் ஆகிய நான்கு நூல்களில் மட்டுமுண்டு. சிறுசோற்றுப்பருவம் ஸ்ரீஆண்டாள் பிள்ளைத்தமிழொன்றிலேயே உண்டு.

சிற்றிலழித்தல் பருவத்தில் இழைத்தல், அழித்தல் என இருபகுதிகள்; பெண்பாற் பிள்ளைத்தமிழில் சிற்றிழைத்தலாகிய ஒரு பகுதியே காணப்படுகிறது. ஆண்பாலில் அமையும் - சிற்றிலழித்தலொடு ஒப்புநோக்கின் சிற்றிழைத்தலில் ஒருகூறே அமைவதாகும். அந்நிலை, சிற்றிலழித்தல் பருவத்தைப் பாதியே பாடுவதாகும். குமரகுருபரர் போன்ற புலவர்கள் இதனைத் தனிப்பருவமாகப் பாடாமையால் இதற்குத் தனிமுதன்மை இல்லை. சிறுசோற்றுப்பருவம் பாடுவதற்கு நிலைக்களனான சிற்றிலுக்கு நேர்ந்த நிலையே சிறுசோற்றுப் பருவத்துக்கும் விளைந்தது.

ஊசல்

பிள்ளைத்தமிழுக்கு மிகுதியான பருவங்களைச் சொல்லும் திவாகரம், பிங்கலம் உட்பட எல்லா இலக்கணங்களும் ஊசலை இறுதிப் பருவமாக்கின. பன்னிருபாட்டியல், ஊசலை உரையாது காமன் நோன்பினைக் கூறும்.

மகளிர் ஊசலாடும் குறிப்பு சங்கநூல்களில் உண்டு. இவ்வழக்கம் தொடர்ந்து இன்றுவரை தமிழகத்தில் நிலவுகிறது. சிற்றிலக்கியங்களுள் ஒன்றான கலம்பகத்திலும் ஊசல் ஒருறுப்பாக இருக்கிறது. திருக்கோயில் திருவிழாக்களில் ஊசல் விழாவும் நடைபெறும். இங்ஙனம் உலகியலிலும் இலக்கியத்திலும் இடம் பெற்ற ஊசல் பெண்ணொடு நெருங்கிய தொடர்புடையது. தொன்மைக் காலத்திலிருந்து தொடர்ந்து வந்தமையால் இது பெண்பாற் பிள்ளைத்தமிழில் மிக இன்றியமையாத உறுப்பாயிற்று.[168]

அம்மானை, கழங்கு, பந்தாடல்

இம்மூன்றினையும் திவாகரம் கூறவில்லை.[169] பிங்கலம் ஒன்றன்பின் ஒன்றாக இப்பருவங்களை முதற்கண் சுட்டுகின்றது. சூடாமணி, பிரபந்தமரபியல் சிதம்பரப்பாட்டியல் ஆகிய பிற்கால நூல்கள் எட்டும் கழங்கினையும் அம்மானையையும் அடுத்தடுத்து அமைவன என்று இயம்புகின்றன.

அம்மானை, கழங்கு, பந்தாடல், ஆகியன மூன்றும் ஓரியல்புடைய விளையாட்டுகள். சங்கநூல்கள் கழங்காட்டம், கழங்கு என்றே வழங்குகின்றது. அம்மானை என்ற சொல்லாட்சி சங்க நூல்களில் இல்லை.

> **"சங்க காலத்தில் வழக்கில் இருந்த கழங்காடலானது சிலப்பதிகார காலத்தில் கழங்காடல் அம்மானை என்ற பெயரினைப் பெற்று வளர்ச்சி உற்றது."** [170]

சிலப்பதிகார வாழ்த்துக்காதையில் அம்மானையும் கந்துகமும் (பந்து) அடுத்தடுத்து வருகின்றன. அம்மானை, கழங்கு, பந்து மூன்றினையும் ஒருங்கே தனித்தனிப் பருவங்களாகப் பாடிய ஒரு நூல் இல்லை. சேக்கிழார், பரவையாரின் பிள்ளைமைப் பருவத்தில் இம்மூன்றையும் ஒருங்குரைப்பர்.

அம்மானை, கழங்கு என்ற இருபருவமும் அமைந்தவை திருச்செந்தூர் வள்ளிநாயகி பிள்ளைத்தமிழும் சிவயோகநாயகி பிள்ளைத்தமிழும் ஆகிய இரண்டுமேயாகும். தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ் ஆசிரியர் நல்லத்துக்குடி கிருட்டிணையர், அம்மானைப் பருவத்தில் ஆறாம் ஏழாம் பாடல்களைக் கழங்காடலாகவும் எட்டாம் ஒன்பதாம் பாடல்களை அம்மானை ஆடலாகவும் பாடினார். பந்தாடலைத் தனிப்பருவமாகக் கூறுவது பிங்கல நிகண்டு. அம்மரபினைத் தழுவுமாறு பந்தாடல் பருவம் அமைந்த நூல், தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ்.

மூன்றும் ஒருவகையான விளையாட்டாயினும் அவற்றிடையே விளையாட்டுக் காய்களால் எழும் வேறுபாடே பெயர் வேறுபாட்டுக்குக் காரணமாகும். மங்களேச்வரி பிள்ளைத்தமிழ், விளையாடும், காய்களைப் பந்து

என்றும் விளையாட்டுக்குப் பெயர் அம்மானை என்றும் கூறுகிறது.

பருமணிப் பந்திலிது பதுமராகப் பந்து
பாய்ந்திடில் வருந்துமெனவே
பச்சைவயி டூரியப் பந்துகோ மேதகப்
பந்தினி லுனக் கிணங்கும்
அருமணிப் பந்தெடுத் தரசிளம் பெண்பிள்ளை
யம்மானை யாடி யருளே
அதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
யம்மானை யாடி யருளே.[171]

இப்பிள்ளைத்தமிழ், அம்மானைப் பருவம் எனப் பெயரிட்டதற்கு ஏற்ப அம்மானைக் காய்களைக் கூறாது, பந்தினை உரைக்கிறது.[172]

ஓரியல்பு வாய்ந்த பல பருவங்கள் இருக்கும்போது அவற்றிலிருந்து புலவர்கள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுப்பர். கழங்காடலின் பிற்காலப் பெயர் அம்மானை, ஆதலின் அம்மானையைப் பாடிக்கழங்காடலைப் பிள்ளைத் தமிழ்ப்புலவர் விடுத்தனர். பந்தாடல், காப்பியத்துக்குரிய ஒரு கூறாகக் கருதப்பெற்று இச்சிற்றிலக்கிய வகைக்குரிய தனிப்பருவமாகப் புலவர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் அம்மானை, நீராடல், ஊசல் என்று மூன்று பருவங்கள் அமைவதே பெருவழக்கு. இம்மூன்றில் அம்மானை, ஊசல் பற்றிய பாக்கள் நாட்டுப்புறப்பாக்களாகவும் வழங்குவன. மிகைப்பருவங்கள் பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு மிகப்பல. அவற்றைக் கூறுவதில் நிகண்டுகளும் பாட்டியல்களும் ஒன்றுபடுகின்றன.

திவாகரம், பிங்கலம், பன்னிருபாட்டியல் ஆகியன பெண்பாற்பிள்ளைத் தமிழுக்கு இன்ன இன்ன பருவங்கள் உரியன என்று வரையறுத்துத் தெளிவு செய்தில. இவை தோன்றி வழங்கிய நாள்களில் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்ற இலக்கிய வகை கிளைத்திலது. இவற்றுக்குப்பின் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய சூடாமணி நிகண்டு, பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குத் தெளிவாகப் பத்துப் பருவங்களைச் சுட்டுகிறது. இந்நூல் சேக்கிழார் போன்றவர்களின் மரபைத் தழுவிப் பெண்பாற்பிள்ளைத்தமிழ் என்ற வகையை உரைத்தது. பத்துப் பருவங்கள் எனவும் கழங்கு, அம்மானை, ஊசல் எனவும் சூடாமணி நிகண்டு கூறிட, பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் நீராடல், அம்மானை, ஊசல் என்று பருவங்கள் திகழ்கின்றன. பெண்பாற்பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றும் முன்னே இந்நிகண்டு இலக்கணம் கூறியமையால் தான் இவ்வொற்றுமையின்மை எழுந்தது.

நிகண்டுகளும் பாட்டியல்களும் பெண்பாற்பிள்ளைத்தமிழுக்குக் கழங்கு, அம்மானை, ஊசல் என்ற மூன்றினையே உரைக்கின்றன. பிள்ளைத்தமிழ்களிலோ அப்பருவங்கள் காணப்பட்டில. இவ்விலக்கண நூல்கள் இலக்கிய வழக்கினை நோக்காது முன்னையோர் கருத்தையே வழிமொழிந்தன.

பதினேழாம் நூற்றாண்டில், குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை ஆக்கிப் பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு வித்திட்டார். இவருடைய இலக்கிய அமைப்பைத் தழுவிப் பலரும் பெண்பாற்பிள்ளைத்தமிழ் பாடுவாராயினர். இவர் பாடிய முறையும் அமைப்பும் பிற்காலத்தவர்க்கு இலக்கணமாயிற்று.

பெண்பாற்பிள்ளைத்தமிழ் நூல்களில் பெரும்பாலும் பப்பத்துப் பருவங்களே உள்ளன. பத்துக்குக் குறைவாகப் பருவங்கள் அமைத்துத் தனி நூல்கள் தோன்றவில்லை. ஆனால் பத்துக்கு மேலும் பருவங்கள் அமைந்த நூல்கள் சில உள்ளன.

ஸ்ரீஆண்டாள் பிள்ளைத்தமிழ்

ஸ்ரீஆண்டாள் பிள்ளைத்தமிழில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுசோறு, ஊசல், காமன் நோன்பு என்ற பதினொரு பருவங்கள் விளங்குகின்றன.

சிற்றில், சிறுசோறு இரண்டும் தனித்தலைப்போடு தனிப்பருவங்களாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. சிற்றிலில் ஐந்தும் சிறுசோற்றில் ஆறும் ஆகப் பதினொரு பாக்கள் காணப்படுகின்றன.

சிற்றில் பருவ முதல்பாட்டில் மகுடம், "தென் அரங்கேசன் முதல் ஐவரும் குடிபுகச் சிற்றிலை இழைத்தருள்கவே"[173] என்பதாகும். இம்மகுடம், சிறுசோற்றுப்பருவப் பாக்கள் 90, 91, 92 ஆகியவற்றில் அமைந்துள்ளது. அம்மகுடம், "தென்அரங்கேசன் முதல் ஐவரும் குடிபுகச் சிறுசோறு இழைத்து அருள்கவே,"[174] என்பதாகும்.

இரண்டும் ஒப்புநோக்கினால் நெருங்கிய ஒற்றுமை உடையன. சிற்றில் சிறுசோறு என்ற சொற்களே மாறியமைந்திருக்கின்றன. பாட்டில் இறுவாய் ஒன்றேயாகும். பருவப்பாடல்களின் மகுடம், பலபாடல்களில் ஒத்த முறையில் வரும். பருவத்துக்கும் மகுடத்துக்கும் தான் நேரடித் தொடர்பு. பருவப் பெயரை மகுடத்தால் தெளிவாக அறியமுடியும். அம்முறையில் ஆண்டாள் பிள்ளைத்தமிழிலுள்ள சிற்றில், சிறுசோறு ஆகிய இருபருவங்களையும் ஒப்புநோக்க வேண்டும்.

இந்நூலில் சிற்றில் பருவத்தில் ஐந்து பாட்டும் "சிற்றிலை இழைத்தருள்கவே" (85-87) என்றோ "சிற்றில் இழைத்தருளே" (88-89) என்றோ இறும். இவற்றில் இழைத்தல் என்ற சொல் முடிவாகும். சிறுசோறாக்கல் என்ற பருவப்பாடல்கள் "சிறுசோறு ஆக்கியருள்கவே"" என முடிவு பெறுதல் வேண்டும் ஆனால் இந்நூலின் சிற்றிழைத்தல் போலச் சிறுசோற்றையும் "சிறுசோறு இழைத்து அருள்கவே" (90, 91, 92, 93, 94, 95) என்ற மகுடமுடிவை நூலாசிரியர் அமைத்துள்ளார். சிறுசோற்றைத் தனிப்பருவமாகப் பாடக் கருதியிருப்பின் "சிறுசோறாக்கியருள்கவே" எனத் தனி மகுடமும் முடிவும் அளித்து ஆசிரியர் பாடியிருப்பர். மேலும் சிறுசோற்றையும் சிற்றிலிழைத்தலையும் இணைத்துப் பாடுவதுதான் இலக்கிய மரபாகும். சேக்கிழார்.

பொற்றொடிச்சிறு மகளிர்ஆ யத்தொடும் புணர்ந்தும்
சிற்றில் முற்றவும் இழைத்துடன் அடுந்தொழிற் சிறுசோறு
உற்ற உண்டிகள் பயின்று... ... ... [175]

என இரண்டையும் இணைத்துப் பாடுகிறார்.

ஆண்டாள் பிள்ளைத்தமிழின் வாரானைப் பருவத்தில் முதல் மூன்று பாடல் வருக எனப்பாடும் வருகைக்குரியவை. நான்காம் பாட்டு "அம்மம் உண்ண வருக" என அமையும், இன்னமுதூட்டல் பருவம். ஐந்தாம் பாட்டு

படத்திடை நடித்தவட மலைவாணர் களிதரப்
பந்தடித் திட வருகவே
பழமறைப் புதுவை அந்தணர் பிரான் அருள்புதல்வி
பந்தடித் திட வருகவே [176]

என்று பந்தாடலைப் பாடுகிறது. இங்ஙனம் சில பருவங்களைக் கலந்து ஒரு பருவத்தில் பாடும் இயல்பினர் இந்நூலாசிரியர். வருகைப்பருவத்தில் பருவ மயக்கம் காணப்படினும் "வருகவே" என்ற வருகைப்பருவ முடிவை மறவாது பின்பற்றுவர். இப்போக்கினையும் சிற்றில் - சிறுசோறு பாடும் போக்கினையும் ஒப்பு நோக்கினால், ஆசிரியர் சிறுசோற்றுப்பருவம், சிற்றில்-பருவத்துள் அமையும் ஒரு தொடர்புப்பருவமேயாகும். ஆதலால் இதனைத் தனித்தனிப் பருவமாகக் கொள்ளாது ஒரே பருவம் என்பதுதான் பொருத்தமாம். இதனால் ஆண்டாள் பிள்ளைத்தமிழ் எல்லா நூல்களையும் போலப் பத்துப்பருவங்கள் உடைய நூல் ஆகும்.

தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ்

நல்லத்துக்குடி கிருட்டிண அய்யர் இயற்றிய தில்லைச் சிவகாமியம்மைப் பிள்ளைத்தமிழில் பத்துக்கு மேல் பருவங்கள் விளங்குகின்றன. மரபியலான ஏழு

பருவங்களுடன் பந்தாடல், பொன்னூசல், நீராடல், என்ற பருவங்கள் அமைந்திருக்கின்றன.

இந்நூலில் அம்மானைக்குப் பின் பந்தாடல் பருவம் பத்துப்பாக்களையுடையதாக ஆசிரியர் பாடியிருக்கிறார். இப்பருவம் இந்நூலில் மட்டுமே உண்டு. பிள்ளைத்தமிழின் இறுதிப்பருவமான ஊசல் பருவத்திற்கு முரணாக நீராடல் பருவம் இருப்பது குறித்தற்குரியது.. புலவர் கழங்கு,, அம்மானை என்ற இரண்டில் ஒன்றையே பாடுவர். இவரோ இரண்டையும்பாடுகிறார்.

அம்மானைப்பருவம் பருவமயக்கம் நிறைந்ததாகத் திகழ்கிறது. குதலைமொழியாடுக என இரண்டும், பாவை விளையாடுக என மூன்றும், கழங்கு, விளையாடுக என இரண்டும் அம்மானை ஆடுக என இரண்டும் ஆக ஒன்பது பாக்களால் இப்பருவம் அமைகிறது. பதிப்பித்தோர் இவற்றைத் தனித்தனிப் பருவங்களாகத் தலைப்பிட்டு வெளியிட்டனர்.[177] ஆனால் சென்னை அரசினர் கீழ்த்திசைக் கையெழுத்துச் சுவடிகள் நூல்நிலையம் 1956இல் வெளியிட்ட பிள்ளைத்தமிழ்க் கொத்தில் இப்பாக்களை எல்லாம் அம்மானைப்பருவம் என்ற பகுதியிலேயே அடக்கிப் பதிப்பித்துள்ளது.

பாடல் பருவ எண்ணிக்கை ஒன்றுபோல அமையாமையும், குதலைமொழியாடல், பாவை விளையாடல் போன்ற பருவங்கள் இன்மையாலும் கீழ்த்திசை கையெழுத்துச் சுவடிகள், நூல்நிலையப் பதிப்பாசிரியர் அனைத்துப் பாக்களையும் அம்மானைப் பருவத்தில் அடக்கினார். பிள்ளைத்தமிழ்களில் பருவமயக்கம் காணப்படுதலின் இஃது ஏற்றுக் கொள்ளற்பாலது. சிற்றில், பந்தாடல் என இருமிகைப்பருவங்களுடன் தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ் பன்னிருபருவங்களையும் அதற்கேற்ப நூற்றிருபது பாக்களையும் பெற்றுள்ளது.

தணிக்கைக்குமரன் தேவியர் பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் அமைப்பில்.சில புதுக்கூறுகளையுடைய நூல்கள் இந்நூற்றாண்டில் எழுந்தன. திருத்தணிகையில் வீற்றிருக்கும் முருகன் மனைவியரான வள்ளி, தெய்வானை இருவரையும் பாடுகிறது. தணிக்கைக்குமரன் தேவியர் பிள்ளைத்தமிழ் இந்நூலில் பருவத்துக்கொரு பாட்டு அமைந்திருக்கிறது. நூலாசிரியர் ஈ.வே. வேங்கட சுப்பிரமணியம் இரண்டுபிள்ளைத்தமிழ்நூலாக அமைக்க வேண்டியதை ஒன்றாகக் கோத்திருப்பது நூலமைப்பில் புதுமையானது.

நூலாசிரியர் தேவசேனையைப் பற்றிய பாடல்களை ஒவ்வொரு பருவத்திலும் முதலாவதாகவும் அதன் பின் வள்ளியம்மையைப் பற்றியபாடல்களை வைத்தும் நூல் செய்திருந்தார். நூல் அச்சாகாது எழுத்துருவிலேயே இருந்தது.

இந்நிலையில்

> "..... முருகவேள் தோன்றி வல்லீதேவசேநா சமேதஸுப்ரமண்யம் வல்லீகாந்த ஸ்மரணம் என்பதுதான் வழக்கத்தில்இருப்பது என்று சொன்னபடி [178]

நூலாசிரியர்,ஒவ்வொரு பருவத்திலும் வள்ளியம்மை, தேவசேனை என்ற முறையை வைத்தார். இம்முறைமாற்றத்துக்குபின் நூலச்சாயிற்று.

காப்புப் பருவம் என்ற தலைப்புடன் முதற்பாட்டு வள்ளியம்மை யைக்காக்குமாறு கடவுளை வேண்டும். அடுத்த பாட்டு, தெய்வானையைக் காக்குமாறு வேண்டும். இங்ஙனம் இஃது இரட்டைப் பிள்ளைத்தமிழாக அமைகிறது. பருவங்களில் புதுமையோ மிகையோ இல்லை.

சிவபெருமாள் வீற்றிருக்கும் கைலாயத்தையும் திருக்காளத்தியையும் நக்கீர தேவநாயனார் மாற்றிப் போற்றிப் பாடிக் கயிலைப்பாதி காளத்திபாதி அந்தாதி, என்ற நூலை ஆக்கினார். இந்நூலிலுள்ள ஒற்றைப்படை எண்களிலமைந்த வெண்பாக்கள் ஐம்பதும் திருக்கயிலையைப் போற்றுவன, இரட்டைப் படை எண்களில் அமைந்த வெண்பாக்கள் ஐம்பதும் திருக்காளத்தியைப் போற்றுவன. இரண்டு ஊர்களைக் கொண்டு பாடியதை ஒட்டி இரண்டு மகளிரைக் கொண்டு ஈ.வே. வேங்கடசுப்ரமணியம் பாடியிருக்கிறார்.

வள்ளியம்மை பிள்ளைத்தமிழ், தேவசேனை பிள்ளைத்தமிழ் என இரண்டு நூல்கள்; ஆனால் அவை ஒரே நூலாக அமைந்தது அமைப்பியலில் புதுமை. பாட்டுடைத் தலைமை இருநூல்களுக்கும் வெவ்வேறு; ஆனால் பருவங்கள், நூல் அமைப்பு, நூலில் முன் அமையும் பகுதிகள் ஆகியன ஒன்றே.

தணிக்கைக்குமரன் தேவியர் பிள்ளைத்தமிழ்போல அமைப்பில் புதுமையான மற்றொரு நூல் பிள்ளைத்தமிழ் என்ற பெயரியது.

பிள்ளைத்தமிழ் - புதிய அமைப்பு

கவிஞர் நாரா. நாச்சியப்பன் இயற்றிய "பிள்ளைத்தமிழ்" இந்நூற்றாண்டில் தோன்றிய ஒரு புதிய அமைப்புடைய பிள்ளைத்தமிழ். இந்நூலில் பதின்மூன்று பருவங்கள்; பருவத்துக்கு மூன்று பாடல்கள்; நூலுக்கு முப்பத்தொன்பது பாட்டுகள்.

ஆண்பாற்பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ் எனப் பிள்ளைத்தமிழ் இரு வகைப்படும். இவ்வகை ஆணைப் பாடுவதாலும் பெண்ணைப்

பாடுவதாலும் எழுந்தவை. பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் ஏழு பருவங்கள் இருபாலையும் பாடுதற்குரியவை. இறுதி மூன்று பருவங்களே வேறுபடுவன, தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆண் பிள்ளையையும், பெண் பிள்ளையையும் தனித்தனியே பாடுவதுதான் மரபாகும். அதற்கு மாறாக எழுந்த நூல் இஃதேயாகும்.


கவிஞர் நாரா. நாச்சியப்பன் தான் பாடிய பிள்ளைத்தமிழ் ஆண் பெண் ஆகிய இருபாற்பிள்ளைகளையும் ஒரே பிள்ளைத்தமிழில் பாடியுள்ளமை புதுமையாகும். பிள்ளைத்தமிழ் இலக்கணம் கூறும் நூல்கள் காப்பு செங்கீரை தால், சப்பாணி, முத்தம், வாரானை,அம்புலி, என்ற ஏழு பருவங்களை இருபாற்கும் பொதுவாக்கும். அதனைப் பின்பற்றி நாரா. நாச்சியப்பன் தன் நூலில் முதற்கண் ஏழு பருவங்களைப் பாடினார். அடுத்துப் பெண்பாற்குரிய அம்மானை, நீராடல், ஊசல், ஆகிய மூன்று பருவங்களைப் பாடினார். இவற்றோடு பத்துப் பருவங்கள் நிறைந்து மரபு வழிப்பிள்ளைத்தமிழ் அமைந்தது. ஆனால் ஆசிரியர் தொடர்ந்து ஆண்பாற்குரிய சிற்றில், சிறுபறை, சிறுதேர், என்ற பருவங்களையும் பாடி நூலை நிறைவு செய்கிறார். ஒரே நூலில் ஆண்-பெண் ஆகிய இருபாலாரையும் பாடுவதால் ஆசிரியர் இதற்குப் பிள்ளைத்தமிழ் என்றே பெயரிட்டார். பிள்ளை என்ற சொல்பால் உணர்த்தாமையால் இப்பெயரிட எளிதாயிற்று. யாருடைய பெயரையும் சுட்டாமல் பிள்ளை எனப் பொதுநிலையில் பாடியதும் இருபாலாரையும் ஒருங்கே பாடுதற்குரித்தாயிற்று.

ஆசிரியர் பொதுமையாகப் பாடினும் மரபுவழிப் பருவங்கள் இருபாலாரையும் பாடுதலை உணர்த்துகின்றன. அம்மானை, நீராடல் ஆகிய பருவங்களில் "மையல்" மகளே,[179], செல்வி,[180], அன்பு மகளே,[181] எனப் பெண் என்பது தோன்ற இவர் பாடுவர். சிற்றில் பருவத்தில் ஆண் என்பது தோன்ற செல்வா[182] என விளிப்பர்.இந்நூல், பிள்ளைத் தமிழ்ப் பருவங்களுக்குப் பெயரிடும்போது மரபுப்பெயரிடும்போது மரபுப் பெயர்களைக் கையாளவில்லை. நூலில் முதற்கண் காப்புப் பருவம் பாடாமல் ஆசிரியர் வாழ்த்துப்பருவம் பாடியுள்ளார். இவர் திருமாலோ வேறு கடவுளோ குழந்தையைக் காக்க எனக் காப்புப்பருவமே பாடிலர். தாய் வாழ்த்தும் வாழ்த்தாகப்பாட்டுத்தொறும் 'வாழியவே' என்று பா முடிகிறது. காப்பு என்ற மரபு இங்கு வாழ்த்துகிறது

சுற்றத்தளவாகப் பாடுதல் என்ற விதிக்கு இங்கு இடமில்லை. எனினும் அன்னை தந்தை என உறவுப் பெயர்களைசுட்டி ஆசிரியர்பாடுவர். தாய்(1:1), தந்தை (2.:3,13:1) ஆகியோர் பற்றிய குறிப்புகளும் உள்ளன. அம்புலிப்பருவம் நால்வகை உத்திகள்அமையாது, திங்களைவிளையாட அழைப்பதாகவே அமைகின்றது. பெண்ணுக்கு முதன்மை கொடுக்க வேண்டும் என்ற கருத்தில், ஆசிரியர் பொதுப்

பருவங்களின் பின் பெண்பாற் பருவங்களை நிறுத்தியுள்ளார். நூலுக்கு முன் அமையும் கடவுள் வணக்கப் பாடலும் இந்நூலில் அமைய வில்லை. தமிழிலக்கிய வரலாற்றில் இப்பிள்ளைத்தமிழ், பிள்ளைகள் அனைத்தையும் பாடுவதாக அமைந்தும் ஆண்-பெண் இருபாலரையும் ஒருங்கே பாடுவதாக அமைந்தும் புதுமையாகத் திகழ்கிறது.

யாருடைய இயற்பெயரையாவது சுட்டிப் பாடியிருப்பின் நூல் மரபு வழி நூலாயிருக்கும். ஒரே நூலில் இருபாலரையும் புதுமையாகப் பாடினார்.அதனால் பருவங்களும் மூன்று கூடின. பாடல் எண்ணிக்கையும் ஒன்பது உயர்ந்தது. இரண்டு பிள்ளைத்தமிழாகப் பாட வேண்டியதை ஒரு நூலாகப் பாடி, ஏழு பருவங்களைத் திரும்பப் பாட வேண்டியமையைத் தவிர்த்தார்.



மூன்றாம் பகுதி

நூலுக்குரிய பருவ எண்ணிக்கை

பிள்ளைத்தமிழ்களின் பருவ எண்ணிக்கையும் பாடல் எண்ணிக்கையும் அமைந்திருக்கு மாற்றை நோக்குதல் வேண்டும். பிள்ளைத்தமிழின் பருவ அமைப்பு முறைபோலப் பருவ எண்ணிக்கையும் அடிப்படையானது. முதற்கண் பருவ எண்ணிக்கை பற்றிய கருத்துகளும் பின் பாடல் எண்ணிக்கை பற்றிய கருத்துகளும் இங்கு அமைகின்றன.

பருவ எண்ணிக்கை

திவாகரம் ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குப் பன்னிரண்டு பருவங்களும் பெண்பாலுக்குப் பதினான்கு பருவங்களும் வகுத்தன. இந்திரகாளியம், எப்பாற்குரியன என்று சுட்டாது பதினைந்து பருவங்களைப் பகருகிறது. பரணர் பன்னிரு பாட்டியலில் ஆணுக்குப் பத்தும் பெண்ணுக்குப் பன்னிரண்டும் உரைப்பர். பிங்கலம் ஆணுக்குப்பதினான்கும் பெண்ணுக்குப்பதினெட்டும் அமைக்கும். பாரதிதீபம் இருபாலுக்கும் பன்னிருபருவங்கள் என விதிக்கும்

பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன்தோன்றிய நிகண்டுகளும் பாட்டியல்களும் இருபால் பிள்ளைத்தமிழுக்கும் ஒத்த பருவஎண்ணிக்கை சுட்டில. பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றிய பாரதிதீபம் தான் இருபாற்கும் ஒத்த எண்ணிக்கையில் பருவங்களைச் சுட்டுகிறது.

பாடுபொருளுக்கு ஏற்பநூலின் அளவை மாற்றாமல் ஒரே அளவை விதிக்கிறது.

பரணர்தான், முதற்கண் ஆண்பாற்குப் பத்துப் பருவங்கள் என்று வகுத்தார். இவரும் ஆண்பாற் பிள்ளைத்தமிழைவிடப் பெண்பாற்கு மிகுதியான பருவங்கள் வகுத்தார். வெண்பாப் பாட்டியலும், நவநீதப்பாட்டியலும் ஆணுக்குரிய பருவங்களைச் சுட்டி அதில் நீக்கற்குரிய மூன்று பருவங்களை உரைத்துப் பெண்பாற்கு வேண்டிய பருவங்களைப் பேசில. அதனால் பெண்பாலுக்கு ஏழு பருவங்களே என்று கருத நேரிடுகிறது. எனவே ஆண்பாற்குப் பத்துப்பருவங்களும் பெண்பாற்கு ஏழு பருவங்களுமெனக் குறைவாகப் பருவங்களை இவ்விரு பாட்டியல்களும் சுட்டும்.

ஒன்று போலாதல்

பத்துப் பருவங்கள் என்ற வரையறையைப் பரணர் கூறினார். பின் வந்தோர் இருபாற் பிள்ளைத்தமிழும் ஒன்றுபோல அமைதல் வேண்டும் எனக் கருதிப் பெண்பாற்கும் பத்துப்பருவம் என உரைத்தனர்.

இலக்கிய மரபுகள்

தொன்மைத் தமிழ் மரபும் இதற்கு வழிகாட்டியாகும். பத்துப்பாட்டு என்ற சங்க இலக்கியத் தொகுப்பில் பத்துப் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன .பதிற்றுப்பத்தில் பதின்மர் பாடிய பத்துப் பத்துக்கள் இருந்தன. ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு திணையிலும் பத்துப் பத்துக்கள், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரின் பாசுரங்களின் தொகுப்பு பத்து எனப்பெறும். ஒவ்வொரு பத்தும் பத்துத் திருமொழிகளாலானது. தமிழ் நூல்களில் அமைந்த இவ்வமைப்பு பிள்ளைத்தமிழ் அமைப்புக்கும் ஒருதுணையாயிற்று. பதிற்றுப்பத்தில் ஒவ்வொரு பத்தும் பத்துப் பாடல்களால் அமைந்து ஒரு பழமையான அமைப்பை உணர்த்துகிறது..

இலக்கிய உலகில் ஆண்.பெண், இருபாற் பிள்ளைத்தமிழ்கள் இயற்றிய புலவர்களும் ஒத்த எண்ணிக்கையுடைய பருவங்களை அமைத்தனர். குமரகுருபரர், இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர்,வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், ஆகியோரும் பிறரும்[189] இருபாற்கும் பத்துப் பருவங்களே அமைத்தனர்.

பிள்ளைத்தமிழ் பருவங்கள் பத்து என்பது தெளிவான உண்மை. எனினும் சிலர் இம்மரபினை மீறியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இம்மரபு மீறல் தனி விதியாகாமல் புறனடையாகவே திகழ்கிறது.

இருபாற் பிள்ளைத்தமிழ்

பருவ எண்ணிக்கை

	நூல்பெயர்	ஆண்பாற் பிள்ளைத் தமிழ்	பெண்பாற் பிள்ளைத் தமிழ்	குறிப்பு
1.	திவாகரம்	12	14	
2.	இந்திரகாளியம்	15		ஆண், பெண் என்று வேறுபடுத்திக் கூறவில்லை.
3.	பன்னிருபாட்டியல் பரணர்	10	12	
4.	பிங்கலம்	14	18	
5.	பாரதிதீபம்	12	12	
6.	வெண்பாப்பாட்டியல்	10	7	சேர்க்க வேண்டிய மூன்று பருவங்கள் எவை எனக் கூறவில்லை. பத்தில் மூன்றை நீக்குக என்றது. பிற செய்தி இல்லை.
7.	நவநீதப்பாட்டியல்	10	7	
8.	சூடாமணி நிகண்டு	10	10	
9.	பிரபந்த் மரபியல்	10	10	
10.	சிதம்பரப்பாட்டியல்	10	10	
11.	இலக்கணவிளக்கப் பாட்டியல்	10	10	
12.	தொன்னூல் விளக்கம்	10	10	
13.	பிரபந்த தீபிகை	10	10	
14.	பிரபந்த தீபம்	10	10	
15.	முத்துவீரியம்	10	10	
16.	சுவாமிநாதம்	10	10	
17.	பிரபந்தத்திரட்டு	10	10	

நூலுக்குரிய பாடல் எண்ணிக்கை

நிகண்டுகளும் பாட்டியல்களும்

திவாகர பிங்கல சூடாமணி நிகண்டுகளும் பிள்ளைத்தமிழுக்கு எவ்வளவு பாடல்கள் என்று வரையறுக்கவில்லை. இந்திரகாளியம் நூலின் மொத்தப் பாடல்கள் எண்ணிக்கையை உரைத்திலது. இந்நூல் பருவங்களுக்குரிய பாடல் எண்ணிக்கை 1,3,4,7,9,11, எனக் கூறும். ஓர் எண்ணிக்கையில் எல்லாப் பருவங்களிலும் பாக்கள் அமையவேண்டும் என்று இந்நூல் விதி செய்யவில்லை பன்னிருபாட்டியலில் பரணர்,பொய்கையார் ஆகிய இருவரும் நூல் பாடல் அளவு பற்றியாதும் சுட்டிலர். வெண்பாப்பாட்டியலிலும் பாடல் அளவு பற்றிய கருத்து இல்லை

நவநீதப் பாட்டியலாசிரியர் ஐம்பது பாட்டுக்குக் குறைவாகப் பிள்ளைத்தமிழ் பாடக்கூடாது. என்பர்[190] இவ்வாறு இழிவு எல்லை, உரைத்தாரேயன்றி உச்ச எல்லை இயம்பிலர். இந்நூலின் பழைய உரையில் மேற்கோள் காட்டப்பெறும் "செய்யுள் வகைமை" என்ற நூலும் இக்கருத்தினது.[191]

பிரபந்தமரபியல் பா அளவைச் சாதி அடிப்படையில் வரையறுக்கிறது,[192] சிதம்பரப்பாட்டியலும் இலக்கண விளக்கமும் நூலுக்குரிய மொத்தப்பாடல் எண்ணிக்கையைக் கூறில.

தொன்னூல் விளக்கம்[193] முத்துவீரியம்,[194] பிரபந்ததீபம்[195] ஆகியன நூலுக்கு நூறு பாடல்கள் என்று கூறுகின்றன. சுவாமிநாதம், பிரபந்த தீபிகை, பிரபந்தத்திரட்டு ஆகிய மூன்றும் பாடல் எண்ணிக்கையைக் கூறவில்லை.

நிகண்டுகளும் பாட்டியல்களும் பிள்ளைத்தமிழின் அமைப்பைத் தெளிவாகச் சொல்லுகின்றன. ஆனால் நூலில் மொத்தப்பாடல் எண்ணிக்கையை நவநீதப்பாட்டியலும் பிரபந்த மரபியலும் சுட்டின. வேறு நூல்கள் உரைத்தில.

சாதி அடிப்படை

பிள்ளைத்தமிழின் முகப்பில் இன்ன மரபாருக்கு இன்ன வகைப்பாடல் பெய்து வைக்க வேண்டும் என்று பிங்கலம் கூறுகிறது.[196] நூலுக்குரிய பா எண்ணிக்கை பற்றி இந்நிகண்டு சாதி அடிப்படையில் சுட்டவில்லை. ஆனால் பாட்டுடைத்தலைவன் சாதிக்கு ஏற்ப நூலில் பாடல் எண்ணிக்கை வேறுபடும் எனப் பிரபந்தமரபியல் பேசுகிறது.

"இலக்கணத்தில் இத்தகு எண்ணம் நுழைந்தமை, அக்காலச் சமுதாயத்தில் வருணப் பாகுபாட்டிற்கு இருந்தஉயர்வையும் அது பிறவற்றில் செலுத்திய செல்வாக்கையும் காட்டுகின்றது"[197]

அன்றி மேல்மட்டக் குடிமக்களுக்குச் சமுதாயத்திலிருந்த ஆற்றல் வாய்ந்த சொல்லும் அதற்கு அறிவுலகம் அஞ்சி வாழ்ந்து அடங்கிப் போன போக்கும் இதற்குக் காரணங்கள் என்று உணரவேண்டும். மற்றொரு அடிப்படை தொன்று தொட்டு இருந்து வரும் வருணாசிரம தரும முறையாகும்.

நவநீதப்பாட்டியல் சாதி அடிப்படையில் பாடல் எண்ணிக்கையை விதித்திலது. ஆனால் அந்நூலின் இரண்டாவது உரை, கலம்பகம் பற்றிய முப்பத்தைந்தாவது காரிகைக்குப் பிள்ளைத்தமிழ் பற்றி எழுதுகிறது.. அச்செய்தி

"தேவதைகளைப் பாடும் பிள்ளைத் தமிழ்க்கவி நூறுபாடவும், பிரமணருக்குத் தொண்ணூற்றைந்து கவிபாடவும், முடிபுனைந்த மன்னருக்குத் தொண்ணூறு கவிபாடவும், வைசியருக்கு எண்பது கவிபாடவும் இதிற் கீழ்ப்பட்டவர்களுக்கு ஐம்பது, முப்பது பாடவும்.[198]

இக்குறிப்பால் கலம்பகத்திற்குரிய சாதி அடிப்படைப்பாடல் எண்ணிக்கை,பிள்ளைத் தமிழையும் பற்றிக் கொண்டமையை வெளிப்படுத்தும். இவ்வாறே பிரபந்த மரபியலும் கூறுகிறது.

சாதி	நவநீதப்பாட்டியல்	பிரபந்த மரபியல்
தேவதை / தேவர்	100	100
வேதியர்	95	90
மன்னர்	90	80
வைசியர்	80	70
சூத்திரர்	50/30	60

இரண்டையும் ஒப்புநோக்கின், நூறு என்ற அளவிலேயே ஒப்புமை காணப்படுகிறது. பிறவற்றில் இல்லை. நவநீதப் பாட்டியல் கலம்பத்துக்குக் கூறும் அளவையே பிள்ளைத்தமிழுக்கு இவ்வுரையாசிரியர் உரைத்தார்.[199]

சாதிக்கேற்பப் பாடல் எண்ணிக்கையைக் குறித்துக் கொண்டு வரும், இந்நூல் பாடல் எண்ணிக்கை யாங்ஙனம் குறையும் என்று விளக்கவில்லை. நூலுக்குப் பருவம் பத்து என்பதால், பத்தால் வகுத்துப் பருவப்பா எண்ணிக்கையைக் கொள்ளவேண்டும். உயர்ந்தோர் என்பதற்கு ஏற்பப் பாடல்

எண்ணிக்கை கூடுதலாகவும் தாழ்ந்தோர் என்பதற்கேற்பப் பாடல் எண்ணிக்கை குறைவாகவும் அமைந்தன.

> "பிரபந்த மரபியல் தவிரப் பிறபாட்டியல் நூல்களில் தலைமக்களோடு பொருத்திக் கூறப்படும் எண்ணிக்கை வரையறை இல்லை." [200]

சிற்றிலக்கியங்களில் சாதி அடிப்படையில் ,பாடல் எண்ணிக்கை வேறுபடும் நூல் கலம்பகம். எல்லாப் பாட்டியல்களும் கலம்பக இலக்கணத்தில் இக்கருத்தை உரைக்கின்றன, பிரபந்த மரபியல் பிள்ளைத்தமிழில் தேவர், வேதியர், அரசர், வைசியர், சூத்திரர் என்ற ஐந்துவகைப் பாகுபாட்டைக் குறிக்கும். கலம்பகத்தில் இவற்றோடு அரசருக்குப் பின் அமைச்சர் என்பதையும் இணைத்து ஆறுவகைப் பாகுபாட்டை வகுக்கும். பிரபந்த மரபியல் பிள்ளைத்தமிழுக்கும் கலம்பகத்துக்கும் பாடல் எண்ணிக்கை கூறுவது ஒப்பு நோக்கத்தக்கது.

சாதிப்பிரிவு	பிள்ளைத்தமிழ்	கலம்பகம்
தேவர்	100	100
வேதியர்	90	95
அரசர்	80	90
அமைச்சர்	-	70
வைசியர்	70	50
சூத்திரர்	60	30

மொத்த அளவு நூறாக இருக்கும் போது ஓரினத்தார்க்கே பிள்ளைத்தமிழில் ஓர் அளவும் கலம்பகத்தில் வேறோர் அளவும் இருப்பது இக்கொள்கை நடைமுறைக்கு ஒவ்வாது என்பதைக் காட்டும்.[201] பிரபந்த மரபியல் கலம்பகத்திற்கு இக்கொள்கை இருப்பதைக் கண்டு அதனைப் பிள்ளைத்தமிழுக்கும் திணித்திருக்கிறது.

பிரபந்த மரபியல் அனைய சில நூல்கள், சாதியடிப்படையில் பாடல் எண்ணிக்கையைக் கூறினும் புலவர்கள் அம்மரபைப் பின்பற்றிலர். முருகப்ப தேவர் பிள்ளைத்தமிழ் முப்பது பாக்களாலானது . எச்சாதியார்க்கும் இவ்வளவு குறைந்த எண்ணிக்கையைப் பிரபந்த மரபியல் வகுத்திலது. புலவர்கள் கொடையளவையும் பண்பையும் பேணுதலையும் கண்டு மனங்களித்துப் பாடினரேயன்றிச் சாதியறிந்து பாடினாரல்லர். புலவன் கருத்தும் புலமையும் கற்பனையும் புரவல கொடையும் பண்பும் செயல்களும் நூலின் பாடலளவை வரையறுப்பன.

திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ், பருவத்துக்கு ஏழு பாடல்களால் எழுபது பாக்களால் அமைந்த நூல் . இந்நூலின் பதிப்பாசிரியர்,

> **"பிரபந்த மரபியலின் கருத்தை உட்கொண்டு வேளாளான பாட்டுடைத் தலைவனுக்கு 70 பாடல்களைப் படைத்தார் போலும்"** [202]

என்றுக் குறிப்பர். நூலாசிரியர் இன உணர்வால் இவ்வெண்ணிக்கையை வகுத்தார் என்பதற்கு இல்லை. பா எண்ணிக்கை, பாட்டுடைத் தலைவன் இனத்துக்குத் தக அமைந்துள்ளது. இஃது எதிர்பாராது ஏற்பட ஓர் ஒற்றுமையே.

நூலுக்குரிய பாடல் அளவு நூறு. நவநீதப்பாட்டியல் நூலின் பாடல் இழிபெல்லை ஐம்பது பாக்கள் என விதிக்கும். பிரபந்த மரபியல் சாதி அடிப்படையில் தேவர்க்கு நூறும் சூத்திரர்க்கு அறுபதும் என்று உரைப்பதனைச் சாதி அடிப்படையை விடுத்து இழிபெல்லை அறுபது பாட்டு ; உச்ச எல்லை நூறு பாட்டு என்று கொள்ளல் வேண்டும். பிற பாட்டியல்களோ நிகண்டுகளோ நூலுக்குரிய பாடல் எண்ணிக்கையை உரைத்தில.

பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் நூலுக்குப் பத்துப்பாடல்கள் .முப்பது பாடல்கள்; ஐம்பது பாடல்கள், எழுபது பாடல்கள், நூற்றுப்பத்துப் பாடல்கள் என்ற எண்ணிக்கையில் பாடல்கள் அமைந்துள்ளன.

குலோத்துங்கன் பிள்ளைத்தமிழில் 104 பாடல்கள்; சொரூபானந்தர் பிள்ளைத்தமிழில் 66பாக்கள்; மாவைமுருகன் பிள்ளைத்தமிழில் 110 செய்யுள்கள்; பெரியார் பிள்ளைத்தமிழில் 130 பாடல்கள்; இவ்வாறு நூலில் பாடல் எண்ணிக்கை ஒரே அளவினதாய்க் காணப்பட்டிலது.

எண்ணிக்கை கூடுதலுக்கும் குறைதலுக்குமான அடிப்படை

நூலின் மொத்தப்பாடல் எண்ணிக்கை கீழ்க்கண்ட காரணங்களால் கூடுதலாகவோ குறைவாகவோ அமையும்.

1. ஓர் அளவினதாக எல்லாப் பருவங்களிலும் பாடல்கள் அமைந்தால் நூலின் பாடல் அளவு பத்தால் வகுபடத்தக்கதாக விளங்கும்.

2. பருவங்களிடையே ஒருமைப்படாத பா எண்ணிக்கை இருப்பின் நூலின் மொத்தப் பாடல் எண்ணிக்கையும் முழுமை பெறாது. மொத்தத் தொகையைப் பத்தால் வகுத்தால் வரும் எண் பருவப்பா எண்ணிக்கையாகாது .

3. காப்புப் பருவத்துக்கு முன் நூலின் முதற்கண் இடம்பெறும் காப்புப்

பாடலும், இறுதியில் இடம்பெறும் வாழிவிருத்தமும் நூற்பாடல் எண்ணிக்கையை மிகுவிக்கின்றன. அதனால் ஆசிரியர்கள் இப்பாடல்களைக் கணக்கில் சேர்ப்பதில்லை.

4. நூலில் பருவங்கள் கூடும்போது பாடல் எண்ணிக்கையும் கூடுகின்றன .நூலின் பாடல் எண்ணிக்கை, பருவங்களின் எண்ணிக்கை, நூலுக்கு முன் அமையும் பாயிரம், காப்பு ஆகியவற்றைப் பொறுத்தது. பிள்ளைத்தமிழுக்குப் பாடல், நூறு என்பது ஒரு பெரும்பான்மை வழக்கு. நூலுக்கு முன்னும் பின்னும் கூடுதலான பாடல்களை அமைப்போர் தனியே எண்ணிட்டுக் காட்டிப் பருவப் பாடல்களுக்குத் தனி எண்ணிட்டுக் காட்டி மரபைக் காத்து வருகின்றனர் .

பருவங்களுக்குப் பாடல் எண்ணிக்கை

பருவத்திற்குரிய பாடல் அளவினைப் பிள்ளைத்தமிழ் இலக்கணம் கூறும் நூல்கள் வகுத்துள்ளன. திவாகர பிங்கல, சூடாமணி, நிகண்டுகள் பிள்ளைத் தமிழ்ப்பருவங்களுக்கு எவ்வளவு பாடல் என்று வரையறுத்தில. வெண்பாப்பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், சுவாமிநாதம், பிரபந்த தீபிகை பிரபந்தத்திரட்டு ஆகியன பருவப்பாடல் எண்ணிக்கை பற்றிய கருத்தை உரைக்கவில்லை.

பாட்டியல் தரும் கருத்துகள்

இந்திரகாளியம்

இந்திரகாளியம், ஒவ்வொரு பருவத்திலும் ஒன்று, மூன்று, ஏழு, ஒன்பது, பதினொன்று என நெடுவெண்பாக்கள் அமையவேண்டும் எனவும் பகுவத்துக்குப் பதினொரு பாடல்கள் உச்ச எல்லை எனவும் காட்டுகிறது.[203] ஆனால் பிறப்பு, ஒகை, வளர்ச்சி, அச்சமுறுத்தல் என்ற நான்கிற்கும் பாடல் உச்ச எல்லை ஏழு இழிவு எல்லை ஒன்று, புலவர்கள் மூன்று, ஐந்து பாடல்களாலும் இப்பருவத்தைப் பாடுவர். இவ்வாறு கூறி ஒன்பது பதினொன்று பாடல்களால் இந்நான்கு பருவமும் அமையலாகாது என்று கூறும் இந்திரகாளியம்[204]. இந்திரகாளியம் சுட்டும் பாடல் எண்ணிக்கைகள் ஒற்றைப்படையானவை.

பன்னிருபாட்டியல்

பன்னிருபாட்டியலிலுள்ள பரணர் நூற்பா, "ஒன்பது, பதினொன்றென்பது காப்பே"[205] என்பர். பிறப்பருவப் பாடல் எண்ணிக்கையை இவர் குறித்தார் அல்லர்.

பொய்கையார் நூற்பாடல் எண்ணிக்கைக் கூறாமை போலப் பருவப்பாடல் எண்ணிக்கையையும் கூறவில்லை.

நவநீதப் பாட்டியல்

நவநீதப்பாட்டியல், நூலுக்கு ஐம்பது பாடல்கள் குறைந்த எல்லை என வலியுறுத்தலால் பருவத்துக்கு ஐந்து பாடல்கள் என்ற கருத்துப் பெறப்படும்.[206] இந்நூலில் பழைய உரையாசிரியர்.

"பிள்ளைத்தமிழ் பாடுமிடத்துப் பத்துப் பருவத்திலும்
பருவமொன்றுக்கு ஒன்பது பன்னொன்று பாடலாம்" [207]

என்று எழுதினார் . இதற்கு இப்பாட்டியல் காரிகையில் மூலம் இல்லை. இந்நூல் காப்புமாலை என்ற சிற்றிலக்கியத்திற்குப் பிள்ளைத்தமிழுடன் சேர்த்து ஒரு காரிகையில் இலக்கணம் செல்லுகிறது. அதனைத் தழுவி உரையாசிரியர் மேற்காட்டியவாறு விளக்கினார்.

பிள்ளைத்தமிழ் காப்புப்பருவமே தனித்துப் பிரிந்து காப்புமாலையாக வளர்ந்தது. நவநீதப் பாட்டியல் காப்புமாலைக்குரிய பாடல் அளவினைக் காப்புப் பருவம் முதலிய அனைத்துப் பருவங்களுக்கும் கூறியதாக உரையாசிரியர் பொதுமைப்படுத்தினார்,[208] முன்னூல்களும் பின்னூல்களும் இதே கருத்தைச் சுட்டின. இரண்டு கருத்துகளும் ஒற்றுமைப் பட்டிருந்தமையால் நவநீதப்பாட்டியலுரையாசிரியர் இவ்வாறு உரை எழுத நேர்ந்தது.

இலக்கண விளக்கம் காப்புப் பருவத்துக்கு ஒன்பது, பதினொன்று பாடல் அளவு எனச் சுட்டும். பிற பருவங்களுக்குரிய பாடல் எண்ணிக்கையை இந்நூல் குறிக்கவில்லை.[209]

வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கத்தில் .பருவத்துக்குப் பத்துப்பாடல்கள் என்பர்.[210] முத்துவீரியமும் பிரபந்ததீபமும் ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கு இலக்கணம் இயம்பும்போது "பருவத்துக்குப் பத்தாகப் பாடுக" என்றன.[211]

இந்திரகாளியம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்ததீபம் ஆகிய நான்கும் பருவத்துக்குரிய பா எண்ணிக்கையை விவரித்தன.

பன்னிருபாட்டியல் - பரணர் நூற்பாவும் இலக்கண விளக்கமும் காப்புப் பருவப்பாடல் எண்ணிக்கையைத் தெரிவிக்கின்றன. பிற பருவங்கள் பற்றிப் பேசில. எனினும் இவை கூறிய ஒன்பது, பதினொன்று என்ற எண்ணிக்கை இந்திரகாளியம் இயம்பியது. அவ்விலக்கணம் பல்வேறு பா எண்ணிக்கையால் பாட வழி அமைக்கிறது. நிகண்டுகளும் பாட்டியல்களும் கூறிய அனைத்து எண்ணிக்கை வேறுபாடும் இந்திரகாளியத்தின் கருத்தேயாகும்.

பாடல் எண்ணிக்கை

நூல்	நூலின் பா எண்ணிக்கை	பருவப் எண்ணிக்கை	காப்புப் பருவப்	பிறகுறிப்புகள்
1. இந்திரகாளியம்		1, 3, 5, 7, 9 11 என்ற எண் களில் ஏதேனும் அமையும்		பிறப்பு, ஓகை வளர்ச்சி, அச்ச முறுத்தல் என்ற நான்கும் 1, 3 5, 7 என்ற எண்ணில் பாடல் அமையும்
2. பன்னிருபாட்டியல் பரணர்			9, 11 பாடல் பாடலாம்	
3. நவநீதப் பாட்டியல்	இழிபெல்லை 50 பாட்டு			
4. பிரபந்த மரபியல்	தேவர் 100 வேதியர் 90 அரசர் 80 வணிகர் 70 சூத்திரர் 60			
5. இலக்கண விளக்கம்			9, 11	
6. தொன்னூல் விளக்கம்		10 பாடல்		
7. முத்துவீரியம்		10 பாடல்		ஆண்பாற் பிள்ளைத்தமிழ்
98. பிரபந்ததீபம்		10 பாடல்		

இலக்கியம் - பருவப் பாடல் எண்ணிக்கை

மக்கள் பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ்களில் பருவங்கள் தோறும் பாடல்கள் ஒத்த அளவில் அமைத்தல் சிறப்பாகும். ஒவ்வொரு பருவத்திலும் பாடல் எண்ணிக்கை வேறுபட்டால் நூலின் மொத்தப் பாடல் எண்ணிக்கையும் மாறுபடும். பருவத்துக்கொரு பாட்டாக அமைந்த பிள்ளைத்தமிழ் இந்நூற்றாண்டில் மிகுந்தன. மிதிலைப்பட்டி மங்கைப்பாகக் கவிராயர் இயற்றிய சித்திநாயகம் பிள்ளைத்தமிழ் பருவத்துக்கொரு பாடலாக அமைந்தவற்றுள் பழமையானதாகும். பருவத்துக்கு ஒருபாடல் என்பதை ஏற்பின் சேக்கிழார் போன்ற காப்பியப்புலவர்கள் பாடிய பாடல்களும் பிள்ளைத்தமிழாகும்.

மூன்று பாடல்கள்

பருவத்துக்கு மூன்று பாடல்களான நூல்கள் முருகப்ப தேவர் பிள்ளைத்தமிழ், முத்துவீரப்ப சுவாமி பிள்ளைத்தமிழ் என்பன. இவை மிதிலைப்பட்டிக் கவிராயர் மரபைச் சார்ந்தவர்கள் பாடியவை. பருவத்துக்கு மூன்று என்றமையால் நூலுக்கு முப்பது பாடல்கள் ஆயின.

பிள்ளைத்தமிழ்களில் பிற பருவங்களினும் காப்புப் பருவத்தில் ஒரு பாட்டுக் கூடுதலாக இருக்கும். முருகப்பதேவர் பிள்ளைத்தமிழில் காப்பில் ஒரு பாடல் கூடுதலாகி முப்பதொரு பாட்டுள்ளது.

ஐந்து பாடல்கள்

அடிமதிக்குடி ஐயனார் பிள்ளைத்தமிழ்[212] கண்டனூர் நாகலிங்க தேசிகர் பிள்ளைத்தமிழ், சிவஞான சுவாமிகள் பிள்ளைத்தமிழ் ஆகியன பருவத்துக்கு ஐந்து பாடல்களாய் அமைந்தவை. இதனால் நூலுக்கு ஐம்பது பாடலாயிற்று. சிவஞானசுவாமிகள் பிள்ளைத்தமிழ் காப்புப் பருவத்தில் ஒரு பாட்டு மிகுதி. இதனால் நூலின் பாடல் தொகை ஐம்பத்தொன்றாகிறது.

ஏழுபாடல்கள்

பருவத்துக்கு ஏழுபாடலாய் அமைந்தவை சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழும், திருக்குருகூர் வேங்கடநாதன் பிள்ளைத்தமிழும் ஆகும். இதனால் நூலுக்கு எழுபது பாடல்களாகின்றன.

ஒன்பதும் பதினொன்றும்

பருவந்தொறும் ஒன்பதாகவோ பதினொன்றாகவோ பாடிய பிள்ளைத்தமிழ்கள் கிட்டில.

வரையறைக்குள் அடங்காதன

பருவந்தொறும் ஒத்த எண்ணிக்கையில் பாடல் அமைதல் போல ஒவ்வாத எண்ணிக்கையில் பாடல்கள் அமைந்த பிள்ளைத்தமிழ்களும் திகழ்கின்றன. முதல் பிள்ளைத்தமிழான குலோத்துங்கன் பிள்ளைத்தமிழின் பருவப்பாடல்கள் ஓர் எண்ணுக்குள் அடங்கவில்லை. இதில் சிறுபறையில் ஏழும், சிறுதேரில் எட்டும், அம்புலியில் பன்னிரண்டும் ஏனைய பருவங்களில் பதினொன்றுமாகப் பாடல்கள் உள்ளன. பருவந்தொறும் பாடல் எண்ணிக்கை வேறுபடுதலால் நூலின் பாடல் எண்ணிக்கை நூற்றுநான்காக உயர்கிறது,

பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றிய சொரூபானந்தர் பிள்ளைத்தமிழ் காப்புக்கு ஐந்தும் வருகைக்குப் பத்தும் தாலுக்கு ஆறும் சப்பாணிக்கும் செங்கீரைக்கும், எட்டெட்டும் முத்தத்துக்கும், அம்புலிக்கும் ஏழேழும் சிற்றிலுக்கும் சிறுதேருக்கும் சிறுபறைக்கும் ஐந்தைந்தும் என ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்படாமல் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

இந்நூலாசிரியர் தத்துவராயர், ஞானவிநோதன் கலம்பகத்தை மரபுமுறை தவறாமல் பாடியிருக்கிறார். ஆனால் இப்பிள்ளைத்தமிழில் தன் மனம் போன போக்கில் பா அளவை அமைத்துள்ளார். இங்ஙனம் பாடியமைக்கு உரிய அடிப்படை நோக்கம் புலனாகவில்லை. இந்நூலின் மொத்தப் பாடல்கள்அறுபத்தாறு.

இந்திரகாளியம் பாடல் எண்ணிக்கையை ஒற்றைப்படையாகக் கூறியது. அதற்கு மாறாக இந்நூலில் சப்பாணி, செங்கீரை, வருகை, என்ற பருவங்கள் இரட்டைப்படையாக உள்ளன.

முருகன் பிள்ளைத்தமிழ்கள்

பருவத்துக்கு ஒரு பாட்டாய் எழுந்த முருகன் பிள்ளைத்தமிழ், இந்நூற்றாண்டில் தோன்றிய திருப்பழநிமலை முருகன் பிள்ளைத்தமிழ் ஒன்றே.

மூன்று பாடல்கள்

சின்னப்பநாயக்கர் பாடிய பழனிப் பிள்ளைத்தமிழ் பருவத்துக்கு மூன்று பாடல்களைக் கொண்டது. அதற்குப் பொருந்த நூலில் முப்பது பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

ஐந்து பாடல்கள்

தேவைப் பிள்ளைத்தமிழ், பருவத்துக்கு ஐந்து பாடல்களாய் அமைந்துள்ளது. காவை முருகன் பிள்ளைத்தமிழும் இவ்வாறு அமைந்தது. ஆனால் தேவைப்பிள்ளைத்தமிழில் காப்புப் பருவத்தில் ஒருபாடல் மிகுதி. காவை முருகன் பிள்ளைத்தமிழில் ஐந்து பாடல் மிகுதியாகும்.

பிற எண்ணிக்கை

பருவத்துக்கு ஏழும் ஒன்பதுமாகப் பாடல்கள் அமைய முருகனைப் புலவர்கள் பாடிலர்.

மாவை முருகன் பிள்ளைத்தமிழைப் பருவத்துக்குப் பதினொரு பாடலாக ஈழத்து ஆசிரியர் மு.கந்தையா இயற்றியுள்ளார். அதனால் இந்நூலில் நூற்றபப்பத்துப் பாடல்கள் உள்ளன. எஞ்சியவை பருவந்தோறும் பத்துப் பாடல்களாய் நூலுக்கு நூறு பாக்களாய் விளங்குகின்றன.

முருகனைப் பாடிய முதற்பிள்ளைத் தமிழான திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் முத்தம், வருகை, அம்புலி, ஆகிய பருவங்களில் பதினொரு பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. திருவிலஞ்சி முருகன் பிள்ளைத்தமிழில் தால், வருகை, சிற்றில், என்பனவும் திருவேரகம் சுவாமிநாதன் பிள்ளைத்தமிழில் காப்பு, செங்கீரை, தால், என்பனவும் மேற்கூறிய பருவங்கள் தோறும் பதினொரு பாக்களையுடையவை. மூன்று நூல்களிலும் எஞ்சிய பருவங்கள்தோறும் பத்துப் பாடல்கள் இருக்கின்றன.

திருமால் பிள்ளைத்தமிழ்

பருவத்துக்கு ஒரு பாடலாயும் ஏழுபாடலாயும் ஒன்பது பாடலாயும் திருமாலைப் பாடிய நூல்கள் தமிழில் வழங்கவில்லை.

பருவத்துக்கு மூன்று பாடல்களாக முப்பது பாடல்களைத் தன்னகத்துக் கொண்டது. குருவாயூரப்பன் பிள்ளைத்தமிழ்.

அழகர்பிள்ளைத்தமிழும், திருவல்லிக்கேணிப் பெருமான் பிள்ளைமை இன்பமும் பருவந்தோறும் பதினொரு பாடல்களால் அமைந்தவை. ஆழ்வார்கள் பாடிய நெறியைப் பின்பற்றியவை.

வைணவத் திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழில் காப்புப்பருவம் பதினொன்றும் சிறுபறைப்பருவம் ஒன்பதும் பிறபருவங்கள் பத்துமாகப் பாடல்களைப் பெற்றுள்ளன. இஃதோர் குறைப்பிரதி திருவெண்ணெய்நல்லூர் வைகுந்தநாதன்

பிள்ளைத்தமிழ் காப்பில் பதினொன்றும் முத்தத்தில் ஒன்பதும் எஞ்சியவற்றில் பத்துமாகப் பாடல்கள் உள்ளன. அனுமார் பிள்ளைத்தமிழ் சிறுபறைப் பருவம் பதினொரு பாக்களையும் எஞ்சிய பருவங்கள் பத்துப் பாடல்களையும் பெற்றிருக்கின்றன.

விநாயகர் பிள்ளைத்தமிழ்

விநாயகர் பிள்ளைத்தமிழ்களில் திருகலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழில் பருவந்தோறும் பத்துப் பாடல்களையும் சிறுதேர்ப்பருவத்தில் மட்டும் ஆறுபாடல்களையும் உடையது. பிறவிநாயகர் பிள்ளைத்தமிழ் நூல்களில் பருவத்துக்குப் பத்துப்பாக்கள் உள்ளன. அரசாடி கற்பகவிநாயகர் பிள்ளைத்தமிழில் பருவத்துக்குப் ஒரு பாட்டுடையது.

இசுலாமியப்பிள்ளைத்தமிழ்

இசுலாமியப் பிள்ளைத்தமிழ்கள் சைவ, வைணவப் பிள்ளைத்தமிழ்களின் அமைப்பினைப் பின்பற்றின. பருவத்துக்குப் பத்துப்பாட்டு என்பதே அமைப்பு.

நாகூர் செய்யிது சாகுல்அமீதொலிமீரான்சாகிபு ஆண்டவர்கள் பிள்ளைத்தமிழில் காப்புப் பருவத்தில் பன்னிரண்டு பாடல்களும் சிறுதேர்ப் பருவத்தில் பதினொரு பாடல்களும் எஞ்சியவற்றில் பத்துப்பாடல்களும் உள்ளன. பருவத்துக்குப் பத்துப்பாடல்களுக்குக் குறைவாகப் பாடிய பிள்ளைத்தமிழ்கள் வழங்கில.

பெண்பாற் பிள்ளைத்தமிழ்

பெண்பாற் பிள்ளைத்தமிழ்களில் ஒரு பாடலாகப் பாடியவை வாலம் பிள்ளைத் தமிழும் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ் அமுதமாகும். தணிகைக் குமரன்தேவியர் பிள்ளைத்தமிழ் வள்ளி, தெய்வானையைப் பாடிய நூல்; பருவத்துக்கு ஒருபாட்டு; பருவத்திற்கு ஐந்து பாடல்களானது பண்ணாரியம்மை பிள்ளைத்தமிழ்.

பருவத்திற்கு மூன்று, ஏழு, ஒன்பது பதினொன்று என்ற எண்ணிக்கையில் பாடிய நூல்கள் கிட்டில.

பிள்ளைத்மிழ்களில் எஞ்சியவை பருவம்தொறும் பத்துப்பாக்களால் அமைந்தவை.ஆனால் காப்புப் பருவத்தில் பதினொரு பாடல்கள் உள்ள நூல்கள் பலவாம். மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், குலசை அறம்வளர்த்தநாயகி பிள்ளைத்தமிழ், கோயிலூர்,

திருநெல்லையம்மை பிள்ளைத்தமிழ், சாக்கை உமையம்மை பிள்ளைத்தமிழ் தூத்துக்குடி பாகம்பிரியாவம்மை பிள்ளைத்தமிழ், திருச்சுழியல் துணைமாலையம்மை பிள்ளைத்தமிழ், பள்ளத்தூர் அங்கயற்கண்ணம்மை பிள்ளைத்தமிழ், திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ், உறையூர் காந்தியம்மை பிள்ளைத்தமிழ், குடந்தை மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், திருத்தவத்துறைப் பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ் ஆகியன காப்பில் பதினொரு பாடல்கள் உடையவை.

ஆண்பாற் பிள்ளைத்தமிழில்தான் பல்வேறு எண்ணிக்கையில் பருவங்கள் பாடப்பெறுதல் காணப்படுகிறது. பெண்பாற் பிள்ளைத்தமிழில் பருவத்துக்கு ஒரு பாட்டு அன்றேல் பத்துப்பாட்டு என்ற போக்கே நிலவுகிறது.

ஒற்றைப்படை எண்

பருவந்தொறும் பத்துப்பாட்டு என்றாலும் பாட்டியல் அனைத்தும் ஒற்றைப் படையாகவே பாடல் எண்ணிக்கை இருக்கவேண்டும் என உரைக்கிறன.

ஒன்பது இல்லை

ஒற்றைப்படை எண் முறையில் ஒன்பது பாடல்கள் பாடிய நூல் இல்லை. பன்னிருபாட்டியலும் இலக்கண விளக்கமும் காப்புப்பருவத்திற்கு ஒன்பது பதினொன்று என எண்ணிக்கையை வரையறுத்தன.[213]

ஒன்பது பாடல்களால் அமைந்த பிள்ளைத்தமிழ் நூல்கள் இல்லை. ஒன்பது நவகோள்களைக் குறிக்கும் எண். அதனால் அவ்வெண்ணிக்கையில் அச்சங்கொண்டு புலவர்கள் பாடவில்லை.

ஒற்றைப்படையும் இரட்டைப்படையும்

பருவங்களில் அமையும் பாடல் எண்ணிக்கை ஒற்றைப்படையாதல் வேண்டும். "நிலங்கள் பத்து தம்மில் ஒப்புக்கொண்டு பாடுமிடத்து ஒற்றைப்படப் பாடுதல் சிறப்புடைத்து இரட்டிக்கப்பாடுமிடத்தும் ஓசை பெயர்த்துப் பாடுக"[214] இக்கருத்தினைப் பாட்டியல்களோ நிகண்டுகளோ விதித்தில. இக்கருத்து இலக்கண விளக்கம் உரையில்தான் முதன் முதல் காணப்படுகிறது.[215]

தீமைதரும் இரட்டைப்படை

பாட்டியல்கள், பிள்ளைத்தமிழ் பற்றி விளக்கும்போது ஒற்றைப்படை எண்களிலேயே பாடலமையவேண்டும் என வற்புறுத்தும். பன்னிரு பாட்டியல் "மூன்று முதலா மூவேழ் அளவும்"[216] என நவிலும். பிரபந்த மரபியல் மூன்று

முதலிருபத்தொன்றனுள் ஒற்றைப் பெறுமதி கொளலாம்[217] எனவும் இலக்கண விளக்கம் "ஒற்றை பெற்ற முற்றுறு மதியினின்"[218] எனவும் ஒற்றை பெற்ற மாதங்களைப் பாட்டியல்கள் வற்புறுத்துகின்றன.

நூலின் முதன்மொழியை ஒற்றுட்பட எண்ணி மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது எழுத்துகளால் (வியனிலை) அமைத்தல் வேண்டும். இரண்டு, நான்கு, ஆறு, எட்டு எழுத்துகளால் (சமனிலை) அமைக்கக்கூடாது. முதற்சீருக்கு ஒற்றைப்படை எண்ணுள்ளேயே எழுத்துகள் அமைத்தல் வேண்டும் என்பது மரபு.[219]

வயிறு வாய்த்த மகளிரைப் பேற்றுக்காகத் தாய் வீட்டுக்கு அழைக்கும் போது இரட்டித்த திங்களில் அழைக்க மாட்டார்கள். இரட்டைப் படை இரட்டித்துப் போகும் என்ற நம்பிக்கை தமிழரிடை நிலவுகிறது. அதனால் இரட்டைப்படைஎண் தீமைதரும் என்பது புலனாம். இத்தகைய நம்பிக்கை பண்டைய கிரேக்கத்திலும் உலகின் பல நாடுகளிலும் நிலவியது.

> **"அவர்கள் (கிரேக்கர்கள்) இரட்டை எண்கள் வகுபடத் தக்கதன்மை பெற்றுள்ளதால் அதனை வலிமையற்ற பெண் தன்மை கொண்டதாகவும் ஒற்றை எண்கள் வகுபடாத் தன்மை பெற்று விளங்குவதால் அதனை வலிமைமிக்க ஆண்தன்மை கொண்டதாகவும் கருதியுள்ளனர்"[220]**

இரட்டைப்படை எண்கள் தீமை பயக்கும் என்ற நம்பிக்கையால் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களுக்கும் இரட்டைப்படை எண்ணிக்கையில் பாக்கள் அமையலாகாது என்ற எண்ணம் விளங்கிற்று. இவ்வெண்ணம் நூலின் முதற்சீரிலும், பருவங்களைப் பாடும் வயது எல்லையிலும் அமைந்தது.

பாடலளவு சுருங்குதல்

ஓர் இலக்கியம் தோன்றும் காலச்சூழ்நிலைக்கேற்பத் தன் வடிவத்தையும் போக்கையும் பொருளையும் அமைத்துக்கொள்ளும். முன்னைய வடிவம் பின்னாளில் மாறி உருவாகும். பருவத்துக்குப் பத்துப்பாக்கள் என்ற பிள்ளைத்தமிழ் அமைப்பு இவ்விருபதாம் நூற்றாண்டில் ஒரு பாடலாக இருபாடல்களாகச் சுருங்கியது. விரைவும் சுருக்கமும் எளிமையும் விழைந்து விரைந்து செல்லும் தன்மையுள்ள அறிவியல் காலம் இக்காலம். அப்புறவுலகப் போக்கு இலக்கியங்களையும் தாக்குகிறது. சிலேடையும் செறிவுமுடைய பத்துப் பாக்களையுடைய பிள்ளைத்தமிழ் சில பாடல்கள் அளவினாவாய்ச் சுருங்கின.

மக்களைப் பாடிய பிள்ளைத்தமிழ் பருவத்துக்கொரு பாட்டாகவும் நூறு பாட்டாகவும் ஐந்து பாட்டாகவும் ஏழுபாட்டாகவும் பாடிய நூல்களாக உள்ளன. ஆனால் ஒன்பதாகவோ பதினொன்றாகவோ பாடியவை கிட்டில.

தெய்வங்களைப் பாடிய பிள்ளைத்தமிழ்களில் இத்தனை எண்ணிக்கை வேறுபாட்டைக் காணமுடியாது. அம்மையைப் பற்றிய பிள்ளைத்தமிழ்களில் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொரு பாடல்களால் பருவங்களைப் பாடிய நூல்கள் இல்லை.

தெய்வங்களைக் குறைந்த பாக்களால் பாடல் ஆகாது. தெய்வங்களைப் பாடப்பாடக் கருத்து மிஞ்சிமேயன்றி குறையாது. எனவேதான் புலவர்கள் தெய்வங்களைப் பாடும்போது ஓரளவினவாகக் கொண்டு பத்துப் பத்துப்பாக்களாகப் பாடினார்.

நூறுபாடல்களைக் கொண்டிருந்த பிள்ளைத்தமிழ் இன்று பத்துப்பாடல்கள் கொண்ட ஒரு பதிகமாகக் சுருங்கிவிட்டது. இந்த நூற்றாண்டு நூல்கள் சுருக்கமாகவும் எளிமையாகவும் பொருள் எளிதில் புலப்படக் கூடியனவாகவும் இருக்கும் இயற்கையன. பெரிய நூல்களை அச்சிடுவது பொருள் நிலையில் இடர்ப்படானது. தொடர்ந்து செய்யுள்களாலான நூலைப் படிப்போரும் குறைவு. இத்தகைய பொருளியல் காரணங்களாலும் சூழ்நிலைகளாலும் புலவர்கள் பிள்ளைதமிழைச் சுருக்கமாகப் பாடினர்.

பிள்ளைத்தமிழ் ஒரு பெரிய இலக்கியவகை; இதனை மலர்களிலும் இதழ்களிலும் வெளியிட்டால் அஃது அவ்வெளியிட்டு நூலின் பெரும்பகுதியை அடைத்துக்கொள்ளும். மலர்களிலும் பிறவற்றிலும் வெளியிட இவ்விலக்கிய அளவைச் சுருக்கவேண்டியதாயிற்று.

பருவத்துக்கொரு பாட்டாக அமைந்த ம.பொ.சி. பிள்ளைத்தமிழ் ம.பொ.சி.என்ற நூலிலும் (1966) தணிகைக்குமரன் தேவியர் பிள்ளைத்தமிழ் தணிக்கைக்குமரன் பொன்விழா மலரிலும் (1971) நாரா.நாச்சியப்பன் இயற்றிய பிள்ளைத்தமிழ் (1973) இளந்தமிழன் (1973) சனவரி பொங்கல் இதழிலும் வெளிவந்தன. முத்தமிழ்ச் செல்வர் பிள்ளைத்தமிழ் (1980) ரெ.இராமசாமி மணிவிழா மலரில் உள்ளது. கோவைக் கம்பன் கழகம் வெளியிட்ட கம்பன் மலரில் (1981) கம்பன் பிள்ளைத்தமிழ் அமைந்திருக்கிறது. இவை சுருங்கிய அளவினவாய்க் காணப்படுகின்றன.

மேலும் பருவந்தோறும் பத்துப் பாக்கள் அமைகின்றன. பாடும் புலவன் ஒரே கருத்தினைப் பத்துப் பாடல்களாலும் பாடவேண்டும். ஒரே கருத்துத் திரும்பத்திரும்பப் பாடுதல், பாடுதற்குவேண்டிய ஆழ்ந்த புலமை, கற்பனை, மொழிவளம் இன்மை சிலேடை, முதலிய கடுமையான கூறுகளை அமைத்துப் பாடும் மரபு நூறுபாக்களால் அமைந்த பெருநூல்கள் தோன்றாமைக்கு அடிப்படையாகும்.

உரைநடை இலக்கியம் வளர்ந்துவரும் இந்நாளில் செய்யுள் இலக்கியத்தை உணர்ந்து படிக்கும் ஆற்றல் உடையவர்கள் குறைவு. ஒருகாலத்தில் விரிவாகப் பாடியன பின்னாளில் சுருக்கமாகப் பாடப்பெறும். இது தொல்காப்பியர் கூறிய நெறியாம்.[221]

சிவகாமியம்மை பிள்ளைத்தமிழமுது என்ற நூலின் முன்னுரையில்

> **"இன்று அம்மரபிலே நூறு பாடலில் அமைந்தால் எளிமை வேண்டும் உலகிற்குப் படிப்பது அரிதாகுமென்று கருதி இந்நூலினைப் பத்துப் பாடலிலேயே அமைத்தேன்"[222]**

என நூலாசிரியர் எழுதுவர். இஃது ஏற்றுக்கொள்ளத்தக்கது.

முதற் பிள்ளைத்தமிழ் எனக் கருதும் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் தோன்றிய நூற்றாண்டில் எழுந்த திருத்தொண்டர் புராணம் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களை நூலிடையே அமைத்துப் பாடியுள்ளது. அந்நூலில் ஒவ்வொரு பருவமும் ஒவ்வொரு பாடல். இந்நூற்றாண்டில் அம்மரபு தழுவிப் பிள்ளைத்தமிழ் இலக்கியவகை அழியாமல் வாழ்ந்து வருகிறது.

பாடல் எண்ணிக்கையும் நூல்களும்

பருவத்துக்கொரு பாடலாக அமைந்த நூல்கள் (10) பாட்டு	பருவத்துக் மூன்று பாடலாக அமைந்த நூல்கள் (30) பாட்டு	பருவத்து ஐந்து பாடலாக அமைந்தவை (50 பாட்டு)	பருவத்துக்கு ஏழு பாடல்களாக அமைந்தவை (70 பாட்டு)	பத்துக்குப் பதினொரு பாடல்களாக அமைந்தவை (110 பாட்டு)
சித்திநாயகம் பிள்ளைத்தமிழ் இராசாசி பிள்ளைத்தமிழ் ம.பொ.சி. பிள்ளைத்தமிழ் கலைஞர் பிள்ளைத்தமிழ் வேதநாயகர் பிள்ளைத்தமிழ் கதிரேசன் பிள்ளைத்தமிழ் இளங்கோவன் பிள்ளைத்தமிழ் வாலம் பிள்ளைத்தமிழ் திருவைகுந்தம் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழமுது தணிக்கைகுமரன் தேவியர் பிள்ளைத்தமிழ் - வள்ளி தணிக்கைக்குமரன் தேவியர் பிள்ளைத்தமிழ் - தேவசேனை திருப்பழநிமலை முருகன் பிள்ளைத்தமிழ், குப்பன் பிள்ளைத்தமிழ், திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ், திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்	முருகப்பதேவர் பிள்ளைத்தமிழ் முத்துவீரப்ப சுவாமி பிள்ளைத்தமிழ் பழனிப் பிள்ளைத்தமிழ் குருவாயூரப்பன் பிள்ளைத்தமிழ் நாரா. நாச்சியப்பன் பிள்ளைத்தமிழ்	அடிமதிக்குடி ஐயனார் பிள்ளைத்தமிழ் கண்டனூர் நாகலிங்க தேசிகர் பிள்ளைத்தமிழ் சிவஞானசுவாமிகள் பிள்ளைத்தமிழ் தேவைப்பிள்ளைத்தமிழ் மேலைக்கொழுந்து மாமலைக்குமரன் பிள்ளைத்தமிழ், செங்கழு நீர்விநாயகர் பிள்ளைத்தமிழ் பண்ணாரி மாரியம்மை பிள்ளைத்தமிழ்	சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழ் திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ்	மாவை முருகன் பிள்ளைத்தமிழ் அழகர் பிள்ளைத்தமிழ் திருவல்லிக்கேணிப் பெருமான் பிள்ளமை இன்பம்

சான்றெண் விளக்கம்

1 திவாகரமுனிவர்- சேந்தன் திவாகரம் (1958), (சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்), ப. 309

2 மு. அருணாசலம் (1975) - தமிழிலக்கியவரலாறு - ஒன்பதாம் நூற்றாண்டு - முதல்பாகம், (திருச்சிற்றம்பலம், காந்திவித்தியாலயம்), ப.190.

3 திவாகரமுனிவர் - மு நூ , ப. 309

4 மேற்படி, பக். 299-300.

5 பிங்கலமுனிவர்- பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு (1968), (சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்) , நூற்பா எண்.1368.

6 திருவேங்கடபாரதி-பாரதிதீபம் (1980) , மு.சண்முகம்பிள்ளை (பதி) (சென்னை, சென்னை பல்கலைக்கழகம்), கலித்துறை 652-653.

7 மண்டலபுருடர்-சூடாமணி நிகண்டு மூலமும் உரையும் 11, 12., தொகுதிகள் பன்னிரண்டாம் பதிப்பு (1954), (சென்னைப்பட்டணம், வித்யாநுபாலனயந்திர சாலை),தொகுதி, 12, பா. எண்.111, அடி 3

8. சுப்பிரமணிய பாரதியார் - பொருட்டொகை நிகண்டு (ஆண்டு இல்லை), மதுரை, செந்தமிழ்ப்பிரசுரம், நூற்பா எண்.975, அடி 1-2

9. க.ப. அறவாணன், எம்.ஏ., பி.ஓ.எல்., எம்.லிட்., (பதி) - இந்திரகாளியம் (1974), சென்னை, சைன இளைஞர் மன்றம், ப.8

10. ரா.இராகவையங்கார் (பதி) - சங்கத்துச்சான்றோர் இயற்றிய பன்னிரு பாட்டியல் (1904),மதுரை செந்தமிழ் பிரசுரம் 12, தமிழ்சங்க முத்திரா சாலைப் பதிப்பு, நூற்பா எண்.178

10அ கா.ரா.கோவிந்தராசமுதலியார் (பதி) -பன்னிருபாட்டியல் மேற்கோள் சூத்திரங்களுடன் (1963) நூற்பா எண்.101.

11. மு. அருணாசலம் (1975) - தமிழிலக்கிய வரலாறு - ஒன்பதாம் நூற்றாண்டு முதல்பாகம் (மு.நூ) ப. 295

12. வச்சணந்திதேவர்-வச்சணந்திமாலை என்னும் வெண்பாப்பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும் தமிழ்ப்பண்டிதர் கொ.இராமலிங்கத்தம்பிரான் அவர்கள் எழுதிய விளக்கவுரையுடன், (1964) (சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்). செய்யுளியல். 8.

13. நவநீத நடனார் - கலித்துறைப்பாட்டியல் என்னும் நவநீதப்பாட்டியல், எஸ்.கலியாணசுந்தரையர் - எஸ்.ஜி.கணபதிஐயர், (1944) அடையாறு, கலாக்ஷேத்திரம், நூற்பா எண்.29.

14. மு. அருணாசலம் (பதி)-பிரபந்தமரபியல், (1976), (சென்னை, தமிழ்நாடு அரசு), நூற்பா எண்.2.

15. மு. இராகவையங்கார் (பதி) - சிதம்பரப்பாட்டியல் (1911), மதுரை செந்தமிழ்ப் பிரசுரம்., தமிழ்ச்சங்க முத்தாரா சாலைப்பதிப்பு, மரபியல் நூற்பா எண். 27

16. முத்துவேங்கடசுப்பையர் - பிரபந்ததீபிகை (1918-1919), செந்தமிழ் பதினேழாந் தொகுதி, (மதுரைத் தமிழ்ச்சங்க முத்திரா சாலைப் பதிப்பு), ப.156.

17. டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் (பதி) - பிரபந்த தீபம், (1980), சென்னை, தமிழ்ப்பதிப்பகம், ப.66

18. டாக்டர் அன்னிதாமசு (பதி) - பிரபந்தத்திரட்டு (1980), சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், பா, 3.

19. வச்சணந்திதேவர் - வச்சணந்திமாலை என்னும் வெண்பாப்பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும், (மு.நூ) செய்யுளியல். 8, அடி.1.

20. மேற்கூறிய நூல்-ப.29.

21. சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்கள்-ஏழாந்திருமுறை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள்(பதி), (1965),தருமபுரம், ஞானசம்பந்தம் அச்சகம், பா.எண்.350 திருப்புகலூர்ப்பதிகம் முழுமையும் மானிடரைப் பாடாதீர் என்பர், சுந்தரர்.

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூரர் பாடுமின் புலவீர்காள்!

(340 அடி 1-2.)

மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிர திவ்வியப் பிரபந்தம்(1962) சென்னை 1 மணலி லக்ஷ்மண முதலியார் ஸ்பெசிபிக் எண்டோமெண்ட்ஸ். பா எண். 2985 - 2995 நம்மாழ்வார், திருவாய்மொழி மூன்றாம் பத்தின் ஒன்பதாம் திருமொழியில் மக்களைப் பாடாது இறைவனைப் பாடுங்கள் என வலியுறுத்துவர். "வம்மின் புலவீர் நும் மெய் வருத்திக்கைசெய் துய்ம்மினோ, இம்மன்னுலகில் செல்வரிப்போதில்லை

நோக்கினோம், நும்மின் கவிகொண்டு நும்நுமிட்டாதெய்வம் ஏத்தினால் செம்மின் சுடர்முடி என்திருமாலுக்குச் சேருமே " (2990)

22. அம்முவகை அமைப்பு

1	2	3
சிற்றில்	சிறுபறை	சிற்றில்
சிறுபறை	சிற்றில்	சிறுதேர்
சிறுதேர்	சிறுதேர்	சிறுபறை

23. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிர திவ்வியப்பிரபந்தம் (மு.நூ) பா.எண். 44-53, தாலாட்டுப் பற்றியது. அதன்பின்வரும் பா. எண் 64-74 செங்கீரைபற்றியது

24. வச்சணந்தி முனிவர் - வச்சணந்திமாலை என்னும் வெண்பாப்பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும், (முநூ), செய்யுளியல் பா, எண். 8.அடி.1

25. மாவண்ணா தேவராசன், (1973) பெரியார்பிள்ளைத்தமிழ் (சென்னை17, பாரதிநிலையம்), ப.224

26. டாக்டர் மு. வரதராசன் (1979) - இலக்கியமரபு, (சென்னை, தாயகவெளியீடு), ப. 23.

27. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிர திவ்வியப் பிரபந்தம் (மு.நூ) திருமங்கையாழ்வார் பா. எண். 1878-1887, பெரியாழ்வார், பா. எண்.128-138.

28. மு.நூ. -பா எண்.223-233.

29. மு.நூ - பா எண்.139-151.

30. மு.நூ.- பா எண். 182-191

31. க.ப.அறவாணன் (பதி) - இந்திரகாளியம் (மு.நூ) நூற்பா எண்.194.

32. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிர திவ்வியபிரபந்தம், (மு.நூ), பிறப்பு- பா எண். 13-22, ஒகை- மேற்படி 23-43 அச்சமுறுத்தல்- மேற்படி 118-127

33. துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள்-பிரபுலிங்கலீலை, கருப்பக்கிளார் சு.அ.இராமசாமிப்புலவர் அவர்கள் எழுதிய குறிப்புரையுடன் (1969), (சென்னை.சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்), விமலை கதி, பா எண்.41, அடி.4

34. இவை தொடர்நிலைச் செய்யுள்களில் வருவன.

35. புலவர் குழந்தை - இராவணகாவியம் கையறுநிலைப்படலம், பக்.427-428

36. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிர திவ்வியப்பிரபந்தம் (மு.நூ), பா, எண். 13-22

36அ. டாக்டர். உ.வே.சாமிநாதையர் (பதி)- ஸ்ரீ குமாரகுருபரசுவாமிகள் பிரபந்ததிரட்டு, ப.37,செங்கீரையாடுதல் ஒரு நிர்த்த விசேடமென்பர் பெரியவாச்சான் பிள்ளை.

37. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிரதிவ்வியப்பிரபந்தம்(மு.நூ) தாலாட்டு பா எண்.44-53 அம்புலி பா எண்.54-63 செங்கீரை, பா எண்.64-74

38. வித்துவான் தி.பட்டுசாமி ஓதுவர் (பதி) - பெரியபுராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம் (1950) (திருப்பனந்தாள், ஸ்ரீகாசிமடத்து வெளியீடு, திருஞானசம்பந்தர் புராணம் பா எண்.41 ,44, "தாமரைமிசைத்தனி முதற்குழவி என்னத் தூமணி நிரைத்தனி செய் தொட்டில் அமர்வித்தார்" எனவும் "நாயகனைத் தாலாட்டு நலம்பலபா ராட்டினார் " எனவும் இவ்விருபாக்களிலும் சேக்கிழார் பாடுவர். இதன்பின் 45ஆம் பாடலில் செங்கீரையைப் பாடுவர்

39. வித்துவான் திபட்டுச்சாமி ஓதுவார் (பதி) -பெரியபுராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம் (மு.நூ) கண்ணப்பநாயனார் புராணம் பா. எண்.21-22

40. மயிலை மாதவதாஸன் (பதி) -நாலாயிரதிவ்வியப்பிரபந்தம் (மு.நூ), பா எண். 72, அடி.3-4

41. வித்துவான் தி.பட்டுசாமி ஓதுவார் (பதி) - பெரியபுராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம் (மு.நூ), திருஞானசம்பந்தர் புராணம், பாட்டு 45,

42. டி.எம். குமரகுருபரன்பிள்ளை (பதி) - ஸ்ரீ குமாரகுருபரசுவாமிகள் பிரபந்த திரட்டு, 1961, (திருப்பனந்தாள் மடம், திருப்பனந்தாள்) , பா எண். 364 , அடி. 3-4.

43 சே.ரா.சுப்பிரமணியக் கவிராயர் (பதி) - குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், 1961 ; (மதுரை , மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பிரகரம் 12) , பாட்டு 1, அடி 3-4.

44 மகோமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி உ.வே. சாமிநாதையர் (பதி) - ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, (1926) , சென்னைப் பட்டணம் கமர்ஷியல் அச்சு கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது, பா எண். 401 , அடி.2-3.

45 ஸ்ரீஉ.வே.வை.மு.கோபாலக்கிருஷ்ணமாசார்யர் (பதி) - திருக்குறள் பரிமேலழகருரையுடன், 1965 (சென்னை-5, வை.மு.நரசிம்மன்), பா.எண்.66.

46 மஹான்வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் - பழனிப்பிள்ளைத்தமிழ், (1960), வெளியீடு, பழனி, ஸ்ரீ தண்டயுதபாணிசுவாமி கும்பாபிஷேக வெளியீடு, ப .42.

47 திவாகர முனிவர் - சேந்தன் திவாகரம், (மு நூ) , ப 309.

48 பிங்கல முனிவர் - பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு (மு நூ) நூற்பா எண் 1368 , அடி . 7 .

49 டாக்டர் எஸ்.திரிபுரசுந்தரி (1978) - குழந்தையை வளர்ப்பது எப்படி ? (சென்னை - 17, சங்கப்பலகை), ப 186.

50 தி. சு. பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்) , (பதி) , தொல்காப்பியம் 1967, (சென்னை-1 , சைசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்), நூற்பா எண். 1036,அடி.5.

51 டாக்டர் மு. வரதராசன் - இரண்டாவது உலகக் கருத்தரங்கு நிகழ்ச்சிகள்.மூன்றாம்தொகுதி, (சென்னை-34, உலகக் தமிழா ராய்சி நிறுவனம்), ப 72.

52 வித்துவான் தி.பட்டுச்சாமி ஒதுவார் (பதி) - பெரியபுரணம் என்ற வழங்குகிற திருத்தொண்டர் புரணம், (மு நூ) , திருஞானசம்பந்தர் பா எண். 42.

53 குழந்தையைக் கைவீசுமாறு கூறல், சப்பாணி கொட்டுமாறு கூறல், சாய்ந்தாடுமாறு கூறல் ஆகியவை இத்தகைய பயிற்சிகள்.

54. திரிசிரபுரம் -மீனாட்சிசுந்தரம்பிள்ளை, ஸ்ரீசேக்கிழார் பிள்ளைத்தமிழ் , 1966, (திருவாடுதுறை ஆதீன வெளியீடு, திருவாடுதுறை) முகவுரை ப.12

55. Prof. T. Burrow (1968), Collected Papers on Dravidian Linquistics, pp. 260-261. Annamalai University, Annamalai Nagar

56. வித்துவான் தி.பட்டுச்சாமி ஒதுவார் (பதி) .- பெரியபராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர்புராணம் (மு.நூ),பா எண்.47.

57. துறைமங்கலம் சிவப்பிரகாசுவாமிகள் பிரபுலிங்கலீலை (மு.நூ), விமலைகதி, பா.எண்.38.

58. ஆர்த்தர் டி.ஜெர்சில்ட் - குழந்தைஉளவியல் (ஆங்கிலததிலிருந்து மொழிபெயர்த்தவர் கி.ர.அப்புள்ளர்ச்சாரி), 11963, (சென்னை, தமிழ் வெளியீட்டுக் கழகம்), ப.74

59. அருணகிரிநாதர் செகமாயை யுற்றெனக வாழ்வில் எனத் துவங்கும் திருவேகரத்திருப்புகழில் மணிவாயின் முத்தி தரவேணும் என வேண்டுவர். திருப்புகழ் (1974) வெளியிட்டவர் ஜெ.மு.குருநமசிவாயன் பாடல் எண். 229. மற்றும் 152,555, 1139 ஆகிய எண்ணுள்ள பாடல்களையும் காண்க. அவையும் மணிவாயின் முத்தி வேண்டுவன.

60. மயிலை மாதவதாஸன் (பதி) -நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் .(மு.நூ) பா எண். 86-96 தளர்நடைபற்றியது. இதன்பின்வரும் 152-161, 182-201 ஆகியன வாராய் என அமைந்து வருகைப்பருவமாகின்றன.

61. வித்துவான் தி.பட்டுச்சாமி ஓதுவார் (பதி), பெரியபுராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர்புராணம் (மு.நூ), திருஞானசம்பந்தர் புராணம் (மு.நூ), பா எண். 48 வருகைப்பருவம், பா எண்.50 தளர்நடைப்பருவம்.

62. மேலது - மேலது சிறுத்தொண்டர் புராணம், பா எண்.20

63. ஆர்த்தர் டி.ஜெர்சில்ட் - குழந்தை உளவியல் முதற்பகுதி (மு.நூ) ப 163.

64. டாக்டர் சு. காந்தி (1980) - தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் (சென்னை 600 020, அடையாறு) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்),ப.206

65. தமிழ்வாணன் (1968) - ஜோஸ்யம் கற்றுக்கொள்ளுங்கள், (சென்னை 17,லேனா பிரசுரம் ப. 117

66. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிரதிவ்வியப்பிரபந்தம் (மு.நூ) பா எண். 195அடி,1.

67. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிரதிவ்வியப்பிரபந்தம்(மு.நூ) - பா எண் 514-525

68. விதத்துவான் தி.பட்டுசாமி ஓதுவார் (பதி) - பெரியபுராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம், (மு.நூ) கண்ணப்பநாயனார் புராணம் பா எண்.24 திருஞானசம்பந்தநாயனார் புராணம், பா எண் 52.

69. திவாகர முனிவர் - சேந்தன் திவாகரம் (மு.நூ), ப.309 பிங்கல முனிவர் பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு, (மு.நூ) நூற்பா 1368,அடி .13.

70. டாக்டர் ஆர்தர் டி.ஜெர்சில்ட் - குழந்தை உளவியல் முதற்பகுதி, (மு.நூ), ப. 326

71. டாக்டர் அன்னிதாமசு (பதி) - பிரபந்தத்திரட்டு, (மு.நூ) பா எண் 3, அடி,2.

72. வித்துவான் தி.பட்டுசாமி ஒதுவார் (பதி) -பெரியபுராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம் (மு.நூ), திருஞானசம்பந்த நாயனார் புராணம், ப.எண்.52, அடி.1-2

73. சி.கணேசையர் (பதி) - தொல்காப்பியம் பொருளதிகாரம் -முதற்பாகம், முன்னைந்தியல்களும் நச்சினார்க்கினியமும் 1948, சுன்னாகம் திருமகள் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது. ப 294.

73அ. டாக்டர் உ.வேசாமிநாதையர்(பதி) - குறுந்தொகை 1947, பாட்டு எண்91, அடி 1-3. இக்கருத்தினைப் பெரும்பாணாற்றுப்படை (248-249), பட்டினப்பாலை (24-25) கலித்தொகை(81 8-10) மணிமேகலை (7.55-57), திருவாரூர் மும்மணிக் கோனை (22.2) ஆகிய நூல்ககளிலும் காணலாம்

74. வித்துவான் தி.பட்டுச்சாமி ஒதுவார் (பதி) - பெரியபுராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம் (மு.நூ), திருஞானசம்பந்தர் புராணம் பா எண்.52, அடி 1-2.

75. ஆர்தர் டி. ஜெர்சில்ட் - குழந்தை உளவியல் -முதற்பகுதி, (மு.நூ) பக் 170-174, குழந்தைகளிடம் சக்கரம் வைத்த விளையாட்டுச் சாமான்களை உபயோகிப்பதில்முன்னேற்றம் பற்றிய ஆராய்ச்சி ஒன்றை ஜோன்ஸ் என்பவர் செய்தார். குழந்தைகள் பெரியவர்கள் ஆக ஆக மாறிக்கொண்டே வரும் இடப்பெயர்ச்சித் திறமைகள் காரணமாக எற்படும் பிரதிச் செயல்கள் பற்றிய சில உண்மைகளை இந்த ஆராய்ச்சி வெளிப்படுத்துகிறது.. இந்த ஆராய்ச்சிக்கு 21 மாதம் முதல் 48 மாதம்வரை வயதுள்ள 24 குழந்தைகள் பொருளாயினர். வயது ஏற ஏறப் பொம்மை வண்டிகளைச் கையாளுவதில் குழந்தைகள் நல்ல திறமை பெறுகின்றன. இந்தக் குழந்தை உளவியலார் கருத்தும் பாட்டியலார் நான்காண்டு எனச் சிறுதேர்பருவத்துக்கு வரையறை செய்வதும் பொருத்தமாக இருக்கிறது.

76. சிறு குழந்தைகள் ஆரம்பத்தில் பொம்மை வண்டிகளைப் பெரும்பாலும் நடைபழகும் சாதனமாகப் பயன்படுத்தும் என்ற ஆர்தர் டி. ஜெர்சில்ட் கருத்தும் இங்கு ஒப்பிடற்குரியது. குழந்தை உளவியல் - முதற்பகுதி

ப 170 பார்க்கவும். கவிஞர் நாரா. நாச்சியப்பன் தாம்பாடிய பிள்ளைத்தமிழ் நூலின் பதின்மூன்றாம் பருவம் விரைந்து தள்ளுநடைவண்டி என்று தலைப்பிட்டு நடைவண்டியைப் பாடினார். நா. செல்வம் (பதி) - நாச்சியப்பன் பாடல்கள்.

77. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிரதிவ்வியப்பிரபந்தம்.(மு.நூ) பா எண்.139. அடி 3-4

78. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிரதிவ்வியப்பிரபந்தம்(மு.நூ) பா எண் 191, அடி 1-2

79. திருவேங்கடபாரதி - பாரதிதீபம் (மு.நூ) கலித்துறை எண்.652 அடி.14

80. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிரதிவ்வியப்பிரபந்தம் (மு.நூ) பா எண் 182-191

81. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிரதிவ்வியப்பிரபந்தம்(மு.நூ) காதுகுத்தவாராய் என்பன எண்.139-151 நீராட வாராய் என்பன பா.எண். 192-201 உண்ணவாராய் : பா.எண். 192-201.

82. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிர திவ்வியப்பிரபந்தம் (மு.நூ) எண்.118-127

83. மயிலை மாதவதாஸன் (பதி) -நாலாயிர திவ்வியப்பிரபந்தம் (மு.நூ) பா எண். 202-212..

84. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிர திவ்வியப்பிரபந்தம் (மு.நூ) பா எண். 213-222

85. திருவேங்கடபாரதி - பாரதிதீபம் (மு.நூ), கலித்துறை எண் 653, அடி 3.

86. பரிபாடல், (1957), வெளியிடுவோர் எஸ்.ராஜம் 5, தம்புச்செட்டித்தெரு, சென்னை 1, பரிபாடல் எண்11, அடி 88.

87. திருத்தக்கத்தேவர் - சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும், ஏழாம் பதிப்பு (1969) டாக்டர் உ.வே சாமிநாதையர் (பதி) பா எண் 367, அடி 2, 2706, அடி 1.

88. திருவேங்கடபாரதி - பாரதிதீபம் (மு.நூ), கலித்துறை எண்.653 அடி 3.

89. சிவங்கருணாலய பாண்டியப் புலவர் (1937) - திருகதிரகாமப் பிள்ளைத்தமிழ் (கொழும்பு, ராபர்ட் பிரஸ் லிமிடெட் அச்சுக்களரியிற் பதிப்பிக்கப்பட்டது,, முகவுரை ப 11.

90. வித்துவான் தி. பட்டுசாமி ஓதுவார் (பதி) -பெரியபுராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம் (மு.நூ) கண்ணப்பநாயனார் புராணம், பா எண்.27

91. டாக்டர் கு.மோகனராசு (1981) - திருக்குறளில் மரபுகள், (சென்னை, சென்னைப் பல்கலைக் கழகம், தமிழிலக்கியத்துறை), பக் 75-76, (தொல்காப்பிய நூற்பா 541 ,705, 1218, 1219, 1598,)

92. மேலது ப 76.

பத்துப்பாட்டு	10	=	$10 \times 1 = 1 \times 10^1$
அகநானூறு	400	=	$4 \times 10 \times 10 = 4 \times 10^2$
குறுந்தொகை	400	=	$4 \times 10 \times 10 = 4 \times 10^2$
நற்றிணை	400	=	$4 \times 10 \times 10 = 4 \times 10^2$
புறநானூறு	400	=	$4 \times 10 \times 10 = 4 \times 10^2$
ஐங்குறுநூறு	500	=	$5 \times 10 \times 10 = 5 \times 10^2$
பதிற்றுப்பத்து	100	=	$1 \times 10 \times 10 = 1 \times 10^2$
கலித்தொகை	150	=	$15 \times 10 = 15 \times 10^1$
பரிபாடல்	70	=	$7 \times 10 = 7 \times 10^1$

மேற்காட்டிய புள்ளிவிவரங்கள் பத்தின் அடிப்படையில் தொகை செய்ய வேண்டும் எனக்கருதிய தமிழ்ச் சான்றோர்களின் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன எனலாம்.

93. மு.கா.ஜா முஹயித்தின் (1976) பெருமானார் பிள்ளைத்தமிழ் (வெளியிட்டவர் பற்றிய குறிப்பில்லை), நன்றியுரை, ப.4

94. பிறையன்பன், (1961) , கலையும் பண்பும் ,(கண்டி, கிங்ஸிலிப் பதிப்பகம்), பக் 14-15

95. நூலாசிரியர் தெரிவித்தவை. அரைகுறையாக அச்சான நூலின் முற்பகுதியில் ஆய்வாளருக்காக நூலாசிரியர் எழுதிய குறிப்பில் இவை உள்ளன. பெரியார் பிள்ளைத்தமிழ் (1983) அச்சானபோது ப 193இல் கருத்து வேறு நடையில் தரப்பட்டுள்ளது.

96. மேற்படி

97. மாவண்ணா தேவராசன் (1983) -பெரியார் பிள்ளைத்தமிழ், ப.194.

98. மாவண்ணா தேவராசன் (1983) - பெரியார் பிள்ளைத்தமிழ், பா எண். 102, அடி5.

99. மேற்படி பா எண். 106.

100. மேற்படி பா எண்.108

101. மேற்படி பா எண். 110

102. மேற்படி பா எண். 11 அடி 1-3

103. மேற்படி பா எண். 113 அடி 1-2

104. மேற்படி பா எண். 123 அடி 4.

105 நூலாசிரியர் தெரிவித்தவை.

106. கலைவாணன், (1969) - காவை முருகன் பிள்ளைத்தமிழ், திருச்சி-6 கலைவாணன் பதிப்பகம், பாட்டு 46.

107. ஆறுமுகநாவலர் (பதி) - கந்தபுராணம் - உற்பத்திக்காண்டம், தகரேறுபடலம் சென்னைப்பட்டணம், வித்யாநுபாலனயந்திரசாலை, ப 114-116.

108. கலைவாணன் (1969) - காவைமுருகன் பிள்லைத்தமிழ் (மு.நூ), பா எண் 63, அடி 1-3

109. கலைவாணன் (1969) - காவை முருகன் பிள்ளைத்தமிழ் (மு.நூ) , பா எண் 66, அடி 4.

110. மேற்படி பா எண் 67,அடி1-2

111. மேற்படி பா எண் 68, அடி4.

112. மேற்படி பா எண் 69, அடி 4.

113. க.ப. அறவாணன் (பதி) - இந்திரகாளியம் , (1974) (மு.நூ) , நூற்பா 31, அடி 8.

114. சிவங்கருணாலயப் பாண்டியப்புலவர், (18.7.1937), திருக்கதிரகாமப் பிள்ளைத்தமிழ், (கொழும்பு, ராபர்ட் பிரஸ் லிமிடெட் அச்சுக்களரியிற் பதிக்கப்பட்டது), பக் 1-40

115. மேற்படி பக் 5-9, பகுதியில் சுருக்கமே இங்குதரப்பட்டுள்ளது.

116. திவாகர முனிவர் - சேந்தன் திவாகரம், (மு.நூ) பக் 309-310

117. பிங்கல முனிவர் - பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு, (மு.நூ). நூற்பா 1369

118. திருவேங்கட பாரதி - பாரதிதீபம் , (மு.நூ) , கலித்துறை 654.

119. மேற்படி கலித்துறை 654,அடி4.

120. மண்டலபுருடர் - சூடாமணி நிகண்டு மூலமும் உரையும் 11,12, தொகுதிகள், (மு.நூ) நூற்பா 112.

121. ...... பன்னிருபாட்டியல் மேற்கோள் சூத்திரங்களுடனும் - கா.ர. கோவிந்தராச முதலியார் அவர்கள் எழுதிய விளக்கவுரையுடன் மறுபதிப்பு, 1970, நூற்பா எண்.104

122. மேற்படி நூற்பா எண்.105

123. வச்சணந்திதேவர் - வச்சணந்திமாலை என்னும் வெண்பாட்டியலும், வரையறுத்த பாட்டியலும் (மு.நூ, வெண்பா எண்.7, அடி 1-2)

124. மேற்படி - ப 29.

125. நவநீத நடனார் - கலித்துறைப்பாட்டியல் என்னும் நவநீதப் பாட்டியல், (மு. நூ), பக் 23-28

126. டாக்டர் அன்னிதாமசு (பதி) - பிரபந்தத்திரட்டு , (மு.நூ),திரட்டியல் 3, அடி 3-4.

127. புன்னாலைக் கட்டுவன் தமிழ் வித்துவான், பிரம்மஸ்ரீ சி.கணேசயர் அவர்கள் (பதி) - தொல்காப்பியம் பொருளதிகாரம் -முதற்பாகம், முன் ஐந்தியல்களும் நச்சினார்க்கினியமும், 1948,ப 286

128. மேற்படி -ப 294.

129. வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார் (பதி) -பெரியபுராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம் (மு.நூ), தடுத்தாட் கொண்ட புராணம், பா எண். 131 -136.

130. மேற்படி மானக்கஞ்சாறநாயனார் புராணம் , பா எண். 11-14

131. மேற்படி காரைக்காலம்மையார் புராணம், பா எண் 2-5

132. மேற்படி திருஞானசம்பந்தர் புராணம், பா எண் 1040-1048

133. பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற்புராணம் - மதுரைக்காண்டம், 1956. நாவலர் ந .மு வேங்கடசாமி நாட்டார் உரையுடன் (சென்னை, தி.தெ.சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்), தவிதகைப் பிராட்டியார்

திருஅவதாரப்படலம்,பா எண்கள் 19-33

134. சிவப்பிரகாசர் - <u>பிரபுலிங்கலீலை,</u> மாயையின் உற்பத்திகதி, பா எண்கள் 28-29, 45-46, 48, 52-53, அக்கமாதேவி உற்பத்தி கதி, பா எண்.5-8.

135. வீரமாமுனிவர், (1977) - <u>கித்தேரியம்மாள் அம்மானை,</u> (சென்னை-1 தி.தெ. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்). பக்17-18

136. டாக்டர் உ. வே. சாமிநாதையர் - <u>ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம் - முதற்பாகம்,</u> பக் 269-272.

137. தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளை (ஆண்டில்லை) - <u>ஸ்ரீவைஷ்ணவி சந்நிதி முறை - முதற்பாகம்,</u> (திருமுல்லைவாயில்,சன்மார்க்க சங்கம், வைஷ்ணவி ஆலயம்), பா எண் 81-90

138. திவாகரமுனிவர் - <u>சேந்தன் திவாகரம்,</u> "ஆண்டுவரை யகவயிண் முன்னுரைத்தனவும்" (ப.310)

பிங்கல முனிவர் - <u>பிங்கலத்தை என்னும் பிங்கல நிகண்டு</u>

"முன்னுறக் கிளந்த ஆண்டி னாள்வரை
இசைந்தே பாட லிருபாற்கு முரித்தே"

(1368 அடி 20-21)

திருவேங்கடபாரதி-பாரதிதீபம்

"முன்னவை யாண்டின் முடித்தல்"

(654 அடி 1)

139. மயிலை மாதவதாஸன் (பதி) -<u>நாலாயிர திவ்வியப்பிரபந்தம்</u> (மு.நூ), தால், பா எண் 44-53, செங்கீரை பா எண் 64-74. இடையில் அம்புலிப் பருவம்

140. மேகவிடுதூது போலக் கழுதைவிடுதூது - அஃறிணைப் பொருளைத் தூதுவிடுவர். தாங்கள் வளர்க்கும் நாய்க்குட்டியையோ மயிலையோ கன்றினையோ பற்றிப் பிள்ளைத்தமிழ் எவரும் பாடிலர்.

141. கலம்பகத்தில் நந்திக்கலம்பகம், மதுரைக்கலம்பகம், அழகர் கலம்பகம் ஆகியன போலப் பெண்ணைத் தலைவியாக்கித் கலம்பகம் தோன்றவில்லை.கோவை இலக்கியத்தில் பெண்ணுக்குத்தலைமை கொடுத்து நூல் தோன்றவில்லை. பாட்டுடைத் தலைமை பெண்ணுக்குக் கிடையாது. உலாவில், பெண் உலா வந்தாள் என்றும் ஏழு பருவ ஆடவர் கண்டு காமுற்றனர். என்றும் பாடுவது மரபன்று.

142. டாக்டர் உ.வே.சாமிநாதையர் (பதி) புறநானூறு, 1971 , (சென்னை-41, திருவான்மியூர், டாக்டர் உ வே.சாமிநாதையர் நூல்நிலையம்), பாடல் எண் 243.

143. டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம் ஆ.அருளப்பன் (பதி) - தொல்காப்பியம் - சொல்லதிகாரம் உரைக்கோவை -1 .முற்பகுதி (1963) நூற்பா உரை 10.

144. ஆர்தர் டி. ஜெர்சில்ட் - குழந்தை உளவியல் -முதற்பகுதி (மு நூ), ப. 385.

145. டாக்டர் உ.வே.சாமிநாதையர் (பதி) - பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும் 1961, நெடுநல்வாடை, அடி 162-163.

146. மேற்படி நெடுநல்வாடை, அடி 162.

147. டாக்டர் உவே சாமிநாதையர் (பதி) -சிலப்பதிகார முலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், 1960 ஸ்ரீதியாகராச விலாசவெளியீடு, அந்திமாலை சிறப்புச் செய்காதை, அடிகள் 1-4.

148. டாக்டர் ந.வீ.செயராமன் (1981) - பாட்டியலும் இலக்கிய வகைகளும் (சென்னை, இலக்கியப்பதிகம்), ப.372.

149. வில்லி பாரதம், 1959, சென்னை - 1 மர்ரே அண்டு கம்பெனி ,5 தம்புச்செட்டித்தெரு, நிரைமீட்சிப் படலம், பாடல் 135, அடி 3.

150. - தமிழ்லெக்ஸிகன் - இரண்டாம் வால்யூம் - முதற்பகுதி (சென்னைப் பல்களைக்கழக வெளியீடு) ப 1031.

151. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிர திவ்வியப்பிரபந்தம் (மு.நூ) , பாசுரம் 3243 அடி 1.

152. பாவையாடல் - இதனைப் பரவையாடல் எனக்கொண்டு கடலாடலைக் குறிப்பதாகவும் கெள்ளலாம்.

153. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிர திவ்வியபிரபந்தம் (மு.நூ) குழமணன்,பா எண் 3243, பாவை, பா எண் 3244.

154. பரஞ்சோதியார் - திருவிளையாடல்புராணம் - மதுரைக்காண்டம் (மு.நூ) தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்பலம் -பா எண். 33, அடி 3.

155. கி. சந்திரசேகரன் (பதி) - பிள்ளைத்தமிழ்க் கொத்து -1 1956. (சென்னை, சென்னை கவர்மெண்ட் ஓரியண்டல் மானுஸ்கிரப்ட் லைப்ரரி),தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ்,பா எண். 389-391

156. கி. சந்திரசேகரன் (பதி) - பிள்ளைத்தமிழ்க்கொத்து -1, (மு.நூ), புதுவை திரிபுரசுந்தரி பிள்ளைத்தமிழ், பா எண் 514 .

157. காமன்பண்டிகை (ஆசிரியர் பெயரில்லை) கலைக்களஞ்சியம்-மூன்றாவது தொகுதி (1956) (சென்னை-5.) கலைக்களஞ்சிய அலுவலகம், பல்கலைக்கழகக்கட்டடம்), ப. 513.

158. மயிலைமாதவதாஸன் (பதி) - நாலாயிர திவ்வியப்பிரபந்தம், (மு.நூ) பா எண் 504 -513.

159. நா. வரதராஜுலு நாயுடு (பதி) - ஸ்ரீஆண்டாள் பிள்ளைத்தமிழ், காட்டாம்பட்டி அஞ்சல், தாசநாயக்கண்பாளையம், (ஆண்டு இல்லை) பா எண் 107 அடி 2-3.

160. மேற்படி பாடல் 108. அடி 3.

161. டாக்டர் உ.வே.சாமிநாதையர் (பதி) - பட்டினப்பாலை 1961, ஆறாம் பதிப்பு (சென்னை, கபீர் அச்சுக்கடத்தில் பதிப்பிக்கப்பெற்றது) அடி 97-100.

162. பண்டிதர் சு.அருளம்பவனார், பதிற்றுப்பத்து 1960 (யாழ்ப்பாணத்துக் காரைநகர்) அ.சிவானந்தநாதன் அவர்களால் வெளியிடப்பெற்றது.

163. மயிலை மாதவதாஸன் (பதி) - நாலாயிரதிவ்வியப்பிரபந்தம் 1962, (மு.நூ) பா எண் 154, அடி 5-4

164. டாக்டர் எஸ். திரிபுரசுந்தரி (லட்சுமி) - குழந்தையை வளர்ப்பது எப்படி? 1978, (சென்னை -17,28 -சாதுலலாசாலை , தியாகராயநகர்) பக் 311-312 இக்கருத்தினைப் பேராசிரியை ஈ.த. இராஜேஸ்வரி, குழவி உள்ளம் 1950 (சென்னை, சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப்பள்ளிப் பதிப்பு) ப 419 என்ற நூலிலும் வலியுறுத்துகிறார்.

165. வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் (பதி) - சேக்கிழார் பிள்ளைத்தமிழ் மூலமும் விளக்கவுரையும் 1964, (திருப்பேரூர் ஸ்ரீகந்தப்பெருமான் தேவத்தானம், பா 633,.

166. மயிலை மாதவதாஸன் (பதி) நாலாயிரதிவ்வியபிரபந்தம் (மு.நூ) பா எண் 194,அடி 1.

167. டி.எம். குமரகுருபரன்பிள்ளை (பதி) - ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு நான்காம் பதிப்பு, 1961, (திருப்பனந்தாள், ஸ்ரீ காசிமடத்து வெளியீடு), பா எண் 25 மருதநிலச் சிறுமியர் மணல் வீட்டிலே குடிபுகுந்து

சிறு சோறாக்கி விளையாடுதலை இது பாடுகிறது.

மேற்படி பா எண் 426, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில், சிவனுக்கும் உமாதேவிக்கும் அருமைப்பிள்ளை என்றாலும் எங்கள் சிறுசோறு வேண்டின் இடுகின்றோம் ; எளியேம் விளையாடிடத்துச் சிறுகுறும்பு விளைத்தால் பொறுக்கவிதியுண்டோ ? எனக் காட்சி அமைகிறது.

ஸ்ரீ சொக்கலிங்க சிவப்பிரகாச பண்டாரசந்நிதிகள்- திருமுதுகுன்றம் பெரியநாயகியம்மை பிள்ளைத்தமிழ் மூன்றாம் பதிப்பு, 1979, (திருமுதுகுன்றம், ஸ்ரீ குமாரதேவர்மடம்) பா எண்.14, சிறுவீடு கட்டிச் சிறுசாதஞ்சமைத்து , பா எண்.22. "எழிற்கைசேப்பச் சிற்றிலிழைத்து ஏற்கும் நாளிதற்குடிபுகுந்து தூர்க்குஞ்சுவைமாத் தினையரசி சொரிந்து சிறுசோறினிதாக்கி"

168. சங்க இலக்கியங்களில் ஊசல் பற்றிய குறிப்புகள் உள்ளன. (பொருந.30,. நற்றிணை 90:10. 162:9, 286:1, 334:3, 368:2, பதிற்றுப்பத்து , 43.2 கலித்தொகை 37:14 131:11 12, 24, 34, 46, அகநானூறு 20:16 38:8, 68:6, 368:4, 372:7, பழமொழி 140:2, சிலப்பதிகாரம் 29-24-1, 4,5,29.25-4,5 29-26-4,5 மணிமேகலை 19:73. பிற்கால நூல்களிலும் ஊசல் பற்றிய குறிப்புகள் நிறைந்துள்ளன.

169. திவாகரமுனிவர் - சேந்தன் திவாகரம் (மு.நூ) ப 309.

170. டாக்டர் சு.சண்முகசுந்தரம் -அம்மானை-ஓர் ஆய்வு தே.லூர்து (பதி) நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் (20.9.81) (திருநெல்வேலி-7, பாரிவேள் பதிப்பகம்), ப 122.

171. வ.த. சுப்பிரமணியபிள்ளை (பதி) - திருவுத்தரகோசமங்கை மங்களேசுவரி பிள்ளைத்தமிழ் 1901 (சென்னை பண்டித மித்திரயந்திர சாலையிற் பதிப்பித்து) அம்மானைப்பருவம்,பா எண்9.3-4.

172. இப்பிள்ளைத்தமிழ் போல ஸ்ரீசொக்கலிங்க சிவப்பிரகாச பண்டாரசந்நிதிகள் - திருமுதுகுன்றம் பெரியநாயகியம்மை பிள்ளைத்தமிழ் - மூன்றாம் பதிப்பு 1979 (திருமுதுகுன்றம், ஸ்ரீகுமாரதேவர்மடம்) பா எண்72, "செம்பொன்மணி முத்திட்டு இழைத்த பந்ததுவின் செறிந்து நிரைநிரையிற் செல" என்ற மூன்றாம் அடியில் பந்து என அம்மனைக்காய் குறிக்கப்பெறும்.

173. நா. வரதராஜுலு நாயுடு (பதி) - ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத்தமிழ் (மு.நு) பா எண்.85, அடி 4.

174. மேற்படி பா எண். 90,அடி 4.

175. வித்துவான் தி.பட்டுசாமி ஒதுவார் (பதி) -பெரியபுராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம் திருஞானசம்பந்தர் புராணம் பா எண்,1048,அடி 1-3

176. நா. வரதராஜுலு நாயுடு, (பதி) - ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத்தமிழ் (மு .நூ) பா எண்.72,அடி 4.

177. குதலைமொழிப்பருவம், பாவை விளையாடு பருவம், கழங்காடல் பருவம், அம்மானைப்பருவம் என்று அவை பெயரிடப்பெற்றுள்ளன. அந்நூலில் முதற்பக்கம் இல்லை. இப்புத்தகம் கும்பகோணம் சிவகுருநாதன் செந்தமிழ் நூல் நிலையத்திலுள்ளது. இது கி.பி. 1903இல் அச்சிடப்பட்டது.

178. திருப்புகழரசு ஈ.வெ.வேங்கடசுப்ரமணியம் - தணிகைக்குமரன் தேவியர் பிள்ளைத்தமிழ் ஈ.வே. வேங்கடசுப்ரமணியம் (தொகுப்பாசிரியர்), தணிகைக்குமரன் பொன்மலர் (சென்னை-5, ஸ்ரீகுமார தத்துவம் திருக்கைத்திருப்புகழ்ச்சங்கம் 4, முஸபர்ஸங்பக்தூர் தெரு, திருவல்லிக்கேணி), பக் 120-134.

179. நா. செல்வம் (பதி) நாச்சியப்பன் பாடல்கள் (1980) (சென்னை -14, கான்சாலை.), ப. 232,எண்.2,அடி

180. மேற்படி ப 232,பா எண் 3, அடி.4.

181. மேற்படி ப 233, பா எண். 3, அடி.4.

182. மேற்படி ப 235, பா எண்.2., அடி 4. பா எண் 3, அடி 3,

பகுதி மூன்று

நூலுக்குரிய பருவ எண்ணிக்கை

189. ஆண், பெண் இருபாலார்க்கும் பிள்ளைத்தமிழ் பாடிய குமரகுருபரர் மகாகவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, ரா.ம. சொ.சொக்கலிங்கம் செட்டியார், மு.ரா.அருணாசலக்கவிராயர் கவிஞரடிகள் கு.து.அரங்கநாதனார், சேற்றூர் மு.ரா.அருணாசலக்கவிராயர், தவத்திரு கந்தசாமி அடிகள், வித்துவான் நா. கனகராஜையர், காஞ்சி ரா. குப்புஸ்வாமி, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், கோவைக்கவியரசு கு. நடேசக்கவுண்டர் ஆகியோர் ஒத்த எண்ணிக்கையில் பருவங்களை அமைத்தனர்.

190. எஸ்.கலியாணசுந்தரையர் எஸ்.ஜி.கணபதிஐயர்.(பதி)- நவநீதப் பாட்டியல் உரையுடன் (1961) , (சென்னை , உ .வே . சா. நூலகம்), காரிகை எண் 31 அடி 3

191 மேற்படி ப. 27.

192 மு. அருணாசலம் (பதி) - பிரபந்தமரபியல் (மு நூ), நூற்பா 3.

193 வீரமாமுனிவர் - தொன்னூல் விளக்கம் (மு நூ), நூற்பா 257.

194 முத்துவீரிய உபாத்தியாயர் - முத்துவீரியம் (மு நூ), நூற்பா 1039.

195 டாக்டர் ச.வே.சுப்பிரமணியன் (பதி) - பிரபந்ததீபம் (மு நூ), நூற்பா34.4-5.

196 பிங்கல முனிவர் பிங்கலம் (மு நூ), நூற்பா எண். 1363-1366.

197 டாக்டர் ச.வே.சுப்பிரமணியன் (பதி), இலக்கணத்தொகை யாப்பு - பாட்டியல் (மு நூ), ப.500.

198 எஸ்.கலியாணசுந்தரையர் - எஸ்.ஜி.கணபதிஐயர்.(பதி)- நவநீதப் பாட்டியல் உரையுடன் (மு நூ) ப.32.

199 மேற்படி ப. 32.

200 டாடக்டர் ந.வீ. செயராமன் - பாட்டியலும் இலக்கியவகைகளும், (சென்னை-18, இலக்கியப் பதிப்பகம்), பக்.42-43.

கலம்பகம் சாதி அடிப்படையில் தரும் பாடல் எண்ணிக்கை

201

தேவர்	100	100	100	100	100	100	100	100	100	100	100
வேதியர்	95	95	95	95	95	95	90	95	90	95	95 / 90
அரசர்	90	90	90	90	90	90	80	90	80	90	90 / 80
அமைச்சர்	70	80	70	70	70	--	70	80	--	80	70 / 80
வைசியர்	50	70	50	50	50	50	60	70	70	70	50 / 70 / 6
சூத்திரர்	30	50/30	30	30	30	30	50	65	60	20	30 / 50 / 60 / 65 / 20

202 ச.சிவகாமி (பதி), திருக்குருகூர் திருவேங்கட நாதன் பிள்ளைத்தமிழ், 1980, (சென்னை 20, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்), ப 11.

203 டாக்டர் க.ப. அறவாணன் (பதி) -இந்திரகாளியம் (மு.நூ) நூற்பா 32.

204. மேற்படி நூற்பா 32.

205. பன்னிருபாட்டியல் மேற்கோள் சூத்திரங்களுடனும், 1963, திரு கா.ர. கோவிந்தராச முதலியார் அவர்கள் எழுதிய விளக்கவுரையுடனும், (சென்னை-1, தி.தெ.சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்), பரணர் பாடிய, நூற்பா எண்80.

206. எஸ்.கலியாணசுந்தரையர் எஸ். ஜி.கணபதிஐயர் (பதி) - நவநீதப்பாட்டியல் உரையுடன் (மு.நூ), எண் 31,அடி 3.

207. மேற்படி ப 27

208. மேற்படி ப. 27

209. வித்துவான் சோம. இராமலிங்க தேசிகன் (பதி) - இலக்கணவிளக்கம்-பொருளதிகாரம் மூலமும் உரையும் 1941, (வெளியீட்டாளர் பற்றிய குறிப்பு இல்லை), நூற்பா எண்439.

210. வீரமாமுனிவர் - தொன்னூல்விளக்கம், ச.வே.சுப்பிரமணியன் (பதி) 1978 (சென்னை, தமிழ்ப்பதிப்பகம்) நூற்பா எண்257

211. முத்துவீரிய உபாத்தியார்- முத்துவீரியம் (மு.நூ), நூற்பா எண் 1039, டாக்டர் ச.வே.சுப்பிரமணியன் (பதி) - பிரபந்ததீபம் (மு.நூ) நூற்பா எண் 94.4.

212. ஐயனார் பற்றிய பிள்ளைத்தமிழ் எண்ணிக்கைக்காக இங்கு இணைத்து எண்ணப்பெற்றது.

213. பன்னிருபாட்டியல் மேற்கோள் சூத்திரங்களுடன், 1963 (மு.நூ) நூற்பா எண் 80.

214. கே.ஆர்.எஸ். ராஜாராமன் (1960) - பிள்ளைத்தமிழ் கலைக்களஞ்சியம் ஏழாந்தொகுதி, (சென்னை, தமிழ்வளர்ச்சிக்கழகம்) ப.369.

215. வித்துவான் சோம. இராமலிங்கதேசிகன் (பதி) - இலக்கணவிளக்கம் - பொருளதிகாரம் மூலமும் உரையும் (மு.நூ), நூர்பா எண் 439 உரை.

216. பன்னிருபாட்டியல் மேற்கோள் சூத்திரங்களுடன் (மு.நூ) நூற்பா எண்701 அடி 2.

217. மு.அருணாசலம் (பதி) - பிரபந்த மரபியல் (மு.நூ) நூற்பா எண் 2அடி 9-10.

218. வித்துவான் சோம.இராமலிங்கதேசிகன் (பதி) - இலக்கண விளக்கம் - பொருளதிகாரம் மூலமும் உரையும் நூற்பா எண்.437 அடி 2.

219. பன்னிருபாட்டியல் மேற்கோள் சூத்திரங்களுடன் (மு.நூ) நூற்பா 70,வச்சணந்திதேவர் - வச்சணந்திமாலை என்னும் வெண்பாப்பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும் (மு.நூ) முதன் மொழியியல் வெண்பா 5, நவநீத நடனார்.-நவநீதப்பாட்டியல் உரையுடன் (மு.நூ) காரிகை 5, வித்துவான் சோம இராமலிங்கதேசிகன் (பதி) இலக்கணவிளக்கம் -பொருளதிகாரம் மூலமும் உரையும் (மு.நூ) முத்துவீரியம் (யா.ஒ.68) சுவாமிநாதம் (174)ஆகியவற்றிலும் இக்கருத்தினைக் காணலாம்.

220. The New Book of Knowledge, Volume 13 (1973) Grolier Incorporated, New York, p.378.

இம்மேற்கோள் டாக்டர் க.காந்தி-தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் 1980 சென்னை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்),ப 187.

221. தொல்காப்பியர்-தொல்காப்பியம் மூலம்,1967 (சென்னை, தி.தெ.சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்), நூற்பா எண்1597.

222. அடிகள் மாணிக்க வாசகன் - சிவகாமியம்மை பிள்ளைத்தமிழமுது, முன்னுரை.

நான்காம் பகுதி

புதுமைப் பிள்ளைத்தமிழ்கள்

பிள்ளையைப் பாடமை

பிள்ளைத்தமிழ், பெரியவரைக் குழந்தையாகப் பாவித்துப் பாடப் பெறும் கற்பனை இலக்கியவகை. படைப்பாளிகள் வள்ளல்களையும் தலைவர்களையும் புகழாளர்களையும் தெய்வங்களையும் அடியார்களையும் புலவர்களையும் தம் கற்பனையால் குழந்தையாக்கி அவர் தம் பிள்ளைமை விளையாட்டைக் கண்டு கொஞ்சிப் பாவாக வடித்தனர். ஆதலால் பிள்ளைத்தமிழ் பெரியோர்களைப் பாடிய நூல்களாக அமைகின்றனவேயன்றிக் குழந்தைகளைப் பாடியனவாகவில்லை.

பிள்ளைத்தமிழ், குழந்தையைப் பாடும் இலக்கியமாயினும் எந்தப் புலவரும் சிறுகுழந்தையைப் பாடவில்லை. அனைவரும் பெரியவரைக் குழந்தையாகக் கண்டனரேயன்றிக் குழந்தையைப் பிள்ளையாகக் கண்டு பிள்ளைத்தமிழ் பாடிலர். பிள்ளைத்தமிழ் நூல்கள் பிள்ளைமை விளையாட்டுகளை விவரிக்கின்றன. அவ்விளையாட்டுகளைப் பாட்டுடைத் தலைவர்கள் விளையாடுவதாகப் பிள்ளைத்தமிழ் பாடும்.

தத்தித்தத்தி விளையாடும் மழலைச்செல்வத்தைப் பாடவில்லை எனினும் சிறுவராய் விளங்கிய இருவரைப்பாடிய இரண்டு நூல்கள் கிடைத்திருக்கின்றன. இவற்றை ஆசிரியர்கள் பிள்ளைக்கவி எனக் குறித்திருக்கின்றனர். அதன் கருத்து, பிள்ளையைப் பற்றிய கவிகள் என்பதாம். இத்தகைய இரண்டு நூல்கள் இந்நூற்றாண்டில் தோன்றியிருக்கின்றன. இரண்டும் பருவத்துக்கொரு பாட்டாக மரபுவழிப்பருவங்களையுடையன.

கதிரேசன் பிள்ளைக்கவி

காரைக்குடி-முத்துப்பட்டணம் என்ற ஊரில் வாழும் தண்ணீர்மலையான் செட்டியாருக்கும் திருநெல்லையாச்சிக்கும் மைந்தனாகப் பிறந்தவன் கதிரேசன் இவனுடைய மற்றொரு பெயர் தியாகராசன். இக்குழந்தையைப் பாடிய நூலே பிள்ளைக்கவி ; பாட்டுடைத்தலைவன் பெயரோடு இணைத்துக் கதிரேசன் பிள்ளைக்கவி என்று நூலுக்குப் பெயரமைந்தது.

நூலமைப்பு

இந்நூலின்முன் விநாயகர் காப்பாக நூல் இனிது நிறைவேற வெண்பா ஒன்று உளது. பருவத்துக்கு ஒரு பாட்டாகக் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனப்பத்து பருவங்கள் விளங்குகின்றன. பாடல்கள் அனைத்தும் விருத்தப்பாடல்கள்.

நூலின் முதற்பாட்டு, பாட்டுடைத்தலைவனாகிய கதிரேசனைக் காக்குமாறு திருச்செந்தூர் முருகனை வேண்டுகிறது. காப்பின் முதலில் பாட வேண்டிய கடவுள் திருமால். அம்மரபைப்பின்பற்றாது ஆசிரியர் திருச்செந்தூர் முருகனைப் பணிகிறார். முருகன் என்ற பெயரை வெளிப்படக் கூறிலர். பரவை முழங்குஞ் செந்தூரில் பரவவிருந்த பரம்பொருளே என்பர். திருமாலைப் பாடுதற்கு மாறாக இந்த மரபு மாறியிருக்கிறது. பாட்டுடைத்தலைவன் மரபினர் அனைவரும் முருகன் அடியார்கள். சைவசமயச் சார்பும் முருக வணக்கமும் தனவணிகர்க்குரியன. தனவணிகர் திருமாலினும் அவன் மருகனையே மனம் விழைந்து வழிபடுவர். அதனால் அம்மரபைச் சார்ந்த கதிரேசனைப்பாடும்போது ஆசிரியர் முருகனைக் காப்புக் கடவுளாக்கினார். காப்புப்பாட்டில் "பாரிற் பெரிய தனவணிகப் பிறை வளர்க்குங் கருமுகிலே" (ப.53அடி2.) என்ற அடி மேற்காட்டிய உண்மையை வலியுறுத்தும்.

பிள்ளைத்தமிழில் பாட்டுடைத் தலைவனும் அவனுடைய சுற்றத்தாரும் பாடப்பெறுவர். இப்பிள்ளைத்தமிழ் அம்மரபு தழுவிக் கதிரேசன் தாய் தந்தையாரைப் பாடல் தொறும் பாராட்டுகிறது. அம்புலிப் பருவத்தில் சாம பேததான தண்டம் என்ற நால்வகை உத்திகள் அமைந்தில. ஆசையொடு கைநீட்டி அழைக்கின்ற மைந்தனெடு அம்புலி யாட வாவே. (ப 57. அம்புலிப்.அடி 4) என்று இயல்பாகக் கவிஞர் பாடுகிறார்.

பாட்டுடைத்தலைவன்

இப்பிள்ளைக்கவியில் பாட்டுடைத்தலைவனாகிய கதிரேசன் சீரும் சிறப்புகளைவிட அவன் தாய் தந்தையர் பற்றிய பெருமைகளே மிகுந்துள்ளன. கதிரேசன் சிறு குழந்தை, நிறையாட்டை பெற்ற மகவு (மேலது அடி 3) அவனுக்கெனத் தனிப் பெருமையோ வரலாறோ வீரச்சிறப்போ இல்லை. குழந்தையிடம் குழந்தைச் செயல்கள் அன்றி வேறு சிறப்புக்கு இடமில்லை. நூலாசிரியர் பெரியாழ்வார் போல மென்னையான உள்ளம் வாய்த்திருந்தால் குழந்தையையும் அதன் விளையாட்டுகளையும் அனுபவித்துப்பாடுவர். ஆனால் கவிஞரோ அத்தகைய இன்ப இனிய அனுபவங்களைக் காட்சிகளாகப் பாடாது, வெறும் தகவல் அறிவிக்கிற பாடல்களாக நூலை ஆக்கியுள்ளார்.

செய்திகளைத் தெரிவிக்கும் வண்ணம் இவருடைய பாடல்கள் முதற்கண் பாட்டுடைத்தலைவன் சாதியையும், ஊரையும் தந்தை தாயாரையும் பாடி இறுதியில் பருவக் கருத்தைச் சுட்டும்.

எஞ்சல் இலாத பொருள்க ளனைத்தையும்
ஏற்பவர்க் கீந்துவக்கும்
இயலுள வானுயர் தாருவெனப் பொலி
வேய்ந்துல கந்தனிலே - சாதிக்குறிப்பு
தஞ்சமெ னப்புகு வோரை யணைத்தொரு
தாயென வேநின்று
தனவணி கப்பெரு மக்களை யொப்பொடு
தாங்குறு நன்னாட்டில் - ஊர்
கஞ்ச மகட்பெறு காரையில் வாழ்வெழில்
காட்டுதண் ணீர்மலையும்
காதலி நெல்லையு மீன்ற குழந்தையே! - தந்தைதாய்
கண்மணி கதிரேசா!
கொஞ்சுறு மின்மழ லைச்சொல் பொழிந்துங்
கொட்டுக சப்பாணி - பருவக்குறிப்பு

(ப.55.சப்பாணிப்பருவம்)

இவ்வாறு பாட்டுடைத் தலைவனைப் பாடாது வேறுபிற செய்திகளை ஆசிரியர் பாடுவர். நூல் முழுமையும் கதிரேசன் பெற்றோர்களைப் பற்றிய பாராட்டும் போற்றுதல்களும் நிறைந்துள்ளன. நூலாசிரியர் ஈடுபாடு பெற்றோர்களிடம் இருந்ததால் பாடல்களும் அவ்வாறு தோன்றின.

நூல் ஆசிரியர்

இப்பிள்ளைக்கவியை இயற்றியவர் வித்துவான் சுவாமிநாத ஆச்சாரியார். இவரைப்பற்றி வேறு செய்திகள் கிடைக்கவில்லை. இப் புலவருடைய தந்தையார் நீ. கணபதி ஆச்சாரியார். இவர் சாணக்கிய சூத்திரகாவியம் என்ற நூலின் ஆசிரியர், கோட்டாற்றில் வாழ்ந்த புலவர்.

இப்பிள்ளைக்கவி 1953இல் வெளியான "தியாகராஜா அண்ணனும்-கண்ணனும்" என்ற நூலில் அமைந்திருக்கிறது.

இளங்கோவன் பிள்ளைக்கவி

பாடுவார் முத்தப்பசெட்டியார் என்ற அருட்கவிஞர் மரபில் பிறந்தவர் மெ.மு.கரு.முத்தையா செட்டியார் . இவருடைய இரண்டாவது மகன் இளங்கோவன். சிறுவனாகிய இளங்கோவனைப் பாடிய நூல் இளங்கோவன் பிள்ளைளக்கவி. இது பருவத்துக்கொரு பாட்டாகப் பத்துப்பருவத்துக்கும் பாக்களை உடையது.

நூலமைப்பு

நூலுக்கு முன் அமையும் காப்பு இப்பிள்ளைக்கவியில் இல்லை. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனப்பத்து பருவங்கள் நிற்கின்றன. நூலின் முதற்கண் அமையும் காப்பு திருமாலைப் பற்றியதாக வேண்டும். இங்கோ இந்நூல் "செஞ்சுடரை" வணங்குகின்றது. "செந்தண்மையந்தணர்கண் டின்புறு பரம்பொருட் செஞ்சுடரை யஞ்சலிப்பாம்[6]" என்று நூலாசிரியர் பாடுகிறார்.

பிள்ளைத்தமிழில் பாட்டுடைத் தலைவனை அன்றி அவன் சுற்றத்தார்களையும் பாட வேண்டும் என்பது விதி. ஆதலால் பாட்டுடைத் தலைவனின் முன்னோரான பாடுவார் முத்தப்பசெட்டியாரைப் பெரிதும் பாடிப் போற்றுவர். இவர் பதினெட்டாம் நூற்றாண்டில் செட்டிநாட்டில் வாழ்ந்த புலவர்[7]. இப் புலவரை

"காருலவு முகிலெனக் ககனமுறு கதிரெனக்

கலைமகள் விலாசம் என்னக் கவிமாரி பொழிகின்ற

அருள்ஞான சேகரக் கவிராஜ முத்தப்பனார்[8]"

என இந்நூல் பாராட்டும். பாடுவார் முத்தப்பசெட்டியர் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைச் சப்பாணிப் பருவப் பாடலில் நூலாசிரியர் சுட்டியுள்ளார்.

"வேலுக் கவிஞரின் வீட்டுத் தகர்தலை வெட்டக் கவிபாடும்
வெண்பாப் புலிக்கவி கொட்டமடங்க வெடித்தகடாத் தலையைச்
சீலக் கருணையால் ஒட்டப் பாடி ஜெயித்த தமிழ்ச்சிங்கம்
செந்தமிழ் நாவலர் "பாடுவார்" என்னச் சிறப்புறு முத்தப்பன்[9]"

என்பது அப்பகுதி. இந்நிகழ்ச்சி மிதிலைப்பட்டிக் கவிராயர் வீட்டில் நிகழ்ந்ததாகும். வெண்பாப்புலிக் கவிராயர்க்கும் பாடுவார் முத்தப்பசெட்டியார்க்கும் ஒரு காரணமாக போட்டி ஏற்பட்டது . அப்போது ஒருவர் ஆட்டுக்கிடாயின் தலையை வெடிக்கப்பாடுவது என்றும் மற்றவர் ஒட்டப்பாடுவதும் என்றும் முடிவாயிற்று. முத்தப்பர் ஒட்டப்பாடி வெண்பாபுலிக் கவிராயரை வென்றார். இந்நூல் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபின் தலை சிறந்த புலவரான முத்தப்ப செட்டியாரைப் பாராட்டிப் போற்றுகிறது.

பாட்டுடைத் தலைவனுடைய அண்ணன் சிவானந்தன், தம்பி சிவா ஆகியோர் பற்றிய குறிப்பும் நூலில் உண்டு. தாயன்றிப் பெண் உறவினர்களில் உடன்பிறந்த மகளிர் பற்றிய குறிப்புகள் இல்லை.

அம்புலிப் பருவத்தில் நால்வகை உத்திகளில் பேதம் ஒன்றே அமைந்திருக்கின்றது. இங்கு அம்புலிக்கும் இளங்கோவுக்கும் வேற்றுமை கூறிக் கவிஞர் பிற உத்திகளைப் பாடாமல் விடுத்தார்.

பாட்டுடைத் தலைவன்

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் இளங்கோவன். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் பெயர் என்று இப்பெயரை இந்நூல் பாராட்டுகிறது. ஆசிரியர் சிறுதேர் உருட்டி வரும் இளங்கோவனை உதயசூரியனுக்கு ஒப்பிட்டு இரட்டுற மொழிதலாகப் பாட்டை அமைக்கிறார்.

இளஞ்சிறுவன் ஆகையால் இளங்கோவன் பற்றிய மிகுதியான கருத்துகள் இடம் பெற்றில. அவன் பெருமையாக முன்னோர் பெருமைகளும் சாதியார் சிறப்புகளும் இணைத்து இயம்பப்பட்டுள்ளன. நூலாசிரியர் இளங்கோவனைப் பாடுபொருளாக்கிப் பாடுவார் முத்தப்பரையும் அவர் சார்ந்த சமுதாயத்தையும் பாராட்டுகிறார்.

கவிஞரும் கவிதையும்

இளங்கோவன் பிள்ளைக்கவியின் ஆசிரியர் சொ.தேவராயன். இவர் நகரத்தார் மரபைச் சார்ந்தவர். காரைக்குடியில் வாழ்பவர். அவர் பிற்காலத்தில் பாடியது கொப்புடையம்மன் பிள்ளைத் தமிழ். சிறந்த கவிஞர். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸிடம் பேரீடுபாடுடைய இக்கவிஞர், இளங்கோவன் சிறுபறை முழக்கும் ஓசையை,

தேசம் விடுதலை பெற்றிடப்
போர்முழக் கஞ்செய்த வீரன் எம்நேதாஜி
போஸ் தலைமை கொண்ட சேனை
புகலுமொரு ஜெய்ஹிந்த் முழக்கமது போலவே

என உவமிப்பர்.ஆசிரியர் நேதாஜியின் சுதந்திரப்[12] படையைச் சார்ந்தவர். தன்னுடைய நாட்டுணர்வு வெளிப்பட உவமித்தார். சிறந்த சைவப் பற்றும் திருநீற்றுப் பேரன்பும் இந்நூலாசிரியர் சிறுபறை ஒலியைச் "செம்பொனம் பலநாதனார் / செங்கரந் துடியிலெழு பொங்கோதை நாதமென" உவமித்துச் சைவப் பற்றினைக் காட்டுவர். நூலாசிரியன் வாழ்க்கை அனுபவங்கள் நூலில் இடம்பெறுகின்றன.

கதிரேசன் பிள்ளைக்கவி, இளங்கோவன் பிள்ளைக்கவி இரண்டும் பிள்ளைகளையே பாடிய பிள்ளைத்தமிழ்கள். இரண்டும் காரைக்குடி வட்டாரத்தைச் சார்ந்தன. நகரத்தார் மரபினரைப் பாடியவை. இருநூல்களும் பிள்ளைக்கவி எனப் பெயர் பெற்றுள்ளன. இரண்டு நூல்களின் பாட்டுடைத்தலைவன் சிறப்போடு அவன் முன்னோர் பற்றிய சிறப்புகள் இடம் பெற்றுள்ளன. இருபதாம் நூற்றாண்டின் பிள்ளைத் தமிழ் இலக்கிய வரலாற்றில், இவ்விரு நூல்களும் சிறுவர்களைப் பாடி ஒரு புதுமையைத் தோற்றுவித்தன. இவற்றை முன்மாதிரியாகக் கொண்டு வேறு பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்றவில்லை. இவை இரண்டு போல உலகில் இல்லாத மனிதனைப் பாடியது குப்பன்தமிழ்.

குப்பன் பிள்ளைத்தமிழ்

கற்பனைத்தலைவன்

தமிழில் தோன்றிய பிள்ளைத்தமிழ்கள் எல்லாம் உலகில் வாழ்ந்த பெரியோர்களையும் மக்களையும் தெய்வங்களையும் பாடியவை. உலகில் வாழ்ந்திராத ஒரு கற்பனைத்தலைவனைப் படைத்துப் பேராசிரியர், அ.சீநிவாசராகவன் குப்பன் பிள்ளைத்தமிழ் பாடுகிறார். அவர் குப்பனை-கற்பனைத் தலைவனாகப் படைத்து ஏழைகளின் வறுமை வாழ்வையும் வாட்டத்தையும் சித்தரிக்கிறார். வறுமைப்பிடியின் கொடுங்கைகளில் அகப்பட்டு விழிக்கும் பல்லாயிரக்கணக்கான ஏழைகளின் சார்பாளனாகக் குப்பன் உருவாயிருக்கிறான்.

பிள்ளைத்தமிழாசிரியர்கள் பாட்டுடைத்தலைவனையும் அவனுடைய செல்வச் சிறப்பையும் பாடுவது போல இவர் குப்பனையும் அவன் வறுமையையும் திறம்படப் பாடுவர். ஆசிரியர் வறுமையைப் பாடுவதற்குப் பொருந்தும் வண்ணம் அவ்வறியவன் பெயரைக் குப்பன் என்று அமைத்தார். குப்பன் என்றால் குப்பையை உடையவன் என்று ஆகும். இப்பெயரைக் குப்பான் என்றும் ஆசிரியர் குறிக்கிறார்[14]. குப்பான் என்ற சொல்லுக்குக் குப்பை, மூடன் என்று பொருள்.[15] குப்பான், குப்பன் என்ற கற்பனைப் பெயர்கள் வறுமையையும், அறியாமையையும் உணர்த்துகின்றன. ஆசிரியர் இவனைச் சமுதாய விழிப்புணர்வற்றவன் என இப்பெயரால் புலப்படுத்துவர். பல்லாயிரம் ஏழை எளியவர்கள் சார்பாளனை ஒன்றாகத் திரட்டிக் கற்பனை மாந்தனாக்கி, அவனுக்கு ஓர் இலக்கியமாகக் குப்பன் பிள்ளைத்தமிழ் எழுந்திருக்கிறது.

நூலாசிரியர் குப்பன் என்ற பெயரை யாரையும் சுட்டாத பொதுப்பெயர் போலக் கையாளுகிறார். வெள்ளைப்பறவை என்ற தொகுதியிலுள்ள அக்கரைச் சீமை என்ற கவிதையிலும் குப்பன் என்ற பாத்திரத்தைப் படைத்து ஆசிரியர் அயல்நாட்டு மோகத்தைக் கிண்டல் செய்கிறார்.[16]

நூலமைப்பு

பருவ வைப்புமுறை

கற்பனைத் தலைவனைப்பற்றிய இந்நூல் பருவத்துக்கொரு பாடலாக அமைந்திருக்கிறது. இந்நூலாசிரியர் காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, அம்புலி, முத்தம், சிறுபறை, சிற்றில் ஆகிய எட்டுப் பருவங்களைப் பாடியிருக்கிறார். நூலின் முற்பகுதியில் ஒரு வெண்பா காப்புப் பாடலாகும். பருவ வைப்புமுறையில் காப்பு, தால், என்ற முறை உளது. வருகைப்பருவத்தை இவர் பாடவில்லை. ஐந்தாவதாக அமையும் முத்தப்பருவம் அம்புலிப்பருவத்துக்குப்பின் நிறுத்தப்பெற்றுள்ளது. சிற்றில் பருவம் என்பது சிற்றில் சிதைத்தலைப் பேசுகிறது.

சுற்றத்தளவு

பிள்ளைத்தமிழ் பாடும் முறையில் சுற்றத்தளவாகப் பாடவேண்டும் என்பது ஒரு விதி. பாட்டுடைத்தலைவனையன்றி அவன் உறவினர்களையும் பிள்ளைத்தமிழுக்குள் பாடவேண்டும் என்பது இதன் கருத்தாகும். புலவர்கள் தலைவனுடைய தாய், பாட்டன், பாட்டி, ஆகியோரையும் பாடுவர். குழந்தைபாட்டுடைத் தலைமை பெறுதலால் அக்குழந்தையைப்பற்றிய கருத்துகள் குறைவாக இருக்கும். அதனை ஈடுசெய்யச் சுற்றத்தாரைப் பாடுக. என்று விதி வகுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர் தாய், தந்தையர் கலந்து குப்பன் பிறந்தமையைத் தாலப்பருவத்தில் பாடுகிறார்.

தாயும் தந்தையும் ஒருவரையொருவர் கண்டு காதலித்துக் குப்பன் பிறக்கக் காரணமாயினர். இராமனும், சீதையும், காதல் கொண்ட முறையை நூலாசிரியர் பாடுகிறார். மந்திமுகத்துச் சுந்தரி, சாணிமணங்கமழ் மேனியினாள், அவள் மாலை நேரத்தில் ஆலமர நிழலில் வேலி ஓரத்தில் இருந்தாள். எங்கோ கோணமுகச் சொறி கொள்ளியுடன் நொண்டி வந்தான். அவனும் விழித்தான். அவளும் கொல்லெனப் பல்லிளித்தாள். அங்கே காதல் வயப்பட்ட இருவரின் கந்தருவ மணத்தில் தோன்றியவன் குப்பன். காதலுக்கு ஒரு சாட்சியாகப் பிறந்த குப்பனைக் கவிஞர் தாலாட்டிப் பாடுகிறார். இராமனும் சீதையும், கண்ட காதல் முறையைக் கம்பர் பாடிய வகையைப் பாராட்டும் புலவர்களுக்கு ஒட்டாண்டியாய் உழைக்கும் ஏழையின் இழிந்த வாழ்க்கையில் எதிர்பாராதவாறு காதல் முகிழ்த்து மெய்யுறுபுணர்ச்சி, நிகழ்வதை ஆசிரியர் சுட்டுகிறார். அழகனுக்கு ஏற்ற அழகி என்பது போலக் குப்பன் தாய்க்கு ஏற்ற கணவன். அவனுக்குப் பொருத்தமான அழகி அவள். அடுத்தநொடியே உடலுறவு உடன்கருவுறுதல், என்று இப்பிள்ளைத்தமிழ் வறுமையால் வாடும் அடிமைகளின் உடல்தினைவைப் போக்கும் காமச் சுகத்தை - காதல் நிலையை - பிள்ளைப் பேற்றைப் பாடுகிறது.

அம்புலிப்பருவமும் உத்திகளும்

பிள்ளைத்தமிழின் அமைப்பில் அம்புலிப்பருவம் நால்வகை உத்திகளை உடையதாக வேண்டும். பத்துப்பாடல்கள் பாடும்போது இவை அமையப்பாடுவது அருமை. இவரோ மூன்று உத்திகள் அமைய இப்பாடலைப் பாடுகிறார்.

அம்புலிப்பருவம் பிள்ளைத்தமிழ் பாடுவதற்கு அரியபருவம். இப்பருவம் பாடலில் குப்பனைப் போல உனக்கும் அடுபசி இருப்பதால் அவனைப்போல நீயும் உடல் தேய்கிறாய் என ஒப்பும், "மழையால் நனைந்து ஒதுங்கி நின்றால் உன்னை உண்ணும்," எனத் தண்டமும் அமைகிறது. அம்புலிப்பருவத்தில் அதற்குரிய நால்வகை உத்திகளில் மூன்றனை நன்கு அமைத்து ஆசிரியர் பாடுகிறார். பிள்ளைத்தமிழ் அமைப்பில் இச்சிறுநூல் பழைய மரபினைப் பின்பற்றுகிறது.

வறுமைப் பிள்ளைத்தமிழ்

இப்பிள்ளைத்தமிழ் குப்பனைப் பாடுவதைவிட அவன் வறுமையையே விரித்துப்பாடுகிறது. இல்லாத தலைவனின் பொல்லாத வறுமையை எல்லாப் பாக்களிலும் இந்நூல் ஓவியமாக்குகிறது. நூலுக்கு முன் அமையும் கடவுள் வாழ்த்தில் எக்கடவுளின் இயற்பெயரையும் சுட்டாது ஆசிரியர் பொதுப்பெயரால் சுட்டி

"...........நீதான் கைகொடுத்துத் தூக்கி

விடவேண்டும் வெற்றுச்சரடு." [18]

என வேண்டுகிறார்.

காப்பின் முதல் பாடும் கடவுள் திருமால். இங்கோ முதற்கண் வறுமைக்குரிய கடவுளான மூதேவியைக் கடவுளாக்குகிறார். முடியா வறுமை நெடுமுடிவே என வறுமைக்கடவுளை இந்நூல் உருவகிக்கும்.

"எப்போதும் வயிற்றினிலே பசியின் கொள்ளை

எரியுமொரு திருஉனைப்போல் எவர்க்கும் உண்டோ?" [19]

எனக் குப்பன் செல்வத்தைச் சுட்டிப் பாராட்டுகிறது. அம்புலிப் பருவத்தில் அப்பனே சந்திரா, அழகொளிச் சுந்தரா, அடுபசி உனக்கு முண்டோ? என்று பசியைத் தொடர்பு படுத்துகிறது. காப்புப் பருவத்தில் பாடிய மூதேவியே பசிக்குக் கடவுள்.

"இவள் (மூதேவி) வேதத்தில் ஸ்ரீசூக்தத்தில்,
பசிதாகங்களுக்குக் காரணமானவள்." [20]

வறுமையைப் பாடும் பிள்ளைத்தமிழ் மூதேவியைக் காப்புக் கடவுளாக்கியமை பொருத்தமேயாகும். நூற்பொருளுக்குப் பொருந்தக் காப்புப் பாடலும் அமைந்திருக்கிறது.

சிற்றில் பருவத்தில், குப்பன் வறுமை விளங்கிட அவன் சிற்றிலை ஆசிரியர் வருணிக்கிறார்.

"ஊரை விட்டோர் ஓரத்தில்
ஓட்டாஞ் சில்லி கூழாங்கல்
உடைந்த தகரம் இவை திரட்டி
ஓடாய் உழைத்தோம், அவ்வீட்டைச்
சீராய் அமைத்தோம் உனக்காக" [21]

எனச் சிற்றில் அமைப்பை விவரிக்கிறார். பின் "சிற்றில் இல்லாப் பெருந்தவத் தோய்" என அவனை ஆசிரியர் விளக்குகிறார். நூலாசிரியர் குப்பனைப் பாடுவதனிலும் குப்பனைமுன் நிறுத்தி அவன் வறுமையை முழுக்க முழுக்கப்பாடுகிறார்.

அம்புலியை அழைக்கும் கவிஞர், "உன்னை இவன் தீண்டினால் உடன் வரும் புதிய குட்டம்" எனக் குப்பன் நிலையைச் சுட்டி அம்புலியை அச்சுறுத்துகிறார். வறுமையில் வாழும் ஏழை எளியோரின் உடன்பிறந்த தோழல, குட்டநோய் ஆசிரியர் அவன் ஏழ்மையையும் வறுமையையும் அவற்றால் விளைந்த குட்டநோயையும் கூறி வறுமை ஓவியத்தை நன்கு தீட்டுகிறார்.

குப்பபன் வறுமையை விரித்துப் பாடும் இப்பிள்ளைத்தமிழ், அவனுக்குப் பொருள் சேர்க்கும் அறிவாற்றல் இல்லை என்று கூறுகிறது. நெறியல்லா நெறி மேற்கொண்டு முறையற்ற வழியில் பொருள் தேடுவார் பெருஞ்செல்வராய்த் திகழ்கின்றனர். சமுதாய நிலையைக் கண்ட கவிஞர் செல்வரையும் குப்பனையும் ஒப்பிட்டுப் பார்த்து அம்முறையற்ற வழிகளையெல்லாம் குப்பன் கற்றிடவில்லை. என்பர்.[22] அப்பாடலின் முடிவில்,

"காரை ஏது சிமிட்டேது
கல்லும் ஏது கல்லெடுக்கக்
காசும் ஏது கற்கோட்டை
கட்டக் கயமைத் திறனேது? " [23]

எனச் செல்வர்களின் செல்வசேர்க்கைக்கு அடிப்படை கயமைத்திறன் என்று புலனாக்குவர். குப்பன் அறியாமையால் அமைந்த நேர்மையையும் பிறருடைய தாழ்ந்த நடவடிக்கையையும் கடமை, என்ற சொல் காட்டும். குப்பன் ஒழுக்க வாழ்வே வாழ்வுக்கு அடிப்படை என இன்னோர் இடத்தும் சுட்டுகிறார்.

"தில்லு முல்லுச் செய்யாமல்
திருட்டுப்புரட்டுத் தீண்டாமல்
செல்வம் வருமென் றெண்ணிஉயிர்
தீய்க்கப் பிறந்த சீராளா!" [24]

என்பது அப்பகுதி.

பாட்டுடைத்தலைவன் சீரும் சிறப்பும்

குப்பன் பிள்ளைத்தமிழ், வாழ்ந்தோரைப் பாடுதற்கு மாறாக உயிர் வாழாத ஒருவனைப் பாடியநூல், கற்பனைப் பிள்ளைத்தமிழ்; ஆனால் குப்பன் [illegible]வில்லையேயன்றிக் குப்பனைப் போன்ற பல கோடிக்கணக்கான ஏழைமக்கள் [illegible]றக்கிறார்கள். அத்திருக்கூட்டத்தின் மொத்தவடிவாக-தனி ஓர் எடுத்துக்காட்டாகக் குப்பன் கற்பனைப் பெயரால் படைக்கப்பட்டிருக்கிறான். சமுதாயப் பொதுநிலைமனிதனையும் மனித நிலையையும் தனிமனித நிலையில் உருவாக்கிப் பெயரிட்டு அச்சிறுநூலை ஆசிரியர் பாடியிருக்கிறார்.

தமிழ்ச்சாதியில் புரையோடிய வறுமைப் புண்களை அகழ்ந்தெடுத்து உள்ளங்கையிலிட்டு உருப்பெருக்கி ஆடியில் காட்டுமாறு ஆசிரியர் உரைக்கிறார். ஒருபருக்கைச் சோற்றிற்குத் தாளம் போடும் குப்பன் பிறரிடம் இல்லாத செல்வமுடையவன்.

எப்போதும் வயிற்றினிலே பசியின் கொள்ளை
எரியுமொரு திருஉனைப்போல் எவர்க்கும் உண்டோ?

பிறருக்குச் செல்வம் மாடு, மனை, தோப்பு, துரவு, இவனுக்கோ செல்வம் பசி, அச்செல்வத்தைப் பசியின்கொள்ளை என்றும் எரியுமொருதிரு என்றும் கவிஞர் சித்தரிப்பர். திருவள்ளுவர் பசியென்னுந் தீப்பிணி என உருவகித்ததைக் குப்பனுடைய செல்வமாக ஆசிரியர் கண்டார்.[25]

குப்பன் சமுதாயப் போராட்டத்தில் தன் வயிற்றுப்பசியைப் போக்கி உயிர்வாழ உழைப்பதையும் அதனால் கிடைக்கும் ஊதியத்தைப் பெற அவன்படும் அல்லல்களையும் இப்பிள்ளைத்தமிழ் நன்கு சித்திரிக்கிறது.

"பல்லை இளித்துப் பைசாவைப்
பார்க்கத்துடித்துப் பாரத்தைப்
பைதா நெளியும் வரையேற்றிப்
பட்டை உரியும் வெய்யிலிலே
கல்லில் ஏறும் கரட்டுவழி
சுடுகின்ற வண்டியினைக்

கையால் இழுக்கும் தனிப்பெருமை
காண இருக்கும் கண்ணாளா" [26]

"பல்லை இளித்துப் பைசாவைப் பார்க்கத் துடித்து" என அவன் கடின உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெறாமையைச் சுட்டுவர். அதைத் தொடர்ந்து அவனுடைய உழைப்பின் பெருமையையும் அருமையையும் குழந்தை நிலையில் வைத்து எதிர்காலத்தில் காட்டுகிறார். இவ்வாறே குப்பன் செல்வர் வீட்டில் கூடை சுமக்கின்ற பணியையும் செய்வதாய்ப் பாடுகிறார்.[27]

அங்கத இலக்கியம்

நகைப்பும் இகழ்ச்சிக்குறிப்பும் பொருந்தி அங்கத இலக்கணங்களோடு திகழ்வது இப்பிள்ளைத்தமிழ். உண்ண உணவின்றி உழைப்பே உயிராய்த் தவிக்கும் குப்பனுக்கு உடுக்க உடை கிடையாது. கோவணத்தொடு திரியும் குப்பன் தவம் இயற்றும் முனிவனாக ஆசிரியர்க்குக் காட்சியளிக்கிறான்.[28]

இத்தகைய சொல்லோவியங்கள் நகையையும் இகழ்ச்சியையும் விளைத்து நிற்கின்றன டாக்டர் ஜான்சன்.

"கொடுமையையும் மடமையையும் கண்ணோட்டமின்றிச் சாடும்
கவிதையே அங்கதமாகும்" [29]

என்பர். இப்பிள்ளைத்தமிழ், சமுதாயத்தின் மேல்மட்டக் குடிமகன் உழைப்பாளிகளை அழுத்தி அவர்களின் வலிமையையும் உரிமையையும் வாழ்வையும் உறிஞ்சி நிற்கிற கொடுமையை நன்கு எடுத்துக் காட்டுகிறது. தான் சுரண்டலுக்கு ஆட்படுகிறோம் என்று அறியாத எளிய தொழிலாளியின் கடமையைத் தனக்கெனத் தொழிற்சங்கம் அமைத்துப் போராடவேண்டும் என்ற உணர்வற்ற மடமையை ஆசிரியர் நன்கு சாடுகிறார். இவ்வாறு சமுதாயக் குறைகளைச் சுட்டி அங்கதமாக இச்சிறுநூல் திகழ்கிறது.

அரசியல் நையாண்டி

இருபதாம் நூற்றாண்டில் மக்கள் மனத்தையும் கவிஞர்கள் உள்ளத்தையும் கொள்ளை கொண்டிருப்பது தேர்தல் உரிமை. நாட்டின் மக்களாட்சி பெற்ற மாபெரும் செல்வம் தேர்தல் ; இது நாட்டின் வளர்ச்சியையும் பண்பையும் காத்து நிற்பது தேர்தலில் மக்கள் தங்கள் வாக்குரிமையைச் செவ்வனே பயன்படுத்தவில்லை. வாக்காளர் ஏதேனும் பயன் கருதியே வாக்களிப்பர். இந்தியநாட்டின் மக்களாட்சி நிலை இத்தகையதாகும். தேர்தலில் வேட்பாளரும் தங்கள் வலிமைக்கும் எல்லைக்கும் அப்பாற்பட்ட உறுதிமொழிகளை அள்ளி வழங்கி வாக்குப்பெறுவர். இருதிறத்தாரின் குடியாட்சிக்கு ஒவ்வாத அவல

நிலையைக் குப்பனைக்கொண்டு இந்நூல் பாடுகிறது.

"எட்டிப்பிடித்துப் பொன்னாட்டையே - உன்றன்
ஏகபோகமாகச் செய்குவோம்
எங்களுக்கே வோட்டும் போடடா - எனும்
எத்தர்கா சேற்றிசை ஏறுவாய்" [30]

வேட்பாளர் அளவற்ற வாக்குறுதிகளை அள்ளி வழங்கி ஒட்டுக் கேட்பதும் வாக்காளர் வாக்குக்குக் காசுவாங்கி ஒட்டு அளிப்பதும் ஆகிய இழிநிலை அரசியல் நடப்புகளை ஆசிரியர் நையாண்டி செய்கிறார்.

"ஐயநீ பெரும்பறை கொட்டியே அரசியல் அமைதியைக் கலைக்கலாமோ? அடிமை வாக்காளனும் சுதந்திரம் என்று வால் ஆட்டிக் குலைக்கலாமோ?"[31] எனச் சிறுபறைப் பருவத்தில் சிறுபறை முழக்கலை ஆசிரியர் பாடுகிறார். இந்நாட்டு வாக்காளரின் உண்மை நிலையை ஆசிரியர் அடிமை வாக்காளன் எனச் சுட்டுவது அவருடைய நெஞ்சக் குமுறலையும் வேதனையையும் உணர்த்தி நிற்கிறது.

ஏழைமக்கள் எது நடக்கினும் எல்லாம் நன்மைக்கே என்ற கொள்கையினர்; எதனையும் எதிர்க்கவோ மறுக்கவோ துணியார். அதற்கு விதியே காரணம் என்றும் விதிவழி நடக்கும், என்றும் அவர் எண்ணுவர். இத்தகைய குழுவைச் சார்ந்திருக்கும் ஒருவன் குப்பன். அவன் மனப்போக்கை இப்பிள்ளைத்தமிழ்

"எதுவரினும் அதுவிதியே என்று சாயும்
ஏமாப்பில் இணைந்த உனக்கிணையும் உண்டோ?" [32]

எனக் குப்பனை வஞ்சப் புகழ்ச்சியாகப் பாராட்டும். எல்லாவற்றுக்கும் மறுப்பின்றி இசைந்து செல்லும் பண்பைத் தாளம் போடுதல் என இகழ்ச்சியாகப் பிற்கால வாழ்க்கையில் எதற்கும் சரியென்று கூறித்தலையாட்ட இப்போது வழங்குகிறார். சப்பாணி கொட்டிப் பயிலுக என்று சப்பாணி பருவத்தில் கவிஞர் நையாண்டி செய்கிறார்.

கொடிது கொடிது வறுமை கொடிது என அவ்வையார்[33] பாடிய வறுமைக்கொடுமையைப் பழைய இலக்கிய வடிவமான பிள்ளைத்தமிழ் ஆசிரியர் பாடியுள்ளார். இவர் வறுமையை ஒட்ட வழிகளை நாடாது சிந்திக்க வைக்கிறார். அவருடைய நையாண்டி, கொடும்வேல் போல் பாய்ந்து அங்கதமாய் விளங்குகிறது.

"ஒருவனுடைய குறையையோ ஒரு சமூகத்தாரின் குறையையோ, அன்னார் நெஞ்சில் உறுத்தும் வண்ணம் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறுதல் அங்கதமாகும்"[34]

என்றவாறு சமுதாயத்தின் குறையை ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படையாக இப்பிள்ளைத்தமிழ் எடுத்துரைக்கிறது.

இலக்கியக் கிண்டல்

வறுமைக்கோட்டின் உச்ச எல்லையில் வாழும் நனிசிறந்த ஏழைத் தமிழன் ஒருவனை வண்டி இழுக்கும் கூலியை இங்கே பாட்டுடைத் தலைவனாய் ஆக்கி ஆசிரியர் பாடுகிறார். தமிழத்தாத்தா உ.வே.சா ; சி.வை, தாமோதரம் பிள்ளை ஆகியோர் தாம் ஏடு தேடிச் சென்றமையை விவரிப்பர். அவர்கள் போக்கைத் தழுவி இந்நூலாசிரியரும்,

> **"சென்ற கோடை விடுமுறையிலே குப்பனம்பட்டி என்னும் அழகிய ஊருக்கு அடியேன் செல்ல நேர்ந்தது. அங்கே குடிசைகளைவிடக் குட்டிச் சுவர்களே மிகுந்திருந்த சான்றைக் கொண்டு அவ்வூர் மிகப்பழமையானது என்பதூஉம்., சழக்கர் சூழ்ச்சியால் அது இந்த உயரிய நிலைக்கு இறங்கி இருத்தல் வேண்டும் என்பதூஉம், அடியேனுக்கு உடனடியாகப் புலனாயின."[35]**

எனப் பதிப்பாசிரியர் போல் எழுதி நகைப்பை மூட்டுவர்.

ஆசிரியர் ஏட்டுச்சுவடி எடுத்த இடம் பேரறிஞர், திருவாளர் நூற்கரையாளர் குடிசை; நூலாசிரியர் "எரிகொள்ளிவாய்க் கவிராயர்"; பாடவேற்றுமை குறித்தவர் மு.தே.கொ.வெ. (முதுதேட்கொடுக்கு வெட்டுக்கிளியார்) ; பதிப்பாசிரியர் பரதை பாய்மேல் அழகன் ; ஆண்டு பஞ்சத்தாண்டு; இங்ஙனம் நூலின் முன்னுரையில் ஒவ்வொன்றையும் கிண்டலாகவும், கேலியாகவும் நகைப்புத் தோன்ற இவர் தமிழ்ப்புலவர்களை நகையாடுவது போல எழுதுகிறார். இம்முன்னுரையில் ஒவ்வொரு தொடரும் பழம் புலவர்களையும் பதிப்பாசிரியர்களையும் நினைவூட்டிச் சிரிப்பை விளைக்கிறது. நூலில் தமிழ்ப்புலவர்களையோ பதிப்பாசிரியர்களையோ நையாண்டி செய்த குறிப்புக் கிடையாது.

ஏழை ஒருவனைக் கண்டதும் கவிஞரின் அன்புள்ளத்தின் எழுச்சி, அவன் கலை உணர்வைத் தாக்கித் தனிமனிதனும் சமுதாயமும் ஏழையின் வறுமையைத் துடைக்காமை கண்டு கொதிக்கிறது. கவிஞருடைய சிந்தனைகளும் உணர்ச்சிகளும் ஆத்திரத்துடன் கவிதையாக உருப்பெற்றுள்ளன. இங்கே குப்பன் வெறும் உணர்ச்சி வெளிப்பாட்டிற்குக் காரணமான ஒரு கருவியே அன்றி வேறல்லன். இப்பிள்ளைத் தமிழ் வெறும் வறுமைச் சித்திரிப்பாகவும் வறுமைக் காரணங்களையும் எடுத்துக்காட்டுவதாகவும் அமைகிறது. ஆனால் வறுமையை விரட்டவோ நீக்கவோ சிக்கலுக்குரிய விடையோ தீர்வோ கூறிற்றிலது.

போலிப்போர்வையால் பழமையாக்கல்

ஆசிரியர் இப்பிள்ளைத்தமிழ் குப்பனம்பட்டி என்னும் அழகிய ஊரில் திருவாளர் நூற்கரையாளர் குடிசைப் பரணில் பழஞ்சுவடிகளிலிருந்து கண்டெடுத்ததாக முன்னுரையில் உரைப்பர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மருமக்கள் வழிமான்மியத்தை வெளியிட்டதை மனத்தில் இருத்தி இவ்வாறு இவர் கற்பனை வரலாற்றை உருவாக்குகிறார். பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை,

"பத்திரிகையில் ஆசிரியர் பெயரோடு மான்மியம் வெளிவரவில்லை. ஏட்டுச்சுவடிகளில் இருந்த நூலை அச்சிற்பதிக்கிற பாவனையிலே வெளியாகிக் கொண்டிருந்தது. ஆசிரியர் பெயர் காணப் பெறாவிட்டாலும், பழைய நூல் என்ற தோற்றத்தோடு பிரசுரமாகியபோதிலும், இத்தோற்றத்தை உறுதிப் படுத்துவதற்கு நூலிலும் சிற்றில வரிகளும் சொற்களும் பொடிந்து போயின என்று குறிப்பிட்டிருந்த(து)[36]" என மருமக்கள் வழிமான்மியம் பற்றிக் குறிப்பிடுவர். இப்பிள்ளைத்தமிழாசிரியரும் இதே முறையில் குப்பன் பிள்ளைத்தமிழையும் பழந்தமிழ் நூல் என்ற போலிப் போர்வை போர்த்து வெளிப்படுத்துகிறார்.

பருவப்பாடல்களில் பாடல் அடிகளையோ சீர்களையோ எழுத்துகளையோ பொடிந்து போயின என்று புள்ளியிட்டுக் காட்டவில்லை. எனினும் இவர் இச்சிறுநூலின் இறுதியில் சிறுகுறிப்பு ஒன்று அமைக்கிறார்.

"சிறுதேர்ப்பருவம் கறையானுக்கு இரையாகிவிட்டது என்று ஊகிக்க வேண்டி உள்ளது[37]" என்று ஒருபருவப்பாட்டையே மறைத்துவிட்டார். வருகைப் பருவத்தை இவர் நூலில் பாடியவர் இவ்வாறு போலியான ஒரு வரலாற்றைத் தம் நூலுக்கு ஆசிரியர் அமைத்திருக்கிறார்.

கவிமணி சி.தேசிகவிநாயகம்பிள்ளை நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் சமுதாய சீர்திருத்தம் கருதிக் கையாண்ட இவ்விலக்கியவுத்தியைக் குப்பன் பிள்ளைத்தமிழ் வெளியீட்டுக்கும் ஆசிரியர் கையாண்டார். கவிமணியின் இலக்கிய முயற்சி சமுதாயச் சீர்திருத்தத்திற்கு வழிவகுத்தது.

> **"நாஞ்சில் நாட்டு வேளாளரின் தாயமுறைச் சீர்திருத்த சட்டமானது திருவிதாங்கூர் சட்டசபையில் 1926ஆம் ஆண்டு (கொல்லம் ஆண்டு 1101) நிறைவேற்றப்பட்டது[38]"**

இத்தகைய வெற்றி குப்பன் பிள்ளைத்தமிழுக்குக் கிட்டிலது.

கவிமணியின் இனிய நடையும் எளிமையும் ஆசிரியரிடம் உண்டு. பேராசிரியரின் பாடுபொருள் வறுமையொழிப்பு, இது பொருளாதார மேம்பாட்டொடு தொடர்புடையது. இந்நாட்டில் பெரும்பான்மைக்குடிமக்களின் வழிவழித் திருச்செல்வம் வறுமையின்றிப் பிறிதில்லை. வறுமையை வளர்ப்போரையும்

வாழ்விப்போரையும் சற்றே சாடுகிறார். சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டிய வறுமையாளர்களிடமும் இக்கவிதை உலவவில்லை. தங்கள் கவலை வாழ்வுக்கும் வறுமை உறவுக்கும் காரணமானவர்களைக் கண்டு கொள்ள முடியாமல் தினமும் ஏழைகள் தாங்களாக விழித்தெழுந்தால்தான் வறுமையை வெருட்ட முடியும். அன்றிக் கவிஞர்களின் வறுமைப் படப்பிடிப்பும் சொல்விளையாட்டும் ஒருநாளும் வறுமையை ஒட்டமுடியாது. ஆதலின் ஆசிரியரின் குப்பன் பிள்ளைத்தமிழ் , மருமக்கள் வழிமான்மியம்போலச் சமுதாயத்தில் எவ்வகைப் பாதிப்பையும் உண்டாக்கவில்லை.

நடப்பியல்

கவிஞர் மேல்மட்டக் குடிமகனாக வாழ்ந்தும் அடிமட்டக் குப்பன் வறுமை வாழ்வை நன்கு சித்தரிக்கிறார். குப்பனுடைய சேரி வாழ்வையும் எச்சில் இலை பொறுக்கலையும் சுண்ணாம்புக்காரை தடவி வெற்றிலை போடுதலையும் உண்மையியலுக்கு ஏற்பப் பாடுகிறார். கற்பனையோ புனைவோ இன்றிப்பாடல்கள் அமைகின்றன. ஆசிரியர் குப்பனை மிக அழுத்தமான வறுமைப் பாத்திரமாகப் படைத்திருக்கிறார். உண்மையியலை முழுக்கப் பின்பற்றி இப்பிள்ளைத்தமிழ் திகழ்கிறது.

குப்பன் தாயும் தந்தையும் காதலித்த காட்சியைக் கந்தருவமாக ஆசிரியர் புனைவது இகழ்ச்சியும் நகைப்பும் தருகிறது. பாட்டாளி ஆண் - பெண்களிடையே நடக்கும் உடலுறவினை நனிசிறந்தவாறு உலகில் நடைபெறுமாறு இவர் சித்திரிக்கிறார். இங்குப் பாடப்பெறும் குப்பன் சிற்றூர்த் தொழிலாளி அல்லன்; பட்டணத்து உழைப்பாளி. அவன் உழைத்துழைத்து உணவுமின்றி உயிர்வாழப் போராடுகிறான். குப்பன் உயிர்ப்போராட்டத்தைச் சிறுபறைப்பருவத்தில் ஆசிரியர்

செய்வதற் கொன்றுளது சாகலாம் என்றுனது
சிறுபறை கொட்டி வாடா!
சீட்டுக் கிழித்திங்கு வீழலாம். குப்ப, உன்
சிறுபறை கொட்டி வாடா[39]

எனத் தோல்விமனப்பான்மையொடு சோர்வாகச் சாக அழைக்கின்றார். சிறுபறை ஒலிப்பது பிணப்பறை முழக்கமாகக் கவிஞருக்குத் தெரிகின்றது. பொதுவுடமையாளர்களைப் போல மேலாண்மைச் சமுதாயத்தார்க்கெதிராகக் குப்பனைக் கவிஞர் கிளப்பிவிடாமல் இறப்பின் அணைப்புக்கு அழைப்பது ஆசிரியருடைய மேலாண்மைச் சமுதாயச் சார்பை வெளிப்படுத்துகிறது.

பழமைபோற்றல்

ஆசிரியர் சிறந்த தமிழ் அறிஞர்; கம்பன் காப்பியத்தைக் கற்றுத் தோய்ந்தவர்; அவர் கவிதைகளில் கம்பன் கருத்தும் தொடரும் அமையும். செங்கீரைப் பருவத்தில், ஆசிரியர் குப்பனை "அல்லை ஆண்ட அழகா"[40] என விளிக்கிறார். கம்பர் "அல்லையாண் சீடமைந்தமேனி யழகனும்"[41] எனக்குகன்

கண்டதையே பேராசிரியர் அ.சீ.ரா. சுருக்கிக் காட்டுகிறார். தாலப் பருவத்தில் குப்பன் பெற்றோர்களின் காதற்காட்சி கம்பர் பாலகாண்டத்தில் காட்டிய இராமன் - சீதையின் காதற்காட்சியை முன்மாதிரியாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. முந்தைய தமிழ் இலக்கியங்களைத் தழுவியே குப்பன் பிள்ளைத்தமிழ் வழங்குகிறது.

இந்நூற்றாண்டில் தோன்றிய நாரா. நாச்சியப்பன் பிள்ளைத்தமிழ் இதுகாறும் விளக்கிய மூன்று பிள்ளைத்தமிழ்களிலிருந்து வேறுபட்டது.

நாரா. நாச்சியப்பனின் பிள்ளைத்தமிழ்

நாரா. நாச்சியப்பன் இயற்றிய "பிள்ளைத்தமிழ்" என்ற நூல் 1973இல் சனவரி பொங்கல் இதழில் "இளந்தமிழன்" சிறப்பிதழில் வெளிவந்தது. பிள்ளைத்தமிழ் இலக்கிய வரலாற்றில் இது புதிய பாடு பொருளாயமைந்தது

பிள்ளைமை பாடுவது

இந்நூல் குறிப்பிட்ட யாரையும் பாட்டுடைத் தலைவனாக்கிப் பாடவில்லை. பேராசிரியர் அ. சீனிவாசராகவன் குப்பன் பிள்ளைத்தமிழில் வறுமைக் கொடுமையைக் குப்பன் என்ற கற்பனைத் தலைவனைப் படைத்துக் காட்டினார். நாரா. நாச்சியப்பன் பிள்ளைகளைப் பொது நிலையாக்கி - யாருடைய பெயரையும் குறிக்காது பொதுவாகப் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார்.

> **"முன்னாள் ஆசிரியர்கள் மன்னர்களையும் தெய்வங்களையும் நூற்பொருளாகக் கொண்டு பிள்ளைத்தமிழ் இயற்றினார்கள். இந்நூலில் பிள்ளையையே நூற்பொருளாகக் கொண்டு பிள்ளைத்தமிழ் இயற்றப் பெற்றுள்ளது."[42]**

நாரா.நாச்சியப்பனின் பிள்ளைத்தமிழ், இயற்பெயர் சுட்டிப்பாடாது அகப்பாடல்கள் போலப்பொது நிலையில் பாடப்பட்டிருக்கிறது. தமிழில் தோன்றிய எல்லாப் பிள்ளைத்தமிழ்களும் யாரேனும் ஒருவரைப்பாடியன. அவை பெரியோரைக் குழந்தையாக்கிப் பாடியவை. இந்நிலையில், தான் பொதுநிலையில் பாடியமைக்கான காரணத்தை ஆசிரியர் கீழ்க்கண்டவாறு சுட்டுகிறார்.

> **"சிறப்பு மிகுந்த இந்நூல்கள் யாவிலும் பாட்டுடைத் தலைவனைப் பிள்ளையாக வைத்துப் பேசுகின்ற நூலாசிரியர்கள், பிள்ளைப் பருவத்துச் செயல்களைக் காட்டிலும், அத்தெய்வங்கள் அல்லது பெரியோர்களின் அரும்பெரும் செயல்களையே பெரிதும் பாடி வைத்திருக்கிறார்கள். பிள்ளைத்தமிழில் பிள்ளையைப்**

பிள்ளை நிலையிலேயே முழுவதும் பாடினால் பொருத்த மாயிருக்குமே என நினைத்தேன். அதன் விளைவே இந்நூல்."[43]

ஆதலால் பிள்ளைத்தமிழ் என்ற பெயருக்குப் பொருந்துமாறு இவ்வாசிரியர் தம்முடை ய நூல் முழுமையும் பிள்ளைகளைப் பாடுகிறார்.

பிள்ளைத்தமிழ் எனப்புலவர்கள் பாடினாலும் அது பெரியவர் தமிழாகவே அமைகிறது. அங்குப் பிள்ளைகளின் செயலுக்கும் பேச்சுக்கும் அமையும், முதன்மையினும் நூலாசிரியர் முதியோராய் அவர்கள் நிகழ்த்திய செயல்களுக்குத் தான் சிறப்பும் முதன்மையும் தருகின்றனர். இப்போக்கு, கவிஞர் நாரா. நாச்சியப்பனுக்குப் புது உந்துதலைத் தந்திருக்கிறது. அதன் விளைவாக அவர் இருபாலார்க்கும் பொதுவான பருவங்களைத் தொகுத்து ஒரு நூலாகப் பாடியிருக்கிறார்.

பெரியவர்களைப் பிள்ளையாக்கிப் பாடினால் பாடாண்பாட்டாகப் பிள்ளைத்தமிழ் விளங்கும். இவரோ பிள்ளையைப் பாடுவதால் அவற்றைக் கொஞ்சி மகிழும் இனிய மொழிகளாலும் பாராட்டும் உருவகங்களாலும் பாடல்களைப் பாடுகிறார். பிள்ளைகள் எனப் பொதுநிலையில் எடுத்துக்கொண்டமையால் இங்கு முன்னோர் சிறப்புப் பாட வாய்ப்பில்லை.

பெண்ணைப்பாடும் குறிப்பு

இப்பிள்ளைத்தமிழாசிரியர், ஆண், பெண், வேறுபாடின்றி நூலைப் பாட முயன்றிருக்கிறார். பிள்ளைத்தமிழ், ஆண், பெண், ஆகிய இருபாலுக்கும் தனித்தனி வடிவமைப்புடைய இலக்கியவகை. பால்வேறுபாடு நூல் அமைப்பிலும் வேறுபாட்டை உருவாக்கும். ஆனால் ஆசிரியர் பால் வேறுபாடற்ற ஒரு நூலை உருவாக்க இந்நூலில் முயன்றிருக்கிறார். பிள்ளைமை நிலையில் பால்வேறுபாடின்மை, ஆண்-பெண் சரிநிகராதல் ஆகியன ஆசிரியரை இவ்வாறு பாடத்தூண்டியிருக்கின்றன.

இருபாற்கும் ஒத்த பருவங்களை ஆண்,பெண் வேற்றுமை தோன்றாமல், மகள்,செல்வி, மகன், போன்ற பாலுணர்த்தும் சொற்கள் பயிலாமல் பாடுகிறார். சப்பாணிப்பருவத்தில் "பச்சைப் பசுங்கிளியே"[44] என்றும் "செல்லக்கிளியே"[45] என்றும் முத்தப்பருவத்தில் "சோலைக்கிளியே"[46] என்றும், "தளிர்க்கொடியே"[47] என்றும் வருகைப்பருவத்தில் "சிட்டுக்குருவி"[48] என்றும் பாட்டுடைத்தலைமை பெண்ணுக்குரியது என்பது தோன்றப்பாடுகிறார். மேலும் வருகையில் "புதிய சிட்டி தருவேன்"[49] என்று மகளிர் விளையாடும் பொருளைக் குறிப்பதால் பெண் என்பது தெரிகிறது. ஆண், பெண், வேறுபாடின்றிப் பாட முயன்ற ஆசிரியர் இருபாற்கும் ஒத்த பருவங்களில் பெண்ணையே பாடுகிறார். அவரை அறியாமல்

பாடல்களில் இக்குறிப்புகள் அமைந்துவிடுகின்றன.

பெயர்ப்புதுமை

பருவங்களுக்குப் பெயர் வைக்கும் போது மரபுவழிப் பெயரும் பருவம் என்ற பெயருமில்லை. முதற்பருவம், காப்புப்பருவமன்று, வாழ்த்துப்பருவம் .ஆனால் ஆசிரியர் இரண்டுபெயரும் வைக்காது இன்பம் தரப்பிறந்த எழிலோவியமே என்று பெயரிடுகிறார். வாழ்த்துப்பருவம் என்பதற்கிணங்கப் பாடல்கள் வாழியவே என்று முடிகின்றன. ஏனைய பருவங்களும் அவற்றுக்கு ஆசிரியர் சூட்டிய பெயரும் தரப்பெறுகின்றன.

2.	செங்கீரைப்பருவம்	-	ஆடாய் ஆடாய் செங்கீரை
3.	தாலப்பருவம்	-	தாலோதாலேலோ
4.	சப்பாணிப்பருவம்	-	சிரித்துக்கொட்டுசப்பாணி
5.	முத்தப்பருவம்	-	முத்தந்தா நீமுத்தந்தா
6.	வருகைப்பருவம்	-	பொன்னே வைரப்பூவே வா
7.	அம்புலிப்பருவம்	-	வானநிலாவே வாராய்
8.	அம்மானைப்பருவம்	-	ஆடாய் அம்மானை
9.	நீராடல்பருவம்	-	அழகோவியமே நீராடு
10.	ஊசற்பருவம்	-	ஊசல் ஆட வாராயே
11.	சிற்றில் சிதைத்தல் பருவம்	-	சிதைக்கவேண்டாம் என்செல்வா
12.	சிறுபறைப்பருவம்	-	சிரித்துச் சிரித்துப் பறைகொட்டே
13.	சிறுதேர்ப்பருவம்	-	விரைந்து தள்ளுநடைவண்டி

பழைய பெயர்களை அமைக்காது, சற்று விரிவான தொடர்களால் ஆசிரியர் பருவங்களுக்குப் பெயர் வைத்திருக்கிறார். பாடலில் பயிலும் தொடர்களே பருவப் பெயர்களாகியுள்ளன. இது பதிற்றுப்பத்து மரபு. இஃது இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை மரபாகும்.

சிறுபறைப்பருவத்தில், குழந்தையினியல்புக்கு ஏற்பக் கையில் வைத்திருக்கும் தட்டை வைத்துக்கொண்டு ஒசை எழுப்புவதாக ஆசிரியர் பாடுகிறார்.[50] சிறுதேர்ப்பருவம் , நடைவண்டி தள்ளும் பருவமாகிறது.[51] இவ்வாறு ஆசிரியர் பருவக்கருத்துகளிலும் புதுமரபுகளைக் கையாண்டு, சிறுகுழந்தைகளின் இக்கால விளையாட்டுக்கு ஏற்பப்பாடுகிறார். இது காலத்துக்கு ஏற்ப மாற்றம் பெற்ற பிள்ளைத்தமிழ்.

பாரதப்புதல்வன் பிள்ளைத்தமிழ்

இந்நூலைப்போல 1979இல் தோன்றியது பாரதப்புதல்வன் பிள்ளைத்தமிழ். இஃது அனைத்துலகக் குழந்தையாண்டை முன்னிட்டு

வானொலியில் ஒலிப்பரப்பானது. மாதம்தோறும் கடைசி ஞாயிறன்று சிறுவர் சோலையில் வெளியானது. இந்நூலின் ஆசிரியர் வானொலி அண்ணா ஏ.அய்யாச்சாமி. இஃது ஆண் குழந்தைகளைப் பாட்டுடைத்தலைவராக்கிப் பாடியது. வானொலியில் ஒலி பரப்பான இப்பாடல்கள் அச்சாகவில்லை.

நாரா. நாச்சியப்பன் பிள்ளை எனப்பொது நிலையில் பாடியிருக்கிறார். ஏ.அய்யாச்சாமி பாரதப் புதல்வன் ஒருவனைப் பாடுகிறார். இரண்டும் தனிப் பட்டவர்களைப் பாடாமல் பொதுச் சமுதாயத்தைப் பாடுகின்றன. பிள்ளைத்தமிழில் பாடுதற்குரிய பாடுபொருள் இவற்றில் மாறுபடுகிறது.

செங்குந்தர் பிள்ளைத்தமிழ்

பெரியவரைப் பிள்ளையாகப் போற்றிப்பாடும் பிள்ளைத்தமிழில் இரண்டு நூல்களும் சிறுவரைப் பாடுகின்றன. இல்லாத குப்பனைத் தலைவனாக்கி ஒரு பிள்ளைத்தமிழ் தோன்றியிருக்கின்றது. பிள்ளை எனப் பொதுநிலையில் ஒரு பிள்ளைத்தமிழும் பாரதப்புதல்வன் என இந்தியக்குழந்தைகளைப் பற்றி ஒரு பிள்ளைத்தமிழும் தோன்றியுள்ளன.

இத்தகைய புதுமைபோல ஓரினத்தாரைப்பற்றியும் ஒரு பிள்ளைத்தமிழ் உருவாயிருக்கிறது. அந்நூல் செங்குந்த மரபினர் பற்றி ஞானப்பிரகாச முனிவர் பாடிய செங்குந்தர் பிள்ளைத்தமிழ் ஆகும். இது சாதியை அடிப்படையாகக் கொண்டு அவ்வினத்தாரைப் பற்றிப் பாடுகிறது.

ஒரு சாதியாரின் சிறப்புகளையும் பழக்கவழக்கங்களையும் அருஞ்செயல்களையும் விளக்கும் நூல்கள் தமிழில் உண்டு. ஈட்டியெழுபது, ஏரெழுபது, திருக்கைவழக்கம் ஆகியன அத்தகையன. ஆனால் செங்குந்தரின் மரபுகளைப் பெருமைகளை ஞானப்பிரகாசர் வெளிப்படுத்த பிள்ளைத்தமிழ் இலக்கியவகையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். இந்நூல் கி.பி.1736இல் அரங்கேறியது.[52]

தனிப்பட்டயொருவரையே பாடுதற்குரியது பிள்ளைத்தமிழ். ஆனால் ஒரு சாதியார் முழுமையையும் இந்நூல் தனியொருவனைப் பாடுவதுபோலப் பாடுகின்றது. பாட்டுடைத் தலைமை ஒருவனைக்குறிக்,காது பலரைக் குறிப்பதாகவே இந்நூலின் பாடலமைகின்றது. இவர் செங்கீரைப் பருவத்தில்,

"செங்கயல்க ளுகள்கச்சி மங்கையுமைவரபுத்திரர்
செங்கீரை யாடியருளே
சேவலங் கொடியாளர் மேவிடுந் தயவாளர்
செங்கீரை யாடியருளே" [53].

என்று பாடுகின்றார். இவ்வாறே எல்லாப் பாக்களும் அமைந்திருக்கின்றன. இது பன்மையில் ஒருமை தழுவின வழுவமைதி .மேலும் தனித்தனியே ஒவ்வொரு செங்குந்தாரையும் செங்கீரையாடியருள்க எனக் கூறியதாகவும் ஆகும். தனிப்பட்ட ஒருவரைப் பாடாது, பலர் உள்ளடங்கிய ஒரு சாதியைப்பாடியதால் ஏற்படும் சிக்கல் இதுவாம்.

நூலாசிரியர் செங்குந்தர்களின் தோற்றம்,[54] அவர்களுடைய கொடைத்திறம்,[55] தெய்வப்பற்று,[56] முதலியவற்றைப் பாடல்களில் பாடியிருக்கிறார். நூல் முழுமையும் செங்குந்தர் சிறப்புகளும் புகழ்மொழிகளும் நிறைந்திருக்கின்றன. அவர்கள் அடையாள மாலை செங்கடப்பந்தொடை [57] என்றும், அவர்கள் கொடி சேவலங்கொடி[58] என்றும் இந்நூல் இயம்புகின்றது.

இப்பிள்ளைத்தமிழ், செங்குந்தரின் சிறப்புகளையே புகழ்கிறதன்றி அவர்களின் பழக்கவழக்கங்களையோ சமுதாய நிகழ்ச்சிகளையோ சுட்டவில்லை. ஞானப்பிரகாச முனிவர் எளிமையாகவும் இனிமையாகவும் ஒட்டமாகவும் நூலைப் பாடியிருக்கிறார். தாம் கூற விழைந்த செங்குந்தர் புகழ்ச்சியைப் புலப்படுத்த ஆசிரியர் பிள்ளைத்தமிழ் இலக்கியவகையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். அதன் பொது அமைப்புக்குலையாது தன் பாடுபொருளை வெளிப்படுத்துகிறார். வெறும் மகுடங்கள்தாம் பிள்ளைத்தமிழ் என்ற நிலையைத் தருகின்றன.

செங்குந்தர் வாழும் காஞ்சித்தலத்தின் சிறப்பைக் கூறுமுகத்தான் இயற்கை வளம் பாடுகிறார். வாளைமீன் பூகமடலில் குதித்தேறிப் பழுக்காய்களைச் சிதறடித்துத் துள்ளி மேகத்தைப் பிளந்து பொன்னுலகு சென்றது. அங்குப் பலரையும் அச்சுறுத்திக் கற்பக மரத்தை உழக்கிக் கழனிப்புனல் மூழ்கித் திரும்பவும் காஞ்சிக்கு வருகிறது "வாளைமீன்"[59]. இது போன்ற வாளைமீன் பற்றிய புனைவுகளும்[60] இயற்கைப் புனைவுகளும்[61] நூலில் அமைந்திருக்கின்றன.

பிள்ளையைப் பாடும் நூலில் ஒருசாதியாரைப்பற்றிய கருத்துகளையும் புகழ்ச்சிகளையும் நிறைத்துப் பருவப்பெயர்களைப் பாடல்களில் மகுடங்களாக்கி ஞானப்பிரகாசர் நூலை ஆக்கிப் புதுமைசெய்திருக்கிறார்.

சித்திநாயகம் பிள்ளைத்தமிழ்

பெரியவர்களைப் பிள்ளையாக்கிப் பாடுதற்கு மாறாகப் பிள்ளைகளையும் கற்பனை மாந்தர்களையும், யாரையும், பெயர்சுட்டாத பொதுச் சமுதாயத்தையும், ஒருசாதியைச் சார்ந்தவர்களையும் புலவர்கள் புதுமையாகப் பாடியிருக்கிறார்கள். இவற்றிலும் பிற பிள்ளைத்தமிழ் நூல்களிலும் பாட்டுடைத் தலைவரும் அவன் சுற்றத்தாரும் வாழ்க என்று பாடியிருக்கின்றனர். வாழ்த்தும் நூலாகத் தோன்றிய பிள்ளைத்தமிழ், பாட்டுடைத் தலைவன் சாகவும் பாடப்பெற்றிருக்கிறது. அவ்விலக்கியவகையின் நோக்கம் வெற்றி பெற்றமைக்குப் பிற்காலக் குறிப்புகள்

கிடைத்திருக்கின்றன. அப்பிள்ளைத்தமிழின் பெயர் சித்திநாயகம் பிள்ளைத்தமிழ் இந்நூலுக்குரிய பத்துப்பாக்களும் , சென்னை அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் 1960 இல் வெளியிட்ட தனிப்பாடல் திரட்டில் உள்ளன. இந்நூலாசிரியர் மிதிலைப்பட்டி, சிற்றம்பலக்கவிராயர் மரபில் தோன்றிய புலவர் மங்கைபாகக் கவிராயர். இவர் கொடுங்குன்றப் புராணம், வருக்கக் கோவை முதலிய நூல்களைப் பாடியவர். இவர் பாடிய தனிப்பாடல்கள் பல. அவற்றில் பத்துப்பாடல்கள் சித்திநாயகம் என்பவனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பாடியவை. அவை, காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம் , வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர், என்ற பருவங்களைச் சார்ந்தவை. இவற்றில் ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் அனைத்தும் உள்ளன.

புலவர்கள் தாம் விரும்புவோரைப் பாராட்டிப் போற்றிப் பாடுவது போல வெறுப்போரையும் இகழ்ந்தும் இழித்தும் பாடுவர். இப்பத்துப் பாக்களில் மங்கைபாகக் கவிராயர் சித்திநாயகம் என்பானை இழித்தும் பழித்தும் பாடியிருக்கிறார்.[62]

நூலமைப்பு

முதல்பாட்டான காப்புப்பாட்டில் தலைவனைக் காக்க எனக் கடவுள் பெயரை இவர் குறித்திலர். தலைவனை இகழ்ந்து பாடுவதால் அவனைச் சித்தி நாயகமட்டி, சீண்டல், எனப் பகரவீயாக உருவாக்கியிருக்கிறார். அதற்குப் பொருந்த தெருநாய் ஒன்றை விளித்து, குக்கலே கூறுவிண்ணப்பம் ஒன்று என வேண்டுகோள் விடுப்பர். நரகலுக்கு நாய், காப்பாகிறது. புலவர் வழிபடுகடவுளையோ வேறுகடவுளையோ காப்புப் பருவத்தில் பாடவில்லை. தன்குறிக்கோள் நிறைவேற நூலுக்குப் புறம்பாகவும் பாடினாரல்லர். சித்தி நாயகத்துக்கு நாயைக் காப்பாக்குகிறார்.

இரண்டாம் பாடல் செங்கீரை யாடியருளே எனும் செங்கீரைப் பருவமாகும். தலைவனைக் கவிராயர் நீராட்டிச் செங்கீரை ஆட வேண்டுகிறார். நீராடுதற்குரிய பொருள்கள் எல்லாம் இழிந்த பொருள்கள். பெண்பாற்பிள்ளைத் தமிழில் நீராடல் பருவம் அமையும். அங்கே உயர்ந்த பொருள்களால் நீராடல் நடப்பதாகப் புலவர் கற்பனை செய்து பாடுவர். இங்கோ நோக்கத்திற்கு ஏற்பப் பொருள்களை மாற்றிச் சொல்லுகிறார்.

நீராட்டுக்குரியன	**இவண் சுட்டப்பெறுவன**
வெந்நீர்	வெள்ளாட்டிப் பெண்கள் சிறுநீர்
ஈரம் துவட்டும் துண்டு	கந்தை
கண்மை	அடைக்கரி
நெற்றியில் திருநீறு	கழுதை விட்டையைக் சுட்டுக் கிடைத்த சாம்பல்

காப்பாக இடுதல்	ஜன்னி
தலைக்கு எண்ணெய் பூசுதல்	தூமை
குழந்தைக்கு மருந்து புகட்டுதல்	சாண்டு (பூப்பு நீர்)

இங்ஙனம் சித்திநாயகம் ஆகிய குழந்தையைப் புலவர் நீராட்டுகிறார். மேலும் நாய், பேய் ஆகியன உச்சிமோந்து பாராட்டுகின்றன. என்றும் குழந்தை குப்பையில் வளர்கிறது என்றும் அக்குழந்தை செத்தநாய் தின்று வளரும் குழந்தை என்றும் தாழ்த்திப் பாடுகிறார்.

நூலாசிரியர், தாலாட்டுப் பருவத்தில் சித்திநாயகத்தைக் குழிநரி, குசுவினில் மசுகுணி, விதியிலி, கழுதை, விழுபிள்ளை, அழுபிள்ளை, களிசிறை எனப் பலவகைச் சொற்களால் இகழ்கிறார். தாலப்பருவம் என்பதற்குப் பொருந்த அடிதோறும் தாலோ தாலேலோ என்ற ஒலிக் குறிப்புச் சொற்கள் பயில்கின்றன.

சப்பாணிப் பருவத்தில் குழந்தையைக் கைகொட்ட வேண்டுவது மரபு. அந்நிகழ்ச்சிக்கு இசையஓசை அப்பாடலில் ஒலிக்கும். அப்பாடலின் ஏழாம் சீரிலும் பதினான்காம் சீரிலும் அடிதோறும் கொட்ட என்ற சொல் அமைந்து கைகொட்டும் ஓசையை வெளிப்படுத்துகின்றது. செங்கல்சூளைச் சாம்பலை வாரித் தொண்டர்கள் சித்திநாயகம் தலைமீது கொட்ட, பறையர் காலடிப் புழுதியைத் தலைமீது கொட்ட , கயவர்கள் கொட்டாப்புளியால் அவன் முழங்காலில் கொட்ட, அவன் குண்டியில் தேள் கொட்ட சப்பாணி கொட்டுக என ஊர் சுற்றிகளுக்கு இடையே விளங்கும் சிக்கிநாயகத்தை வேண்டுகிறார்.

முத்தப்பருவத்தில் பல்வேறு முத்துகளை எடுத்துக்கூறிப்பாட்டுடைத் தலைவன் முத்துடன் ஒப்பிட்டு எல்லாவற்றிலும் விலை மதிப்புடையது நின் முத்தம் என்று கூறுவர். மங்கைபாகக் கவிராயர் பிறர் எவரும் கூறாத முத்துகளையே தலைவன் முத்தத்துடன் ஒப்பிட்டு ஒவ்வாமை காட்டுகிறார். இங்குக் கடல்முத்துப் பற்றிய பேச்சு இல்லை. நாட்டுப்புற மரபில் சில விதைகளை முத்து என வழங்குவர். அவற்றிலும், மிகத் தாழ்ந்த விதைகளைக் கூறி அவற்றிலும், கீழானது சித்திநாயகத்தின் முத்தம் என உரைக்கிறார்.

வேப்பமுத்து, குருந்தமுத்து, புங்கமுத்து, கொட்டைமுத்து, செந்துருக்கமுத்து, காட்டாமணக்கு முத்து, சித்ததாமணக்கு முத்து, ஆகியவற்றின் விதைகளை முத்து என்பர். இவை நின் முத்தத்துக்கு ஈடில்லாதவை. சக்கிலியனே முரடனே நீ முத்தம் தருவாய் எனப் பாட்டு அமைகிறது.

வாரானைப் பருவப் பாட்டு வருக! வருக! என்ற சொல் அடிதோறும் பெற்றுத்திகழ்கிறது. சித்திநாயகத்தைக் குட்டிச்சுவர், கோட்டான், சுணங்கல் வால், செருப்பு, சவங்கல், தாசிமகன் என வைது பாடியுள்ளார், கவிராயர். அன்றி, தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பெறாத இடக்கரடக்கலான பல சொற்கள்

இப்பாடலில் வெளிப்படையாகக் கையாளப் பட்டிருக்கின்றன. இச் சொற்கள் வேறு எங்கும் பயிலாதவை.

அம்புலிப் பருவப்பாட்டு, சித்திநாயகத்தொடு, அம்புலியை ஆட அழைக்கிறது. இவண் சந்திரனுக்கும் சித்திநாயகத்துக்கும் ஒப்புக் கூறப் பட்டிருக்கின்றது. இவ்வொப்புமையில், சந்திரனுக்கும் சித்திநாயகத்துக்கும் இழிவானவை சுட்டப்பெறுகின்றன. நால்வகை உத்திகளில் ஏனைய மூன்றும் இல்லை.

சிற்றில் பருவத்தில் பெண்கள் சிற்றில் இழைத்துச் சிறுசோறாக்குவர். அப்போது பாட்டுடைத்தலைவன் சென்று அதனைச் சிதைப்பதாகவும் அம்மகளிர் அதனைச் சிதையாதே என வேண்டுவதாகவும் பாடுவர். இப்பாடலில் சிறுசோறு சமைப்போர் சித்திநாயகத்தின் சுற்றத்தார். கள்ளும் சுரியும் நிறைத்துச் சிறுநீர் உலையில் சிறுசோறாக்குகின்றனர். சாண்டுபுளிச் சாதத்தையும் மாட்டெலும்புக்கறியைச் சமைத்தும் உணவு அணியமாகிறது. பாடலில் சிற்றில் அமைப்புப்பற்றி எவ்வகைக் குறிப்பும் இல்லை. சிற்றில் சிதையேல் என்ற போது சிற்றில் பருவக்கருத்து அமையும். வேறு குறிப்பு இன்மையால் இதனைச் சிறுசோறு ஆக்கல் பருவம் எனவேண்டும். ஆனால் ஆணுக்கு அப்பருவம் கிடையாது. ஆகலின் சிற்றில் பருவம் என்றார் கவிராயர்.

பகைவர்கள் சித்திநாயகம் தலையை வெட்டப் போகும்போது ஒற்றைத் தவில் முழங்க நரி, கோட்டான், நாய் ஆகியன ஊளையிட்டு முழங்கச் சித்திநாயகம் மனைவியும் மகளும் முழங்க, பிள்ளை கொள்ளிவைத்து வாய்க்கரிசி இட மாப்பிள்ளை முழங்க, பறைமேளமான சாவுப்பறை முழங்கச் சித்திநாயகம் சிறுபறை முழங்கிடுக எனச் சிறுபறைப்பருவத்தில் சிறுபறை முழக்கம் ஒலிக்கப் பாட்டுத் திகழ்கிறது.

சிறுதேர்ப்பருவம் என்பது சிறுதேர் உருட்டல் என்ற பருவமாகும், முந்தைய பாக்களில் சித்திநாயகத்தைப் பாடிய கவிராயர் இப்பாவில் அவன் மனைவி, மக்கள், தங்கை, தமக்கை அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், முதலியோரையும் பழித்து இழித்துப் பாடிப்போந்தார். சுற்றத்திளவாகப் பாடுக என்ற விதி இங்கு இடம்பெறுகிறது,

நூலின் நோக்கம்

சொல்லத்தகாத சொற்களைக் கொண்டு சித்திநாயகத்தை இகழ்ந்து மங்கைபாகக் கவிராயர் வசைபாடியிருக்கிறார். சித்திநாயகத்தை இவ்வாறு பாடற்கு உரிய காரணத்தைக் கவிராயர் பாடல் ஒன்றிலும் குறித்தார் அல்லர். கவிராயரின் இகழ்ச்சிக்கும் வசைக்கும் நோக்கம் என்ன என்பது தெளிவாகப் புலனாகவில்லை. எனினும் சித்திநாயகம் சாகவேண்டும். என்ற விருப்பில் கவிராயர் பாடினார்.

செத்த பிணச்சித்தி னாயகமே[63]
கோழைச் சவமே வருக [64]

என அவனைப் பிணமாக்கி அமங்கலமாகப் பாடினார்.

பிள்ளையும் கொள்ளிவைத் தள்ளிவாய்க் கரிசியிட்
டேனைமாப் பிளைமுழங்க . . : . . . .
. . . .
பறைமேள மேழுழங்க . . . .
. . . .
உன்னுடல் முழங்கவே. [65]

எனவும் சித்திநாயகம் தலையைக்

கோடான கோடியாம் கொள்ளிவாய்ப் பேய்களும்
கோட்டானு முண்டு ருட்டத் [66]
திண்டாடு முன்னுடைய வெண்டலை யுருட்டவே

எனவும் மிளிர்வன சித்திநாயகம் சாகவேண்டும் என்ற உண்மையைப் புலப்படுத்துகின்றன.

அறம் வைத்துப்பாடியமை

சித்திநாயகத்தொடு இகலிய மங்கைபாகக் கவிராயர் அவன்மீது அறம் வைத்துப் பாடியிருக்கிறார். முதல் ஏழுபாக்களில் சித்திநாயகத்தை இகழ்ந்தும் இழித்தும் கூறிய புலவர் இறுதிமூன்று பாடல்களில் அவன் பிணமாக வேண்டும். என்ற குறிப்பைப் பொதிந்திருக்கிறார். தன் விருப்பத்தை நிறைவேற்றப் பாடியபாடல்களில் தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படையாகக் கவிராயர் சுட்டவில்லை. நூலுக்கு முன்னோ பின்னோ தன் விழைவு நிறைவேறக் கடவுளரை வேண்டி வணங்கிப் பாடியதற்கும் சான்றுகள் இல்லை.

காப்புப்பருவம் பாட்டுடைத் தலைவனைத் தீமைகள் அணுகாமல் கடவுளர் காக்கவேண்டும் எனப்பாடும் பருவம் அதை மாற்றிச் சாவுப்பருவம் பாடியிருப்பர். காப்புப்பருவத்தில் சாக என்றேனும் கடவுளை வேண்டிப் பாடுவர். எவ்வகை மாறுபாடும் இன்றிக் காப்புப்பருவம் உளது. ஆனால் காப்புக் கடவுளாக யாரும் இல்லை. சித்திநாயகத்தை நரகல் ஆக்கி நாயைப் பார்த்து நீகாக்க என இப்பருவம் அமைகிறது. பாட்டுடைத் தலைவன் மீது ஏற்பட்ட வெறுப்பால் கவிராயர் எந்தக் கடவுள் பெயரையும் குறிப்பிட்டுக் காப்புப் பாடவில்லை. தன்நோக்கம் நிறைவேறவும் கடவுள் வணக்கம் பாடவில்லை.

நோக்கத்தைக் காட்டும் பிற்காலச் சான்று

சித்திநாயகத்துக்கும் மங்கைபாகக் கவிராயருக்கும் ஏற்பட்ட மாறுபாடும் அதற்கான காரணமும் தெரிந்தில. மிதிலைப்பட்டிக் கவிராயர் மரபைச் சேர்ந்தே பிற்காலப் புலவர் பாடிய பாட்டில்.

"அன்னாளில் ராசசிங் கைப் பதியை மணியார
னானதொரு சித்திநாதன்
ஆகாத வாயிடும் பால்மங்கை பாகதவ
ராசனுட னேயெதிர்த்தான்
யென்னாளும் நிலைநிற்க வசைப்பாட் டெலாங்கேட்
டிறந்தழிந் தே போயினான்" [67]

என இந்நிகழ்ச்சியைச் சுட்டியுள்ளமை நோக்கத்தக்கது. இராசசிங்கைப்பதி, இன்று இராங்கியம் என்று வழங்குகிறது. இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் மிதிலைப்பட்டிக்கு மிக அருகில் உள்ள ஓர் ஊர். இவ்வூரின் மணியக்காரன் சித்திநாதன். சித்திநாதன் வாயிடும்பால் கவிராயரை எதிர்த்தான். வேறு மெய்யான காரணம் யாது என்று அறிய இயலவில்லை. கவிராயர் பாட்டால் சித்திநாதன் செத்தான் என்று தெரிகிறது.. திருவள்ளுவர்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" [68]

என்றபடி கவிராயர் நிறைமொழிமாந்தர் ஆகத் திகழ்கிறார். அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தே விடும்மொழி நிறைமொழி. மங்கைபாகக் கவிராயர் நிறைமொழிப்புலவர்.

அறம்பாடும் ஆற்றல்

மிதிலைப்பட்டிக் கவிராயர் மரபினர் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் பலர் இத்தகைய ஆற்றல் உடையவர்கள். செட்டிநாட்டுப் புலவர்களில் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபைச் சேர்ந்த பாடுவார் முத்தப்பசெட்டியார் இத்தகைய ஆற்றல் வாய்ந்த அரும்புலவர் ஆவர்.[69] மிதிலைப்பட்டிக் கவிராயர் மரபைச் சார்ந்த வேறொரு புலவர் தமக்குப் பகைவனாகியவன் மீது வசையாகக் கழுதைவிடுதூது ஆகப் பாடிய நூலைத்தாம் கண்டதாக டாக்டர் உ.வே.சா.[70]. குறிப்பிட்டுள்ளார்.

இம்மரபுப் புலவர் ஒருவரோடு அண்ணாமலை செட்டியார் என்பவர் பகைத்தார். அக்காலை அப்புலவர்,

"தங்குரா மன்செட்டி அண்ணா மலைக்கொண்டி
சண்டிச்ச வங்கப் பயல்
யின்னாளி லெங்களுட னேயெதிர்த்தா நாங்க
ளிசையிலா வசைபாடியே
யிவனுக் குசலக்கழிவு அபகீர்த்தியாகச் செய்
தினிநிலை நிறுத்து வோமே." [71]

எனப் பாடினார். இத்தகைய வரலாறுகள் பல தமிழகத்தில் வழங்குகின்றன.

> "மறலிவிடுதூது நாகை சதாசிவம்பிள்ளை என்னும் புலவரால் தன் பகைவர் ஒருவன்மீது இயற்றப்பட்ட வசைகவி என்றும் இந்நூல் பாடப்பட்ட சிலகாலத்திற் கெல்லாம் நூல் யார்மீது பாடப்பட்டதோ அவர் இறந்துவிட்டார் என்றும் கூறுவர். மறலியையோ கூற்றுவனையோ தூதாக விடுக்கப்பட்ட இந்நூல் அச்சிடப்படவில்லை என்று தெரிகிறது."[72]

இவற்றால் புலவர்கள் பாடும் பாடல்களுக்குத் தனி ஆற்றல் உண்டு என்பது வெளிப்படும்.

வசைக்குறிப்புகள்

தமிழில் அறம்வைத்துப் பாடிப் பாட்டுடைத் தலைவனைச் சாகடிப்பது என்ற கொள்கை நந்திக்கலம்பக வரலாற்றில்தான் முதன்முதல் அமைகின்றது. நந்திக்கலம்பகப் பாடல்களில் நந்திவர்மன் சாவதற்கு உரிய கூறுகள் அமையப் பாடப்பெற்றுள்ளன.

> "அறம் வைத்த இப்பாடல்கள் தம் உயிரையே அழிக்க எழுந்தன என்று தெரிந்தும் தமிழ்ப்பாடலின் இன்பத்தை உயிரினும் மேலாகக் கருதி உயிரையும் இழக்கத் துணிந்தான். நந்திக் கலம்பகம் அரங்கேற்றப்பெற்றது. இறுதிப் பாடலைக் கேட்டவண்ணம் மகிழ்ந்து உயிர்துறந்தான், "தம்பியர் எண்ணமெல்லாம் பழு தாக வென்ற தலைமான வீரதுவசன்" என்ற நந்திக்கலம்பகத்தின் குறிப்பு (பாடல் 36) இங்குச் சிந்தனைக்குரியது. இதனைப் பிற நூல்களும் குறிக்கின்றன. நந்திக்கலம்பகத்தால் மாண்ட கதையும் நாடறியும் என்று சோமேசர் முதுமொழி வெண்பாவும், "கள்ளாரும் செஞ்சொற் கலம்பகமே கொண்டு காயம்விட்ட தெள்ளாறை நந்தி எனும் தொண்டைமான்" என்று

தொண்டைமண்டல சதகமும் இக்கதையைக் குறிப்பிடுகின்றன. அறம் அமைந்த பாடல்களில் சிலேடையாக அமைந்த வசைக்குறிப்புக்கள் சிலவற்றை அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்."[73]

மங்கைபாகக்கவிராயர் பாடிய இச்சித்திநாயகம்பிள்ளைத் தமிழில் வசைக்குறிப்புகள் வெள்ளிடைமலை எனத் தெற்றெனத் கிடக்கின்றன.பல்வேறு வசைச்சொற்களால் இகழ்ந்தும் இழித்தும் பாடிய புலவர், இடக்கர்ச் சொற்களைப் பாக்களில் பெய்து பாடியிருப்பது பகையின் வலிமையையும் ஆத்திரத்தையும் எடுத்துக்காட்டுகிறது. "சுண்ணிக் கலையே நீ வருக ...காட்டன் புடுக்கே நீ வருக[74]" எனவும் "வீரா மகப்பையால் மோப்பார்களிவன் மேவு பொண்டாட்டியை ஒப்பார்கள்[75]" எனவும் அமைவன மிகக் கடுமையான சொற்களும், கருத்துக்களும் ஆகும்.

பாட்டுடைத் தலைவனை இழிவுபடுத்துதல்

சித்திநாயகம் இராங்கியம் மணியக்காரன் இவன் சவுந்தர பாண்டியன்மகன்,[76] பதிப்பாசிரியர் சிட்டநாதன்[77] எனக் குறித்தது மூலத்துக்கு மாறுபாடு. இவனைப்பற்றி வேறு செய்திகள் இப்பத்துப் பாடல்களால் அறிய இயலவில்லை.

"செத்தநாய் தின்றுவளர் சித்திநாயகமட்டி" என்ற மகுடம் காப்பு, செங்கீரை, அம்புலி, சிறுபறை, சிறுதேர், ஆகிய ஐந்து பருவப்பாடல்களில் உள்ளன. தமிழகத்தில் பல விலங்குகளின் இறைச்சியை உண்ணும் பழக்கம் உண்டு. நாய் ஊனைத் தின்பதில்லை. நாயின் இறைச்சி மக்கள் உடல் நலத்துக்கு உகந்தது இல்லை. மிக்க தீமை விளைப்பது. மணிமேகலை, விசுவாமித்திரன் என்ற முனிவன் நாயூன் தின்ன முயன்ற சூழ்நிலையை,

"புன்மரம் புகையப் புகையழல் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளம் கரத்தலின்
அரசுதலை நீங்கிய வருமறை யந்தணன்
இருநில மருங்கின் யாங்கணுந் திரிவோன்
அரும்பசி களைய வாற்றுவது காணான்
திருந்தா நாயூன் தின்னுத லுறுவோன்" [78]

என விளக்குகிறது. விசுவாமித்திரன் அதனைத் தின்னும் முன்னர் இந்திரனுக்கு வைச்சுவதேவம் செய்கிறான். அவ்வூனைத் தின்ன மனம் இசையாமல் நாய் இறைச்சி தின்ன நாணி-இந்திரன் - நிலவுலகில் மழைபெய்யச் செய்கிறான். இவ்வாறு சால இழிந்த நாய் இறைச்சியைத் தின்பவனாகச் சித்திநாயகத்தைக் கவிராயர் சித்தரித்துக் கேவலப்படுத்துகிறார்.

நூலின் இயற்கை

மங்கைபாகக் கவிராயர் பாட்டுடைத் தலைவன் சாவை விரும்பிப் பாடல்களைப் பாடியிருந்தாலும் பிள்ளைத்தமிழ் மரபுகள் மாறாமலே பாடியிருக்கிறார். நந்திக்கலம்பகம் போல இதற்கு ஒரு நோக்கம், இருந்தாலும் நந்திக்கலம்பகத்தில் உள்ள இனிமையும் எளிமையும் இங்கு இல்லை. இவற்றுக்கெல்லாம் மேலாகக் கவிராயரின் நோக்கம் இப்பாடல்களில் வெளிப்படப் பிதுங்கி உறுத்திக்கொண்டிருக்கிறது. இவற்றில் காணப்படும் கீழான கொச்சைச் சொற்கள் பரத்தையர்களொடு தொடர்புபடுத்தும் விறலிவிடுதூது. போன்ற நூல்களில்கூட வழங்கவில்லை.

சப்பாணிப்பருவம் கைகொட்டல் பற்றி விவரிக்கும் - ஆசிரியர் கொட்ட என்ற வல்லின எழுத்துக்களான இயன்ற வல்லோசைச் சொல்லை அடிதோறும் இரண்டுமுறை கையாள்வார். பிறபிள்ளைத்தமிழ் ஆரியர்களும் சப்பாணிப்பருவத்தில் கையாளும் இவ்வொலி அமைப்பை மங்கைபாகக் கவிராயரும் அமைத்துள்ளார். கொட்ட என்ற சொல்லுக்குக் கொட்டுதல் எனவும் தேள்குளவி முதலியன கொட்டுதல் எனவும் கொட்டாப்புளியால் கொட்டுதல் எனவும் மூன்று பொருள்தரும் முறையில் ஒரே சொல்லை அமைத்துக் கைகொட்டும் ஓசைநயத்தைப் பாட்டில் புலப்படுத்துவர். இவ்வாறு ஓசையை அமைத்துப் பல்வேறு இழிந்த பொருள்களைச் சித்திநாயகம்மீது கொட்ட என்று அவமானப்படுத்துகிறார்.

அறம் வைத்துப் பாடிய வகைமை

அன்போடு உபசரித்த இடத்தில் புகழ்ந்து பாடுவதும் தம்மைப் புறக்கணித்த இடத்தில் வசைபாடுவதும் புலவர் இயல்பு. புறநானூற்றில், இருநூற்று இரண்டு முதல் இருநூற்றுப் பதினொன்று முடிய உள்ள பாக்கள் புலவர்களை மதிக்காத புரவலர்களைப் புலவர்களும் மதியாமையைக் காட்டுகின்றன. அவை பொருளுக்கும் கல்விக்கும் எழுந்த போராட்டத்தில் கல்வி மேம்பாட்டைப் வெளிப்படுத்துகின்றன. பெரிதே உலகம் பேணுநர் பலரே[79] எனவும் எத்திச்சைச் செலினுமத்திச்சைச் சோறே,[80] எனவும் தமக்குப் பெருமை உள்ளமையை அவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

சங்கப்புலவர் பாட்டுப் புலவர்க்குச் சாவு வரவேண்டும் எனப் பாடிய பாட்டு அன்று. எனினும் அப்புலவர் பெருமக்கள் நினைத்ததை அவர்கள் பாக்கள் நிறைவேற்றின. பாரி மாய்ந்த பின்றை அவன் பெண்மக்களைக் கபிலர் மணம்செய்ய இருங்கோவேள்பால் கொண்டு சென்றார். அவனோ புலவர் கருத்துக்கு இசைந்திலன். அஞ்ஞான்று அம்மரபினரின் பண்பு புலவர்க்குத் தோன்றுகிறது அதனை அவன்பால் அவர் உரைத்துத்தன் வெறுப்பைப்

புலப்படுத்துவர். பொன்வளம் சிறந்த சிற்றரையம், பேரரையம் என இருபகுதியான அரையம் என்னும் மூதூர் அழிந்தமைக்கு உரிய காரணம் அறிவாய் எனக் கபிலர்,

"வெட்சிக் கானத்து வேட்டுவ ராட்டக்
கட்சிக் காணாக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்
கடிய கதழு நெடுவரைப் படப்பை
வென்றி நிலைஇய விழுப்புக ழொன்றி
இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்க்
கோடிபல வடுக்கிய பொருணுமக் குதவிய
நீடுநிலை யரைத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாய நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
நும்போ லறிவி னுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே யியறே ரண்ணல்"[81].

என்று விளக்கிப் புலவர் சீற்றத்தின் ஆற்றலை யுரைப்பர். புலி கடிமாலுக்குக் கபிலர் தனக்கு முந்திய நிகழ்ச்சி ஒன்றைச் சுட்டி அறிவு கொளுத்துகிறார். அது கெடுதற்குக் காரணம், கழாத்தலையை நுமருள் ஒருவன் இகழ்ந்ததனால் ,அவன் வாக்குத் தப்பாதாகலின், அவன் வசையாகப் பாடினனென்று சொல்லுவர். பண்டுதொட்டே இத்தகைய நிறைமொழி ஆற்றல் தமிழ்ப்புலவருக்கு வாய்த்திருந்தது. நந்திக்கலம்பகம் தோன்றிய காலத்து இக்கொள்கை அறம்பாடுதல் எனப் புதுமெருகு பெற்றது. மீண்டும் பதினைந்தாம் நூற்றாண்டில் காளமேகப் புலவர் காலத்தில் வசைப்பாடுதல் புலவர்க்குத் தனித்தகுதி ஆயிற்று.

ஒன்பதாம் நூற்றாண்டுக்குப்பின் எழுந்த நிகண்டுகளும் பாட்டியல்களும் நூலுக்குரிய பாட்டுடைத் தலைவன் பலநலமும் பெறநூல் எவ்வாறு அமைய வேண்டும் என்ற அமைப்பை எடுத்துரைத்தன. இக்கோட்பாடு நந்திக் கலம்பகத்தால் தமிழ்ப்புலவரிடையே வளர்ந்தது. இன்னவாறு பாடின் பாட்டுடைத் தலைவனுக்குத் தீமைவரும் என்று வகுத்த கொள்கைகள், புலவர் வெறுப்புக்கு ஆளான புரவலர் மீது நூல் எழுத வழி வகுத்துக் கொடுத்த விதிகளாயின. மிதிலைப்பட்டிப் புலவர் மரபில் கழுதைவிடுதூது என்ற நூலும் இப்பிள்ளைத்தமிழும் அறம்வைத்துப் பாடியவை. மங்கைபாகக் கவிராயர் பாடிய சித்திநாயகம்பிள்ளைத்தமிழ் சித்தி நாயகத்துக்குச் சாவை அளித்தது எனப் புலவர் மரபினர் பாடிய பாடல்களால் புலனாகிறது. சித்திநாயகம் சாகப்புலவன் எத்தகைய அமைப்பை நூலில் அமைத்திருக்கிறார் என்று ஆராய்தல் பயனுடையது.

பாட்டுடைத் தலைவன் மீது தோன்றும் புதுநூலால் தலைவனுக்குக் கேடு விளையக்கூடாது. அதற்கு எனப்பத்துப் பொருத்தங்களை வகுத்தனர். இப்பொருத்தங்கள் வடமொழி மரபைத் தழுவியன.[82] அவை எழுத்துப் பொருத்தம், தானப் பொருத்தம், பாற்பொருத்தம், உணாப் பொருத்தம், வருணப் பொருத்தம், நாட்பொருத்தம், கதிப்பொருத்தம், கணப்பொருத்தம் எனப்பத்து வகை. இவை பெரும்பாலும் நூலின் முதற்சொல்லோடு தொடர்புடையன.

சித்திநாயகம் பிள்ளைத்தமிழின் முதற்சொல் பாா்ப்பார்கள்; இது மங்கலச் சொல் அன்று. மங்கலச் சொல் வியனிலையாக - ஒற்றைப்படை எண்களால் ஒற்றும் உட்பட ஏழு எழுத்துகளால் அமைந்திருக்க வேண்டும். தானப் பொருத்தம் ஐந்துவகை. உயிர் எழுத்துகளும் உயிர் மெய்யெழுத்துகளும் இவற்றில் அடங்கும்.

தானப் பெயர்	பால தானம்	குமர தானம்	இராச தானம்	மூப்பு தானம்	மரண தானம்
எழுத்துக்கள்	அ, ஆ	இ, ஈ, ஐ,	உ, ஊ, ஔ	எ, ஏ,	ஒ, ஓ

தலைவன் பெயரிலுள்ள முதலெழுத்தைப் பாலதானமாகக் கொள்ள வேண்டும். மங்கலச் சொல்லின் முதல் எழுத்தோடு எண்ணுங்கால் மூப்பு, மரணமாகிய தானங்கள் வந்தால் தலைவனுக்குத் தீமை வரும். இங்கே சித்திநாயகம் - தலைவன் பெயர்; பாா்ப்பார்கள் - முதற்சீர்.

பால தானம்	குமர தானம்	இராச தானம்	மூப்பு தானம்	மரண தானம்
இ, ஈ, ஐ (சி)	உ, ஊ, ஔ	எ, ஏ	ஒ, ஓ	அ, ஆ (பா)

இ - பாலதானம். பாலதானத்திலிருந்து முதற்சீரின் ஆ மரணதானத்தில் திகழ்கிறது. இதனால் இச்சொல்லை முதற்சீரில் அமைப்பது பாட்டுடைத் தலைவனுக்கு மரணம் விளைவிக்கும்.

குறில் எழுத்துக்கள் ஆண்பால்; நெடில் எழுத்துக்கள் பெண்பால்; அவ்வவ்பால் தலைவரைப் புகழும்போது அவ்வவ்வெழுத்துகளால் தொடங்க வேண்டும். இப்பிள்ளைத்தமிழில் சித்திநாயகம் என்ற ஆண்மகனைப் பெண்பால்

எழுத்துகளால் பாடியிருப்பது குற்றம்; தீமை பயக்கும்.

எழுத்துகளை அமுதவெழுத்து, நஞ்செழுத்து என இரண்டாக்கி அமுத எழுத்து, பா முதலில் பயில வேண்டும் என்பது உணாப் பொருத்தம்

> "அமுதவெழுத்துக்களைப் பொறுத்தவரை பாட்டியலார் அனைவரும் ஒருமித்துப் பதினொரு எழுத்துக்களையே உரைத்தனர். எவற்றை நச்செழுத்தாகக் கொள்வது என்பதிலேயே பாட்டியலாரிடை வேறுபாடு அமைந்துள்ளது."[83]

அமுதவெழுத்துகளாவன க, ச, த, ந, ப, ம, வ, அ, இ, உ, எ. சித்திநாயகம் பிள்ளைத்தமிழ் "பார்ப்பார்" என "ஆ" முதற்சீரில் இருக்கின்றது. பன்னிரு பாட்டியலும் பரணர் பாட்டியலும் நவநீதப் பாட்டியலும் ஆகாரத்தை நச்செழுத்தாக வகுத்தன. வெண்பாப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல், முத்துவீரியப் பாட்டியல் ஆகியன இவ்வெழுத்தை நச்செழுத்து என நவிலவில்லை. நஞ்செழுத்து வைத்துப் பாடல்கள் பாடுவதையே அறம் பாடுதல் என்று புலவர் வழங்குவர். இதனையே "ஆனந்தக்குற்றம்" என்பர். குணசாகரர் யாப்பருங்கலக்காரிகை உரையிலும் ஆறு குற்றங்களுள் ஒன்றாக ஆனந்தக்குற்றத்தைச் சுட்டிக்காட்டுவர்.[84] பன்னிருப்பாட்டியல் முதலியவற்றுக்கு இணங்க இது தீமையை உண்டாக்கும்.

பாட்டுடைத் தலைவன் சாதிக்குத் தக்க எழுத்துகளைப் பொருத்திப் பார்த்துப் பாடுதல் வருணப்பொருத்தம். சித்திநாயகம் வேளாளர் என்றால் அப்பொருத்தமும் நலமாக இல்லை. எழுத்துகள் அனைத்திற்கும் நாள் வகுத்து இருக்கின்றனர். பாட்டுடைத்தலைவன் பெயர் முதலெழுத்தில் நாளுக்கும் மங்கலமொழியின் முதல் எழுத்துக்கும் பொருத்தம் பார்ப்பது நாள் பொருத்தம். சித்திநாயகம் - சி. இரேவதி நட்சத்திரம். பார்ப்பவர்கள் - பா : உத்திரநட்சத்திரம். இரேவதி நட்சத்திரத்திலிருந்து உத்திர நட்சத்திரம் இரண்டாம் தொகுதியில் நான்காவதாக உள்ளது. இவ்வாறு வருவது நன்மை பயக்கும். எனவே ஆசிரியர் பாட்டியல் விதிகளைப் பின்பற்றிடவில்லை எனத் தெரிகிறது.

எழுத்துகளை நான்குவகைக் கதிகளாகப் பிரித்து முதற்சொல்லுக்கு நன்மை பயப்பவை எவை என்று உரைப்பது கதிப்பொருத்தம். ங், ஞ், ண், ந், ம் என்னும் ஐந்து மெய்யெழுத்தும் ஆ, ஏ, ஊ, ஓ என்ற நான்கு நெடிலும் மக்கள் கதிக்கு உரியவை. மங்கைபாகக் கவிராயர் முதற்சீரில் மக்கட்கதிக்கு உரிய எழுத்தைக் கையாண்டிருப்பதால் நன்மை பயக்கும்.

பாட்டின் முதன்மொழியை மூவகைச் சீரால் தொடங்க வேண்டும். எட்டு மூவகைச் சீருக்கும் தனித்தனியே கணப்பெயர் உண்டு. "பார்ப்பார்கள்" என்ற முதல்மொழிக்கு நேர்நேர்நேர் - தேமாங்காய் என்பது வாய்பாடு. இது துறக்ககணம்

என்பர் வெண்பாப்பாட்டியலார். பன்னிருபாட்டியல் இயமான கணம் எனவும் இது வாழ்நாள் பயக்கும் எனவும் விளக்கும். சூடமணிநிகண்டும் இங்ஙனமே உரைக்கும்.[85]

பாட்டியலும் நிகண்டுகளும் கூறும் பத்துப் பொருத்தங்கள் இப்பிள்ளைத்தமிழ் பாட்டுடைத் தலைவனுக்கு நன்மையாகவும் தீமையாகவும் உள்ளன. சொல், தூனம், நாள், கதி, கணம் முதலிய ஐந்து பொருத்தங்களும் நன்மையானவை, ஏனைய தீமை நல்குவன. இவற்றில் மங்கலப்பொருத்தம் அடிப்படையானது. அப்பொருத்தம் அமையாமையே பாட்டுடைத்தலைவன் இறப்புக்குக் காரணமாகும். பத்துப் பொருத்தங்களிலும் ஆற்றல் மிக்க ஐந்து பொருத்தங்கள், தலைவனுக்குத் தீமை தருவன.[86]

முழுமையும் பாட்டுடைத் தலைவனுக்குத் தீமை தருவனவாக ஆசிரியர் பாடவில்லையெனினும் அவர் அடிப்படையான பொருத்தங்களில் சித்திநாயகத்துக்குத் தீமை விளையப் பாடியிருக்கிறார். இதனாலேயே சித்திநாயகத்துக்குச் சாவு நேர்ந்திருக்கிறது.

மங்கைபாகக் கவிராயர் இப்பிள்ளைத்தமிழ் பாடியபோது பத்துப் பொருத்தங்களும் சித்திநாயகத்துக்குத் தீமை பயப்பதாய்க் கருதித் திட்டமிட்டுப் பாடவில்லை. அவர் சீற்றத்தால் மங்கலமொழி அமைக்காது - தெய்வக் காப்பு கூறாது - பலவாறு இகழ்ந்து இப்பிள்ளைத்தமிழை ஆக்கிச் சித்திநாயகத்தை மரணமுறச் செய்திருக்கிறார். ஆசிரியர், சித்திநாயகம் சாவை விழைந்தமைக்குப் பல்வேறு குறிப்புகள் பாக்களில் உள்ளன. தலைவன் சாவை ஏற்படுத்திய நந்திகலம்பகம் போலப் பிள்ளைத்தமிழில் இந்நூல் தனிமனிதன் இறப்புக்குக் காரணமாகிறது.

பிள்ளைத் தமிழில், இது பாடுபொருளால் புதுமையாகாதுபாடும் நோக்கத்தான் புதுமையுடையதாகிறது. தமிழில் தோன்றிய பிள்ளைத்தமிழ்களில் இவையேழும் பாடுபொருளாலும் பாடும் நோக்கத்தாலும் புதுமைப் பிள்ளைத் தமிழ்களாக விளங்குகின்றன.

சான்றெண் விளக்கம்

1. <u>தியாகராஜா அண்ணனும்-கண்ணனும் வாழ்த்து</u>, (1953), ப.53 காப்புபருவம், பா அடி 2.

2 சொ.தேவராயன், (1978), <u>பாடுவார் பாடல்கள்</u>, இளங்கோவன் பிள்ளைக்கவி, இளங்கோவின் பாடல்கள், (திருமண வெளியீடு), ப.11,காப்புப் பா. அடி 2.

3 தே.சொக்கலிங்கம், பாடுவார் முத்தப்பர், <u>நெற்குப்பை நகரத்தார் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாமலர்</u>, (14.9.1978). ப.62.

4 சொ. தேவராயன், (1978), மேற்படி ப.11, காப்புபா அடி 3.

5 சொ. தேவராயன் ப.13, சப்பாணிப்பருவம் , அடி 2-3.

6 சொ. தேவராயன் ப.11, காப்புப்பா, அடி 3.

7 சொ. தேவராயன் ப.12, தாலப்பருவப்பா, அடி 1-2.

8 சொ. தேவராயன் ப. 18 சிறுபறைபருவப்பா, அடி.3.

9 சொ. தேவராயன் ப. 18 மேற்படி அடி 2.

10 அ. சீநிவாசராகவன், <u>குப்பன் பிள்ளைத்தமிழ்</u>, காப்புப்பருவம், பா எண். 2, அடி, படியமருக்கும் குப்பானை,

11 <u>தமிழ் லெக்ஸிகன்-வால்யூம் இரண்டு</u>, பகுதி இரண்டு, ப.997.

12 அ. சீநிவாசராகவன், <u>வெள்ளைப்பறவை</u>, பக்.105-107.

13 கா.ர.கோவிந்தராசமுதலியார் (பதி), <u>பன்னிருப் பாட்டியல்</u>, நூற்பா எண் 102, அடி 4.

14 அ. சீநிவாசராகவன், மேற்படி பாட்டு 5 அடி 2.

15 அ. சீநிவாசராகவன், மேற்படி பாட்டு 6, அடி 1.

16 டி. எஸ். குப்பண்ணா சாஸ்திரி, மூதேவி - <u>கலைக்களஞ்சியம் எட்டாவது தொகுதி</u>, (1961), ப.468.

17 அ. சீநிவாசராகவன், மேற்படி சிற்றிற்பருவம், பாட்டு 9 அடி 4.

18 அ. சீநிவாசராகவன், மேற்படி சிற்றிற்பருவம்,

ஏட்டுச் சுரக்காய் உண்டிடவும்
ஏறுமாறு புரிந்திடவும்
ஏப்பம் விட்டே எப்பொருளும்
இல்லாதிருக்கச் செய்திடவும் தேட்டமாகநீகற்றால்

சிற்றில் பருவம் 9.1

19 மேற்படி 9 அடி 2-3

20 மேற்படி பாடல் 4

20அ. திருவள்ளுவர், திருக்குறள், பா.எண். 227, அடி 1-2.

21 அ. சீநிவாசராகவன், மேற்படி செங்கீரைப்பருவம், பா எண் 4, அடி 1-2.

22 அ. சீநிவாசராகவன், மேற்படி சிற்றிற்பருவம் 9, அடி 2-3

23 அ. சீநிவாசராகவன், மேற்படி முத்தப்பருவம் 7, அடி 1.

24

25 அ. சீநிவாசராகவன், மேற்படி முத்தப்பருவம் 7, அடி 2.

26 மேற்படி, சிறுபறைப்பருவப்பாட்டு எண் 8, அடி 3.

27 மேற்படி, சப்பாணிப்பருவம், பா எண் 5, அடி 2.

28 கருப்பக்கிழார் சு.அ. இராமசாமிப்புலவர் (பதி), தனிப்பாடல் திரட்டு - முதற்பகுதி, (கழக வெளியீடு), (1963), பா எண் 196, அடி 2.

29 சு. பாலச்சந்திரன்,(1978), கவிமணிசி.தேசிவகவிநாயகம்பிள்ளை, ப.228.

30 அ. சீநிவாசராகவன், (1967), வெள்ளைப்பறவை, பா 108.

31 கவிமணிசி.தேசிகவிநாயகம்பிள்ளை, (1942), நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம், பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை முன்னுரையுடன், மூன்றாம் பதிப்பு, மூன்னுரை, பக் 33-34.

32 அ. சீநிவாசராகவன், (1967), வெள்ளைப்பறவை, (மு நூ) ப.117.

33 டாக்டர் சு.பாலச்சந்திரன், (1978), கவிமணி சி.தேசிவகவிநாயகம்பிள்ளை, (சென்னை - 30, அணியகம்), ப.228.

34 மு நூ. சிறுபறைப் பருவம், பா 8, அடி 4.

35 மு நூ, செங்கீரைப் பருவம், பா 4, அடி 4.

36 கம்பர், <u>கம்பராமயணம் - அயோத்தியா காண்டம்,</u> (1972), பா எண் 1039, அடி 1.

37 நா. செல்வம் (பதி), <u>நாச்சியப்பன் பாடல்கள்,</u> ப.252.

38 மு நூ, ப 254.

39 மு நூ, ப 228, பா எண் 2, அடி 2.

40 மு நூ, மேற்படி பா எண் 3, அடி 2.

41 மு நூ, ப 229, பா எண் 2, அடி 1.

42 மு நூ, ப 229, பா எண் 2, அடி 1. பா எம் 3, அடி 3.

43 மு நூ, ப 230, பா எண் 1, அடி 4.

44 மு நூ, ப 230, பா எண் 3, அடி 2.

45 மு நூ, ப 236, பா எண் 1, அடி 2-3.

46 மு நூ, ப 237, பா எண் 1.

47 ஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் (பதி), <u>செங்குந்தர் பிரபந்தத்திரட்டு</u> (1926), பிள்ளைத்தமிழ், ப 219.

48 மு நூ, ப 117, செங்கீரை, பா எண் 1, அடி 4.

49 மு நூ, பக் 174-175, செங்கீரை, பா எண் 2.

50 மு நூ, ப 176, செங்கீரை, பா எண் 5,ப 183, தால் பா எண் 6,பக் 190-191, சப்பாணி, பா எண் 10, பக் 191-192 முத்தம், பா எண் 2.

51 மு நூ, ப 208, சிறுபறை, பா எண் 7,

52 மு நூ, ப 205, சிறுபறை, பா எண் 1,

53 மு நூ, ப 176, செங்கீரை, பா எண் 176.

54 மு நூ, ப 180, தால், பா எண் 1.

55 மு நூ, பக்180-181, தால், பா எண் 2, ப 195, வருகை, பா எண் 1.

56 மு நூ, ப174, செங்கீரை, பா எண் 1, கம்பையாற்றுப் புனைவு, ப 177,

செங்கீரை, பா எண் 6, வண்டுகள் பற்றிய புனைவு, ப 196, வருகை, பா எண் 2, இயற்கை.

57 தி.சந்திரசேகரன் (பதி), தனிப்பாடற்றிரட்டு, பா எண் 101-110.

58 தி.சந்திரசேகரன் (பதி), மு நூ, பா எண் 108, அடி 4.

59 தி.சந்திரசேகரன் (பதி), பா எண் 107, அடி 1.

60 தி.சந்திரசேகரன் (பதி), பா எண் 108.

61 தி.சந்திரசேகரன் (பதி), பா எண் 110.

62 தி.சந்திரசேகரன் (பதி), பா எண் 570.

63 திருவள்ளுவர், திருக்குறள், பா எண் 28.

64 தே.சொக்கலிங்கம், பாடுவார் முத்தப்பர், நெற்குப்பை நகரத்தார் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாமலர், பக் 62-68.

65 டாக்டர் உ.வே. சாமிநாதையர் (பதி), அழகர்கிள்ளைவிடுதூது, (1957), ஆறாம்பதிப்பு, பக்கம்

66 தி.சந்திரசேகரன் (பதி), மு நூ, பா எண் 570.

67 ந.வி. செயராமன், தூது இலக்கியங்கள் ப 195.

68 மு.க. தங்கவேலு, நந்திக்கலம்பகம் கலைக்களஞ்சியம் தொகுதி, (1959), பக்.290-291.

69 தி.சந்திரசேகரன் (பதி), மு நூ, பா எண் 106, அடி 2.

70 தி.சந்திரசேகரன் (பதி), மு நூ, பா எண் 107, அடி 3.

71 தி.சந்திரசேகரன் (பதி), மு நூ, பா எண் 101, அடி 4.

72 தி.சந்திரசேகரன் (பதி), மு நூ, பா எண் 26.

73 டாக்டர் உ.வே. சாமிநாதையர் (பதி), மணிமேகலை, காதை 11, அடி 82-87.

74 டாக்டர் உ.வே. சாமிநாதையர் (பதி), புறநானூறு மூலமும் உரையும், பா எண் 207, அடி 11.

75 மேற்கூறிய நூல் மு நூ, பா எண் 206, அடி 13.

76 மேற்கூறிய நூல் மு நூ, பா எண் 202, அடி 1-13.

77 Dr. A.C. Chettiar, (1943), Advanced Studies in Tamil Prosody, p.194

78 ந.வி. செயராமன் (1977), பாட்டியல் திறனாய்வு ப 39.

79 சாமி ஐயா (பதி), சூடாமணி நிகண்டு பதினோராவது பன்னிரண்டாவது தொகுதிகள், மூலமும் உரையும் (1954) பன்னிரண்டாவது தொகுதி, 96.

80 பொருத்தம் பார்க்கும்போது அடிப்படையான பொருத்தங்கள் பொருந்தியிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும்.

பிள்ளைத்தமிழ் பற்றிய நூற்பாக்கள்

நிகண்டுகளும் பாட்டியல்களும்

(காலவரிசைப்படி)

சேந்தன் திவாகரம் (கி.பி.900)

ஆண்பாற் பிள்ளைப்பாட்டில் வகைப்பெயர்

திங்களிரண்டில் தெய்வக் காப்பும்
ஐந்தாந்திங்களில் செங்கீரையும்
ஏழாந் திங்களில் தாலப்பாட்டும்
எட்டாந் திங்களில் இன்னமுதூட்டலும்
ஒன்பதாந்திங்களில் சப்பாணியும்
பத்தாந்திங்களில் முத்தங்கூறலும்
ஆண்டுவரையகவயின் ஈண்டுவருகென்றலும்
ஈரெண்டிங்களின் அம்புலி காட்டலும்
இரண்டாமாண்டில் சிறுபறை கொட்டலும்
மூன்றாமாண்டில் சிற்றில்சிதைத்தலும்
நாலாமாண்டில் சிறுதேருட்டலும்
வைத்தமுந்நான்காண் டெல்லைவரையில்
கச்சிற்சுரிகை காமுறப்புனைதலும்
பெற்றியாண்பால் பிள்ளைப்பாட்டே.

(பல்பொருட்கூட்டத்தொரு பெயர்த்தொகுதி-பக்கம் 309)

பெண்பாற் பிள்ளைப்பாட்டு வகைப்பெயர்

ஆண்டுவரையகவயின் முன்னுரைத்தனவும்
மூன்றாமாண்டில் குழமணமொழிதலும்
ஐந்தின்முதலா ஒன்பதின் காறும்
ஐங்கணைக்கிழவனை ஆர்வமொடு நோற்றலும்
பனிநீர்தோய்தலும், பரவையாடலும்
சிறுசோறடுதலும், சிற்றிழைத்தலும்,
ஊசலாட்டும்என் றிவையுள்ளிட்டு,
பேசியபெண்பாற் பிள்ளைப்பாட்டே.

(மேற்படி. ப. 310)

பன்னிருபாட்டியல், இந்திரகாளியம் (கி.பி.900)

1. தோற்ற முதல்யாண் டீரெட் டளவும்
ஆற்றல் சான்ற ஆண்பாற் குரிய (175)

2. காப்புமுத லாகிய யாப்புவகை யெல்லாம்
பூப்பு நிகழ்வளவும் பெண்பாற் குரிய (176)

3. அவைதாம்
பிள்ளையைப் பாடலில் பிள்ளைப் பாட்டாய்ப்
பிறப்பே ஓகை காப்பே வளர்ச்சி
அச்ச முறுத்த லுடன்செங் கீரை
தால்சப் பாணி முத்தம்வா ரானை
அம்புலி சிற்றில் குழமகன் ஊசல்
என்றனர் பிறவும் தொன்னெறி மரபின்
தத்தம் தொழிற்குத்தகுவன புகறல்
எத்திறத் தோர்க்கும் உரிய என்ப
கொச்சகக் கலியொடு நெடுவெண் பாட்டே (194)

4. நெடுவெண் பாட்டின் முந்நான் கிறவாது
தொழிலொடு குறித்துத் தோன்றுஞ் செய்யுள்
ஒன்றுமூன் றைந்தே ழொன்பான் பதினொன்
றென்றிவை இவற்றின் இகந்தன இழுக்கே. (195)

5. பிறப்பே ஓகை பேணுறு வளர்ச்சி
சிறைப்பட அச்ச முறுத்தலொடு நான்கும்
ஆரா யுங்கால் ஐந்துமூன் றிடையாய்
ஒரே ழொருபொருட் குயர்ச்சியிழி பொன்றே (196)

பன்னிருபாட்டியல், பொய்கையார் (கி.பி. 1000)

1. பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே (173)
2. ஒன்று முதல்யாண் டோதினும் வரையார் (174)

பன்னிருபாட்டியல், பரணர் (கி.பி.1000)

1. தொன்னிலை வேந்தர் சுடர்முடி சூடிய
பின்னாப் பெறாஅர் பிள்ளைப் பாட்டே(177)

ஆண்பாற்பிள்ளைப் பாட்டில் அமைத்தற்குரிய நிலைகள்

2. காப்பொடு செங்கீரை தால்சப் பாணி
யாப்புறு முத்தம் வருகஎன் றல்முதல்
அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்
நம்பிய மற்றவை சுற்றத் தளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர் (178)

முன்னுற அமைத்தற்குரிய சுற்றத்தார்

3. தந்தை தாயே பாட்டன் பாட்டி
முந்துற உரைத்தல் முறைமை என்ப (179)

பெண்பாற் பிள்ளைப்பாட்டில் அமைத்ததற்குரிய நிலைகள்

4. திருந்திய பெண்மக வாயின் விரும்பிய
பின்னர் மூன்றும் மன்னுநீக் கென்றனர். (180)

5. சிற்றில் சிறுதேர் சிறுபறை ஒழித்து
மற்றவை மகளிர்க்கு வைப்ப தாகும் (181)

பெண்பாற் பிள்ளைப்பாட்டுக்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி

6. சிற்றில் இழைத்தல் சிறுசோ றாக்கல்
பொற்பமர் குழமகன் புனைமணி ஊசல்
ஆண்டீ ராறதில் எழிற்காமன் நோன்பொடு
வேண்டுதல் தாலுள விளம்பினர் புலவர் (182)

காப்பிற்குரிய கடவுளர்

7. திருமால் அரனே திசைமுகன் கரிமுகன்
பொருவேல் முருகன் பரிதி வடுகன்
ஏழுவகை மங்கையர் இந்திரர் சாத்தன்
நிதியவன் நீலி பதினொரு மூவர்
திருமகள் நாமகள் திகழ்மதி என்ப
மருவிய காப்பினுள் வருங்கட வுளரே (183)

காப்பின் முற்கண் எடுத்துரைக்கும் கடவுள்

8. காப்பின்முதல் எடுக்கும் கடவுள் தானே
பூக்கமழ் துழாய்முடி புனைந்தோன் ஆகும் (184)

காப்பின் முதற்கண் திருமாலைக் கூற வேண்டியதன் காரணம்

9. அவன்றான்
காவற் கிழவன் ஆக லானும்
பூவின் கிழத்தியைப் புணர்த லானும்
முடியும் கடகமும் மொய்பூந் தாரும்
குழையும் நூலும் குருமணிப் பூணும்
அணியும் செம்மல் ஆக லானும்
முன்னுற மொழிதற் குரியன் என்ப (185)

10. விரிசடைக் கடவுளும் வேய்த்தோள் எழுவரும்
அருளொடு காக்கவென் றறையுங் காலைக்
கொலையும் கொடுமையும் கூறா ராகிப்
பெயரும் சின்னமும் பிறவும் தோன்றக்
கங்கை திங்கள் கடுக்கை மாலை
மங்கல மழுவொடு மலைமகள் என்றிவை
விளங்கக் கூறல் விளம்பிய மரபே (186)

11. ஒன்பது பதினொன் றென்பது காப்பே (187)

12. அகவல் விருத்தமும் கட்டளை ஒலியும்
கலியின் விருத்தமும் கவின்பெறு பாவே. (188)

13. பிள்ளைப் பாட்டே நெடுவெண் பாட்டெனத்
தெள்ளிதிற் செப்பும் புலவரும் உளரே(189)

14. முதற்கண் எடுக்கும் அகவல் விருத்தம்
எழுத்தின் பகுதி எண்ணினர் கொளலே (189அ)

உவகை அமைத்துப்பாடும் திறம்

15. நீணெறி உவகை ஆண்மக விற்கேழ்
ஐம்மூ வாண்டே அவர்முதற் சாற்றல் (190)

16. பொங்குகதிர் இளம்பிறை புலியின் சிறுபறழ்
குஞ்சரக் குழவி கோளரிக் குருளை
அடலிள விடையே ஆறிரண் டாண்டின்
இடைநிகழ் உவமை என்மனார் புலவர். (191)

17. பெண்மக விற்குப் பேசு மிடத்து
மானின் கன்று மயிலின் பிள்ளை
தேனின் இன்பத் தெள்ளாத் தேறல்
கரும்பின் இளமுளை சுல்லாக் கிள்ளை
இளந்தளிர் வல்லி என்றிவை எல்லாம்
பெய்வளை மகளிர்க் கெய்திய உவமை (192)

18. இளங்கதிர்த் திங்கள் எல்லாருக்கும் உரித்தே (193)

பிங்கல நிகண்டு (கி.பி.1000)

1. பிள்ளைப் பாட்டு வாயின் முன்னம்
வெள்ளைப் பாட்டு வேதியர்க் குரித்தே (1363)

2. நேரிசை யகவலுங் கொச்சகக் கலியு
மாரா யுங்கா லரசர்க் குரித்தே (1364)

3. வஞ்சியு மின்னிசை வெள்ளையும் வணிகர்க்
கெஞ்ச லில்லா வியல்புடைத் தாகும் (1365)

4. நெடுவெண்பாட்டும் நேரிசை யகவலுங்
கடியசூத் திரர்க்குக் கட்டுரைத் தனரே (1366)

5. காப்புமுத லிசைக்குங் கடவு டானே
பூக்கமழ் தண்டுழாய் புனைந்தவ னாமவன்
காவற் கிழமைய னாத லானும்
முடியுங் கடகமு மொய்ப்பூந் தாருங்
குழையு நுதலுங் குருமணிப் பூணும்
அணியுஞ் செம்ம லாத லானும்
மன்னுறு பிரமனைத் தருத லானும்
முன்னுற மொழிதற் குரிய னாமெனப்
பன்னி யுரைத்தனர் பாவலர் தாமே (1367)

6. பிள்ளைப் பாட்டுத் தெள்ளிதிற் கிளப்பிற்
றிங்க ளிரண்டிற் றெய்வங் காக்கென
இன்றமிழ்ப் புலவ ரியம்பிய காப்பு
மைந்தாந் திங்களிற் செங்கீரை யாடலு
மாறாந் திங்களிற் கூறுதல் கற்றலோ
டேழாந் திங்களி னின்னமு தூட்டலு
மெட்டாந் திங்களி னியற்றா லாட்டலு
மொன்பதாந் திங்களி லுயர்சப் பாணியும்
பத்தினோ டொன்றின் முத்தங் கூறலு
மாண்டு வரையி லிண்டுவரு கென்றலு
மதியீ ரொன்பதின் மதியை யழைத்தலு
மிரண்டா மாண்டிற் சிறுபறை கொட்டலு
மூன்றா மாண்டிற் சிற்றில் சிதைத்தலும்
நாலா மாண்டிற் சிறுதே ருருட்டலும்
பத்திற் பூணனி பன்னீ ராண்டினிற்
கச்சொடு சுரிகை காமுறப் புனைதலென்
றின்னவை பிறவு மாகு மவற்றுள்
முன்னர் மொழிந்த வொழிந்தவற் றோடும்
பெற்ற வாண்பாற் பிள்ளைப் பாட்டாம்
முன்னுறக் கிளந்த ஆண்டி னாள்வரை
இசைத்த பாட விருபாற்கு முரித்தே (1368)

7. பேணும் சிறப்பிற் பெண்மக வாயின்
மூன்றா மாண்டிற் குழமண மொழிதலு
மைந்தின் முதலா யொன்பதின் காறு
மைங்கணைக் கிழவனை யார்வமொடு நோற்றலும்
பனிநீர் தோய்தலும் பாவை யாடலு
மம்மனை கழங்கு பந்தடித் தாடலுஞ்
சிறுசோ றடுதலுஞ் சிற்றி லிழைத்துலு
மூச லாடலு மென்றிவை யுள்ளிட்டுப்
பேசிய பெண்பாற் பிள்ளைப் பாட்டே (1369)

வெண்பாப்பாட்டியல் (கி.பி.1200)

1. கண்டுரைக்கிற் பிள்ளைக் கவிதெய்வங் காக்கவெனக்
கொண்டுரைக்குந் தேவர் கொலையகற்றி - ஒண்டொடியாய்
சுற்றத் தளவா வகுப்பொடு தொல்விருத்தம்
முற்றுவித்தல் நூலின் முறை (6)

2. முறைதருமூன் றாதிமு வேழ்றாந திங்கள்
அறைகநிலம் பத்துமாண் டைந்தேழ்- இறைவளையார்க்
கந்தஞ் சிறுபறையே யாதியா மூன்றொழித்துந்
தந்தநில மோரெழுஞ் சாற்று (7)

3. சாற்றரிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை - போற்றரிய
அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து (8)

கலித்துறைப் பாட்டியல் என்னும் நவநீதப் பாட்டியல் (கி.பி.1400)
பிள்ளைத்தமிழ் - காப்புக் கடவுளர்

1. பூவிற் திருவைப் புணர்தலிற் பொன்முடி பூண்கடகம்
மேவப் படுதலின் வெண்சங்க மாழி விரும்புதலிற்
காவற் கடவுளைக் கார்முகில் வண்ணனைக் காசினியோர்
பாவுக்கு முன்னே பகருவர் காப்பாப் பணிமொழியே

2. விரிசடைப் பிஞ்ஞகன் வேய்த்தொ ளெழுவர்முன் காக்கவென்ன
அருள்பெறக் கூறி வைரவர் செய்யும் கொலையகற்றி
உரியநற் கங்கை யுமையாள் மதியூர் விடைகடுக்கை
விரைமலர்த் தார்மற்று மங்கலமாக விளம்பினரே

3. பதினொரு மூவரும் பங்கயத் தோனும் பகவதியும்
நிதிமுத லோனும் பருதியுஞ் சாத்தனும் நீளமரார்க்
கதிபதி தானு மறுமுகத் தைங்கரத் தற்புதனும்
மதிபுனை வேணி வடுகனுங் காவல்செய் வானவரே

பிள்ளைக்கவியின் பருவங்கள்

4. முற்றந்த காப்புச்செங் கீரைதால் சப்பாணி முத்தத்தொடு
மற்றந்த வாரானை யம்புலி வாய்ந்த சிறுபறையே
சிற்றில் சிதைத்தல் சிறுதே ருருட்டுதல் சேர்ந்தபத்தும் சுற்றத்தளவும்
கவிக்கெல்லை யாக்கொண்டு சொல்லுவரே.

பிள்ளைத்தமிழுக்குப் பருவ வரையறை

5. மூன்று முதலிரு பத்தொரு திங்கள் முடிவளவாய்த்
தோன்று நிலைபத்துஞ் சொல்லுவர் தோகையர் தங்களுக்கும்
ஆன்ற புகழ்ச்சிக்கு மவ்வகை யாமென்பர் ஐந்தேழென
ஏன்றநல் லியாண்டி னகவரை தானும் இயம்புவரே.

பிள்ளைத்தமிழ் சுருங்கிவரும் பருவம்

6. சொன்ன சிறுபறை யேமுதன் மூன்றும் சுருங்கிவரும்
மன்ன விருத்தம் வருத்தவீ ரெண்கலை வண்ணச் செய்யுள்
அன்னவை யோரைம் பதிலஃகா தெல்லை அறைவர்கற்றோர்
பொன்னு மணியுநற் போகமு மீன்ற புணர்முலையே

பிள்ளைக்கவிக்கு ஆவதோர் புறனடை

7. சிறுபறை யேமுதன் மூன்றுந் தெரியிலப் பேதையர்க்குப்
பெறுவன வல்ல விளையனே யாயினும் வேந்தன் பெறான்
மறுவின் முடிசூடிற் பிள்ளைக் கவிகாப்பு மாலைமுன்னே
அறிபவ ரொன்பதும் பன்னொன்றுமாக அறைவர்களே

பாரதிதீபம் (கி.பி.1500)

பிள்ளைப்பாட்டு

1. திங்க ளிரண்டினி லைந்தினி லேழினி லொன்பதினி
லங்கொரு பத்தொன்றிற் காப்புச்செங் கீரையமுதடன்றால்
தங்குசப் பாணிமுத் தங்கூற லாண்டு தனிற்புதல்வ
விங்கெதிர் வாவெனல் பூச்சூட்டல் திங்களோ ரெட்டினிலே

ஆண்பிள்ளைப்பாட்டு

2. ஆண்டிரண் டுற்ற சிறுபறை கொட்ட லணுகியமு
வாண்டினிற் கோழகந் தான்செய்தல் சிற்றிலழித்தலைந்தா
மாண்டின்மை யாடல் சுரிகைமெய் சேர்த்தலவையவையவ்
வாண்டினிற் பாடுத லாண்பிள்ளைப் பாட்டுக் கடைவதுவே

பெண்பிள்ளைப்பாட்டு

3. முன்னவை யாண்டின் முடித்தலவ் வாண்டெல்லை மூன்றுதன்னி
முன்னு கும்பக னைந்தொட தெல்லையி னோங்குவில்வே
டன்னை வழிபட னீராடல் தண்கட லாடல்சிற்றில்
பன்னல் மணசெ... பொன்னூசல் பெண்பிள்ளைப் பாட்டென்பரே

பிரபந்தமரபியல் - (கி.பி.1500 - 1525)

பிள்ளைக்கவி

1. செறிகொலை நீக்கித் தெய்வம் கா (ப்பெ) னத்
தொகை (யளவு) வரையும் இசைவகுப் பகவல்

விருத்தந் தன்னால் வினவுமுறை காப்புச்
சாற்றுசெங் கீரை தால்சப் பாணி
வழங்கு (முத்தம் வாரா) னை அம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதேர் பத்தும்
ஈற்றில் மூன்றொழித்து ஏந்திழை யார்தமக்கு
உறுகழங்கு அம்மானை ஊசல் (அமைய)
மூன்றுமுத லிருபத் தொன்றனுள் ஒற்றைப்
பெறுமதி கொளலாம் பிள்ளைக் கவியே

பிள்ளைக்கவியின் பாடல்தொகை

2. இமையவர் வேதியர் இ (யல்புடையவ) வசியர்
சூத்திரர் என்னச் சொற்றஐ வருக்கு
முறையே நூறு முதலுறு பான்வரை
கணிக்கும் பிள்ளைக் கவி(யின் தொகை) யே.

சூடாமணி நிகண்டு (கி.பி.1600)

1. சாற்று காப்புச் செங்கீரை தாலே சப்பாணி முத்தம்
போற்று வாரனை யேயம்புலி சிற்றில் சிறுபறைப்பின்
ஏற்றிடுஞ் சிறுதேராமிப்பருவம் பத்தையுமிசைக்கும்
தேற்றுமாண்பிள்ளைப் பாட்டாசிரியஞ் சேர்விருத்தப்பாவே
2. அரிவையர்க்கா கிலிற்றிலறை மூன்று பருவமாகா
உரியதாங் கழங்கம்மானை யூசல் முன்னேழினோடு
வருமூன்றேயாதி மூவேழ் மதிகாறொற்றித்த மாதத்
திருபாலா ரையுங் கேட்பித்தலினிதைந் தேழாண்டுதானே (111 - 112)

3. காப்புக்கு முன்னெடுக்குங் கடவுடான் மாலேயாகும்
பூப்புனை மலரின் செல்வ புனைபவனாதலானும்
காப்பவ னாதலானுங் கதிர்முடி கடகத்தோடு
வாய்ப்பதா மதாணி பூணூல் வரிசையிற் புனைந்தலானும் (139)

சிதம்பரப்பாட்டியல் (கி.பி.1600)

1. துறுகொலை நீக்கித் தெய்வக் காப்பாய்ச் சுற்றத்
தொகையளவு வகுப்பகவல் விருத்தந் தன்னால்
முறைகாப்புச் செங்கீரை தால்சப் பாணி
முத்தம்வா ரானையம் புலியி னோடு
சிறுபறைசிற் றிற்சிறுதே ரிவைபின் மூன்றுந்
தெரிவையர்க்குப் பெறாகழங்கம் மானையூசல்

பெறுமூன்று முதலிருபத் தொன்று ளொற்றை
பெறுதிங்க டனிற்பிள்ளைக் கவியைக் கொள்ளே (மரபியல் 1)

இலக்கணவிளக்கப்பாட்டியல் (கி.பி.1700)

1. கடுங்கொலை நீக்கிக் கடவுட் காப்புச்
செங்கீரை தால்சப் பாணி முத்தம்
வாரானை முதல் வகுத்திடு மம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரென்னப்
பெறுமுறை யாண்பாற் பிள்ளைப் பாட்டே

2. அவற்றுட்
பின்னைய மூன்றும் பேதையர்க் காகா
வாடுங் கழங்கம் மானை யூசல்
பாடுங் கவியாற் பகுத்து வகுப்புட
னகவல் விருத்தத் தாற்கிளை யளவாம்.

3. மங்கலம் பொலியுஞ் செங்கண் மாலே
சங்கு சக்கரந் தரித்த லானுங்
காவற் கடவு ள்ாத லானும்
பூவினட் புணர்த் லானுமுற் கூறிக்
கங்கையும் பிறையுங் கடுக்கையும் புனையுமை
பங்கனென் றிறைவனைப் பகர்ந்து முறையே
முழுதுல கீன்ற பழுதறு மிமயப்
புருப்பதச் செல்வியை விருப்புற வுரைத்து
நாமகள் கொழுநன் மாமுகி லூர்தி
யொற்றைக் கொம்பன் வெற்றி வேல
னெழுவர் மங்கைய ரிந்திரை வாணி
யுருத்திர ரருக்கர் மருத்துவர் வசுக்கள்
பூப்புனை யூர்தியிற் பொலிவோ ரனைவருங்
காப்ப தாகக் காப்புக் கூறல்

4. மூன்று முதல்மூ வேழு திங்களி
னொற்றை பெற்ற முற்றறு மதியின்
கொள்ளுக பிள்ளைக் கவியைக் கூர்ந்தே

5. மூன்றைந் தேழா மாண்டினு மாகும்

6. ஒன்பது பதினொன்று என்பது காப்பே (434-439)

தொன்னூல் விளக்கம் (கி.பி.1800)

1. பிள்ளைக் கவியின் பெற்றியைக் கூறச்
சுற்ற வகுப்பொடு தெய்வம் கொலைகாப்ப
ஒற்றைப் படமூன் றுஆதி மூஏழு
ஈறுஆய் மதியினும் ஐந்துஏழு ஆண்டினும்
காப்புச் செங்கீரை தால் சப்பாணி
முத்தம் வாரானை அம்புலி சிறுபறை
சிற்றில் சிறுதேர் ஆடவர்க்கே கடை
மூன்றுஒழித்து அரிவையர்க்குஆம் கழங்கு அம்மானை
பத்து உறுப்பாய் ஒவ்வொன்று விருத்தம்
பப்பத் தாகப் பாடல் என்ப. (257)

பிரபந்ததீபிகை (கி.பி.1800)

... ...
செப்பு பிள்ளைக் கவிக்கு
மாதம் இரு திங்களில் காப்பு, ஐந்து, செங்கீரை
மாதம் எழில் தாலமாம்
வரைநவம் சப்பாணி முத்தமோ பன்னொன்று ,
வாரானை சம்வற்சரம்
இது ஒன்றரை வருடம் இந்துஇரண்டினில் சிற்றில்
ஒலிபறை முழக்கல் மூன்றில் ,
ஊர்இரதம் நாலில் ஆண்பால், கழங்கு அம்மானை
ஊசல் பெண்பாலதாமே. (5. 2-4)

பிரபந்ததீபம் (கி.பி.1900)

பிள்ளைக்கவி

1. பிள்ளைக் கவியே காப்பு செங்கீரை
தாலம் சப்பாணி முத்தம் வாரானை
அம்புலி சிறுபறை சிற்றில் சிறுதேர்
ஆசிரிய விருத்தம் ஈரைந்தான் முறையே
ஆண்பாற்கு அறைவர் அன்றிப் பெண்பாற்குக்
கடைமூன்று ஒழித்துக் கழங்கு, அம்மனை ஊசல்
என்பவை சுட்டி இயம்புவர் புலவர் (94)

முத்து வீரியம் (கி.பி. 1900)

1. தீதில் காப்பே செங்கீரை தாலே
சப்பாணி முத்தம் வாரானை யம்புலி

சிறுபறை சிற்றில் சிறுதே ரிவற்றை
முறையே யகவல் விருத்தத் தாலே
பப்பத் தாகப் பாடுவ தாண்பாற்
பிள்ளைக் கவியில் வுறுப்பினிற் கடைமூன்
றொழித்துக் கழங்கம் மனையூச லென்றிவை
கூட்டிமுற் கூறிய வாறுரைப் பதுவே
பெண்பாற் பிள்ளைக்கவியெனப் படுமே (1039)

சுவாமிநாதம் - (கி.பி.1900)

1. மொழிபொருளிற் காப்புமுதற் சிறுதேர்மட் டாண்பின்
மூன்றில்கழங்கு அம்மானைஊஞ் சல்பேணுங்கிளைச் சீர்வகுப்போடு
அழிவின்அக வலின் விருத்தத்து அறைதல்பிள்ளைக் கவியாம் (167.1-2.)

பிரபந்தத் திரட்டு (கி.பி.1900)

1. சார்க்காப்புச் செங்கீரை தாலார்சப் பாணிமுத்தம்
வாரானை சோமன் மலிபறைதே - ரார் சிற்றிற்
பேர்நரர்க்கு மின்னார்க்குப் பேசுநீ ராடலுடன்
சேர்கழங்கூ சற்பின்முன் செப்பு.

2. இரண்டைந்தே ழொன்பான் னியல்பதினொன் றார்பன்
னிரண்டுபதி வெட்டிருபா னாலு-விரும்புமுப்பா
னாறுநாற் பானெட்டா மாணுக்கு மேலிரண்டான்
டேறுமின் னார்க்கு மதியே.

3. கூறுகாற் றெய்வக் கொலையகற்றிக் காக்கவெனக்
கூறுதுட்ட தெய்வத்தைக் கூறாதே - மாறாமல்
ஏற்று விருத்தப்பா விற்புணர்த்தி பாடகலச்
சாற்றுகின்ற பிள்ளைத் தமிழ்.

(திரட்டியல் 3,4,5)

4. ஆனைமுகன் மான்மதன னாறுமுகன் சேற்கொடியோன்
மோனசிவன் வீரனயன் முத்தனய்யன் - மோனசிவன்
மான்மாதர் காளிகலை மான்றருமி வாணிவீரி
யானிபொண்ணான் பிள்ளைப்பாக் காம்

(புறநடையில் 89)

5. இருகையை யூன்றி யொருதா ளெடுத்துத்
திருமுகமாட் டும்பருவத் திங்கள் - வரவழைத்தல்
சாமமுதற் சொற்றன முப்பாமூ வர்ச்சாற்ற
லாம்பிள்ளைப் பாக்கருவறி.

(கருப்பொருளியல் 105)

செய்யுள் வகைமை

1. ஈரெண் கலையினும் இயன்ற வண்ணமும்
ஆசிரிய விருத்தமு மாதி யானவிச்
சுற்றத் தளவாய்த் தோன்றும் பாட்டுச்
சொற்றரப் பெறிணைம் பானிற் சுருங்காது
சிற்றில் சிறுபறை சிறுதே ருருட்டல்
மற்ற மூன்றும் மிகாது நிற்கும்.

2. ஏனைய வரையறை யைம்பது திருந்தி
வருத லாகா தென்பது புலவர்
எடுத்துரை யாகும்.

பருணர் பாட்டியல்

1. காப்பு முதலெடுக்குங் கடவு டானே
பூக்கமழ் துழாய்முடி புனைந்தன னாகும்.

2. கொச்சகக் கலியும் கலிவெண்பாட்டும்
எச்ச மிபிவே எவ்வாய் மருங்கினும்